பயந்துக் கொண்டே செய்யுங்கள்

பயத்தை நோக்கும் போது தைரியத்தைத் தழுவுதல்

ஜாய்ஸ் மேயர்

#1 நியூயார்க் டைம்ஸ் அதிகம் விற்பனையாகும் ஆசிரியர்

ஜாய்ஸ் மேயர் உலகின் முன்னணி நடைமுறை பைபிள் ஆசிரியர்களில் ஒருவர். அவரது தினசரி ஒளிபரப்பு, ஆனந்தம் அடைவீர் அன்றாட வாழ்வில் உலகம் முழுவதும் நூற்றுக்கணக்கான தொலைக்காட்சி நெட்வொர்க்குகள் மற்றும் வானொலி நிலையங்களில் ஒளிபரப்பப்படுகிறது.

ஜாய்ஸ் கிட்டதட்ட 100 ஊக்கமளிக்கும் புத்தகங்களை எழுதியுள்ளார். அவரது சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்களுள் வலிமையான எண்ணங்கள்; நம்பிக்கையுடைய பெண்; நன்றாக தோன்றுங்கள் நன்றாக உணருங்கள்; உங்கள் நாளை சரியாகத் தொடங்குதல்; உங்கள் நாளை சரியாக முடிப்பது; அங்கிகார அடிமைத்தனம்; தேவனிடமிருந்து எப்படி கேட்பது; சாம்பலுக்கு பதில் சிங்காரம்; மற்றும் மனதின் போர்க்களம் போன்றவை உள்ளடங்கும்.

ஜாய்ஸ் ஆண்டு முழுவதும் மாநாடுகளை நடத்துகிறார், அதன் மூலம் உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கானவர்களுடன் பேசுகிறார். ஜாய்ஸ் செயின்ட் லூயிஸ், மிசௌரியில் வசிக்கிறார்.

பயந்துக் கொண்டே செய்யுங்கள்

பயந்துக் கொண்டே செய்யுங்கள்

பயத்தை நோக்கும் போது
தைரியத்தைத் தழுவுதல்

ஜாய்ஸ் மேயர்

JOYCE MEYER
MINISTRIES®
Sharing Christ – Loving People

C14, Vikrampuri Colony, Karkhana, Secunderabad, Telangana - 500 003

Copyright © 2020 by Joyce Meyer

Cover copyright © 2020 by Hachette Book Group, Inc.

Hachette Book Group supports the right to free expression and the value of copyright. The purpose of copyright is to encourage writers and artists to produce the creative works that enrich our culture.

The scanning, uploading, and distribution of this book without permission is a theft of the author's intellectual property. If you would like permission to use material from the book (other than for review purposes), please contact permissions@hbgusa.com. Thank you for your support of the author's rights.

FaithWords
Hachette Book Group
1290 Avenue of the Americas, New York, NY 10104
faithwords.com
twitter.com/faithwords

First Edition: September 2020

FaithWords is a division of Hachette Book Group, Inc. The FaithWords name and logo are trademarks of Hachette Book Group, Inc.

The publisher is not responsible for websites (or their content) that are not owned by the publisher.

The Hachette Speakers Bureau provides a wide range of authors for speaking events. To find out more, go to www.hachettespeakersbureau.com or call (866) 376-6591.

Unless otherwise noted, Scripture quotations are taken from the Holy Bible, New International Version®, NIV®. Copyright ©1973, 1978, 1984, 2011 by Biblica, Inc.™ Used by permission of Zondervan. All rights reserved worldwide. www.zondervan.com The "NIV" and "New International Version" are trademarks registered in the United States Patent and Trademark Office by Biblica, Inc.™

Scripture quotations marked AMPC are taken from the Amplified® Bible, Copyright © 1954, 1958, 1962, 1964, 1965, 1987 by The Lockman Foundation. Used by permission. www.Lockman.org.

Scripture quotations marked NKJV are taken from the New King James Version®. Copyright © 1982 by Thomas Nelson. Used by permission. All rights reserved.

Scripture quotations marked KJV are taken from the King James Version of the Bible.

Scripture quotations marked ESV are taken from The Holy Bible, English Standard Version. ESV® Text Edition: 2016. Copyright © 2001 by Crossway Bibles, a publishing ministry of Good News Publishers.

Scripture quotations marked NASB are taken from the New American Standard Bible ®. Copyright © 1960, 1962, 1963, 1968, 1971, 1972, 1973, 1975, 1977, 1995 by the Lockman Foundation. Used by permission. www.Lockman.org.

Library of Congress Cataloging-in-Publication Data has been applied for.

ISBNs: 978-1-5460- 2630-3 (hardcover), 978-1-5460- 1750-9 (large print), 978-1-5460- 1761-5 (international), 978-1-5460- 2633-4 (ebook), 978-1-5460- 1564-2 (signed edition), 978-1-5460-1563-5 (BN.com signed edition)

Do if Afraid - *Tamil*

Embracing courage in the face of fear

Printed at:
Caxton Offset Pvt. Ltd.
Hyderabad - 500 004

பொருளடக்கம்

முன்னுரை vii

பகுதி 1. பயத்தை விளங்கிக்கொள்ளுதல் 1

அத்தியாயம் 1. தேர்வு செய்யும் நேரமிது 5
அத்தியாயம் 2. பயந்துக் கொண்டே செய் 16
அத்தியாயம் 3. நான் பயப்படமாட்டேன் 27
அத்தியாயம் 4. பயம் நிறைந்த எண்ணங்களும், வார்த்தைகளும் 38
அத்தியாயம் 5. பயத்தை உணர்கிறேன் 51
அத்தியாயம் 6. நான் ஏன் பயப்படுகிறேன்? 61
அத்தியாயம் 7. பயத்திற்கான மாற்று மருந்து 72
அத்தியாயம் 8. தைரியமாக வாழ்தல் 84

பகுதி 2. பயத்தை எதிர்கொள்ளுதல் 93

அத்தியாயம் 9. ஒரு சமயத்தில் ஒரு அடி எடுக்கவும் 97
அத்தியாயம் 10. சந்தேகத்திற்கும் இரட்டை எண்ணத்திற்கும் எதிர்த்து நிற்கவும் 107
அத்தியாயம் 11. கடந்த காலத்தைப் பற்றி வருந்தவோ அல்லது எதிர்காலத்தைப் பற்றி பயப்படவோ மறுக்கவும் 119
அத்தியாயம் 12. தைரியமாகவும், வலுவாகவும் இருங்கள் 132
அத்தியாயம் 13. பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் இருக்க கற்றுக்கொள்ளுங்கள் 146

பகுதி 3. பயத்திலிருந்து சுதந்திரமாக நடப்பதற்கான மனநிலை 157

அத்தியாயம் 14. நீங்கள் அச்சமின்றி நேசிக்க முடியும் 161
உங்களை நேசிக்க அனுமதிக்கும் பயத்திலிருந்து விடுதலை

அத்தியாயம் 15. நீங்கள் ஏற்றுக்கொண்டு / ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழலாம் 173
நிராகரிக்கப்படுவோம் என்ற பயத்திலிருந்து விடுதலை

அத்தியாயம் 16. நீங்கள் நீங்களாக இருக்க முடியும் 187
மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், சொல்வார்கள் அல்லது செய்வார்கள் என்ற பயத்திலிருந்து விடுதலை

அத்தியாயம் 17. நீங்கள் பயத்திற்காக பயத்தை வர்த்தகம் செய்யலாம் 202
தவறான வகையான பயத்திலிருந்து விடுதலை

அத்தியாயம் 18. நீங்கள் பணத்தைப் பற்றி கவலைப்படுவதை நிறுத்தலாம் 215
நிதி அச்சங்களில் இருந்து விடுதலை

அத்தியாயம் 19. நன்மையான விஷயங்கள் முன்னால் உள்ளன என்று நீங்கள் நம்பலாம் 229
எதிர்கால பயத்திலிருந்து விடுதலை

அத்தியாயம் 20. ஒவ்வொரு சூழ்நிலையிலும் நீங்கள் தேவனை நம்பலாம் 242
தீமைகள் நடக்கும் என்ற பயத்திலிருந்து விடுதலை

அத்தியாயம் 21. நீங்கள் ஓய்வெடுக்க முடியும் 256
போதாது என்ற பயத்திலிருந்து விடுதலை

அத்தியாயம் 22. நீங்கள் ஆரோக்கியமான உறவுகளை உருவாக்க முடியும் 269
தேவனையும் பிறரையும் நம்பும் பயத்திலிருந்து விடுதலை

அத்தியாயம் 23. நீங்கள் நித்தியத்தின் வாக்குறுதியில் இளைப்பாறலாம் 281
மரண பயத்திலிருந்து விடுதலை

இறுதி கருத்துகள் 291

பயத்தை எதிர்த்துப் போராட உங்களை வலுப்படுத்தும் வசனங்கள் 293

முன்னுரை

பயம் எல்லா இடங்களிலும் உள்ளது, அது அனைவரையும் பாதிக்கின்றது. காலம் தொடங்கியதிலிருந்தே இருக்கிறது, உலகம் இருக்கும் வரை இருக்கும். பயம் அநேகரை ஆண்டுகொண்டிருக்கிறது, ஆனால் அவ்வாறிருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. பயம் என்பது உண்மையானதாகத் தோன்றும் தவறான ஆதாரங்களாகும். பயம் என்ற வார்த்தைக்கு உண்மைப் போன்று தோன்றும் தவறான ஆதாரங்கள் என்பது ஒரு பொருத்தமான விளக்கமாக இருக்கும். ஏனென்றால் பிசாசு நம்மிடம் கூறும் பொய்களிலேயே தான், இந்த பயம் வேரூன்றப்பட்டிருக்கிறது. அவற்றை நாம் நம்பும் போது பயம் நம் இருதயங்களிலும், மனதிலும் வேர் கொள்கின்றது.

நம் வாழ்விலிருந்து பயம் முற்றிலும் மறையாது என்றாலும் நாம் அதை எதிர்த்து மேற்கொள்ள முடியும். தைரியம் என்பது பயமின்மையாகாது. அது பயத்தினூடே முன்னோக்கி செல்வதாகும். தைரியசாலிகள், அவர்கள் தங்கள் இருதயங்களிலே எதை நம்புகிறார்களோ அதை அவர்கள் எப்படி உணர்ந்தாலும், எவ்விதமான சந்தேகமான பயமுள்ள எண்ணங்கள் அவர்கள் மனதில் தோன்றினாலும், செய்கின்றனர்.

நம் சூழ்நிலைகளுக்கும், பிற மக்களுக்கும் நாம் செய்யும் பிரதிக்கிரியையானது, பயத்திலே எவ்வளவாக வேரூன்றப்பட்டிருக்கிறது என்பதை கவனிப்போமானால், நாம் ஆச்சரியத்திற்குள்ளாவோம். அது நம்மை பற்றி நாம் நன்றாக விளங்கிக் கொள்ளவும் ஏதுவாகும். மக்கள் தாங்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென்று விரும்புகின்றார்களோ அதற்கு மாறாகவே தங்கள் வாழ்நாள் முழுவதும் பிரதிக்கிரியை செய்து வாழ்கின்றனர். பயம் அவர்களின் தீர்மானங்களை தீர்மானிக்க அனுமதித்ததால், அவர்கள் வாழ்வு வெறுமையாக இருக்கின்றது என்பதை உணராமலேயே வாழ்கின்றனர்.

நீங்கள் ஒரு அறையிலே சில நண்பர்களுடன் அமர்ந்து சந்தோஷமாக உரையாடிக் கொண்டிருக்கும் போது, வேறொருவர் அங்கே திடீரென்று அந்த கூட்டத்திலே நுழையும் போது நீங்கள் பயமடைவீர்களென்றால், அதற்கு பயம் தான் காரணமாக இருக்கிறது.

ஏனென்றால் உங்களுக்கு அந்த நபர் யாரென்றே தெரியாது. அவர் உங்களை பயமுறுத்த எவ்வித காரணமும் இல்லை. அந்த பயமானது

நியாயமற்றதாக இருக்கிறது. ஏனென்றால் அந்த நபர் யாரென்றே தெரியாது, அவர் உங்களை பயமுறுத்த எவ்வித காரணமும் இல்லை. இப்படிப்பட்டதொன்று நிகழும் போது, என்றோ ஒருவர் உங்களை காயப்படுத்தியதை அவர் நினைவுப்படுத்துவதாலேயே அவ்வாறு நடந்து கொள்கிறீர்கள். அல்லது உங்களை பயமுறுத்தும் நபர் உங்களை விட நன்றாக தோற்றமளிக்கலாம் அல்லது நன்றாக படித்தவராக இருக்கலாம். அதனால் பாதுகாப்பின்றி உணர்கிறீர்கள். அப்படியும் இல்லையென்றால் பிசாசு உங்களை துன்புறுத்துவதைத் தவிர வேறே எந்த காரணமும் இல்லாமலே இருக்கலாம். அந்த நபருக்கு சம்பந்தமே இல்லாத பல காரணங்களால் நீங்கள் பயமுறுத்தப்படலாம்.

அத்தகைய சூழ்நிலையிலே நீங்கள் ஏன் அவ்விதமாக நடந்து கொண்டீர்கள் என்பதை தேவனிடம் கேட்டு அவர் உங்கள் இருதயங்களிலே பேசுவதற்கு காத்திருப்பதே நீங்கள் செய்ய தக்க புத்தியுள்ள காரியமாகும். அதற்கான பதில் உடனே வரலாம் அல்லது அதற்கு சிறிது காலம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் உங்களை நீங்களே புரிந்துக் கொள்ள முற்படுவீர்களென்றல், சத்தியத்தை அறிந்து கொள்வீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும். (யோவான். 8:32).

பயம் உங்களை ஆட்கொள்ளவும், அதை சகித்துக் கொள்ளவும் வேண்டாமென்று நான் உங்களை வருந்திக் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் துன்பங்களுக்காக, பிறரைக் குற்றப்படுத்தியும் வாழ கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் பிரச்சனைகளுக்கு பொறுப்பேற்றுக்கொண்டு, தேவனுக்கு உங்கள் இருதயங்களைத் திறந்துக் கொடுங்கள் அவரே உங்களுக்கு இருண்ட (விளங்காத சூழ்நிலைகள்) சூழ்நிலைகளிலே வெளிச்சத்தைக் கொண்டு வருவார். பயத்தையும், அது எவ்வாறு கிரியை செய்கிறது என்பதையும் நீங்கள் விளங்கிக் கொள்வீர்களென்றால், அதனின்று நீங்கள் விடுபடுவீர்கள்.

இப்புத்தகத்தின் முதல் பாகம் பயத்தையும், அது உங்கள் வாழ்விலே எவ்விதம் கிரியை செய்கிறது என்பதையும் விளங்கிக் கொள்ள உதவும். இரண்டாம் பாகமானது பயத்தை எதிர்க்க உதவும், மூன்றாம் பாகத்திலே மக்கள் எதிர்க்கொள்ளும் சில பொதுவான பயங்களிலிருந்து விடுபட தேவையான மன நிலைகளைக் கற்றுக்கொள்வீர்கள். நீங்கள் இந்த புத்தகத்தை படிக்கும் போது பயத்திலிருந்து விடுபடுவீர்களாக. இயேசு உங்களுக்காக மரித்து, கொடுத்திருக்கும் விடுதலையைப் பெற்றுக்கொள்வீர்களாக.

பூமியதிர்ச்சி, புயல், தீ, வைரஸ் மற்றும் பல சூழ்நிலைகளிலே பயம் ஏற்படுவதை விளங்கிக் கொள்ள இயலும் என்றாலும், நம்மை பயப்படுத்த அவற்றை எதிரியானவன் பயன்படுத்திக் கொள்வான். பயமானது

சூழ் நிலைகளை எவ்விதத்திலும் மேம்படுத்துவதில்லை, அனால் அவற்றை கையாளும் பலத்தையும், அவற்றினூடே தெளிவாக சிந்திக்கும் திறனையும் அது களவாடி விடுகிறது. அப்போஸ்தலனாகிய யோவான், "அன்பிலே பயமில்லை" (யோவான் 4:18) என்று எழுதுகிறார். பயப்படுவது நியாயமானதாகத் தோன்றினாலும் அதினாலே வேதனை தான் மிஞ்சும்.

தேவன் நமக்காக வைத்திருக்கும் நல்ல திட்டத்தை திருடவும், கொல்லவும், அழிக்கவும் பயன்படுத்தும் ஆயுதங்களில் பயமானது பிசாசுக்குப் பிடித்த ஆயுதமாகும். நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும், நம் முன்னேற்றத்தை தடுக்க இதை உபயோகிக்கின்றான். நாம் அதை எதிர் கொண்டு, எதிர்த்து மேற்கொள்ள வேண்டியதை எதிர்க்காமல் அவற்றை விட்டு ஓடிவிடவும், மனரீதியான துன்பத்திற்குள்ளாக்கவும் அதை பயன்படுத்துகின்றான். மக்கள், பயம் தங்களை பல விதங்களில் கட்டுப்படுத்த அனுமதிக்கின்றனர். ஆனால் நாமோ அது நம்மை எவ்வித்திலும் கட்டுப்படுத்த அனுமதிக்காமலிருக்க தீர்மானிப்போமாக. ஏனென்றால், "தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (1 தீமோத்தேயு 1:7).

பகுதி 1

பயத்தை விளங்கிக் கொள்ளுதல்

அடிப்படையிலே, நாம் நடக்க கூடிய இரண்டு பாதைகளுண்டு: விசுவாசம் அல்லது பயம். தேவனை ஒரே நேரத்தில் நம்புவதும், நம்பாமலிருப்பதும் இயலாததொன்று.

- சார்லஸ் ஸ்டேன்லி

பயமென்ற கோட்டைக்கு மேல் தேவனுடைய வார்த்தையை தெரிந்துக் கொள்வது.

என்னுடைய சிறுபிராயத்திலே, எனக்கு பேசுவதில் தடங்கல் இருந்தது அது என்னை பாதுகாப்பற்றவளாக உணர வைத்தது. ஒரு நாள் என் மூன்றாம் வகுப்பு ஆசிரியர் என்னை வகுப்பறையின் முன் பகுதிக்கு அழைத்து என் சக மாணவர்களின் முன் என்னை கேலி பரியாசம் செய்தார். அது நடந்து பல வருடங்களாகிவிட்டது, ஆனால் சாத்தானோ அந்த நினைவுகளை உபயோகித்து என்னை இன்னும் கவலைக்குள்ளாக்குகின்றான்.

இந்த கவலை என்னை வாட்டும் போதெல்லாம் நான் செய்யும் காரியங்களெல்லாம் எனக்கு கடினமாகிவிடுகிறது. எனவே ஜாய்ஸின் "பயந்துக் கொண்டே செய்" என்ற இந்த போதனையை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

நான் சார்ந்துக் கொள்ளும் இரண்டு வாக்கியங்கள் எதுவென்றால், பிலிப்பியர் 4:6, "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்" மற்றும் "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" (13).

சமீபத்திலே, என் அலுவலகத்திலே, என் சக ஊழியர்கள் முன்பாக நாங்கள் சந்திக்கும் சவால்களை பற்றி பேசும் படி என் மேலதிகாரி என்னிடம் கேட்டுக் கொண்டார். எனக்கோ, என் எண்ணங்களை எனக்குள்ளேயே வைத்துக் கொண்டு பிறர் சொல்வதை கேட்பது சுலபமானதாக இருந்தது. ஆனால் நான் அதை செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரென்று நான் அறிந்தேன். அவர் என்னிடம், "உன்னுடைய விரக்தியை வெளிப்படையாக ஒத்துக் கொள்வாயென்றால் நேர்மறையான மாற்றங்களுக்கான வழிகளை நான் திறப்பேன்" என்று சொல்வதாக உணர்ந்தேன்.

அதை நான் செய்தேன். பயந்துக்கொண்டே செய்தேன். நான் நல்ல பலனைப் பெற்றுக் கொண்டேன். ஆனால் அன்றிரவிலே கவலைக்குள்ளானேன். என்னால் தூங்க இயலவில்லை. எதிரியானவன் என்னை பலமாகத் தாக்கத் தொடங்கினான். "என்னுடைய கருத்து மதிக்கப்படாவிட்டால் என்னவாகும்?" வேலை ஸ்தலத்தில் இதனால் அதிக பிரச்சனை ஏற்பட்டால் என்னவாகும் என்றெல்லாம் எண்ணினேன்.

நான் செய்ய வேண்டியிருந்ததெல்லாம் தேவனுடைய வார்த்தையோடு ஒத்து சென்று, அந்த எல்லா எதிர்மறையான சத்தத்தையும் அமிழ்த்த வேண்டியது மட்டுமே தான்.

தேவன் என் ஜெபத்தைக் கேட்கிறபடியால் நான் கவலைப்படமாட்டேன். (பிலிப்பியர் 4:6).

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு (பிலிப்பியர் 4:13).

தேவன் எனக்கு எதிராக அல்ல என் பட்சத்திலிருக்கிறார் (ரோமர் 8:31).

உலகத்திலிருப்பவனிலும் என்னுள் இருப்பவர் பெரியவர் (1 யோவான் 4:4).

தேவ வார்த்தை என் ஜீவன், எனக்குள்ளாக நான் பின் வாங்கத் தொடங்கும் போது அது என்னை முன்னோக்கி செல்ல செய்கின்றது.

லவாண்ணறியா

அத்தியாயம் 1

தேர்வு செய்யும் நேரமிது

"நான் ஜீவனையும் மரணத்தையும் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சியாக வைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துக் கொள்"

உபாகமம் 30:19

நம் வாழ்க்கைக்கென்று தேவன் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டிருக்கிறார், பிசாசும் ஒரு திட்டத்தைக் கொண்டிருக்கிறான். அது நல்ல திட்டமன்று. இதை அப்போஸ்தலனாகிய யோவான் "திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." (யோவான் 10:10) என்றார். தேவன் தம்முடைய வார்த்தையிலே நம்மிடம் என்ன சொல்லியிருக்கின்றாரோ அதின் மேல் விசுவாசம் வைப்பதாலே தேவனுடைய திட்டத்தைப் பெற்றுக் கொள்கிறோம். பிசாசு ஒரு பொய்யன், பொய்க்கு பிதாவாக இருக்கிறான், அவனிடம் எவ்வளவும் உண்மையில்லை (யோவான் 8:44).

தேவன் நமக்கு சுயசித்தத்தைக் கொடுத்திருக்கிறார், அப்படியென்றால் நாம் என்ன செய்ய விரும்புகின்றோமோ அதை செய்யலாம். நமக்கு தேர்வு/தெரிந்துக்கொள்ளுதல் உண்டு. நாம் தெரிந்து கொள்ளும் ஒவ்வொன்றும் ஒரு விளைவை ஏற்படுத்துகின்றது. உபாகமம் 30:19ல், தேவன் நமக்கு இரண்டு தேர்வுகளைக் கொடுக்கின்றார் என்று சொல்லுகிறார், ஜீவன் அல்லது மரணம், ஆசீர்வாதம் அல்லது சாபம். எதை தெரிந்துக் கொள்ள வேண்டுமென்று அவர் சொல்லியிருந்தாலும், நாம் அந்த தெரிந்து கொள்ளுதலை செய்ய

வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கின்றார். நம் வாழ்க்கைக்கான தேவனுடைய நல்ல திட்டமானது தானாகவே நடைபெறாது அவ்விதமாகவே பிசாசின் தீய திட்டங்களும் கூட. நாம் தான் ஏதோவொன்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

நிச்சயமாகவே எவரும் பிசாசின் தீய திட்டத்தை தங்கள் வாழ்க்கைக்கென்று வேண்டுமென்றே தெரிந்துக் கொள்ள மாட்டார்களென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் மக்களோ, பிசாசையும், அவனுடைய தீய வழிகளைப் பற்றிய அறிவும் இல்லாததால் தீயவற்றை தெரிந்து கொள்கின்றனர். ஓசியா 4:6லே, ஓசியா தீர்கதரிசியானவர், தேவ ஜனம் அறிவில்லாததால் கெட்டுப் போகிறார்களென்று கூறுகிறார். இந்த புத்தகத்தை எழுதுவதின் நோக்கம் என்னவென்றால் நீங்கள் பயத்தைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளவும், அது எவ்வாறு உங்கள் வாழ்க்கையிலே செயல்படுகிறது என்பதையும், அதனால் நீங்கள் வஞ்சிக்கப்படாமல், அதனின்று எவ்வாறு உங்களை விடுவித்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள உதவுவதற்குமே எழுதுகிறேன்.

நாம் இயேசுவை நம் சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ள தீர்மானிக்கும் போது ஒரு பெரிய தீர்மானத்தை செய்கிறோம். பின்னர் அன்றாடமும் தேவனுடைய வார்த்தையோடு ஒத்துச் செல்லும் தேர்வுகளை செய்கின்றோம். நாம் நம் வேலை ஸ்தலத்திலே ஒரு இக்கட்டான சூழ்நிலையிலே இருக்கும் போது, நாம் பொய் சொல்வதற்கு பதில் உண்மையை சொல்ல தெரிந்துக் கொள்ளலாம். நாம் வாங்கும் சில பொருட்களுக்கான விலையை கடைக்காரர் வாங்காதிருக்கும் போது நாம் அதை சுட்டிக்காட்டாமல் அமைதியாக இருந்து நாம் அதிர்ஷ்டசாலிகள் என்று எண்ணிக் கொள்ளாமல் அதை அவர் கவனத்திற்கு கொண்டு வந்து சரியானதை செய்வதும் நம் தெரிந்துக்கொள்ளுதலே.

நான் உங்களிடம் யார் உங்களை பொய் சொல்ல தூண்டினாரென்றோ, வேலை ஸ்தலத்தில் ஏற்பட்ட சூழ் நிலைகளிலே அமைதியாக இருந்துக் கொண்டது எதனால் என்ற கேள்வியை நான் உங்களிடம் கேட்பேனேயென்றால் உங்களுக்கு நிச்சயமாகவே விடை தெரியும் என்று அறிந்திருக்கிறேன். அதே போன்று உண்மையை பேசு என்றோ, பணம் கொடுக்க வேண்டுமென்றோ யார் உங்களுக்கு உணர்த்தியது என்று நான் கேட்டாலும் உங்களுக்கு சரியான பதில் தெரியும் என்பதையும் நிச்சயமாக அறிந்திருக்கிறேன். ஆனாலும் இந்த இரண்டு சூழ்நிலைகளிலும் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்களென்பதை நீங்கள் தான் தெரிந்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையின்படி சரியான தேர்வுகளை செய்வீர்களென்றால் ஆசீவதிக்கப்படுவீர்கள், ஆனால்

தவறு என்று நீங்கள் அறிந்திருப்பதை தெரிந்துக் கொள்வீர்களென்றால் உங்களுக்கு விருப்பமில்லாத பின்விளைவுகளை எதிர் கொள்ள நேரிடும்.

நல்ல வாழ்வை வாழ்தல்

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார்:

> ஏனெனில்,நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்;அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.
>
> எபேசியர் 2:10

இந்த வார்த்தைகளை வாசித்து எல்லோருமே நல்ல வாழ்வை தெரிந்துக்கொள்வார்களென்று நாம் நினைக்கலாம். ஆனால் தெரிந்துக் கொள்கிறவர்களைவிட தெரிந்துக் கொள்ளாதவர்கள் தான் அநேகர் என்பது துக்கமான காரியம். ஏன்? ஏனென்றால் அவர்கள் தவறானதை தெரிந்துக் கொண்டாலும் சரியான விளைவுகளையே பெற்றுக் கொள்வார்களென்று பிசாசு அவர்களிடம் பொய் சொல்லுகிறான். தவறான தெரிந்துக் கொள்ளுதலினாலே தவறான விளைவுகளை அனுபவிக்காத சில அதிர்ஷ்டசாலிகளாக அவர்கள் இருப்பார்கள் என்று அவர்கள் நினைக்கும் படி செய்கிறான்.

நம் பாவங்கள் நம்மை தொடர்ந்து பிடிக்கும். நம் பாவத்தின் விளைவு மரணம் (எண்ணாகமம் 32:23) என்று வேதம் சொல்லுகின்றது. இந்த 'மரணம்' நாம் வாழாமல் மரித்துவிடுவது அல்ல. ஆனால் இது அநேக வேளைகளில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஒரு நல்ல வாழ்வை இழப்பதையும் குறிக்கிறது. நாம் எப்போதுமே நம் பாவங்களுக்காக மனந்திரும்பலாம், தேவனுடைய முழுமையான மன்னிப்பை பெற்றுக் கொள்ளலாம். ஆனாலும் நம் தவறான கிரியைகளால் ஏற்படும் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். ஒருவன் கொலை செய்து இருக்கலாம் அவன் உண்மையாக மனந்திரும்பினால் தேவன் அவனை மன்னிப்பார். அவன் குடும்பமும், அவனால் கொலைசெய்யப்பட்டவரின் குடும்பமும் கூட அவனை மன்னித்துவிடலாம், ஆனாலும் அவன் சிறைச்சாலைக்கு செல்ல வேண்டியிருக்கும். நம் கிரியைகள்/செய்கைகளுக்கு பின்விளைவுகள் இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்திருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

எபேசியர் 2:10ல் தேவன் நமக்கு ஒரு நல்ல வாழ்வை ஆயத்தப்படுத்தியிருக்கிறார் என்பதை கவனிக்கலாம், ஆனாலும் நாம் அதிலே நடக்க வேண்டும். நாம் தேவனுடைய வழிகளை தெரிந்துக் கொள்ள வேண்டும். அவர் நம்மை எப்போதுமே அவருடைய சித்தத்திற்கு நேராக இழுத்துக் கொண்டிருக்கிறார். நாம் சரியானதை செய்ய அவருடைய கிருபை நமக்கு எப்போதுமே உதவுகிறது. ஆனால் சரியானதை செய்ய தேவன் எப்போதுமே நம்மை கட்டாயப்படுத்தமாட்டார் என்பதை நான் மீண்டும் ஒரு முறை தெளிவுப்படுத்திக் கொள்கிறேன். நம் வாழ்விலே நாம் தேவனுடன் பங்காளிகளாக இருக்கின்றோம். நாம் அவருடைய பங்கை செய்ய இயலாது. அவரும் நம் பங்கை செய்ய மாட்டார். அவர் நமக்கு முன்பாக ஜீவனையும், மரணத்தையும், நன்மையையும், தீமையையும் வைக்கின்றார். தெரிந்துக்கொள்ளுதல் நம்முடையது.

நம் வாழ்விலே, பல சமயங்களில் நாம் பயத்தோடு இருக்கப் போகின்றோமா அல்லது விசுவாசத்தோடு இருக்கப் போகின்றோமா என்ற தீர்மானம் எடுக்க வேண்டியிருக்கிறது.

நம் வாழ்விலே, பல சமயங்களில் நாம் பயத்தோடு இருக்கப் போகின்றோமா அல்லது விசுவாசத்தோடு இருக்கப் போகின்றோமா என்ற தீர்மானம் எடுக்க வேண்டியிருக்கிறது. அதை ஒவ்வொரு நாளும் எடுக்க வேண்டும் என்று சொல்வது மிகையாயிரது.

பயப்படுத்தியே தன் குடும்பத்தை கட்டுப்படுத்திய துஷ்டனாக என் தந்தை இருந்தார். உண்மையாகவே சாத்தான் அவர் மூலமாக கிரியை செய்துக் கொண்டிருந்தான். ஆனால் அவர், தான் எப்படி வாழ்வேன் என்பதை தெரிந்துக் கொண்டார். அதனுடைய பின் விளைவுகளை அவர் தன் வாழ்விலே அனுபவித்தார். தனது எண்பத்தி மூன்றாம் வயதில் அவர் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொண்ட போதிலும், எண்பத்தி மூன்று ஆண்டுகள் ஒரு நிர்பந்தமான வாழ்க்கையையே வாழ்ந்து தனது எண்பத்தி ஆறாம் வயதிலே மரித்தார். அவர் பரலோகத்தில் இருக்கிறாரென்று சந்தோஷப்பட்டாலும் அவர் செய்தது அநேகர் வாழ்விலே மறக்க இயலாத காரியங்களாகி விட்டது. நம் தெரிந்து கொள்ளுதலானது நம்மையும் நம்மை சுற்றியிருப்பவர்களையும் பாதிக்கின்றது என்பதை நினைவில் வைத்துக் கொள்வது நல்லது.

என் தாயார் பயத்தினால் ஆளப்பட்டிருந்தார்கள். அவர்கள் பயத்தை எதிர்கொள்ள மறுத்ததினால் நானும் என் சகோதரனும் பாதிக்கப்பட்டோம்.

என் தந்தை என்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார். அவர் எனக்கு என்ன செய்துக்கொண்டிருந்தாரென்பதை என் தாயார் அறிந்திருந்தும், பயம் பலமாக இருந்ததால் அவர் உண்மையைப் புறக்கணித்தார். அதனால் ஏற்பட்ட குற்ற உணர்ச்சியினாலும், அவமானத்தாலும் நாளடைவிலே மனரீதியான பிரச்சனைக்குள்ளானார்.

என் தகப்பன் என்னை துஷ்பிரயோகம் செய்ய அனுமதித்தற்காக அவர் என்னிடம் தனது எழுபதாம் வயதிற்கு பின்னரே மன்னிப்புக் கோரினார். அவரால் அந்த அவமானத்தை ஏற்றுக் கொள்ள இயலாதென்றும், என்னையும் என்னுடைய சகோதரனையும் தனியாக பராமரிக்க இயலாது என்று பயந்ததாலும் அதை எதிர்க்கவில்லை என்றும் விளக்கினார். அவருடைய தீர்மானங்கள் பயத்தில் ஊன்றப்பட்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. அதனால் அவர் உட்பட அனைவரும் பாடுபட்டோம்.

> சரியானதை செய்ய என்றும் தாமதமன்று

உங்கள் தீர்மானங்களை பயம் ஆட்கொள்ள அனுமதிப்பீர்களேயென்றால், தேவன் உங்களுக்காக திட்டமிட்டு வைத்திருக்கும் நல்ல வாழ்க்கையை இழந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் வாழ்விலுள்ள பிறரையும் அது பாதிக்கின்றது. பயத்தினின்று தேவன் தாமே உங்களை விடுவிக்க அவரை அனுமதிக்க வேண்டிய நேரம் இது.

கடந்த காலத்திலே பயத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தாலும், பயத்தை எதிர்கொண்டு, தேவன் விரும்பும் தைரியசாலிகளாக மாற இன்றே தெரிந்துக் கொள்ளலாம். அது ஒருபோதும் தாமதம் அல்ல. சரியானதை செய்ய என்றும் தாமதமன்று.

விசுவாசத்தை தெரிந்து கொள்

பயம் கதவைத் தட்டும் போது, கதவைத் திறப்பதற்கு விசுவாசத்தை அனுப்ப வேண்டுமென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ‘உன்னால் முடியாது’ என்று பிசாசு சொல்லும் போது, ‘உன்னால் முடியும்’ என்று தேவன் சொல்லுவதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் பயத்தை உணர்ந்தாலும், விசுவாசத்தால் முன்னேறலாம்.

பேதுரு, இயேசு தண்ணீர் மேல் நடப்பதைப் பார்த்து தானும் அவ்வாறு செய்ய வேண்டுமென்று விரும்பிய போது அவன் படகிலிருந்து இறங்கி

நடக்கத் தொடங்கினான். அவன் இயேசுவின் மேல் நோக்கமாக இருந்த வரை தண்ணீர் மேல் நடந்தான். ஆனால் அவன் புயலையும், அவனை சுற்றிலும் கொந்தளித்துக் கொண்டிருந்த அலைகளையும் நோக்கிய போது அவன் பயந்து அமிழ்ந்துப் போகத் தொடங்கினான். இயேசு அவனை தூக்கி விட்டுக் காப்பாற்றினார். ஆனாலும் அவன் பயப்பட்டபடியினால், ஏன் அற்ப விசுவாசம் உள்ளவனாக சந்தேகப்பட்டானென்று அவனை மென்மையாக கடிந்து கொண்டார். (மத்தேயு 25:31).

நாம் பயப்படுவதால் தேவன் நம்மை நேசிப்பதை நிறுத்திக் கொள்வதில்லை. நம் மேல் கோபப்படுவதும் இல்லை. ஆனால் அது அவரை துக்கப்படுத்துகின்றது. ஏனென்றால் நாம் சிறந்த வாழ்வை வாழவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் அது பரிபூரணப்படவுமே இயேசுவை அனுப்பினார். (யோவான் 10:10).

தேவன் நமக்காக திட்டம் பண்ணி வைத்திருக்கும் காரியங்களுக்காக நம்மை ஆயத்தப்படுத்துகிறார்.

தேவன் என்னை அவருடைய வார்த்தையை போதிக்க அழைத்தப்பின், படிப்பதற்கு எனக்கு அதிக நேரம் தேவைப்பட்டது. அத்தருணத்திலே, எனக்கு கணவர் மற்றும் மூன்று பிள்ளைகள் இருந்தனர். அந்த பொறுப்புகளையெல்லாம் விட்டு விட்டு என்னால் வேதாகமக் கல்லூரிக்கு சென்று படிக்க இயலவில்லை. மேலும் ஒரு முழு நேர வேலையும் எனக்கிருந்தது. எனவே என்னால் இயன்ற அளவு படித்தேன். ஆனால் எவ்வளவு படிக்க வேண்டுமோ அவ்வளவு படிக்க இயலவில்லை. ஒவ்வொரு செவ்வாய் கிழமைகளிலும், என் வீட்டிலேயே ஒரு சிறிய குழுவுக்கு வேத பாடம் நடத்திக் கொண்டிருந்தேன். ஆனால் தேவனோ பெரிய திட்டங்களைக் கொண்டிருந்தார். அவர் எனக்காக திட்டம் பண்ணி வைத்ததற்கு ஆயத்தபட எனக்கு நேரம் தேவைப்பட்டது.

ஒவ்வொரு நாளும் பல மணி நேரம் வேதத்தை படிக்க எனக்கு நேரம் தேவைப்பட்டதால் என் வேலையை விட்டுவிட வேண்டுமென்று தேவன் உணர்த்துவதை நான் உறுதியாக உணர்ந்தேன். ஆனால் அதிலே எனக்கு பிரச்சனை இருந்தது. நான் என் வேலையை விட்டு விட்டால், எங்களுடைய மாதாந்திர தேவைக்கு போதிய பணம் இருக்காது. ஏதாவது அத்தியாவசிய தேவை ஏற்பட்டால் அதற்கும் பணம் இருக்காது.

இறுதியாக நான் தேவனிடம் பேரம் பேச முயன்றேன். நான்

என்னுடைய முழு நேர வேலையை விட்டு விட்டு பகுதி நேர வேலையை ஏற்றுக்கொண்டேன். சிறிது காலத்திற்குள்ளாகவே நான் வேலையிலிருந்து நீக்கப்பட்டேன். நான் எப்போதுமே நன்றாக வேலை செய்பவள். வேலை நீக்கம் செய்யப்படக்கூடியவளல்ல. ஆனால் நான் வேலையில் சேர்ந்ததிலிருந்தே அந்த அலுவலக மேலாளருக்கு என்னை பிடிக்கவேயில்லை. நான் என்ன செய்தாலும் அது சரியானதாகவே இருக்கவில்லை. நான் வேலையை விட்ட போது தேவன் என்னை ராஜினாமா செய்ய சொன்னாரேயல்லாமல் பகுதி நேர வேலையைப் பெற்றுக்கொள்ளும்படி சொல்லவில்லை.

> தேவனோ சாக்குபோக்குகளைக் கொடுக்காமல் அவருக்கு கீழ்படிய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்

கொஞ்சம் கீழ்படிதலானது விசுவாசம் அன்று. அது பயம் மற்றும் சுயசார்பினால் நிறைந்த அற்ப விசுவாசமாகும். என்னுடைய வருமானம் இல்லாமல் பணம் போதுமானதாக இராது என்று பயந்தேன். எனவே தேவனுக்கு கீழ்படிய விரும்பியும், ஒருவேளை ஒவ்வொரு மாதமும் எங்களுக்கு தேவைப்பட்ட அற்புதம் நடைபெறாவிட்டால் எங்களை தாங்கிக் கொள்ளும் ஒரு திட்டத்தை நான் கொண்டிருந்தேன்.

இத்தகையதொரு காரியம் சதாரணமானது. அநேகர் நான் செய்ததையே செய்ய முயல்கின்றனர். ஆனால் வெவ்வேறு சூழ்நிலைகளில். 1 சாமுவேல் 13 மற்றும் 15-ல், சவுல் ராஜா இரண்டு சந்தர்பங்களிலே பகுதியாக கீழ்படிந்து அதனால் தன் இராஜ்ஜியத்தை இழப்பதைக் காணலாம். ஒவ்வொரு முறையும் சரியாக தோன்றும் விதத்திலே சாக்கு போக்குகளைக் கொடுத்தான். ஆனால் தேவனோ சாக்குபோக்குகளைக் கொடுக்காமல் அவருக்கு கீழ்படிய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

சவுல் ஒரு சமயம் கீழ்படியாமலிருந்ததற்கான காரணம் பயம், (1 சாமுவேல் 13:1-14). மற்றொரு சமயம் பேராசை. (1 சாமுவேல் 15:1-23). நம் கீழ்படியாமைக்கு சாக்கு போக்குகளை சொல்லாமலிருக்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சாக்கு போக்கு நமக்கு ஏற்புடையதாக இருக்கலாம் ஆனால் தேவனோ அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்.

உங்களுடைய இளம்பிள்ளைகளை நீங்கள் பால் வாங்க கடைக்கு அனுப்பி அவர்கள் பாலுக்கு பதிலாக பழரசத்தை வாங்கி வருவார்களேயென்றால் அவர்கள் உங்களுக்கு கீழ்படியவில்லை. அவர்கள், பழரசமும் பருகுவதற்குத்தானே, அது மலிவான விலையிலே கிடைத்ததால்

வாங்கினேன் என்று சொன்னாலும் அது கீழ்படியாமைதானே. நீங்கள் அவர்களிடம் செய்ய சொன்னதை அவர்கள் செய்யவில்லை.

நம்மிடம் ஏதோவொரு பெரிய காரியத்தை செய்வதற்காக தேவன் நம்மை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கும் போது, நம் கீழ்படிதலை சோதனைக்குட்படுத்தும் அநேக சோதனைகளை அனுமதிக்கின்றார். அதில் சில முக்கியமற்றவையாக நமக்கு தெரியலாம், ஆனால் நான் பெரிதாக நினைக்கும் காரியத்தைப் போன்றே அதுவும் முக்கியமானதே. நாம் சிறிய காரியத்திலே நம்பபடக்கூடியவர்களாக இராவிட்டால், பெரிய காரியங்களின் மேல் அதிகாரியாக இயலாது. (மத்தேயு 25:21,23).

என் பகுதி நேர வேலையை நான் இழந்த பின் தேவன் என்னிடம் செய்ய சொன்னதை செய்தேன். வெளிவேலை செய்வதை முற்றிலுமாக விட்டுவிட்டேன். பணத்தைக் குறித்து நான் மிகவும் பயப்பட்டேன். ஏனென்றால் ஒவ்வொரு மாதமும் எங்களது அத்தியாவசிய தேவைகளுக்கோ அல்லது ஏதாவது அதிகமாக தேவைப்பட்டாலோ அற்புதம் தேவைப்பட்டது. எங்களது அன்றாட தேவைக்கே நாற்பது டாலர் குறைவாக இருந்தது. ஆனால் அந்த சிறிய தொகைக்கு தேவனை நம்பினது, உலக முழுவதும் அவரின் வேலையை செய்ய தேவைப்படும் பெருந்தொகைக்கு அவரை நம்புவதற்கு எங்களை ஆயத்தப்படுத்தியது. ஒவ்வொரு மாதமும் தேவன் எங்கள் தேவைகளை சந்திப்பதை பார்ப்பது ஆச்சரியமானதாக இருக்கும். அதை பலவிதங்களில் செய்தார். ஆனால் தேவைகளை சந்திக்காப்படாமலிருந்ததில்லை.

நான் என் வேலையை விட்டு விட்ட போது சரியான தெரிந்துக் கொள்ளுதலை தான் செய்தேன். ஒருவேளை தவறாய் தெரிந்து கொண்டிருப்பேனேயென்றால் என் வாழ்க்கை இப்போது இருப்பதை போன்று இருந்திருக்காது. நீங்கள் உங்கள் வாழ்விலே எத்தகைய தேர்வுகளை செய்கின்றீர்கள்? தேவனுக்கு கீழ்ப்படிவதை தெரிந்து கொள்கின்றீர்களா? ஜீவனையும், ஆசீர்வாதத்தையும் தெரிந்துக் கொள்கின்றீர்களா? பின்னர் சந்தோஷப்படும்படியான தேர்வுகளா அவை? சரியான தேர்வுகளை நீங்கள் செய்ய வேண்டுகிறேன். கடந்த காலத்திலே செய்யாதிருந்தாலும் பரவாயில்லை இன்று ஒரு புதிய தொடக்கமாக இருக்கட்டும். பயத்தை அல்ல விசுவாசத்தை தெரிந்துக் கொள்ளுங்கள். தேவனோடு ஒரு புதிய ஆரம்பத்திற்கு என்றுமே தாமதம் இல்லை.

நீங்கள் பயப்படும் போது எதைப்பற்றி பயப்படுகிறீர்களோ அதையே செய்யுங்கள். விரைவிலேயே அந்த பயத்தை இழந்து விடுவீர்கள்.

நார்மன் வின்செண்ட் பீல்.

அறுபது வயதிலே பயந்துக் கொண்டே செய்தது

அறுபது வருடங்களிலே ஒருமுறை கூட நான் நீந்தக் கற்றுக் கொள்வேனென்று ஒருபோதும் நினைத்ததில்லை. இனியும் அது தேவையென்று நான் நினைக்கவில்லை. இளம் வயதிலிருக்கும் போது நினைத்திருக்கலாம், ஆனால் நான் இன்னும் ஒரு குழந்தை அல்ல. நான் ஆங்கில கால்வாயை நீந்திக் கடப்பதை பற்றியோ, ஒலிம்பிக் போட்டியிலே போட்டியிடுவதைப் பற்றியோ திட்டமிடவில்லை. எனவே நான் ஏன் நீந்தக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று உந்தப்பட்டேன்?

அநேகருக்கு அது ஒரு பிரச்சனை இல்லை. அது ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும். அது களிப்பானது என்றும் சொல்கின்றனர். அது வேடிக்கையும் கூட. ஆனால் எனக்கோ அது பயங்கரமாகத் தோன்றியது. தண்ணீரைக் கண்டு பயந்தேன்.

தண்ணீர் பற்றிய பயம் எப்படி ஏற்பட்டது என்று நான் எண்ணிப் பார்க்கையில், என் பாலிய பருவ நண்பனொருவன் தண்ணீரிலே மூழ்கி இறந்தது என் நினைவுக்கு வருகிறது. அந்த கோடை இரவிலே அவனுடைய தாயின் கூச்சல் சாளரம் வழியாக நான் கேட்டது இன்றும் என் காதிலே தொனித்துக் கொண்டிருக்கிறது. இன்று கூட அந்த துக்கத்தை உணர்கிறேன். பின்னர் சில வருடங்களுக்குப் பின் என் சகோதரனின் வகுப்பில் பயின்ற ஒருவர் நீரில் மூழ்கி மரித்து விட்டார். அவளின் பயிற்சியாளரின் முகத்தில் தோன்றிய இயலாமையை என்னால் இன்னும் மறக்க இயலவில்லை, விவரிக்க இயலாதது. தண்ணீர் தீமையானதென்றே முடிவெடுத்தேன். குளிப்பதற்கு தவிர வேறு எதற்கும் அது தேவையில்லை என்று எண்ணினேன். ஆனால் தேவன் என்னிடம் பேசிக்கொண்டிருக்கிறார் என்று மெதுவாக எனக்கு தோன்ற ஆரம்பித்தது. நீந்துவதற்கு இருந்த பயத்தை விட பயத்தையே எதிர்க்க வேண்டிய நேரம் வந்துவிட்டதென்று உணர்ந்தேன். நான் நினைத்ததை விட இந்த காரியம் பெரிது என்று உணர்ந்தேன். பயமானது என் வாழ்வை நெரித்துக் கொண்டிருந்தது. ஒரு நாள் என் இருதயத்திலிருந்ததை என் சக ஊழியர்களிடம் பகிர்ந்துக் கொண்டேன். பின்னர் நான் அதை பின் தொடர்ந்து செயல் படவேண்டுமென்று அறிந்துக் கொண்டேன். எனவே ஒய் எம் சி ஏவில் ஆரம்ப பயிற்சி வகுப்பில் சேர்ந்தேன்.

நான் சந்தேகப்பட்டதைப் போன்றே இருந்தது. தேவன் என் வாழ்விலே ஏதோவொன்றை செய்ய முயன்று கொண்டிருந்தார்.

ஒவ்வொரு பாடத்தையும் நான் பயத்துடனே தொடர்ந்து கொண்டிருந்த போது அவருடைய பிரசன்னத்தையும், சமாதானத்தையும் ஆழமாக உணர ஆரம்பித்தேன். நான் நீந்தக் கற்றுக் கொண்டிருந்த போது நான் வேறொரு அளவிலே தேவனை நம்பவும் கற்றுக் கொண்டிருந்தேன்.

என் வாழ்வில் ஒரு சாதனை நீந்துவதாகும். அது சிறந்த உடற்பயிற்சி மட்டுமல்ல, களிப்பானதாகவும் இருக்கிறது. எல்லாவற்றிக்கும் மேல் அது வேடிக்கையாகவும் இருக்கிறது. ஆனால் இவை எல்லாவற்றிக்கும் மேலான சாதனை எதுவென்றால் தேவனை தனிப்பட்ட முறையிலே ஆழமாக நம்பக் கற்றுக் கொண்டது தான். நான் சந்திக்கும் எந்த சூழ்நிலையிலும் அவர் என்னுடன் இருக்கிறாரென்று அறிந்திருக்கிறேன், என்ன நேரிட்டாலும் அவர் என்னை நடத்தி செல்வாரென்பதால் எதை பற்றியும் பயப்படாமல் இருக்கிறேன். ஆம் தேவன் என்னை பயத்தினின்று விடுவித்து நீச்சல் கற்றுக் கொள்ள எனக்கு உதவினார். பயந்துக் கொண்டே செய்வதற்கு காலதாமதமில்லை.

- கரோலின்

அத்தியாயம் 2

பயந்துக் கொண்டே செய்

நான் உனக்கு கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்”

யோசுவா 1:9

தேவன் யோசுவாவுக்கென்று ஒரு பெரிய வேலையை வைத்திருந்தார். அதற்காக அவனை அனுப்பும் முன், பயப்பட வேண்டாமென்று சொன்னார். தேவன் யோசுவாவிடம் என்ன சொன்னாரென்பதை புரிந்துக் கொள்ள, பயம் என்ற வார்த்தையின் அர்த்தத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பல வருடங்களாக பயத்தைப் பற்றி நான் அதிகம் படித்திருக்கிறேன். அதின் அர்த்தம் என்ன என்பதை பற்றி சில சுவாரஸ்யமான தகவல்களை கவனித்து அறிந்திருக்கிறேன். நான் பார்த்த ஒரு விளக்கமானது “ஓடிவிடுவது” என்பதாகும். பயத்தை நாம் துன்பம் அல்லது வேதனையினால் ஏற்படும் ஒரு சங்கடமான உணர்வு என்றும் விளக்கலாம். பயம் என்பதற்கான முழு விளக்கம் இந்த எல்லா கருத்தையும் விட வேறுபட்டது., ஆனால் பயம் என்பது, நாம் பாடுபடுவோம் அல்லது துன்பப்படுவோம் என்ற உணர்விலோ அல்லது சங்கடமான உணர்விலோ ஏதோவொன்றிலிருந்து ஓடிவிடும். இந்த காரியத்திலே நான் கவனம் செலுத்த விரும்புகிறேன்.

பயம் என்பது ஏதோவொன்றிலிருந்து ஓடிவிடுவது என்றால் பின் தேவன் யோசுவாவிடம் பயத்தை உணராதே என்று கூறவில்லை. மாறாக, பயத்தை அவன் உணர்வான் என்று தான் எச்சரிக்கிறார். ஆனாலும் தாம் அவனோடு இருப்பதால் ஓடிவிடாதே என்று கூறுகிறார்.

அநேகரைப் போன்று நானும் பல வருடங்கள் பயத்தை உணராமல் இருக்க முயன்று கொண்டிருந்தேன். தவறான சிந்தனைகளால் ஏற்படும் ஒரு உணர்வு அது என்று அறியாமலிருந்தேன். தேவனைப் பார்க்காமல் என்னுடைய பிரச்சனைகளை அல்லது பிரச்சனையாக இருக்கக்கூடியவற்றை பார்த்துக் கொண்டிருந்தேன்.

வேதாகமம் முழுவதிலும் தேவன் பல விதங்களிலே பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கூறுகிறார். (உபாகமம் 31:6; ஏசாயா 41:10; ஏசாயா 43:1; மாற்கு 6:50; வெளி1:7). உண்மையென்னவென்றால், தேவனுடைய வார்த்தையிலே நாம் பயப்படவேண்டாமென்று சொல்ல ஒரே காரணம் அவர் நம்மோடு இருப்பதாலேயாகும். நம் வாழ்விலே என்ன நடந்தாலும் சரி, தேவன் பெரியவராக இருக்கிறார். அவர் நமக்கு எப்படி உதவுவார், எப்போது உதவுவார் என்றெல்லாம் நமக்கு தெரியாமலிருக்கலாம். ஆனால் அவர் நம்மோடு இருக்கிறார் என்று அறிந்திருப்பதே போதுமானதாகும். அவர் நமக்காக இருக்கிறார், நமக்கு எதிராக அல்ல, தேவன் நம் பட்சத்தில் இருந்தால் யார் நமக்கெதிராக இருந்தாலும் கவலையில்லை.(ரோமர் 8:31). ஏனென்றால் தேவன் எவரை விடவும், எதை விடவும் பெரியவராக இருக்கிறார். (1 யோவான் 4:4).

நான் எதை செய்ய வேண்டுமென்று விரும்பினேனோ, உணர்ந்தேனோ அதை நான் பயத்தை உணர்ந்து கொண்டிருந்தவரை செய்ய இயலாது என்று தவறாக நினைத்துக் கொண்டிருந்தேன். பயம் என்னை விட்டு விட காத்திருந்து, என் வாழ்க்கையையே வீணாக்கிக் கொண்டிருந்தேன். பயத்தை எடுத்துப் போட தேவனிடம் ஜாக்கிரதையாக ஜெபித்துக் கொண்டிருந்தேன். ஆனால் என் ஜெபத்திற்கு பதில் கிடைக்கவே இல்லை. ஏனென்றால் நான் தவறான காரியத்திற்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன். பயம் என்னை தடுத்து விடாமல், பயமிருப்பினும் முன்னேறி செல்ல தேவையான தைரியத்தை தேவன் எனக்கு கொடுக்கும்படி நான் ஜெபித்திருக்க வேண்டும்.

> பயம் என்னை விட்டு விட காத்திருந்து, என் வாழ்க்கையையே வீணாக்கிக் கொண்டிருந்தேன்

பயத்தை உணர்ந்தாலும் முன்னேறி செல்லக்கூடும் என்பதை விளங்கிக் கொண்டது என் வாழ்க்கையையும், அநேகருடைய வாழ்க்கையையும் மாற்றக் கூடியதாக இருந்தது. தன்னுடைய வாழ்க்கையின் பெரும்பாலான பகுதியை பயத்தால் சிறையாக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணின் கதையை வாசித்ததின் மூலம் இதை தெரிந்துக் கொண்டேன்.அவள் வாகனம் ஓட்ட

மாட்டள், இருட்டில் வெளியே செல்ல மாட்டாள். ஒரு தனிமை நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தாள். அடிப்படையாக அவள் செய்ய விரும்பிய எதையுமே அவள் செய்யவில்லை ஏனென்றால் அவள் மிகவும் பயப்பட்டாள். அவள் தன் கிறிஸ்தவ தோழியிடம் இதைப் பற்றி புலம்பிக் கொண்டிருந்த போது, அவள் தோழி அவளிடம், 'நீ ஏன் பயந்துக் கொண்டே செய்யக்கூடாது?'' என்று சொன்னாள்.

இதை நான் வாசித்த போது, அந்தகாரத்தில் இத்தனை வருடங்கள் வாழ்ந்து கொண்டிருந்த எனக்கு ஒளி கிடைத்ததைப் போன்று உணர்ந்தேன். அது என்ன என்பதை அறிந்தேன். பய உணர்ச்சி என்னை விட்டுவிட நான் காத்திருக்க அவசியமில்லை ஏனென்றால் அது ஒருபோதும் என்னை விட்டு விடாது. ஆனால் நான் என்ன செய்ய விரும்பினேனோ அதை பயந்துக் கொண்டே செய்ய முடியும் என்று உணர்ந்தேன்.

பயம் என்ன என்பதை நாம் உண்மையாகவே அறிந்து கொள்வோமேயென்றால் அதற்கு நம் மேல் எந்த அதிகாரமும் கிடையாது. அதற்கு, நமக்கு தீங்கு விளைவிக்கும் எந்த அதிகாரமும் இல்லை ஏனென்றால் நாம் முன்னோக்கி செல்லும் போது எத்தகைய தீமைகளை நாம் சந்திக்க நேரிடக்கூடும் என்ற பிம்பங்களை மட்டுமே காண்பித்து எதிராக சிந்திக்க செய்கிறது.

ஆகாய விமானத்தில் பறந்து பயணிக்க பயந்த ஒரு பெண்ணை அறிந்திருக்கிறேன். அவளுடைய கணவர் பல்வேறு இடங்களுக்கு பிரயாணம் செய்யக் கூடியவர். அவர்களின் பிள்ளைகளும் வளர்ந்து வீட்டைவிட்டு வெளியே சென்று விட்டனர். எனவே அவர் அவளை தன்னுடன் வரும்படி அழைத்தார். அவளுக்கும் செல்ல விருப்பம் தான் ஆனால் மிகவும் பயப்பட்டாள். அவளுடைய கணவர் உலகமுழுவதும் பயணிக்கையில் அவள் வீட்டிலேயேயிருந்த பல வருடங்களுக்குப் பிறகு அவள் பயந்துக் கொண்டே செய்ய தீர்மானித்தாள். தொடக்கத்திலே அவளுக்கு கடினமாகத்தான் இருந்தது, அதிர்வுகளை அதிகம் உணர்ந்தாள், மூச்சு முட்டினது ஆனாலும் அவள் தீர்மானமாக இருந்தாள். இப்போதோ எவ்வித பிரச்சனையுமின்றி பயணிக்கிறாள்.

> பயமில்லாமல் வாழ ஒரே வழி அதை எதிர் கொண்டு பயந்து கொண்டே செய்வதுதான்

கவனித்தீர்களா, சாத்தான் உங்களை பயத்தால் எவ்வளவு தடுத்து நிறுத்த இயலுமோ அவ்வளவாக தடுப்பான். ஆனால் அதை எதிர்பீர்களென்றால்- எந்த பகுதியில் அதை எதிர்கின்றீர்களோ

நாளடைவிலே அவை மாறி விடும். வெவ்வேறு புதிய பகுதியிலே அதை நீங்கள் எதிர்க்க வேண்டும். ஆனால் பயமில்லாமல் வாழ ஒரே வழி அதை எதிர் கொண்டு பயந்து கொண்டே செய்வதுதான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

நீங்கள் பயப்படவில்லை என்பதை நிரூபிக்க முட்டாள்தனமாக காரியங்களை செய்ய வேண்டும் என்று நான் சொல்லவில்லை. எனக்கு நன்றாக நீந்தத் தெரியாது ஆதலால் மலை உச்சியிலிருந்து ஐம்பது அடி ஆழத்திலிருக்கும் ஏரிக்குள் குதிக்கமாட்டேன். சில பயங்கள் உண்மையானதாக இருக்கின்றது. அத்தகைய பயங்கள் நம்மை பாதுகாக்கும். நெருப்பு எரியக்கூடியதென்று அறிந்திருக்கின்றோம் அதனால் நம் கையை அதற்குள் வைக்க மாட்டோம். இரு வழியிலும் வாகன நெரிசலுள்ள சாலையின் நடுவிலே நாம் நடந்து போகமாட்டோம். இத்தகைய சூழ்நிலையைப் பற்றி நான் பேசவில்லை ஆனால் தேவன் உங்களிடம் செய்யும் படி சொன்னவற்றை, அவர் உங்களுடனே இருக்கிறாரென்று அறிந்தவர்களாக பயந்துக் கொண்டே செய்ய வேண்டுமென்றாலும் செய்யுங்கள். அல்லது நீங்கள் செய்ய விரும்பும் எதையும் அவருடைய வரையரைக்குட்பட்டிருக்குமேயென்றால் அதையும் பயம் உங்களை தடுக்காதபடி செய்ய இயல வேண்டும்.

சிறிய பயங்களும் பெரிய பயங்களும்

சில சமயங்களில் தைரியமானது அனுதினமும் செய்ய முயற்சிக்க கூடியதொன்றாக இருக்கும். வெற்றி பெற எவ்வளவு காலம் எடுத்துக் கொண்டாலும் விடாமல் செய்வதே தைரியமாகும். பயத்தை எதிர்க்கும் போது அது ஒரு நாளிலோ அல்லது ஆயிரம் நாட்களிலோ மறைந்துவிடும் என்று என்னால் வாக்களிக்க முடியாது. ஏனென்றால் அது எப்போதுமே எங்கேயாவது தோன்றிக்கொண்டேதான் இருக்கும். ஆனால் பயத்தினின்று விடுபடுவதென்பது அது மறைந்துவிட்டதென்று அர்த்தமாகாது, ஆனால் உங்கள் தீர்மானங்களையும், செயல்களையும் அது கட்டுப்படுத்துவதை அனுமதிக்காமல் இருப்பதாகும்.

உங்கள் வாழ்வின் பெரிய நிகழ்வுகளில் மட்டும் பயம் ஏற்படுவதில்லை. அது எப்போதுமே எங்கேயோ இருந்து கொண்டேதானிருக்கிறது. சந்தேகம், அச்சம் போன்ற உணர்ச்சிகளை ஏற்படுத்துவதின் மூலம் எப்படியாவது, எங்கேயாவது இருக்கத்தான் செய்கிறது. ஒருவேளை ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ள விரும்பலாம் ஆனால் ஒரு நல்ல பெற்றோராக இருக்க பயப்பட்டு அதை தள்ளிப் போட்டுக் கொண்டேயிருக்கலாம். உங்கள் தலை அலங்காரத்தை மாற்ற விரும்பலாம் ஆனால் அது உங்களுக்கு பிடித்த

மாதிரியாக இருக்காதென்று பயப்பட்டு கொண்டு இப்போதிருப்பதிலேயே திருப்தியடைந்துக் கொள்ளலாம். நீங்கள் எதிர் கொள்ளும் பயம் பெரியதோ சிறியதோ எதுவாக இருந்தாலும் அது எதிர்க்கப்பட வேண்டும். அதை எவ்வளவாக சகித்துக் கொண்டிருக்கின்றீர்களோ அவ்வளவாக அதற்கு பழகிக் கொள்வீர்கள். சில சமயங்களிலே இப்படியாக நாம் இருக்க கூடாதென்பதை நாம் மறந்து விடும் அளவுக்கு நாம் பழகிக் கொள்வோம். உங்கள் வாழ்விலே அது சாதாரணமானது, ஏற்றுக் கொள்ளக் கூடியது என்ற நிலைக்கு வந்துவிடும் அளவுக்கு பயத்தை அனுமதிக்காதீகள்.

நாம் பயத்திலே வாழ வேண்டிய அவசியம் இல்லை

நான் முற்றிலும் பயத்தினால் நிறைந்த சூழலில் வளர்ந்தேன். எனவே எனக்கு பயத்துடன் வாழ்வது சாதாரணமானது. எனக்காக தேவன் ஏற்கனவே ஏற்படுத்தியிருந்த நல்ல வாழ்க்கையை எப்படி வாழ வேண்டுமென்று போதிக்கும் வரை இப்படிகூட வாழ முடியுமா என்பதை அறியாமலிருந்தேன். ஒரு விதமான அச்சத்தாலே பெரும் பாலும் நிரம்பியிருந்தேன். ஏதோ ஒன்றின் நிமித்தமாக அல்ல, அப்படியாகவே இருந்தது இல்லாமலிருந்த நினைவே எனக்கில்லை.

ஒரு நாள் நான் என்னை அலங்கரித்துக்கொண்டிருந்த போது என்னை சுற்றிலும் ஒரு விதமான அச்சுறுத்தும் சூழ்நிலையிருப்பதை அறிந்தேன். நான் தேவனிடம், “ஆண்டவரே என்னை சுற்றி எப்போதுமே இருக்கும் இந்த உணர்வ என்ன?” என்று கேட்டேன். நான் ஆச்சரியப்படும் விதமாக என் ஆவியிலே “தீய முன்னறிவிப்பு” என்ற வார்த்தையைக் கேட்டேன்.

தீய முன்னறிவிப்பென்பது ஏதோ தீமை நடந்துவிடும் என்ற பயமுறுத்துதலாகும். சிறுமைப்பட்டவனுடைய நாட்களெல்லாம் தீங்குள்ளவைகள். (நீதிமொழிகள் 15:15).

தேவன் என் இருதயத்திலே பேசின போது, என் பிரச்சனை என்னவென்று புரிந்தது. ஏன் எனக்கு அவ்வாறு தோன்றுகின்றதென்றும் புரிந்தது. என் வாழ்க்கை முழுவதும் ஏதோவொன்று நடந்து கொண்டேதானிருந்தது. என் தகப்பனால் நான் துஷ்பிரயோகம் செய்யப்பட்டேன். என் தாயால் கைவிடப்பட்டேன், எனக்கு நண்பர்கள் இருக்கக் கூடாது, பள்ளிக் கூடத்திலே எந்தவொரு நிகழ்விலும் கலந்துக் கொள்ள தடை செய்யப்பட்டேன், மேலும் பல ஏமாற்றமான சூழ்நிலைகளுக்குள்ளாக்கப்பட்டிருந்தேன். நான் ஏமாற்றத்திலேயே பழக்கப்பட்டிருந்ததால் ஏதாவது நல்ல காரியத்தை எதிர்பார்க்கவே பயப்பட்டேன். எனவே அடுத்து என்ன ஏமாற்றமான காரியம் நடக்குமென்று காத்திருந்தேன்.

நாம் மறுபடியும் பிறக்கும் போது, அழிவில்லாத ஒரு நம்பிக்கைக்குள்ளாக பிறக்கிறோம் என்று வேதம் சொல்லுகிறது. (1 பேதுரு 1:3). நம் சூழ்நிலை எவ்வளவு நம்பிக்கையற்று இருந்தாலும் இயேசுவுக்குள்ளாக எப்போதுமே நல்லதொரு மாற்றம் இருக்கிறது. நாம் தீய காரியங்களையல்ல நல்ல காரியங்களையே எதிர்பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார். நாம் பயத்திலே வாழ வேண்டிய அவசியம் இல்லை.

பொறுத்துக் கொண்டிருக்காதீர்

அநேக சமயங்களிலே, சிலவற்றை எதிர்த்து முன்னோக்கி செல்வதற்கு பதிலாக அதை பழகி கொண்டு பொறுத்துக் கொள்கின்றோம். ஒருவர் உங்களை பயப்படுத்தவும், கட்டுப்படுத்தவும், அவரின் வசதிக்கேற்ப கையாளவும் அனுமதிபீர்களேயென்றால், அவ்வாறாக பயந்து பணிந்து கொண்டிருக்கத் தேவையில்லை. உங்களை அவ்வாறாக பயமுறுத்தி நடத்துபவரை எதிர்த்து நில்லுங்கள்.

அந்த நபர் ஒருவேளை கோபப்படலாம் ஆனால் எவ்வளவு அதிகமாக அவருடைய கெட்ட நடத்தையை பொறுத்துக் கொள்கின்றீர்களோ அவ்வளவு மோசமாக மாறிவிடும். “எனக்கு பயமாக இருக்கிறது” என்று நீங்கள் சொல்லலாம், நானோ, “பயந்துக் கொண்டே செய்” என்கிறேன். ஏனென்றால் தேவன் உங்களுடனே இருக்கிறார். நீங்கள் செயல் படும் முன் தேவனிடம் உங்களை நடத்தவும், உங்களுக்கு உதவவும் கேளுங்கள் பின் சரியான நேரம் என்று நீங்கள் உணரும் போது அவருடைய உதவியுடன் அதை மேற்கொள்ளுங்கள்.

> பயமும், பெரும்பாலான பயமுறுத்துகிறவர்களைப் போன்று எதிர்க்கும் போது பின்னடைந்துவிடும்.

பயத்தை எதிர்ப்பதா அல்லது பொறுத்துக் கொள்வதா, எது அதிக கேடாகத் தெரிகிறது. பயமும், பெரும்பாலான பயமுறுத்துகிறவர்களைப் போன்று எதிர்க்கும் போது பின்னடைந்துவிடும்.

பல வருடங்களாக என் முதுகிலே ஏற்பட்ட ஒரு விதமான வலியை பொறுத்துக் கொண்டிருந்தேன். பின்னர் ஒரு நாளிலே எனக்கு வேண்டியதை செய்ய என்னால் நடந்து கூட செல்ல இயலவில்லை. பயமும் அப்படிதான். நமக்கு தொந்தரவு கொடுக்கும் ஒரு சிரமத்தைப் பொறுத்துக் கொண்டால் நாம் ஒரு நாளிலே நம் நேரத்தின் பெரும் பகுதியை ஸ்வாரசியத்துடன் அனுபவிக்காமல் வீணாக்கிவிட்டோமென்று உணர்வோம்.

என் தாயின் கதை அப்படி தான். தன்னுடைய இருபதாம் வயதுகளில் அவர் பயத்தை பொறுத்துக்கொண்டார். ஒரு சிறப்பான வாழ்க்கையை இழந்து விட்டார். அவர் தம் தொண்ணூறாம் வயதிலே மரித்தார். தான் எடுத்த தீர்மானத்தைப் பற்றி கவலைப் படாமல் அவர் ஒரு நாளும் இருந்திருக்கவே மாட்டார் என்பதில் சந்தேகமேயில்லை. என் தகப்பன் கோபக்காராதலால் அவரை சந்தோஷப்படுத்த முயலும் ஒரு சிறிய வட்டத்திற்குள்ளாகவே வாழ்ந்தார். என் தாய் மரிப்பதற்கு முன் என் தந்தை மரித்துவிட்டாதால் சிறிது காலம் சமாதனத்துடன் இருந்தார். அதற்காக சந்தோஷப்படுகிறேன். வயது முதிர்ந்தவர்களின் காப்பகத்திலே அவர் தனது வாழ்க்கையின் நிறைவு பகுதியிலிருந்தாள். அங்கே அவர் தன் அறையிலே இருப்பார் ஏனென்றால் அவருக்கு அந்த சமாதானமும், அமைதியும் தேவைபட்டது. அவருக்கு கிடைக்காததை அங்கே அவர் பெற்றார். துஷ்பிரயோகத்தை பொறுத்து கொள்ளமாட்டேன் என்ற தீர்மானத்தை அவர் எடுத்திருந்திருக்க வேண்டியிருந்து.

நாம் உதவியைப் பெற்றுக் கொள்ள இயலும் ஆனால் அதை ஏற்றுக் கொள்ள தெரிந்துக் கொள்ள வேண்டும். எபேசியர் 6ல் ஆவிக்குரிய யூத்தத்தைப் பற்றி பார்க்கிறோம். அதில் நாம் விசுவாச கேடகத்தை கையில் எடுத்துக் கொண்டு பொல்லாதவனின் அக்கினி அஸ்திரங்களை அவித்துப் போட வேண்டுமென்று சொல்லுகிறது (எபேசியர் 6:16). எதிரியானவனிடமிருந்து நேராக நம்மை நோக்கி வரும் அக்கினி அஸ்திரம் பயமாகும். நாம் பயத்தை உணர்வது பயத்துடனே வாழ்வதென்று அர்த்தமாகாது. அது நமக்கு என்ன செய்ய வேண்டும் ,செய்யக்கூடாது என்று கட்டளையிடக்கூடாது. நாம் விசுவாசத்தோடு பயத்தை எதிர் கொள்ளத் தெரிந்துக் கொள்ள வேண்டும். நாம் பயத்தை உணர்ந்தாலும் பயந்துக் கொண்டே செய்யலாம்.

நாம் நினைத்தால் எவ்விதமான பயத்தையும் எதிர்த்து வெற்றி பெறலாம். நம் மனதை தவிர வேறெங்கும் பயம் இருப்பதில்லை என்பதை நினைத்துக் கொள்ளவேண்டும்.

டேல் கார்னெகி

சரியான எண்ணங்களில் நோக்கமாயிருந்து பயத்தை அழித்து விடலாம்.

பயத்திற்கு சிறகுகள் இருக்கிறது என்ற ஒரு கருத்து எனக்கிருக்கிறது. எனக்கு பறவைகளைப் பற்றிய பயமுண்டு. அவற்றின் கூர்மையான அலகு, கிழிக்கும் தன்மையுடைய நகங்களைப் பற்றிய ஒரு நியாயமற்ற பயம் இருக்கிறது.

என் தகப்பனாருக்கும் இந்த பயமுண்டு. ஆனால் அது அவரது தனிப்பட்ட அனுபவத்தால் ஏற்பட்டதாகும். அவர் இளம் வயதிலே, ஒரு சேவலால் தாக்கப்பட்டார். அதனால் ஏற்பட்ட காயங்களால் மருத்துவமனையிலேயே இருக்க வேண்டியிருந்தது .அவர் வளர்ந்த போதோ பறவைகளெல்லாம் ஆபத்தானவைகள் என்ற பயத்துடனிருந்தார். அவை நம்பத்தக்கதல்ல என்று தவிர்த்துவிடுவார்.

ஒரு நல்ல தகப்பனைப் போன்று அவர் என்னையும் பறவைகளிடமிருந்துக் பாதுகாப்பார். பறவைகளை என்னிடமிருந்தும் என்னை பறவைகளிடமிருந்தும் காத்துக் கொள்ள முயற்சிப்பார். மணி போன்ற அதனுடைய கண்களைப் பாருங்கள் அவ்வளவு தானே.

என் தகப்பனார் தைரியமானவர், அற்புதமானவர், எதைபற்றியும் பயப்படக்கூடாதென்று சொல்லுவார். அவர் வேண்டுமென்றே எந்தவொரு பயத்தையும் ஏற்படுத்தமாட்டார். ஆனால் பயத்திற்கு சிறகுகள் உண்டு. நம்மை அறியாமலே நம் அனுபவங்களும், செயல்களும் நம் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கும். பயமும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவிக் கொள்ளும். எனவே நானும் பறவைகளும் நண்பர்களல்ல.

நான் அதிகம் பிரயாணம் செய்கின்றேன். எட்டுக் கால் பூச்சி, பாம்பு போன்றவற்றைப் பற்றிய பயம் எனக்கில்லை. ஆனால் பறவையை அங்கே கொண்டு வந்தால் எல்லாம் வேறுவிதமாகிவிடும். நியாயங்களைதான் சொல்கிறேன் ஆனால் தேவனுடைய உதவியோடு ஆரம்பத்திலே நான் கொண்டிருந்த உணர்ச்சிகளை , தவறான காரியத்தை கவனிக்காமல் சரியானவற்றை கவனித்து மேற்கொள்ள கற்றுக் கொண்டேன். பறவை ஒன்று என்னை காயப்படுத்தும் சாத்திய கூறு குறைவு தான் என்று அறிந்திருக்கிறேன். இன்னும் அந்த சிறகுள்ளவற்றை நான் வெறுத்தாலும் அவற்றால் அதிகம் பாதிக்கப்படுகிறதில்லை. ஏனென்றால் பயம் என்னை கட்டுப்படுத்தக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறேன்.

பயம் என் பிள்ளைகள் மீது பறந்து வந்து அமர அனுமதிக்கக் கூடாதென்று தீர்மானித்திருக்கிறேன். அவர்களும் பறவைகளும் நன்றாக சுமூகமாகத்தானிருக்கின்றனர்.நான் தான் அவர்களுடன் பறவைகள் சரணாலயத்திற்குப் போகிறதில்லை. நான் பயப்படவில்லை, வேடிக்கைக்காககூட அவற்றுடன் இருக்க விரும்பவில்லை.

- ஜிஞ்சர்

அத்தியாயம் 3

நான் பயப்படமாட்டேன்

“கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்.”

சங்கீதம் 118 -6.

சங்கீதக்காரன் நான் பயப்படேன் என்று எழுதின போது, அவன் பயத்தை உணரவில்லை என்று சொல்லுகிறார் என்று நான் நினைக்கவில்லை. நான் நினைப்பது என்னவென்றால் அவர் பயத்தை உணர்ந்த போது, பயம் அவரை கட்டுப்படுத்த அவர் அனுமதிக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் அத்தகைய மன நிலை இருக்க வேண்டும். உண்மையாகவே ஒரு கிறிஸ்தவன் கொண்டிருக்க வேண்டிய ஏற்புடைய மனநிலை இது தான். பயமானது தேவனுடமிருந்து பெறப்படுவதில்லை பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு நாம் அதை எதிர்க்க வேண்டும். எதிர்ப்பது என்பது அது நம் தீர்மானங்களை பாதிக்க நாம் அனுமதிக்ககூடாது.

“நான் உங்களுடனே இருக்கிறேன்” என்பது தேவனுடைய வாக்குத்தத்தம் (மத்தேயு 28:20). உண்மையாகவே, தேவனுடைய வார்த்தையிலிருக்கும் முக்கியமான வாக்குத்தத்தங்களில் இதுவும் ஒன்றாகும். நாம் பாவம் செய்கையில் அவர் நம்மை மன்னித்து விடுவதாக வாக்களிக்கிறார். அது அற்பதமானது தான், ஆனால் அதைபோன்று அற்புதமானது அவர் நம்முடனே இருப்பதாக வாக்களித்திருப்பது தான். தேவன் இல்லாத எவ்விடத்திலும் நீங்கள் இருக்கப்போவது இல்லை. அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். அப்படியென்றால் அவர் எல்லா இடத்திலும், எவ்விடத்திலும் இருக்கிறார். எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். எல்லா வல்லமையையும் பெற்றிருக்கிறார். நற்செய்தி என்னவென்றால் அவர் நம் தகப்பனாக இருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகள். அவர்

நம்முடனே இருப்பதால் நாம் எதைக் குறித்தும் பயப்படக்கூடாதென்று நம்ப வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவர் நல்லவர், அவர் தம் பிள்ளைகளாகிய நம்மை கவனித்துக் கொள்வார்.

உங்கள் பிரச்சனைகளை அவர் தீர்க்க வேண்டுமென்று அவரிடம் கேட்பதை விட அவர் உங்களை தம்மிடமாய் இழுத்துக் கொண்டு தம் பிரசன்னத்தை உங்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று கேளுங்கள். தேவன் நம் பிரச்சனைகளிலே நமக்கு உதவுகிறார். ஆனால் அதற்கு மேல் நாம் அவரை விரும்ப வேண்டுமென்று விரும்புகிறார். நான், "தேவனுடைய பிரசன்னத்தைத் தேடுங்கள், பரிசுகளை அல்ல" என்று கூறுகிறதுண்டு.

> தேவனுடைய பிரசன்னத்தைத் தேடுங்கள், பரிசுகளை அல்ல

தேவனுடைய பிரசன்னத்தை பற்றி தாவீது பெற்றிருந்த அதே வாக்குத்தத்தம், நோவாவுக்கும் கிடைத்தது (ஆதியாகமம் 6:18), ஆபிரகாம் சாராளுக்கும் கிடைத்தது, (ஆதியாகமம் 17:7,19, ரோமர் 4:17), யாக்கோபுக்கும் கிடைத்தது (ஆதியாகம்ம 28:15), யோசேப்புக்கும், மரியாளுக்கும் கிடைத்தது (மத்தேயு 1:23), பவுலுக்கும் கிடைத்தது (அப் 18:10). இந்த தேவ ஊழியர்கள் பயந்திருக்க தேவையில்லை ஏனென்றால் அவர்கள் எங்கு சென்றாலும் அவர் அவர்களுடன் இருப்பதாக வாக்குப் பண்ணப்பட்டார்கள். அந்த வாக்குத்தத்தமானது இருண்ட, வேதனையான நேரங்களிலே அவர்களை உறுதியாக காத்துக் கொண்டது. "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்" (சங்கீதம் 23:4) என்றார் தாவீது.

வேதாகமக் காலத்திலே வாழ்ந்தவர்களுக்கு தன் பிரசன்னத்தை பற்றி தேவன் வாக்களித்த அதே வாக்குத்தத்தம் உங்களுக்கும் உரியது. தேவன் நாம் கஷ்டங்களை பெற மாட்டோமென்று வாக்களிக்கவில்லை ஆனாலும் அவற்றினூடே நம்முடன் இருப்பதாக வாக்கு பண்ணியிருக்கிறார். இயேசு 'இம்மானுவேலர்' என்று அழைக்கப்பட்டார். அப்படியென்றால் தேவன் நம்மோடிருக்கிறாரென்று அர்த்தமாகும் (மத் 1:23). அதனால் நாளடைவிலே நம் பிரச்சனைகளெல்லாம் தீர்ந்துவிடும், நாம் அதனூடே சென்ற போதிருந்ததை விட பெலவான்களாக அதினின்று வெளியே வருவோம்.

தேவனை சரீர ரீதியாக உணராமல், அவருடைய பிரசன்னத்தை உணரக் கற்றுக் கொள்ளலாம். நாம் எப்படி உணர்கிறோம் அல்லது

உணராமலிருக்கிறோம் என்பதை அதிகமாக சார்ந்திருப்போமேயென்றால், பிசாசு நம் உணர்ச்சிகளைப் பயன்படுத்தி நம்மை வஞ்சிப்பான். சில வயது முதிர்ந்தவர்களுக்கு இல்லாத ஆவிக்குரிய உள் உணர்வைப் பெற்றிருக்கும் சிறிய பிள்ளைகளைப் போன்று நாம் அவரை நம்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதேனென்றால் சாத்தியமற்றதாக தோன்றுகிறதை அவர்கள் சாத்தியம் என்று நம்புகின்றனர்.

தன் இருதயத்திலே இயேசு வாழ்கின்றார் என்று எப்படி அறிந்திருக்கிறாய் என்று ஒரு சிறுபிள்ளையிடம் கேட்ட போது, அவள் என் கையை என் இருதயத்தின் மேல் வைக்கும் போது இயேசு அங்கே நடந்துக்கொண்டிருக்கிறதைக் கேட்கிறேன் என்று சொன்ன ஒரு சிறுபிள்ளையை பற்றி கேட்டிருக்கிறேன். நம் இருதயத்தின் துடிப்பானது தேவபிரசன்னத்தின் அடையாளமாயிருக்கிறது.

நான் தேவனுடைய பிரசன்னத்தை உணரும்போது அவருடனான என் உறவை நான் எண்ணி கிளர்ச்சியடைகிறேன். அநேக சமயங்களிலே அது சிறியவையாக இருந்தாலும் எனக்கு அதிகம் தேவையானதாக இருக்கிறது. என் பிள்ளைகள் என்னை அழைத்து எவ்வளவாக என்னை நேசிக்கின்றனர் என்று சொல்லும் போது, தேவன் அவர்கள் மூலமாக என்னை நேசிக்கின்றாரென்பதை அறிந்திருக்கிறேன் என் கணவர் ஒவ்வொரு நாள் காலையிலும் என்னை அணைத்துக் கொண்டு எப்படியிருக்கிறாய் என்று கேட்கும் போது அது தேவனே என்னை அணைப்பது என்று அறிந்திருக்கிறேன். நான் ஒரு உணவகத்தில் இருக்கும் போது அதன் முதலாளி என்னை எனக்கு பிடித்தமான இடத்தில் அமர வசதி செய்து கொடுத்தால் அது தேவன் என்னை பிரியப்படுத்துகிறாரென்று அறிவேன். நாம் பல வேளைகளிலே பெரிய அற்புதத்தை எதிர் நோக்கிக்கொண்டிருப்பதால் நம்மை சுற்றி நடக்கும் பல நூறு அற்புதங்களை நாம் இழந்து போகிறோம்.

> தேவனை எல்லா இடத்திலும் பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவர் எங்கே காணப்படுகிறாரென்பதை பற்றி ஆச்சரியப்படுவீர்கள்.

தேவனை எல்லா இடத்திலும் பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவர் எங்கே காணப்படுகிறாரென்பதை பற்றி ஆச்சரியப்படுவீர்கள். 'தேவன் என்னோடே இருக்கிறார் என்ற மனப்பான்மையோடு இருங்கள். தேவன், நீங்கள் அவரை தேடினால் அவரை கண்டுபிடிப்பீர்கள்' என்று சொல்லுகிறார். (எரேமியா 29:13).

ஏமாற்றியும், பொய்சொல்லியும் தன் தமையன் ஏசாவின் சேஷ்டபுத்திர பாகத்தைக் களவாடிய ஏமாற்றுக்காரன் தான் யாக்கோபு. (ஆதி 27:1-40). பின்னர் அதை தொடர்ந்து இருபது வருடங்கள் அவன் தமையன் அவனை கொன்று விடுவானென்று பயந்து அவனிடமிருந்து மறைந்து ஓடினான். யாக்கோபு சிறந்த ஆவிக்குரிய குண நலங்களைப் நிச்சயமாக பெற்றிருந்த ஒரு ஆவிக்குரியவன் அல்ல. ஆனாலும் தேவன் அவனுக்கு பூமியிலிருந்து வானம் வரை உயர்ந்திருந்த ஒரு ஏணியை அவன் சொப்பனத்திலே காண்பித்தார். அந்த ஏணியின் மேல் தேவதூதர்கள் ஏறிக்கொண்டும், இறங்கிக்கொண்டும் இருந்தனர். (ஆதி 28:18-22). யாக்கோபு தேவனை அடைய அந்த ஏணியை உபயோகித்தானென்று நினைக்கலாம். ஆனால் அது தேவன் அவனிடமாய் இறங்கி வருவதற்கேயாகும். நாம் எந்த நிலையில் இருக்கிறோமோ அந்த நிலையில் தானே தேவன் நம்மை சந்திக்கின்றார். யாக்கோபுக்கு உதவி அதிகமாகத் தேவைப்பட்டது.

> தேவன் நம்மோடிருந்தும் அதை அறியாமலிருப்பதே நம் வாழ்வின் ஒரு பெரிய சோகமாகும்.

யாக்கோபு தூக்கத்தினின்று எழுந்த போது அந்த சொப்பனம் தேவனிடமிருந்து வந்தது என்று உணர்ந்து,"மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன் என்றான்" (ஆதி 28:16). ஒரு சாதாரண ஒன்றுமில்லாத இடம் தேவனிருக்கும் ஒரு சிறப்பான இடமாகியது. தேவன் நம்மோடிருந்தும் அதை அறியாமலிருப்பதே நம் வாழ்வின் ஒரு பெரிய சோகமாகும். நம் அன்றாட வாழ்விலே சாதாரணக் காரியங்களிலே தேவனுடைய பிரசன்னத்தை உணரக் கற்றுக்கொள்வோமென்றால் நம் விசுவாசம் ஒரு புதிய உச்சத்திற்கு செல்லும். தேவனைக் காண சிலுவையிருக்கும் பலிபீடத்திற்கும், வேதாகமக் கதைகளால் அலங்கரிக்கப்பட்ட சாளரங்களையுடைய ஆலயக் கட்டிடத்திற்கு செல்ல வேண்டாம். ஏனென்றால் உங்களுடனே அவர் இருக்கிறார். நீங்கள் கடையிலிருக்கும் போதும், வாகன நெரிசலிலிருக்கும் போதும், உங்கள் கட்டணங்களைக் கட்டிக் கொண்டிருக்கும் போதும், வேலை ஸ்தலத்திலே வேலை செய்துக் கொண்டிருக்கும் போதும் அல்லது உங்கள் பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருக்கும் போதும் அவர் உங்களுடனே இருக்கிறார். ஞாயிற்றுக் கிழமை காலை ஒரு மணி நேரம் மாத்திரம் நாம் அவரை சந்திப்பதில்லை, தேவன் நம்மோடு இருக்கிறாரென்பதை நாம் உணர்ந்தால் தான் பயத்திலிருந்து நாம் விடுபடுவோம். நம் வாழ்விலே பயம் நுழைய சமயம் பார்த்துக் கொண்டிருக்கும். நம் எண்ணங்களிலும், உணர்ச்சிகளிலும்

இன்னும் பயத்தை உணர்வோம் ஆனாலும் நாம் பயந்துக் கொண்டே செய்வோம் ஏனென்றால் அவர் நம்முடனே இருக்கிறார் என்ற தைரியம் கொண்டவர்களாக இருப்போம்.

திசைதிருப்பங்கள்/கவனசிதறல்கள்

தேவன் நம்மோடு இருக்கிறாரென்பதை மறந்து, நம் மனித பெலத்தினாலே காரியங்களை செய்ய முயன்று போராடத் தொடங்கும் போது பயம் ஏற்படுகின்றது. தேவன் தன் ஊழியர்கள் அனைவரிடமும் மீண்டும், மீண்டும், "பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்," என்று சொன்னாரென்பதை நினைவில் கொள்ளுங்கள். பயமானது மிகவும் தந்திரமுள்ளதாக இருக்கிறது. அது கவலை, பீதி ஏன் பொறாமையாகவும் கூட வெளிப்படும்.

ஒரு நடுத்தர வயதுடைய பெண் ஒருவர் இருக்கிறார். அவளுக்கு திருமணம் ஆகவில்லை. அவள் சரியான ஒருவரை மணமுடித்துக் கொண்டு அவருக்கு மனைவியாக வேண்டுமென்று விரும்புகிறாள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவள் அதற்காக காத்துக் கொண்டிருக்கும் போது அவளது தோழிகள் பலருக்கு திருமணம் நடைபெறுகிறது. அவள் அவர்களது திருமணத்திற்கு சென்று சந்தோஷமாக இருப்பதைப் போன்று நடிக்கின்றாள், ஆனால் அவள் உள்ளத்திலே பொறாமையாக உணர்கிறாள். அவளது பொறாமைக்குக் காரணம் தனக்கு ஒருபோதும் திருமணம் நடந்து விடாமலிருந்து விடுமோ என்ற பயமேயாகும். பிறரிடம் இருப்பது நம்மிடமும் இருந்தால் நாம் பிறரைப் பார்த்து பொறாமைப்படமாட்டோம். ஆனால் நாம் விரும்புவது ஒருவேளை நமக்கு கிடைக்காமல் போய்விடுமோ என்று பயப்படும் போது பொறாமை ஏற்படுகின்றது.

உண்மையாகவே பல பிரச்சனைகளுக்கான காரணம் நாம் விரும்புவதை நாம் பெற்றுக் கொள்ளாமலிருப்பதேயாகும். அது கவலையை கொண்டு வந்து வீணான திட்டங்களை தீட்டத் தூண்டுகிறது. நீதிமொழிகள் 16:9லே, நம் மனம் நம் வழிகளைத் திட்டமிடுகிறது ஆனால் தேவனே அதை வாய்க்கச் செய்வார் என்று வாசிக்கின்றோம். நாம் விரும்பும் விதமாக நம்முடைய திட்டங்கள் வாய்க்கிறதில்லை என்பதில் ஆச்சரியமேதுமில்லை. தேவனுடைய எண்ணங்களும், வழிகளும் நம் வழிகளைவிட உயர்ந்தவை (ஏசாயா 55:8-9).அவர் நம்மை நேசிக்கின்றார். நமக்கு நன்மையாக இராது என்று அவர் அறிந்திருக்கும் நம் திட்டத்தை நாம் நிறைவேற்ற முயற்சிக்கும் போது அவர் நம் மேல் வைத்திருக்கும் தம் அன்பினிமித்தம் அது வெற்றிப்

பெறாமல் தடுக்கின்றார். ஏனென்றால் அதைவிட ஏதோவொன்று பெரியதாக திட்டமிட்டு வைத்திருக்கிறார்.

தேவனுடைய வார்த்தையாகிய விதை நம் இருதயங்களிலே விதைக்கப்படும் போது, கவன சிதறல்களும், உலக கவலைகளும் அந்த விதையை திருடிச் சென்று விடுகிறது என்று இயேசு சொன்னார். (மாற்கு 4:14-19). நாம் கவனமாயிருந்து தேவனுடைய வார்த்தை நம் இருதயங்களிலே வேர் கொள்ள அனுமதிப்போமேயென்றால் நாம் ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்துவிடுவோமென்று சாத்தான் பயப்படுகிறான். எனவே இயேசுவின் மீதும் அவருடைய வார்த்தையின் மீதும் கவனம் செலுத்தாதப்படி நம் கவனத்தை சிதறச் செய்துவிடுகிறான். தேவனிடமிருந்து உங்கள் நேரத்தை திருடி, அவருடைய பிரசன்னத்தினின்று உங்கள் கவனத்தை சிதற செய்யும் வீணான காரியங்கள் எவை என்று ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். ஏதோவொரு கவன சிதறலோ அல்லது தடங்கலோ ஏற்பட்டு உங்கள் நோக்கத்தினின்று தடம் புரள செய்யும் போது எவ்வளவு அதிகமாக ஜெபிக்கின்றீர்கள். பல்வேறு வேலை செய்தல், எப்போதும் ஏதாவது செய்துக் கொண்டிருத்தல், கடினமாக உழைத்தல் போன்றவையெல்லாம் பாராட்டுதற்குரியதாக இருக்கும் இன்றைய கால கட்டத்தில் கவனமாக இருக்கக் கற்றுக் கொள்வது பெரிய சவாலாக இருக்கின்றது. கவன சிதறலைப் பற்றி மார்த்தாள் மரியாள் கதையை கொண்டு இயேசு விளக்கமளிக்கிறார். இயேசுவை தன் வீட்டிற்கு வரும்படி மார்த்தாள் அழைத்தாள், அவர் சொல்வதைக் கேட்க ஆர்வமாக இருந்தாள், ஆனால் அவரை விருந்தோம்ப செய்யும் ஆயத்தங்களிலே கவனத்தை சிதற விட்டாள். அவள் உணவு சமைத்தாள், வீட்டை சுத்தம் செய்தாள், அவர் வரும் போது எல்லாம் சுத்தமாக இருக்கவேண்டுமென்பதில் கவனமாக இருந்தாள். ஆனால் அவளது சகோதரியாகிய மரியாளோ இயேசுவின் பாதத்திலே அமர்ந்துக் கொண்டாள். இது ஆச்சரியமானது. அந்த நாட்களிலே, ஒருவர் ரபியின் பாதத்திலே அமர்ந்தால் அவரது சீஷனாக விரும்புகிறானென்று அர்த்தமாகும். சரித்திரத்திலே இயேசுவை தவிர வேறெந்த ரபியும் ஒரு பெண்ணை சீஷனாக கொண்டிருக்கவில்லை.

இதனால் மார்த்தாள் மிகுந்த விரக்திக்குள்ளானாள், ஏனென்றால் அவளாக எல்லா வேலையும் செய்துக் கொண்டிருந்த போது மரியாளோ இயேசுவின் பாதத்திலே அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தபடியால் இயேசுவிடம் குறைக் கூறினாள். இயேசு அவளுக்கு பிரதியுத்திரமாக அவள் அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாளென்றும் மரியாளோ எல்லாவற்றையும் விட முக்கியமானதொன்றை தெரிந்து கொண்டாளென்றும் கூறினார். (லூக்கா 10:38-42).

மார்த்தாள் வேலை செய்யக்கூடாதென்றா இயேசு கூறினார்? இல்லை, அவள் வேலை செய்துக் கொண்டிருந்த போது அவருடன் இருக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டார். சமையல் செய்வது, சுத்தப்படுத்துவதை விட அந்த தருணத்திலே முக்கியமாக இருந்ததை செய்ய வேண்டுமென்றும் அதற்காக வேலை செய்வது சிறிது தாமதித்தாலும் பரவாயில்லை ஏன்றும் குறிப்பிட்டார். மார்த்தாள் இயேசுவை தன் இல்லத்திற்கு அழைத்திருந்தும் கவலையினால் அவருடைய பிரசன்னத்தை இழந்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு நல்ல நோக்கங்கள் இருந்தது , ஆனால் நம்மில் அநேரைப் போன்று கவனத்தை சிதறவிட்டாள்.

> நம் வேலைகள் நம்மை இயேசுவிடமிருந்து பிரித்துவிடாமல் அவருடன் இணைந்து வேலை செய்யலாம்.

இந்த போதனையானது நாம் வேலை செய்யக்கூடாதென்று போதிக்கவில்லை; நாம் கவலைப் படவும், அனுதினமும் ஏற்படும் கவன சிதறல்களால் தேவபிரசன்னத்தை இழந்துவிடாமலும் இருக்கும் படியும் போதிக்கின்றது. நம் வேலைகள் நம்மை இயேசுவிடமிருந்து பிரித்துவிடாமல் அவருடன் இணைந்து வேலை செய்யலாம். ஒவ்வொரு நொடிப்பொழுதும் அவரை நினைக்காமலிருக்கலாம், ஆனால் அவ்வப்போது தரித்திருந்து நம்முடன் அவர் இருப்பதை உணர்ந்து, ‘தேவனே நீர் என்னை ஒருபோதும் விட்டுவிட மாட்டீர் உமக்கு நன்றி’ என்று சொல்லலாம்.

தேவன் பதிலளித்த எல்லா ஜெபங்களுக்காகவும், நமக்கு செய்த ஆச்சரியமான காரியங்களுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்த சற்று தரித்திருக்க வேண்டுமென்பதை நினைவில் கொள்ளலாம். நேற்று நானும், டேவும், எங்களது மகளும் எல்விஸ் பிரிஸ்லி என்பவரைப் பற்றிய ஒரு நிகழ்ச்சிக்கு செல்லவிருந்தோம். எங்கள் மகளின் இருக்கை எங்கள் இருக்கைகளுடன் இருக்கவில்லை. நாங்களும் ,அவளும் எங்களுக்கு அருகிலேயே அவளுக்கும் ஒரு இருக்கை கிடைக்க வேண்டுமென்றும் அதனால் நாங்கள் அனைவரும் ஒன்றாக அமரக் கூடும் என்று ஜெபித்தோம். அந்த அரங்கின் பொறுப்பாளர் எல்லா டிக்கெட்டுகளும் விற்கப்பட்டுவிட்டதென்று ஏற்கனவே சொல்லியிருந்தார். எனவே சாத்தியமற்றதொன்றுக்காக நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன். எங்கள் மகளின் இருக்கைக்கு அருகிலேயே நான்கு இருக்கைகள் காலியாக இருந்தது. நாங்கள் அனைவரும் ஒன்றாக அமர ஏதுவாக இருந்தது. இது தற்செயலாக நடைப்பெற்றதா/ இல்லவே இல்லை.

அன்று சாயங்காலத்திலே என் மகளிடம் தேவன் நம் ஜெபத்தை கேட்டாரென்பதை உணர்ந்தாளா என்று கேட்டேன். அவளோ காலி இருக்கைக்காக ஜெபித்தோம் அல்லவா என்றாள். அநேக சமயங்களில் அந்த ஒன்பது குஷ்டரோகிகளைப் போன்று இருக்கிறோம். அவர்கள் சுகத்தைப் பெற்றுக் கொண்டனர் ஆனால் இயேசுவிடம் திரும்ப சென்று அவருக்கு நன்றி சொல்லவில்லை (லூக்கா 17:11-19). தேவன் நமக்கு என்ன செய்திருக்கிறாரோ அதைக் குறித்து சந்தோஷப்படுகிறோம், ஆனால்,' பிதாவே என் ஜெபங்களுக்கு பதிலளித்த படியால் உமக்கு நன்றி' என்று சொல்லாத படி சாத்தான் பல கவன சிதறல்களைக் கொண்டு வந்துவிடுகிறான்.

> ஞாயிறு காலை ஆலயத்திலே ஏற்படும் ஒரு குறுகிய சந்திப்பை தேவன் விரும்புகிறதில்லை; அவர் நம்முடன் சேர்ந்து வாழ விரும்புகிறார்.

தேவனுடைய பிரசன்னத்தைப் பற்றி அதிகமாக கவனமாயிருக்க நாம் ஒவ்வொரு நாளும் ஐந்து நிமிடங்களாவது, கடந்த நாளிலே தேவன் நமக்கு எவ்வாறு உதவினாரென்றும் அதை கவனிக்காமல் தவற விட்டதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். இன்று காலையிலே நான் அப்படியாக செய்த போது, அந்த அரங்கிலே நடந்ததை சிந்தித்துப் பார்த்தேன். அரங்கிலே இருக்கைகள் பற்றிய சிறிய காரியத்தை பற்றிக் கூட அவர் எவ்வளவாக அக்கறையாக உள்ளார். அவருடைய நன்மையை எண்ணி ஆச்சரியப்பட்டேன். தேவன் நம் வாழ் நாள் முழுவதும் நாம் செய்யும் அனைத்திலும் ஈடுபடவேண்டுமென்று விரும்புகிறார். தேவனோடு நடப்பதென்பது அதுதான். ஞாயிறு காலை ஆலயத்திலே ஏற்படும் ஒரு குறுகிய சந்திப்பை தேவன் விரும்புகிறதில்லை; அவர் நம்முடன் சேர்ந்து வாழ விரும்புகிறார். நாம் அவரிலே நிலைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார். அப்படியென்றால் எல்லா சமயத்திலும் அவருடன் நாம் வாழவும், தங்கித் தரிக்கவும், நிலைத்திருக்கவும் விரும்புகிறார், அவரன்றி நம்மால் எதுவும் செய்ய இயலாது.

> "நானே திராட்சைச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது"
>
> யோவான் 15:5

தேவன் நம்மை விட்டு விலகி இருக்கிறதே இல்லை. நாள் முழுவதும் அவரைப் பற்றி சிந்தியுங்கள், அவருடன் பேசுங்கள், அவருடைய பிரசன்னத்தை உணர்வது பயத்திற்கு பதிலாக நமக்கு பலத்தைக் கொடுக்கும்.

உலகிலுள்ள எந்தவொரு காரியத்தைவிட பயம் அநேகரை தோற்கடிக்கிறது

-ரால்ஃப் வால்டோ எமர்சன்

பயத்திற்கு பதிலாக விசுவாசத்தை பேசு

நான் எட்டு வயதாக இருந்தபோது ஒரு மருத்துவரின் அறையிலே நடந்தது என் நினைவில் தெள்ளத் தெளிவாக இருக்கின்றது. என் தங்கை மருத்துவரின் ஆய்வு மேஜையிலே அமர்ந்திருந்தாள், நானோ அருகிலிருந்த மர நாற்காலியிலே பொறுமையாக அமர்ந்திருந்தேன்.

அவள் அங்கே தடுப்பூசி போடும் படி அமர்ந்திருந்தாள். அந்த செவிலி அறைக்கு வந்து ஊசியை எடுத்து, 'உன் அக்காவுக்கு இந்த ஊசியை போடட்டுமா என்று தமாஷாக கேட்டார், என் தங்கையும் சரி சரி என்று வேகமாக தமாஷாக கூறினாள். அறை முழுவதும் சிரிபொலி. என் தாயும், செவிலியும் அந்த அறையிலிருந்த இறுக்கத்தை குறைக்க முயன்றனர்.

ஆனால் எனக்கு அது வேடிக்கையாக இல்லை. அந்த செவிலி எனக்கு அந்த ஊசியை போட்டு விடுவாரோ என்று நினைத்து கொண்டிருந்தேன்.

அந்த அறை மருந்து மணத்தால் நிறைந்திருந்தது. நான் மெதுவாக நாற்காலியிருந்து தரையில் விழுந்தேன். பயத்தில் வெளுத்துப் போனேன். அங்கேயே மயங்கி விழுந்தேன் என்று சொன்னார்கள்.

நான் மயக்கம் தெளிந்து எழுந்த போது அந்த செவிலி 'உன் சகோதரிக்கு ஊசி பிடிக்கவில்லை போலிருக்கிறது' என்றார்.

ஆம் அவளுக்கு ஊசி பிடிக்காது என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

ஏதோவொரு காரணத்தால் அந்த வார்த்தை எனக்குள்ளாக ஆழமாக வேரூன்றியது. அப்போதிருந்து எப்போது ஊசி போட வேண்டுமென்றாலும் 'எனக்கு ஊசி பிடிக்காது' என்று சொல்லத் தொடங்கி விட்டேன். இரத்தப் பரிசோதனை செய்ய இரத்தம் எடுக்கும் போது என் கவனத்தை மாற்ற பல கேள்விகளை கேட்பதுண்டு. அன்று மூன்று முறை நான் மயங்கி விழுந்திருக்கிறேன்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு பல் மருத்துவரிடம் சென்ற போது நான் கேட்க மிகவும் பயப்பட்ட வார்த்தைகளைக் கேட்டேன்: உன் பல் சொத்தையாக இருக்கிறது. அதை சரி செய்யும் போது நான் போட்டுக் கொள்ள வேண்டிய ஊசிகளைப் பற்றிய பயத்தால் பல இரவுகள் தூக்கமின்றி கழித்தேன்.

அந்த நிகழ்வுகளும் இன்னும் பல நிகழ்வுகளும் 'எனக்கு ஊசி என்றால் பயம்' என்பதை உறுதிப்படுத்தியது.

ஆனால் சமீபத்திலே நான் அப்படி சொல்வதை நிறுத்த வேண்டுமென்றும் அதற்கு மாறாக அவர் மேலும், அவர் அளிக்கும் பெலத்தின் மேலும் உறுதியாக என் மனதை வைக்க வேண்டுமென்றும் தேவன் தூண்டுகிறதாக உணர்ந்தேன்.

இரத்தம் எடுக்கும் போது மயங்கி விழாமலிருந்து மூன்று வருடங்களாகிறது. ஒன்பது ஆண்டுகளாக இருந்த சொத்தை பல்லை சரி செய்துக் கொண்டேன். உண்மையாகவே ஒரே நாளிலே இரண்டு பற்கள், நன்றாக தூங்கினேன்

- ரேச்சல்

அத்தியாயம் 4

பயம் நிறைந்த எண்ணங்களும், வார்த்தைகளும்

"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்."

ரோமர் 12:2

ரோமர் 12:2, நம் மனம் முதலாவது மாறாவிட்டால் நாம் மறுரூபமாக மாட்டோமென்று போதிக்கின்றது. தேவனுடைய வார்த்தையை நான் ஆழமாக படிக்கத் தொடங்கிய போது, நான் முதலாவதாக கற்றுக் கொண்ட சில பாடங்கள் என் மனதையும், சிந்தனைகளையும் பற்றியதாக இருந்தது. நம் எண்ணங்களின் வலிமையைப் பற்றியும் எப்படி சாத்தான் நம் மனதை ஒரு போர்களமாக்கி உண்மையில்லாத எண்ணங்களைக் கொண்டு வந்து அதிலே போர் செய்கிறான், பின்னர் அவை நம் வாழ்வை கட்டுப்படுத்தும் படி அவற்றை நம்பவைக்க முயற்சிக்கிறான் என்ற ஒரு பழைய புத்தகத்தை படித்தது ஆசீர்வாதமாக இருந்தது.

> தேவனுடைய வார்த்தையின் படி உண்மையில்லாத காரியங்களை நம்பி என் காலத்தை கழித்திருக்கிறேன். அதன் விளைவாக அந்த பொய்களே நிதர்சனமாகிவிட்டது

தேவனுடைய வார்த்தையின் படி உண்மையில்லாத காரியங்களை நம்பி என் காலத்தை கழித்திருக்கிறேன்.

அதன் விளைவாக அந்த பொய்களே நிதர்சனமாகிவிட்டது என்பதை உணர்ந்தேன். சில உதாரணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்:

- என் தகப்பனார் என்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்தது என்னுடைய தவறு என்று நம்பினேன்.
- அந்த துஷ்பிரயோகத்தால் எப்போதுமே ஒரு இரண்டாந்தரமான வாழ்க்கை தான் பெற்றிருப்பேனென்று நம்பினேன்.
- என்னில் ஏதோ தவறு இருக்கின்றது என்று நம்பினேன். என்னில் என்ன தவறு , என்னில் என்ன தவறு, என்னில் என்ன தவறு என்று கேட்டுக் கொண்டே இருந்தேன்.
- நான் மீண்டுமாக காயப்படாமலிருப்பதற்கு எல்லா சூழ் நிலைகளையும், உறவையும் என் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென்று நம்பினேன்.
- ஏதோ தவறு நடக்கப் போகிறதென்று நம்பினேன், ஏமாற்றம், தீய செய்தி, இழப்பு, போன்றவற்றை பயத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்
- மனிதர்களாலும், நண்பர்களாலும் கைவிடப்படுவேனென்று எதிர்பார்த்தேன் ஏனென்றால் அது தான் என் கடந்த கால அனுபவமாக இருந்தது.

உண்மையில்லாத இன்னும் பல காரியங்களை நான் நம்பினேன், ஆனால் நான் வஞ்சிக்கப்பட்டேன். வஞ்சிக்கப்படுவதென்றால் ஒரு பொய்யை நம்புவதாகும். இந்த பொய்கள் என் நிதர்சனங்களாயின. உண்மையற்றவைகளை நாமனைவருமே நம்பும் தருணங்கள் உண்டு. ஏமாற்றும் எண்ணங்கள் நம் வாழ்விலே கோட்டை கட்டுகிறது எண்ணங்கள் உண்மையாக இருந்தாலும், பொய்யாக இருந்தாலும், நேர்மறையாக இருந்தாலும்,எதிர்மறையாக இருந்தாலும் சரி நம் மனதிலே கோட்டை கட்டிக் கொள்கின்றது. கோட்டைகளென்பது நம் எதிராளியான சாத்தான் தேவன் நமக்காக கொண்டிருக்கும் நல்ல திட்டங்களை அழித்து விடும்படி மறைந்து ஒளிந்துக் கொண்டிருக்கும் இடமாகும்.

நம் மனதை புதுபித்துக் கொள்வதற்கு நேரமும், உழைப்பும் தேவைப்படுகிறது. தேவனுடைய வார்த்தையின் சத்தியம் மட்டும் தான் நாம் நம்பும் பொய்களை மாற்றக் கூடியது. நாம் தேவனுடைய வார்த்தையிலே நிலைத்திருந்தால் விடுதலையாவோம். (யோவான் 8:32). சாதாரணமாக வாசிப்பது நம்மை விடுவிக்காது, ஆனால் அதற்கு கீழ்படிந்தால்

விடுதலையை பெற்றுக் கொள்வோம். நாற்பது ஆண்டுகளுக்கு மேல் நான் தேவனுடைய வார்த்தையை படித்துக் கொண்டிருக்கிறேன், ஆனாலும் நான் நம்பிக்கொண்டிருக்கும் சில பொய்களை இனங்கண்டுக் கொள்கிறேன். என் வாழ்வின் விடுதலை பெறாத மற்றுமொரு பகுதியிலே விடுதலை பெற பரிசுத்த ஆவியானவரோடு இணைந்து கற்றுக் கொள்கிறேன்.

உங்கள் எண்ணங்கள் அவ்வளவாக முக்கியமானதல்ல என்ற கருத்தை நீங்கள் கொண்டிருக்கலாம். ஆனால் உங்கள் வாழ்விலே அதற்கு அவ்வளவு வலிமை இருக்கிறது. எண்ணங்கள் வார்த்தைகளாகின்றது, வார்த்தைகள் நம் மனப்பான்மையாகின்றது, செயல்களாகின்றது.பவுல் கொலோசெயர்களுக்கு அவர்கள் மனதை உலகத்திலுள்ளவைகளில் அல்ல மேலான காரியங்களின் மேல் வைக்க வேண்டுமென்று கூறுகிறார். (கொலொசெயர் 3:2). இது நாம் என்ன நினைக்கிறோம் என்பதை பற்றி நினைக்கும் திறன் நமக்குண்டு என்பதைக் காட்டுகின்றது. நம் மனதிலே தோன்றும் எல்லா எண்ணங்களாலும், கருத்துக்களாலும் நாம் சிறைப்பிடிக்கபட்டிருக்கவில்லை.

இந்த உண்மையை வெளிப்படுத்தும் மற்றுமொரு வேத வாக்கியம் 2 கொரிந்தியர் 10:4-6. ஆகும். அதிலே நாம் தவறான எண்ணங்களையும், கற்பனைகளையும் கிறிஸ்துவுக்கு கீழ்படுத்தவேண்டும் அல்லது தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ப நம் எண்ணங்களை நேராக்க வேண்டும் என்று வாசிக்கிறோம். அப்படியென்றால் நாம் ஒரு எண்ணத்தை தூக்கி எறிந்து விட்டு, மற்றொன்றை எண்ணலாம்/சிந்திக்கலாம். நாம் நம் எண்ணங்களால் சிறைபிடிக்கப்படாமல் நம் எண்ணங்களை சிறைப்படுத்திக் கொள்ளலாம்.

அநேகர் நம்புவதை போன்று நானும் என் எண்ணங்களின் மேல் எனக்கு அதிகாரம் இல்லை என்று நினைத்தேன். என் எண்ணங்கள் எங்கேயிருந்து வந்ததென்று கேட்டுப் பார்த்ததே இல்லை. நான் என்னவெல்லாம் நினைத்தேனோ அது தான் உண்மையென்று எண்ணி அதின் படி வாழ்ந்தேன். உங்களை குறித்து என்ன? உங்கள் எண்ணங்களைப் பற்றி என்ன செய்திருக்கின்றீர்கள். நான் செய்ததைப் போன்றே செய்தீர்களா? அநேகரின் எண்ணங்கள் தான் அவர்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை உணரும் வரை அவ்வாறாக செய்கின்றனர்.

'மனம் ஒரு போர்களம்' என்ற புத்தகத்தை எழுதும் சிலாக்கியம் எனக்கு கிடைத்தது அதில் நான் மக்களுக்கு எப்படியாக நம் எண்ணங்களை நாம் தெரிந்துக் கொண்டு நம் வாழ்க்கைக்கு வலிமையை/வல்லமையை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று போதித்தேன். உதாரணமாக, என் பெலனாகிய கிறிஸ்துவினாலே நான் என் வாழ்விலே என்னவெல்லாம்

செய்யக் கூடுமோ அதை செய்வேன். நான் பிறரை நேசிக்கின்றேன். நான் பிறருக்குக் கொடுக்கவும் ,தாராளமாக இருக்கவும் விரும்புகிறேன். தேவன் என்னோடே இருப்பதால் நான் பயத்துடன் இருக்க மாட்டேன். இது போன்று பல்லாயிரம் எண்ணங்கள் இருக்கின்றன. உங்கள் மனதை அன்றாடம் இவற்றால் நிரப்புங்கள். அவை உங்களை பெலப்படுத்தி, தேவன் நீங்கள் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகின்றாரோ அப்படியாக இருக்கவும், எதையெல்லாம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதையெல்லாம் செய்யவும் பெலனைக் கொடுக்கும்.

ஒவ்வொரு நாளும் 'சிந்தனை நேரம்' என்றொன்றை கடைபிடியுங்கள். உங்கள் வாழ்விலே நீங்கள் நடைபெற வேண்டுமென்று விரும்பும் காரியங்களைபற்றி நினைக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். ஒருவன் மனதிலே என்ன நினைக்கிறானோ அப்படியாகவே அவன் வாழ்க்கை இருக்கிறது என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது (நீதிமொழிகள் 23:7). வேறுவிதமாக சொல்லவேண்டுமென்றால், மனம் செல்லும் இடத்திற்கே மனிதனும் செல்கின்றான். நம் வாழ்க்கையை நம் எண்ணங்களே நிர்ணயிக்கிறது.

இத்தனை வருடங்களாக உங்கள் எண்ணங்களால் எத்தனை பிரச்சனைக்குள்ளாயிருப்பினும் உங்கள் மனதை புதுபித்துக் கொள்ளலாம். அது மாற்றப்படலாம். உங்கள் மனம் மாறும் போது நீங்களும் மாறுவீர்கள். எப்போதுமே நேர்மறையான, நம்பிக்கை நிறைந்த விசுவாச எண்ணங்களை எண்ணுவேனென்று தீர்மானிக்கும் படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். மக்களை சந்தேகப்பட்டுக் கொண்டு அவர்களது குறைகளையே கவனித்துக் கொண்டிராமல் அவர்களைப் பற்றிய நல்ல எண்ணங்களை எண்ணுங்கள். அது உங்கள் உறவை அதிகமாக மேம்படுத்தும்.

கற்பனைகள்

நிதர்சனமான காரியங்களைப் பற்றி கற்பனை செய்து பார்ப்பது மிகவும் வலிமையானது. நாம் மனதிலே படங்கள்/சிற்பங்களை நினைத்துக் கொண்டிருக்கலாம். உதாரணமாக, நான் சிவப்பு யானை என்று சொல்வேனேயென்றால், உடனேயே உங்கள் இருதயத்திலே சிவப்பு யானை படத்தைப் பற்றி சிந்திப்பீர்கள். நம் எண்ணங்களைப் போன்றே நம் கற்பனைகளிலும் அற்புதமான சிலவற்றை கற்பனை செய்து பாருங்கள். உங்களால் இயலாத ஆனால் தேவனால் இயலும் பெரிய காரியங்களை கற்பனை செய்து பார்க்கும் படி உற்சாகப்படுத்துகிறேன். ஐந்து வருடங்களுக்குப் பின்

நான் எப்படி இருப்பேன்? அல்லது இந்த உலகத்திலே நான் எத்தகைய மாற்றங்களை கொண்டு வரும்படி தேவன் என்னை அழைத்திருக்கிறார்? என்று உங்களிடமே கேட்டுப் பாருங்கள்.

சிந்திக்க/யோசிக்க/நினைக்க/எண்ணிப் பார்க்கும் திறனை தேவன் நமக்கு கொடுத்திருப்பதை போன்றே கற்பனை செய்யவும் திறனளித்திருக்கிறார். அதை நாம் அறிவோடு உபயோகிக்க வேண்டுமென்று விரும்புகிறார். பெரிய காரியங்களை கற்பனை செய்பவர்கள் பெரிய காரியங்களை செய்திருக்கின்றனர். ஒரு வாகனம் நிதர்சனமாகும் முன்பு யாரோவொருவர் அதை பற்றி பல காலம் சிந்தித்திருப்பார். யாரோ ஒருவர் முதல் நாற்காலியை வடிவமைத்திருப்பார். அந்த நபரோ கடினமான கற்களின் மேல் உட்கார்ந்து சலித்தவராக அந்த கல்லை விட/ பாறையைவிட மென்மையான வசதியான, சார்ந்து இளைப்பாற ஏதோவொன்று இருக்கவேண்டுமென்று நினைத்திருப்பார். பின்னர் அது எப்படியாக இருக்க வேண்டுமென்று கற்பனை செய்திருப்பார். இறுதியாக நான்கு கால்கள் கொண்ட, சாய்ந்து கொள்ள வசதியான நாற்காலியை வடிவமைத்திருப்பார்.

நீங்கள் வெற்றிபெறுகிறீர்களா என்பதை கண்டறிய தோற்றுப் போகவும் மனமுவந்திருக்கவேண்டும்.

ஆயிரக்கணக்கானோருக்கு நல்ல கருத்துகளுண்டு. ஆனால் அவற்றை கொண்டு எதையும் செய்கிறதில்லை. சும்மா ஏதோவொன்றை கற்பனை செய்வதால் பிரயோஜனம் இல்லை. அந்த கற்பனைக்குப் பின் முயற்சியும் வேண்டும். அதிமுக்கியமாக நாம் முயற்சிக்க பயப்படக்கூடாது. நீங்கள் வெற்றிபெறுகிறீர்களா என்பதை கண்டறிய தோற்றுப் போகவும் மனமுவந்திருக்கவேண்டும். தாமஸ் ஆல்வா எடிசன் மின்விளக்கை கண்டுபிடிக்கும் முன் இரண்டாயிரம் முறை தோற்றுப்போனாரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அது சரியா என்பது எனக்கு தெரியாது ஆனால் முதல் முறையிலே அதை கச்சிதமாக செய்திருப்பாரென்று நினைக்கவில்லை. ஒவ்வொரு முறை தோற்ற போதும் அந்த முயற்சியை விட்டு விடுவதற்கு பதிலாக அது சரியான முறையல்ல என்பதை கற்றுக் கொண்டார், பின்னர் அந்த முயற்சியை விட்டுவிட்டு வேறு விதமாக முயற்சித்தார். ஒருவர் ஒரு காரியத்திலே தோற்றுவிட்டதால் அவர் தோற்றுவிட்டார் என்று அர்த்தமாகாது. முயன்றுக் கொண்டிருக்கும் எவருமே தோற்றவரல்ல.

தேவன் என்னை ஊழியத்திற்கு அழைத்தபோது, நான் உலகமுழுவதும் சென்று தேவனுடைய வார்த்தையை போதிப்பேனென்று என் இருதயத்திலே

பேசினார். என் ஊழியத்தின் முதல் ஐந்து ஆண்டுகள் என்னுடைய வீட்டிலேயே வாரம் இரண்டு முறை இருபத்தி ஐந்து நபர்களுக்கு வேதபாடம் கற்பித்தேன். அந்த சிறிய குழுவுக்கு நான் போதித்துக் கொண்டிருந்தபோது, நான் திரளான கூட்டத்திற்கு போதிப்பதாக கற்பனை செய்துக் கொண்டேன். இன்று அந்த திரளான கூட்டம் நிதர்சனமாகியுள்ளது. தேவன் உங்கள் வாழ்விலே பெரியக் காரியங்களை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கும் போது உங்கள் எண்ணங்களும், கற்பனைகளும் அதற்கு எதிராக இருக்கக் கூடாது. பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கற்பனை செய்யும் நாம், பெற்றுக் கொண்டோமென்று நம்ப வேண்டும். நம் எண்ணங்களையும், கற்பனைகளையும் தேவனுடைய வார்த்தையோடும் அவருடைய சித்தத்தோடும் ஒத்ததாக வைத்துக் கொள்ளவேண்டும். தேவனோடு நாம் இணைந்திராவிட்டால் அவரோடு நடக்க இயலாது (ஆமோஸ் 3:3). எனவே நான் உங்களிடம், "உங்கள் எண்ணங்களும், கற்பனைகளும் தேவனோடு ஒத்திருக்கிறதா?" என்று கேட்கிறேன்.

நம் எண்ணங்களோ வார்த்தைகளாகவும், மனப்பான்மைகளாகவும் மாறுகிறது. பிசாசு நம்மிடம் சொல்லும் பயமான எண்ணங்களை ஏற்றுக்கொண்டு அதை தியானிப்போமென்றால் அது ஆரோக்கியமற்ற மனப்பான்மையாக மாறிவிடும். நாம் நம் கெட்ட மனப்பான்மையை மறைக்க முயற்சிக்கலாம், ஆனால் அது எங்கோ பிறர் கவனிக்கும்படி வெளிப்பட்டு விடும். நம் எண்ணங்களும், மனப்பான்மையும் நாம் பேசும் வார்த்தைகளாகவும், செயல்களாகவும் மாறிவிடுகிறது.

ஒரு குறிப்பிட்ட நபர் என்னை மிகுந்த மனக் காயத்திற்குள்ளாக்கிவிட்டார். அவ்வாறு அவர் மீண்டும் செய்வாரென்று நான் பயப்பட்டால், என்னை நான் காப்பாற்றிக் கொள்ள அவரை தவிர்க்கவும், அவர்களை தண்டிக்கவும் திட்டமிட்டால் அதற்கான செயலை செய்ய முற்படுவேன். நான் எப்படி உணர்கிறேன் என்பதைப் பற்றி பிறரிடம் பேசுவேன் என் வார்த்தைகளானது அந்த நபர் மீது அவர்களுக்கு இருக்கும் நல்ல எண்ணத்தை கெடுத்துவிடும். அது விசனமானது ஏனென்றால் அந்த நபரை அவருக்கு பிடித்திருக்கலாம்.

நான் ஒரு சபையிலே இருக்கிறேன் என்று வைத்துக் கொள்வோம். என்னை காயப்படுத்தியவர் (அவர்கள் என்னை காயப்படுத்தியதைப் பற்றி உணராமல் கூட இருக்கலாம்) என்னிடம் நல்ல மன நிலையிலே வந்து மதிய உணவை அருந்த அழைப்பாரேயென்றால் அவரிடம் நட்புறவோடு இருப்பது என்னால் இயலாத காரியமாக இருக்கும். அல்லது பிறர் அறியும்படி ஒரு தவறான மனப்பான்மையையே வெளிப்படுத்துவேன். அவர் என்னை எவ்வாறு காயப்படுத்திவிட்டாரென்பதை பற்றி கோப வார்த்தைகளை

அள்ளி வீசவும் செய்வேன். அந்த நபரோ அவர் என்னை காயப்படுத்தியதை உணரவில்லை என்று கூறி மன்னிப்பு கேட்பார். பின்னர் நான் வீட்டிற்கு செல்வேன், நியாயப்படுத்திக் கொண்டதாக உணர்வேன. ஆனால் என் உணர்சிகள் அடங்கும் போது நான் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தி விட்டதை உணர்வேன். பின்னர் அடுத்த சில நாட்களுக்கு குற்றவுணர்வுடன் இருப்பேன். அடுத்த முறை அவரை பார்க்கும் போது நான் சங்கடப்பட்டு ஓடி ஒளிய முயலுவேன். ஏனென்றால் பயம் அதை தான் செய்யும், ஓடி ஒளியும்.

வேறொரு விதமாக இந்த கதையை நாம் பார்ப்போமென்றால், என்னை ஒருவர் காயப்படுத்திவிடுகிறார். பிசாசு எனக்கு பயத்தை கொண்டு வருகிறான், அவர் வேண்டுமென்றே என்னை காயப்படுத்திவிட்டார், மீண்டுமாக அவர் அப்படி செய்யலாம் என்று நினைக்கத்தூண்டலாம். பின்னர் அவரை என் வாழ்க்கையினின்று அகற்றிவிட்டு, எப்படியாவது பழிவாங்கு என்று சொல்வான். ஆனாலும் நான் தேவனுடைய வார்த்தையை படித்துக் கொண்டிருப்பதால் அன்பு நல்லதையே நம்பும் என்பதை நினைவு கூறுகிறேன் (1 கொரிந்தியர் 13:4-7). எனவே அந்த பொல்லாத எண்ணத்தை விட்டுவிட்டு அவர் வேண்டுமென்றே அப்படி செய்திராமலிருக்கலாம், அவருக்கு ஏதோ பிரச்சனை இருந்திருக்கலாம் அல்லது ஏதோ துர்செய்தியை கேட்டிருக்கலாம் என்று எண்ணிக் கொள்வேன். எதுவாயிருந்தாலும், இடறலடையாமலிருந்து அன்பிலே நடக்க தெரிந்துக் கொள்வேன். ஏனென்றால் அதை தான் இயேசு என்னிடம் எதிர் பார்க்கிறார்.

நாம் தெரிந்துக் கொள்ளலாம், எது சிறந்ததென்று அறிந்து கொள்ளலாம். நம் மனதிலே இருப்பது நம் வார்த்தைகளிலே வெளிப்படும் என்று இயேசு சொன்னார். (மத்தேயு 12:34). மக்கள் தவறாக பேசி பின்னர் ‘நான் அவ்வாறு நினைக்கவில்லை, சும்மா வேடிக்கைக்காக சொன்னேன்’ என்று நியாயப்படுத்துவார்கள். அவர்கள் தங்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அவர்களின் கூற்றுக்காக வருத்தப்படலாம், அவர்கள் இருதயத்திலிருந்ததை அது வெளிப்படுத்தியது. அவர்கள் மனதிலே அவர்களுக்கே தெரியாமல் பல எண்ணங்களும், மனப்பான்மைகளும் ஊறிக் கிடந்திருக்கலாம்.

நாம் வெற்றியோடு வாழ்வதற்கும், இயேசு நமக்களித்த வாழ்க்கையை அனுபவிக்கவும் வார்த்தைகளிலிருக்கும் வல்லமையை விளங்கிக் கொண்டு, பரிசுத்த ஆவியானவருடன் இணைந்து நம் வாயிலிருந்து வரும் வார்த்தைகளை ஜாக்கிரதையோடு பேச வேண்டும். இதற்கு நம் எண்ணங்களை நாம் கட்டுப்படுத்தவேண்டும். தேவ கிருபை இல்லாமல் நாம் நம் வார்த்தைகளை கட்டுப்படுத்த இயலாது. ஆனால் நாம் சரியானதை

செய்ய அவர் எப்போதுமே கிருபை மேல் கிருபை அளிக்கிறார்.

வார்த்தைகளில் இருக்கும் வல்லமையைப் பற்றி இரண்டு வல்லமையான வேத வாக்கியங்களை விளக்க விரும்புகிறேன்.

முதலாவதாக நீதிமொழிகள் 18:20-21ஐ பார்ப்போம்:

> "அவனவன் வாயின் பலனால் அவனவன் வயிறு; அவனவன் உதடுகளின் விளைவினால் அவனவன் திருப்தியாவான்." "மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியை புசிப்பார்கள்."

இந்த இரண்டு வசனங்களும் என்ன சொல்லுகின்றது என்பதை ஆழமாக யோசிக்க வேண்டும். முதலாவதாக நாம் பேசும் வார்த்தையை பொறுத்தே நாம் நம் வாழ்க்கையை குறித்து திருப்தியடைந்திருப்போம் அல்லது அதிருப்தியாக இருப்போம். நாம் வார்த்தையை பேசுவதோடில்லாமல் நாம் எதை பேசுகிறோமோ அதையே கேட்கிறோம். அது நமக்கு உணாவாகின்றது. 'அதின் பலனை புசிப்பாய்', 'நீ சொன்னதை உண்பாய், நீ சொன்னபடியேஆகக்கடவது' என்று சொல்வதை கேட்டிருக்கலாம். அப்படியென்றால் அவர்கள் என்ன சொன்னார்களோ அதற்காக வருத்தப்படுவார்கள். நாம் சொன்னதை நாம் உண்போம் ஏனென்றால் அது நம் இருதயத்திற்குள் நேராக செல்கின்றது. அது நல்ல வார்த்தையாக இருப்பின் நமக்கு அது ஆசீர்வாதமாக இருக்கும் இல்லாவிட்டால் அது நம் மனப்பான்மையை விஷமாக்கி விடுகிறது. நம் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் திருடி விடுகிறது. கெட்டு போன ஏதோவொன்றை உண்பதால் உணவு விஷமாகிறது போல, 'நாம் கெட்ட வார்த்தைகளை பேசும் போது வார்த்தை விஷமாகிவிடுகிறது'.

அதின் பலனை புசிப்பாய்

இரண்டாம் வசனத்திலுள்ள வார்த்தைகளையும் நாம் கவனிக்க வேண்டும்: "ஜீவனும், மரணமும் நாவின் வல்லமையிலிருக்கிறது" நாம் நமக்கும் பிறருக்கும் ஜீவனை பேசலாம், அல்லது மரணத்தை பேசலாம்.

நம் வார்த்தையின் பலனை உண்போம்!

அடுத்து நாம் யாக்கோபு 3:2-10ஐ பார்க்கலாம்:

> நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே

> அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான். பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.

நாம் பேசும் வார்த்தைகள் நம் வாழ்வின் திசையை நிர்ணயிக்கிறது என்பதை இந்த வேதவாக்கியம் போதிக்கின்றது. நம் வாழ்க்கையைப் பற்றி ஒரு திட்டம் தேவனுக்கும் இருக்கிறது, பிசாசுக்கும் இருக்கிறது என்று ஏற்கனவே சொன்னேன். நாம் எதோடு ஒத்துச் செல்கின்றோமோ அதையே பின் தொடர்வோம். நம் இருதயத்திலே என்ன இருக்கின்றது என்பதை நம் வார்த்தைகள் வெளிப்படுத்திவிடும். நாம் எப்படி உணர்ந்தாலும், என்ன யோசித்தாலும், காரியங்கள் எப்படி தோன்றினாலும் தேவன் சொல்லும் காரியத்தையே நாம் சொல்வோமாக. நம் எதிர்காலத்தின் மீது உங்களுக்கும் எனக்கும் ஒரு ஆழமான தாக்கம் இருக்கின்றது. தேவனோடு இணைந்து நேர்மறையாக பேசுவோமென்றால் நாம் நேர்மறையான வெளிப்பாடுகளை பெற்றுக் கொள்வோம்.

நான் பெற்றுக் கொள்வேன் என்று சொல்வதனால் எவரும் பெற்றுக்கொள்கிறதில்லை, ஆனால் தேவனோடு ஒத்துச்சென்று அவருடன் ஒத்துழைப்போமென்றால் நாம் பெற்றிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புவதை பெற்றுக் கொள்ளலாம். நாம் பயத்தை யோசித்து பயத்தை பேசினால் நம் வாழ்வின் முன்னேற்றத்தை தடுக்கிறோம். நாம் நம் வார்த்தைகளாலும், எண்ணங்களாலும் சிறைபிடிக்கப்பட்டிருக்கின்றோம். எனக்கு பயமாக இருக்கின்றது என்று சொல்வதற்கு பதிலாக, "நான் பயத்தை உணரும் போது பயந்துக் கொண்டே செய்வேன்" என்று சொல்லுங்கள்.

உங்கள் பலத்திற்கு ஏற்றபடியான செயல்களுக்காக, வேலைக்காக ஜெபிக்காதீர், உங்கள் வேலைகளுக்கேற்ற வல்லமைக்காக, பெலத்திற்காக ஜெபியுங்கள்.

-பிலிப்ஸ் ப்ரூக்ஸ்.

தேவனால் எல்லாம் கூடும்

நாற்பது வருடங்களாக, பேருந்து என்றாலும், ஆகாய விமானம் என்றாலும், பெரிய கூட்டம் என்றாலும் மிகவும் பயப்படுவேன், அது என்னை ஜீவனற்றவளாக மாற்றிவிட்டது என்று அறிந்திருக்கிறேன். பயமானது நியாயமற்றது என்று அறிந்திருந்தாலும், அதனின்று விடுபடும் முதல் அடியை எடுத்து வைக்க இயலாமலிருந்தேன். பின்னர் சில வருடங்களுக்கு முன் பயத்தை குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது என்பதை படிக்கத்தொடங்கினேன். எவ்வளவுக்கதிகமாக படித்தேனோ அவ்வளவுக்கதிகமாக இதிலிருந்து விடுபட தேவன் உதவ வேண்டுமென்று ஜெபித்தேன்.

இதற்கு பின், என் மகளையும் அவளது தோழிகளையும், அவள் பள்ளிக் கூடம், ஒரு ஆப்பிள் தோட்டத்திற்கு அழைத்துச் சென்ற போது, அவர்களை பார்த்துக் கொள்ளும் பொறுப்பை என்னிடம் கொடுத்தனர். அப்படியென்றால் பேருந்தில் பிறருடன் செல்ல வேண்டும். நான் ஒப்புக் கொண்டேன் ஆனால் அந்த சுற்றுலாவே நடைபெறக்கூடாதென்று ஜெபித்தேன். அந்த நாளும் வந்தது. அந்த கொடிய மிருகத்தை நோக்கி பார்த்துக் கொண்டிருந்தேன். என் உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. நான் பேருந்திலே ஏறி அமர்ந்துக் கொண்டேன். என் மனதிலே எனக்கு உதவும் குறிப்பிட்ட வேதவாக்கியங்கள்அசங்கீதம் 91 போன்றவற்றை தியானிக்கத் தொடங்கினேன், அதை முணுமுணுத்துக் கொண்டும் இருந்தேன். சீக்கிரத்திலே அந்த பதினைந்து நிமிட பயணம் முடிந்து விட்டது. நான் மலையையே ஏறிவிட்டதைப் போன்று உணர்ந்தேன்.

என்னுடைய அடுத்த சவால் இன்னும் பெரியது-அண்டை நகரத்திலே நடைபெற்ற ஒரு கிறிஸ்தவ கருத்தரங்கிலே கலந்துக் கொள்வதாகும். ஒவ்வொரு வருடமும் அதற்கு விண்ணப்பிப்பேன் பின்னர் இந்த வருடம் அல்ல என்று கடைசி நேரத்திலே போகாமல் இருந்துவிடுவேன்.

அந்த வார இறுதி வந்தது, நண்பர்களுடன் அந்த இடத்திற்கு காரில் சென்றேன். ஆனால் அங்கிருந்து அந்த குறிப்பிட்ட இடத்திற்கு கூட்டி செல்ல அந்த பேருந்து வந்தபோது செயலற்று நின்றேன். நான் திரும்ப வீட்டிற்கு சென்றுவிடலாமென்று எண்ணினேன். பின்னர் நான் என்னிடமே, இப்போது இதை நீ செய்யவில்லையென்றால் எப்போதுமே பயந்துக் கொண்டேதானிருப்பாய் என்று சொன்னேன்.

நான் பேருந்தில் ஏறினேன் ,பின்னர் ஆயிரக்கணக்கானோர் இருந்த அந்த அரங்குக்குள்ளே சென்றேன். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு ஏதோ அற்புதம் நடந்தது.'நான் பயப்படவே இல்லை'.

ஒரு வருடத்திற்குப் பின் என் இறுதி தேர்வு வந்தது. இந்தியாவுக்கு ஊழியப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. நான் செல்லும் படி தேவன் என்னை அழைத்திருந்ததை அறிந்தேன். ஆனால் அதற்காக நான் ஐந்து விமானங்களிலும், பல பேருந்துகளிலும் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. பல முறை பின்வாங்கிவிடலாமென்று விரும்பினேன், ஆனால் தேவனோ 'ஒரு அடி மட்டும் முன்னே செல், உனக்கு முன்னிருப்பதை செய்' என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்.

இறுதியாக நான் உலகிலேயே அதி மும்முரமாக செயல்படும் விமான நிலையங்கள் ஒன்றில் வந்தடைந்தேன். எனக்கு பயம் இல்லை. அவரால் எல்லாம் இயலும் என்பதை அவர் காண்பித்தார்.

-ஷான்

அத்தியாயம் 5

பயத்தை உணர்கிறேன்

"நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்"

- சங்கீதம். 56:3

பய உணர்வு மிகவும் உண்மையானது. இது உடல் ரீதியாக கூட வெளிப்படும். பயம் நம்மை நடுங்கி, வியர்க்க செய்து, இதயத்தை வேகமாகத் துடிக்கச் செய்யும், நமது இயல்பான சுவாசத்தை, பாதித்து மற்ற உடல் அறிகுறிகளைத் தூண்டும் என்று நான் நம்புகிறேன். ஆனால், இந்த உணர்வுகள் வெறும் உணர்வுகள் என்றும், நம்மை அச்சுறுத்தும் ஒரு சூழ்நிலையை உண்மையில் கையாள்வதை விட மோசமான ஏதாவது நடந்து விடுமோ என்ற பயமே மோசமானது என்பதை நினைவில் வைத்துக் கொண்டால், அவற்றை யதார்த்தமாக நிர்வகிக்க முடியும். பயம் நம்மைத் தடுத்து நிறுத்துகிறது மற்றும் நம் வாழ்க்கையில் முன்னேறுவதைத் தடுக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்:

நான் உடற்பயிற்சி செய்ய முயற்சிக்கும்போது என்னை நானே காயப்படுத்திக்கொள்வேன் என்று பயந்தால், நான் உடற்பயிற்சி செய்ய மாட்டேன். எனக்கு இது தெரியும், ஏனென்றால் நான் உடற்பயிற்சி செய்ய முயற்சித்ததில் என்னை மிகவும் காயப்படுத்திக் கொண்டேன், மேலும் பல ஆண்டுகளாக உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்க அந்த ஒரு மோசமான அனுபவத்தையே சாக்காக பயன்படுத்தினேன். நான் என்னை காயப்படுத்தியதற்குக் காரணம், நான் மிக விரைவாகச் செய்ய முயற்சித்தேன் மற்றும் எடையைத் தூக்க முயற்சித்தபோது சரியானபடி அதை நான் தூக்கவில்லை. அது காயத்திற்கான காரணமாக இருந்தது! சரியான உடற்பயிற்சியின் அடிப்படைகளை எனக்குக் கற்றுக்கொடுக்க ஒரு பயிற்சியாளர் தேவைப்பட்டார். இறுதியில், நான் ஒரு பயிற்சியாளருடன்

பணிபுரிய ஆரம்பித்தேன், இப்போது பல ஆண்டுகளாக அதைச் செய்து வருகிறேன். வழக்கமான உடற்பயிற்சி எனக்கு பெரிதும் உதவியது.

நாம் பயத்தை அனுமதித்தால் அது நம்மிடமிருந்து எதையும் திருடிவிடலாம். நான் இன்னும் கண்டுப்பிடிக்காத எத்தனை பயங்கள் என் வாழ்க்கையில் இருக்கிறது என்பதை கண்டு பிடிக்க விரும்புகிறேன். அவை எங்கோ ஒளிந்து கொண்டிருக்கின்றன. தேவன், தம்முடைய நேரத்திலே, அதை எனக்குக் காட்டுவார். நாம் சமாளிக்க வேண்டிய அனைத்தையும் தேவன் ஒரே நேரத்தில் வெளிப்படுத்துவதில்லை.அதற்காக அவருக்கு நன்றி அவர் அவ்வாறு செய்தால், நாம் தொடங்குவதற்கு முன்பே அதனால் மேற்கொள்ளப்பட்டவர்களாக உணர்ந்து கைவிட்டுவிடுவோம்.

என்னுடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், மாநாடுகளிலும் தேவாலயங்களிலும் பேசுவதற்கு எனக்கு அழைப்பிதழ்களை அனுப்பும்படி தேவனிடம் ஜெபித்துக்கொண்டிருந்தேன். நான் சிறிது காலம் பிரார்த்தனை செய்துக்கொண்டிருந்தேன், ஆனால் எதுவும் நடக்கவில்லை. பின்னர், இறுதியாக, ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புகள் வந்தன. முதலாவது கொலராடோவில் இருந்தது. ஒரு பிரபலமான ஊழியர் எனக்கு முன் பேசுவாரென்று திட்டமிடப்பட்டிருந்தது, அதனால் ஒரு நல்ல கூட்டம் வரும் என்ற உத்தரவாதம் இருந்தது, அதைப் பற்றி நான் மகிழ்ச்சியடைந்தேன். அது முடிந்தவுடன், கடைசி நேரத்தில் சில காரணங்களால் அவர் ரத்து செய்துவிட்டார், இதனால் யாரென்று தெரியாத நான் மட்டுமே பேசவேண்டியதாயிற்று. கூட்டமும் ஊக்கமளிக்காத வகையில் சிறியதாகவே இருந்தது.

நான் அங்கிருந்து நேராக புளோரிடாவுக்குச் சென்றேன், கடைசி நிமிடத்தில் வர இயலாத ஒருவரின் இடத்தை நிரப்ப நான் அழைக்கப்பட்டேன். எனக்கு தெரிந்த ஒருவருக்கு தெரிந்த ஒருவர் என்னை பேச்சாளராக பரிந்துரைத்ததால் என்னை பேசும்படி கேட்டார்கள். மாநாட்டு அமைப்பாளர்கள் என்னை ஒரு பிற்பகல் கூட்டத்திலே பேசச் சொன்னார்கள்; நான் முக்கிய பேச்சாளர்களில் ஒருவராக இல்லை, ஆனால் அந்த வாய்ப்பு கிடைத்ததால் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

அந்த நிகழ்வில், முன் வரிசை முழுவதும் பேச்சாளர்களால் நிரம்பியிருந்தது-டாக்டர். இவர் மற்றும் பிஷப் இவர் மற்றும் ஆப்பிரிக்காவில் இருந்து வந்திருந்த ஒரு தீர்க்கதரிசி, மற்றும் நன்கு அறியப்பட்ட மரியாதைக்குரிய அருள்திருவாளர் என்று பலர் இருந்தனர். இவர்களோடு சாதாரணமான நான் இருந்தேன். வெறும் ஜாய்ஸ். ஆடம்பரமான தலைப்பு எதுவுமில்லை,

அறியப்படவுமில்லை அல்லது தேடப்படவுமில்லை. ஆனால் நான் அங்கே என் பிரார்த்தனைக்கு பதிலாக அமர்ந்திருந்தேன். நான் பயத்தால் உறைந்து போயிருந்தேன். என்னால் அசையக்கூட இயலவில்லை. அப்படியாகத்தான் நான் உணர்ந்தேன். நான் முக்கியமற்றவளாக, சிறியவளாக, அபத்தமானவளாக உணர்ந்தேன்அநான் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும், இனி ஒருபோதும் வெளியே வரக் கூடாது என்பது போல உணர்ந்தேன்.

பின்னர் அது நடந்தது: அன்று இரவு பிரதான பேச்சாளர் பேசுவதற்கு முன், மாநாட்டின் அமைப்பாளர் ஒவ்வொரு கருத்தரங்கு பேச்சாளரிடமும் அடுத்த நாள் என்ன பேச திட்டமிட்டுள்ளோம் என்பதைச் சொல்லச் சொன்னார். என்னுடைய செயலரங்கு முழுவதும் காலியாக இருப்பதாக கற்பனை செய்துகொண்டிருந்தேன்!

எனவே பேசும்படியாக நான் நின்று கொண்டிருந்தபோது, நான் மிகவும் பயந்து கொண்டிருந்தேன். பேசுவதற்காக நான் வாயைத் திறந்தபோது, சத்தமே வரவில்லை. நான் ஒரு முட்டாள் போல் உணர்ந்தேன். நான் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது: நான் எனது முழு தைரியத்தையும் சேகரித்து, மீண்டும் முயற்சி செய்து அது சிறப்பாக இருக்குமென்று எதிர்பார்க்கலாம் அல்லது மேடையை விட்டு ஓடிவிடலாம் (இதைத்தான் நான் செய்ய விரும்பினேன்) எவ்வளவு சீக்கிரமாக செயின்ட் லூயிஸுக்கு செல்ல இயலுமோ அவ்வளவு சீக்கிரமாக செல்ல விரும்பினேன்.

சரி, நான் மீண்டும் வாயைத் திறந்தேன். அடுத்த நாள் கலாத்தியர் 3:1-3 வரை நான் பேசவிருந்தேன் என்பது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. கிரியைகளால் நம்மை எப்படி மாற்றிக் கொள்ள முடியாது என்பதைப் பற்றி மக்களுக்குக் கற்பிக்கவிருந்தேன், ஆனால் நாம் நம்மைத் தாழ்த்தி, செய்ய வேண்டிய வேலையைச் செய்ய தேவனின் கிருபையைப் பெற்றுக் கொள்ளலாம். மறுநாள் எனது செயலரங்கு நிரம்பியிருந்தது. இருக்கைகள் எதுவும் இல்லை. மக்கள் அறையின் பின்புறத்தில் நின்று கொண்டிருந்தனர். நான் இன்றும் இங்கு இருக்கிறேன், மாநாடுகளிலும், தேவாலயங்களிலும், தொலைக்காட்சி மற்றும் வானொலியிலும் பேசுகிறேன். பயம் என் விதியைத் திருட முயன்றது, அது கிட்டத்தட்ட வெற்றி பெற்றும் விட்டது. நான் பயத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நீங்களும் அவ்வாறே செய்ய வேண்டும். பயம் உங்களைத் தடுத்துவிட அனுமதிக்க வேண்டாம், ஏனென்றால் நீங்கள் அவ்வாறு செய்தால், நீங்கள் அனுபவிக்க தேவன் ஏற்பாடு செய்திருக்கும் அற்புதமான வாய்ப்புகளை நீங்கள் இழக்க நேரிடும் (எபே. 2:10).

உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதல்

நம் உணர்வுகள் அனைத்தையும் நம்மில் எவரேனும் புரிந்துகொள்வார்களா என்று நான் சந்தேகிக்கிறேன், ஏனென்றால் அவை மிகவும் மர்மமானவை. உணர்வுகள் மிகவும் நல்லதாக இருக்கலாம், மேலும் அவை மிகவும் மோசமானதாகவும் இருக்கலாம். அவை தங்கள் விருப்பப்படி வந்து செல்வதாகத் தெரிகிறது. அவை நிலையற்றவை என்று நான் சொல்ல விரும்புகிறேன் - அவை அடிக்கடி எவ்வித அறிவிப்பும் இல்லாமல் மாறிவிடும்.

நம் உணர்வுகள் அனைத்தையும் நம்மில் எவரேனும் புரிந்துகொள்வார்களா என்று நான் சந்தேகிக்கிறேன், ஏனென்றால் அவை மிகவும் மர்மமானவை.

உதாரணமாக, ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை தேவாலயத்தில், குழந்தைகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும், நர்சரியில் பணிபுரிய தன்னார்வத் தொண்டு செய்வதற்கு ஆட்கள் எவ்வளவாகத் தேவைப்படுகிறார்கள் என்பதைப் பற்றியும் பாதிரியார் பேசும்போது, நான் அதைச் செய்ய விரும்புகிறேன் என்பதை என்னால் எளிதாக “உணர” முடியும். நான் உற்சாகமாக இருக்கிறேன். நான் சேவை செய்ய விரும்புகிறேன்.முதல் ஆராதனையில் பங்கெடுக்காமல் சிறுபிள்ளைகளைப் பார்த்துக் கொண்டு அடுத்த ஆராதனையில் பங்கெடுக்கலாம் என்று நினைப்பேன். நான் முதன்முதல் இதைச் செய்யும் போது கூட உற்சாகமாக இருக்கலாம், ஆனால் குழந்தைகள் அழுவதைக் கேட்ட பிறகு, நாற்றமடிக்கும் டயப்பர்களை மாற்றிய பிறகு, நன்றியற்ற பெற்றோர்கள் அல்லது புகார் செய்யும் பெற்றோரைப் பார்த்த பின், நான் இனி நர்சரியில் வேலை செய்ய விரும்பவில்லை என “உணர்ந்தால்” அது ஆச்சரியப்படுகிறதற்கில்லை.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்பவர்கள் மற்றும் அவர்களின் வார்த்தையைக் கடைப்பிடிப்பவர்கள் தங்கள் உணர்வுகளை கடந்து செயல்படுவார்கள். துரதிர்ஷ்டவசமாக, பலர் நர்சரிக்குத் திரும்பமாட்டர்கள், தேவன் அவர்கள் அதை செய்ய விரும்பவில்லை என்று நியாயப்படுத்துவார்கள் ஏனென்றால் அவர்கள் அதை செய்ய தேவன் விரும்பினால் அவர்கள் அதை அனுபவித்து செய்திருப்பார்கள் என்று நினைத்துக்கொள்வார்கள். நம் வாழ்நாள் முழுவதும் துரதிர்ஷ்டவசமாக இருக்கும் விஷயங்களைச் செய்ய தேவன் நம்மை அழைக்கிறார் என்று நான் நம்பவில்லை என்றாலும், நமக்கு

உற்சாகமளிக்காத சில விஷயங்களைச் செய்ய நாம் அழைக்கப்படலாம் என்று நான் நம்புகிறேன். அனுபவத்திலிருந்து அறிவேன், ஆனால் அவை நாம் சந்திக்கக்கூடிய ஒரு தேவையை பிரதிபலிக்கிறது. சில சமயங்களில் இவை நம் வார்த்தையைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை நமக்குக் கற்பிக்க தேவன் வடிவமைக்கப்பட்ட சோதனைகள் என்று நான் நினைக்கிறேன். ஒரு தேவபக்தியுள்ள நபர் "ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்" என்று வேதம் கூறுகிறது (சங். 15:4). என்னைப் பொறுத்தவரை, நாம் எதையாவது செய்வோம் என்று சொல்லி பின்னர் அதை செய்ய விரும்பாவிட்டாலும் அதை நாம் செய்ய வேண்டும். ஆம் என்று சொல்வதற்கு முன் ஜெபித்து, பின்னர் அர்ப்பணிப்பது புத்திசாலித்தனம்.

இந்த நாட்களில் எல்லாவற்றையும் விட, மக்கள் அவர்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதைப் பற்றி பேசுகிறார்கள். எனவே வெளிப்படையாகவே நாம் உணர்சிகளின் மீது அதிகமாக சார்ந்தவர்களாக இருக்கிறோம். ஆயினும் நாம் ஒரு காரியத்தை நியாயப்படுத்த நம் உணர்வுகளையோ அல்லது உணர்சிகளற்ற தன்மையையோ அளவுகோலாக வைப்பது புத்திசாலித்தனம் அல்ல. இதை இன்னும் முழுமையாக ஆராய "உணர்ச்சிகளுக்கு அப்பால் வாழ்தல்" என்ற புத்தகத்தை எழுதினேன். பயத்தைப் போலவே, நம் நடத்தையை ஆணையிட முயற்சிக்கும் பிற உணர்வுகளும் உள்ளன. இந்த உணர்ச்சிகள் நம் முடிவுகளை ஆள அனுமதிக்காமல் இருக்க கற்றுக்கொள்ளலாம். நிலையற்ற உணர்வுகள் எப்படி இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்வது, அவற்றை அதிகமாகச் சார்ந்திருக்கக் கூடாது என்பதைக் கற்றுக்கொள்ள எனக்கு உதவியது.

உதாரணமாக, உங்கள் வேலை அல்லது தொழிலைப் பற்றி சிந்தியுங்கள். இந்த புத்தகத்தை எழுதும் வரையில், நான் நாற்பத்து மூன்று ஆண்டுகளாக தேவனுடைய வார்த்தையைப் போதித்து வருகிறேன், அதில் முப்பத்து மூன்று ஆண்டுகளாக நான் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் என்று பயணித்தேன். நான் செய்ய வேண்டிய எல்லா பயணங்களையும் பற்றி நான் எப்படி உணர்கிறேன் என்று யாரோ என்னிடம் கேட்டதை நான் நினைத்துப் பார்கிறேன், நானோ, "நீண்ட காலமாக நான் அதைப் பற்றி என்னிடம் கேட்கவில்லை."என்று பதிலளித்தேன்.

நாம் என்ன செய்யவேண்டுமென்று நமக்குத் தெரிந்திருப்பதைச் செய்வதைப் பற்றி நாம் எப்படி உணர்கிறோம் என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வதை நிறுத்த வேண்டும். நம் உணர்வுகளிடம் ஆலோசனைக் கேட்பதை நிறுத்தாவிட்டால், வாழ்க்கையில் பல விஷயங்களை முடிக்க முடியாது.

முதலில், ஊழியத்திற்காக பயணம் செய்வது எனக்கு உற்சாகமாக இருந்தது; இருப்பினும், ஒவ்வொரு முறையும் பொருட்களை எடுத்துவைப்பது பின்னர் அவற்றை மீண்டுமாக எடுத்து வைப்பது (பேக்கிங் மற்றும் அன்பேக்கிங்), எப்பொழுதும் வசதியில்லாத மெத்தைகளில் உறங்குவது, கறை படிந்த அழுக்கு தரைவிரிப்புகள், நீங்கள் உள்ளே வைக்கும் அனைத்தையும் உறைய வைக்கும் குளிர்சாதனப் பெட்டிகள், பக்கத்து அறையில் இருந்து வரும் சத்தம், உங்கள் சாளரத்திற்கு கீழேயுள்ள முற்றத்திலிருந்து வரும் இசை மற்றும் இன்னும் பல அசவுகரியங்களால் என் உற்சாகம் விரைவில் குறைந்து போனது. எல்லா பயண அனுபவங்களும் அசவுகரியமானவைகளல்ல. பல அழகான ?ோட்டல்கள் உள்ளன, ஆனால் ?ோட்டல்கள் வீடு இல்லையே, எனவே அவற்றால் சோர்வடைந்து போவது எளிதே.

நான் பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான மாநாடுகளை செய்துள்ளேன். ஒருவர் சில மாதங்களுக்கு முன்பு என்னிடம் அவ்வாறாக நான் செய்யவிருக்கும் மாநாட்டைப்பற்றி குதுகலமாக இருக்கிறேனா என்று கேட்டார். நான் இல்லை என்று சொன்னதும் அந்த நபர் என்னை மன்னிக்க முடியாத பாவம் செய்தது போல் பார்த்தார். அந்த மனிதன் உணர்ந்த அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் உணர்ந்து, நான் மாநாட்டைப் பற்றி உணர்ச்சிவசப்படவில்லை என்றாலும், மாநாட்டிற்கு என்னை அர்பணித்திருந்தேன். நான் உயிருடன் இருக்கும் வரை தேவனுடைய வார்த்தையைக் கற்பிப்பதில் உறுதியாக இருப்பேன் என்று விரைவாக விளக்கினேன். நாம் இதைப் புரிந்துகொண்டு, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாம் என்ன செய்ய வேண்டுமோ அதை நாம் செய்வோமென்றால் நாம் வெற்றியை நோக்கி முன்னேறுவோம்.

> நாம் என்ன செய்தாலும்,
> புதுமை களையும்
> போது அது நம்மை
> உற்சாகப்படுத்தாது.

நாம் என்ன செய்தாலும், புதுமை களையும் போது அது நம்மை உற்சாகப்படுத்தாது. உற்சாகத்திலிருந்து அர்ப்பணிப்புக்கு கியர்களை மாற்றுவது எப்படி என்று நமக்கு தெரியாவிட்டால், நம் வாழ்நாள் முழுவதும் ஒரு விஷயத்திலிருந்து இன்னொரு விஷயத்திற்கு மாறிக் கொண்டிருப்போம். எதையும் சரியாக முடிக்க மாட்டோம். தேவன் செய்ய அழைத்ததை நிறைவேற்றுவது தனக்கு மிகவும் முக்கியமானது என்று அப்போஸ்தலன் பவுல் கூறினார்:

> ஆகிலும் அவைகளில் ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என்

> ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிஷேத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். அப்போஸ்தலர் 20:24

பவுல் துன்புறுத்தல், சிரமம் மற்றும் கஷ்டங்களால் அசைக்கப்படவில்லை. தேவனுடைய கிருபையால் நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டிய தனது வாழ்க்கையின் அழைப்பை முடிக்க வேண்டுமென்று அவர் தனது மனதில் உறுதியாக இருந்தார். அவர் அதை சந்தோஷத்துடன் செய்ய விரும்பினார். ஆனால் மகிழ்ச்சி என்பது உணர்ச்சிகரமான உற்சாகத்திலிருந்து வேறுபட்டது. என்னிடம் நடத்த வேண்டும் என்று கேட்கப்பட்ட மாநாட்டை நடத்தியதில் மகிழ்ச்சி அடைந்தேன். அங்கு இருப்பவர்கள் மற்றும் அவர்கள் என்ன கற்றுக்கொள்வார்கள் என்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் நான் உணர்ச்சி ரீதியான உற்சாகத்தில் இல்லை.

உணர்ச்சி ரீதியான உற்சாகம் நமக்கு உண்மையான ஆற்றலைத் தருகிறது, ஆனால் நாளடைவில் தேவன் நமக்குக் கொடுத்ததை முடிக்க வேண்டும் என்ற உறுதியுடன் வாழ கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் பணியைச் செய்யத் தேவையான ஆற்றலுக்காக அவரை நம்ப வேண்டும்.

நம் சமூகத்தில் விவாகரத்து விகிதம் அதிகமாக இருப்பதற்கு உற்சாகத்தை சார்ந்திருப்பதும் ஒரு காரணம். பொழுதுபோக்கிற்கும் உற்சாகத்திற்கும் நாம் சற்று அடிமையாகிவிட்டோம், எனவே திருமணம் இனியும் உற்சாகமாக இல்லாதபோது, சிலர் தங்களை உற்சாகப்படுத்தும் வேறொருவரை நாடி செல்ல விரும்புகிறார்கள். ஆனால் அத்தகைய உறவும் நீடிக்காது. டேவ் வீட்டிற்கு வரும்போது எனக்கு கிளர்ச்சி வராது, அல்லது என் இதயம் வேகமாக துடிக்காது, ஆனால் நான் அவரை ஆழமாக நேசிக்கிறேன், “மரணம் எங்களை பிரிக்கும் வரை” நான் அவரிடம் அர்ப்பணிப்புடன் இருக்கிறேன். நான் இந்த புத்தகத்தை எழுதுகையில், எங்களுக்கு திருமணமாகி ஐம்பத்து மூன்று வருடங்கள் ஆகின்றன. அதுபோன்ற அர்ப்பணிப்புக்கு உணர்ச்சிபூர்வமான உற்சாகத்தை விட அதிகம் தேவைப்படுகிறது.

உற்சாகத்தில் தீமை எதுவும் இல்லை. நாம் அதை உணர்ந்தால், நாம் அதை அனுபவிக்க வேண்டும், ஆனால் அதைச் சார்ந்து இருக்கக்கூடாது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும், ஏனென்றால் அது வந்து செல்கிறது.

தம்முடைய பிதா அனுப்பியதை அவர் செய்து முடித்தார் என்ற உண்மையைப் பற்றியும் இயேசு பேசினார் (யோவான் 17:4), ஆனால்

சிலுவையில் அறையப்படுவது உற்சாகமாக இருந்ததா என்று நான் தீவிரமாக சந்தேகிக்கிறேன். தமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த மகிழ்ச்சிக்காக, சிலுவையின் அவமானத்தை பொருட்படுத்தாமல், அவர் தாங்கிக் கொண்டார் என்று வேதம் கூறுகிறது (எபி. 12:2). தேவன் நம்மிடம் சொன்னதை நாம் முடித்துவிட்டோம் என்பதை அறியும்போது மிகவும் நன்றாக இருக்கிறது.

என்னை துஷ்பிரயோகம் செய்து கைவிட்ட என் பெற்றோர், தங்களை சரியாக பராமரிக்க முடியாத அளவுக்கு வயதாகியிருந்தபோது, அவர்களை கவனித்துக்கொள்ளும்படி கர்த்தர் என்னிடம் சொன்னார். அவருடனான ஒரு நல்ல பயனற்ற வாதத்திற்குப் பிறகு, நான் சரி என்றேன். அவர்கள் இன்னும் பதின்மூன்று வருடங்கள் வாழ்வார்கள் என்பதையும், அதிக செலவு மற்றும் நேரத்தைச் செலவழிக்கும் கவனிப்பு தேவைப்படும் என்பதை நான் அப்போது உணரவில்லை. இது எனக்கு உற்சாகமானதாகவோ அல்லது வேடிக்கையானதாவோ இல்லை, ஆனால் நான் அதைச் செய்தேன், ஏனென்றால் அது சரியான விஷயம் என்று எனக்குத் தெரியும். தேவன் எனக்குக் கொடுத்த வேலையை நான் முடித்துவிட்டேன் என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

> நீங்கள் எதையாவது பற்றி உங்கள் குதுகலத்தை அல்லது உற்சாகத்தை இழந்திருந்தால், இந்த காரணத்திற்காக வெறுமனே எதையும் கைவிட்டுவிடாதீர்கள்.

நீங்கள் எதையாவது பற்றி உங்கள் உற்சாகம் அல்லது உற்சாகத்தை இழந்திருந்தால், இந்த காரணத்திற்காக வெறுமனே எதையும் கைவிட்டுவிடாதீர்கள். நீங்கள் எதையும் விட்டுவிடுவதற்கு முன், தேவன் உங்களை அவ்வாறு செய்யச் சொல்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். கடினமான ஒன்றைச் செய்யும்படி அவர் உங்களிடம் கேட்டாலும், அதைச் செய்வதற்கு அவர் உங்களுக்கு கிருபையை அருளுவார். அவர் நம்மிடம் கேட்கும் எதற்கும் நம் பதில் எப்போதும் ஆம் என்று இருக்க வேண்டும்.

நீங்கள் பயப்படுகிறீர்களா இல்லையா என்பதை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை எடுப்பதற்குப் பதிலாக, தைரியமாக இருந்து முடிவுகளை எடுங்கள். கார்லே வில்சன் பேக்கரின் “தைரியம்” என்ற சிறு கவிதையின் படி, “தைரியம் என்பது அதன் பிரார்த்தனைகளைச் செய்துவிட்ட பயம்” மேலும் அது என்ன செய்ய வேண்டியிருந்தோ அதைச் செய்ய முன்னோக்கிச் சென்றுவிட்டது.

உலகில் உள்ள அனைத்து பொய்யர்களிலும், சில நேரங்களில் மோசமானது நம் சொந்த அச்சங்கள்.

- ருட்யார்ட் கிப்ளிங்

புலியின் கர்ஜனை

அனைத்து உயிரினங்களிலும் மிகவும் கம்பீரமான ஒன்று புலி. பல ஆண்டுகளாக இந்த பெரிய அழகான உயிரினம் ஆராய்ச்சியாளர்களுக்குப் புதிராக இருந்திருக்கிறது. புலிகள் வேட்டையாடும்போது, மற்ற பெரிய பூனைக் குடும்பத்திலுள்ள விலங்குகளை விட, பயத்தால் தங்கள் இரையை முடக்கும் ஒரு குறிப்பிடத்தக்க திறன் கொண்டதாக இருக்கிறது. புலி தனது உதவியற்ற இரையை நோக்கிச் செல்லும்போது, அது முதுகுத்தண்டே சிலிர்க்கும் அளவு கர்ஜிக்கிறது. இது அதன் இரை திரும்பி அதன் உயிருக்காக ஓடுவதற்கு இது போதுமானதாக இருக்கும் என்று இப்போது நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் அதற்கு பதிலாக அது அப்படியே உறைந்துவிடும். விரைவில் புலிக்கு உணவாக மாறிவிடும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், புலி நெருங்கி வரும் போது ஓடுவதை விட, நீங்கள் ஏன் அந்த இடத்திலேயே உறைந்து போவீர்கள் என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். புலி கர்ஜிக்கும் போது, அது கேட்கக்கூடிய ஒலி அலைகளை வெளியிடுகிறது - பயங்கரமான ஒலிகள். இது குறைந்த அதிர்வெண்ணில் ஒலியை வெளியிடுகிறது, நீங்கள் கேட்க முடியாது, ஆனால் நீங்கள் அதை உணர முடியும். அதனால், புலி செடிமறைவிலிருந்து வெளியே வரும்போது, அதன் நிறங்களின் ஒளியும், அதன் கர்ஜனையின் சத்தமும் மற்றும் கேட்காத ஆனால் உணரப்படும் ஒலி அலைகளின் தாக்கம் ஆகியவை ஒன்றிணைந்து உங்கள் புலன்களின் மீது ஒரு முழுமையான தாக்குதலை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவு என்னவென்றால், நீங்கள் சற்று நேரம் முடங்கிவிடுகிறீர்கள், எனவே புலியைத் தவிர்த்து ஓடிவிட நேரம் கிடைத்தாலும், புலி உங்கள் மீது பாய்வதற்கேற்ப அங்கேயே நீங்கள் நீண்ட நேரம் நின்று ஏமாந்துவிடுகிறீர்கள்.

நம் அச்சங்களும் பெரும்பாலும் அதே வழியில் தான் செயல்படுகின்றன. உண்மையான அச்சுறுத்தல் நம்மீது உடனடியாக இராதபோதும், அவை நம்மை செயலற்ற நிலையில் முடக்குகின்றன. நமக்கு முன்னால் உள்ள சவால்களை சமாளிப்பதன் ஒரு பகுதி என்னவென்றால், சவாலை நன்றாகக் கையாள்வதிலிருந்து நம்மைத் தடுக்க என்ன நடக்கும் என்ற நமது பயத்திற்கான திறனை இனங்கண்டுக்கொள்வதாகும்.

அத்தியாயம் 6

நான் ஏன் பயப்படுகிறேன்?

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிரளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.

1 பேதுரு 5:8

நாம் பிசாசைப் பார்க்க முடியாததால் அவனை சுலபமாகவே மறந்துவிடலாம். நம் பிரச்சனைகளுக்கு மற்றவர்களை குற்றப்படுத்துகிறோம். நம் சூழ்நிலைகள் மற்றும் தேவனையும் சாடுகிறோம், ஆனால் பல சந்தர்ப்பங்களில் இந்த பிரச்சனைகள் உண்மையில் பிசாசின் வேலை. மனிதர்கள் மற்றும் சூழ்நிலைகள் மூலம் சாத்தான் செயல்பட முடியும் என்றாலும், நம்முடைய பல பிரச்சினைகளுக்கு அவனே மூலகாரணமாக இருக்கிறான். அவன் நம் எதிரி, நம் எதிரி, எப்போதுமே நமக்கு எதிராக இருப்பவன், நம் வாழ்வுக்கான தேவனின் நல்ல திட்டத்தைத் தடுக்கவும் திருடவும் தொடர்ந்து முயற்சி செய்கிறான். யோவான் 10:10 பிசாசு மூன்று காரணங்களுக்காக வருகிறான் என்று கூறுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்: திருட, கொல்ல மற்றும் அழிக்க.

சாத்தான் உண்மையானவன் என்றும் என் பிரச்சினைகளுக்கு மூலகாரனன் என்றும் கண்டறிந்தது என் வாழ்க்கையை மாற்றியது. நான் ஒரு கிறிஸ்தவன், ஆனால் என் வாழ்க்கையில் வெற்றி இல்லாமலிருந்தேன், என் வாழ்க்கையிலே என்ன நடந்தாலும் அதை தேவனுடைய சித்தமென்றோ அல்லது நான் சந்தோஷப்படும்படியாக மற்றவர் என்ன செய்யவேண்டுமென்று நான் விரும்பினேனோ அதை அவர்கள் செய்யாததால் நடந்தது என்று நினைத்தேன். பிசாசைத் தவிர வேறு எவரையும் என் பிரச்சினைகளுக்காக

நான் குற்றம் சாட்டினேன், ஏனென்றால் உலகில் பிசாசு இருப்பதையும் தீமை இருக்கிறது என்பதையும் நான் புரிந்துகொண்டாலும், என் வாழ்க்கையில் அவன் தனிப்பட்டமுறையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதாக நான் பார்க்கவில்லை.

நான் முன்பு இருந்த இந்த இடத்தில் நீங்களும் இருக்கலாம். சில நிமிடங்கள் எடுத்து, மேலே பைபிள் வசனம் விவரிக்கும் பிசாசைப் பாருங்கள்: ஒரு எதிரி, சுற்றித் திரியும் எதிரி, எப்போதும் உங்களுக்கு அருகில் எங்காவது சுற்றி பதுங்கி, உங்கள் சமாதானம், மகிழ்ச்சி மற்றும் வெற்றியைத் தின்றுவிடும் வகையில் உங்கள் வாழ்க்கையில் ஒரு திறப்பைத் தேடுகிறான்.

பிசாசு நம்மீது ஆதிக்கத்தை செலுத்த அனுமதிப்பது சாத்தியமே. எபேசியர் 4:26-27ல் பிசாசுக்கு நம் வாழ்வில் காலடி எடுத்து வைக்க இடம் கொடுக்க கூடாதென்று பவுல் எச்சரிக்கிறார். தீர்க்கப்படாத கோபத்தின் மூலம் பிசாசு காலூன்ற முடியும் என்பதை இந்த பத்தி சுட்டிக்காட்டுகிறது, ஆனால் வேறு வழிகள் மூலமாகவும் நாம் வழிகளைத் திறந்து கொடுக்கலாம்.

பிசாசு நம்மை மேற்கொள்ள அனுமதிக்கும் ஒரு வழி பயம். உண்மையில், பயம்தான் நமக்கு எதிராக அவன் பயன்படுத்தும் முதல் ஆயுதம் என்று நான் நம்புகிறேன். துரதிர்ஷ்டவசமாக, நாம் பொதுவாக வேறு எதையும் செய்ய முடியாத ஒன்றாக அதை ஏற்றுக்கொள்கிறோம். நாம் சாதாரணமாக பயப்படுகிறோம் என்று நினைக்கிறோம், அதற்கு மேல் எதுவும் இல்லை என்று நினைக்கிறோம். ஏதோ சில காரணங்களால் நாம் பயப்படுவதால், நாம் முன்னேறவோ அல்லது நாம் உண்மையிலேயே செய்ய விரும்பும் விஷயங்களைச் செய்யவோ இயலாது என்று கருதுகிறோம். நான் பயந்ததால் நான் ஒரு கோழை என்று பல ஆண்டுகளாக நம்பினேன், ஆனால் தேவனுக்கு நன்றி நான் "பயந்து கொண்டே அதை செய்ய" கற்றுக்கொண்டேன். அந்த ஒரு யோசனை என் வாழ்க்கையில் அற்புதமான மாற்றத்தை ஏற்படுத்தியது. பயத்தை உணர்வதால் நாம் கோழைகள் அல்ல; பயத்திற்கு அடிபணிந்து, அது அறிவுறுத்தியபடி செய்தால் தான் நாம் கோழைகள் , அதாவது நாம் ஒன்றும் செய்யவில்லை அல்லது ஓடி ஒளிந்து கொள்கிறோம்.

> பயம் என்பது எதிரி நமக்கு எதிராக பயன்படுத்தும் முதல் ஆயுதம்.

மக்கள் பெரும்பாலும் பிசாசைப் பற்றி கேட்க விரும்புவதில்லை. ஏனெனில் அது ஒரு இனிமையான காரியம் அல்ல. எல்லா பயத்திற்கும் பிசாசுதான் ஆதாரம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளும் வரை பயத்திலிருந்து

விடுபடுவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வது சாத்தியமில்லை.

> ஏனென்றால், தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும்,தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.
>
> 2 தீமோத்தேயு 1:7

பயம் தேவனிடமிருந்து வரவில்லை என்பதால், அது பிசாசிடமிருந்து தான் வந்திருக்க வேண்டும். தேவன் நமக்கு விசுவாசத்தைத் தருகிறார். பிசாசு பயத்தைக் கொண்டு அதை எதிர்கிறான். பயத்தை வெல்லும் ஒரே சக்தி விசுவாசம் மட்டுமே. மேலும் விசுவாசம் தேவனைப் பார்க்கிறது மற்றும் கேட்கிறது, மேலும் பயமாக இருக்கும்போதே நடவடிக்கை எடுக்கிறது.

> ஆகையால் தேவனுக்கு கீழ்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.
>
> யாக்கோபு 4:7

நாம் பிசாசை எதிர்க்க வேண்டும் அல்லது நாம் அவனை நம்பினால் அவன் தன் பொய்களால் நம் வாழ்க்கையை அழித்து விடுவான். பிசாசுக்கு எதிராக நாம் உறுதியாக நிற்க வேண்டும். பலமாக இருக்க வேண்டும், அவன் நம்மை விழுங்காதபடி கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பேதுரு சிலுவையில் அறையப்படுவதைப் பற்றி பேச முயன்றபோது இயேசு பிசாசை எதிர்த்தார் (மத். 16:23). அவர் “எனக்குப் பின்னால் போ, சாத்தானே; நீ எனக்கு ஒரு தடையாக இருக்கிறாய், நீ என் வழியில் இருக்கிறாய்” என்றார். தேவனுக்கு கீழ்படியாதபடி இயேசுவை நம்ப வைக்க சாத்தான் உண்மையில் பேதுருவைப் பயன்படுத்தினான். நம் வாழ்வின் நோக்கத்திலிருந்து நம்மைத் திசை திருப்ப அவன் பொதுவாக நமக்கு நெருக்கமானவர்களை அடிக்கடி பயன்படுத்துகிறான். அவர்கள் வேண்டுமென்றே தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்க முயற்சிப்பதில்லை. தேவனோ அல்லது வேறு யாரோ நாம் செய்ய வேண்டுமென்று விரும்புவதை அல்ல, அவர்கள் எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதை நாம் செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். இயேசு துன்பப்பட்டு இறப்பதை பேதுரு விரும்பவில்லை, எனவே அவர் துன்பப்படும் இடத்திற்கு செல்ல வேண்டாம் என்று கூறினார்.

ஆனால் இயேசுவோ பிசாசு உண்மையில் அவன் மூலம் தேவனுடைய

திட்டம் நிறைவேற்றுவதைத் தடுக்க செயல்படுகிறான் என்பதை அறிந்து, பேதுருவைக் கடிந்துகொண்டார்.

நாம் பிசாசை எதிர்க்கப் போகிறோம் என்றால் பயத்தினிமித்தம் நாம் எடுக்கும் அல்லது எடுக்காத நடவடிக்கையை எடுப்பதை நாம் எதிர்க்க வேண்டும். "அப்படிச் செய்யாதே; நீ உன்னையே முட்டாளாக்கிக் கொள்வாய், என்று பயம் சொன்னால், என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவின் மூலமாக என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும்" (பிலி. 4:13) என்று நீங்கள் சொல்ல வேண்டும், நீங்கள் பயந்தாலும் தேவையான நடவடிக்கையை எடுங்கள்.

எதிர்கொள்வதின் மூலம் வெற்றி பெறுங்கள்

பயத்திலிருந்து விடுபட நாம் ஜெபிக்கலாம், ஆனால் பெரும்பாலும், பயத்தின் உணர்வுகளை அகற்றுவதற்குப் பதிலாக, பயத்தை எதிர்கொண்டு முன்னேறுவதற்கான தைரியத்தை தேவன் நமக்குத் தருகிறார். தேவன் யோசுவாவிடம் பயப்படாமல் தைரியமாக இருக்கும்படி கூறினார் (யோசு. 1:5, 9). வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை கைப்பற்றுவதில் இருந்து பயம் அவரைத் தடுக்க முயற்சிக்கும், ஆனால் அவர் தைரியமாக இருந்தால், அவர் எப்படி உணர்ந்தாலும், அது பெரிய வெற்றியைக் கொண்டுவரும் என்று அவர் யோசுவாவை எச்சரித்தார்.

> நம் வேலைகள் நம்மை இயேசுவிடமிருந்து பிரித்துவிடாமல் அவருடன் இணைந்து வேலை செய்யலாம்.

தீமையை எதிர்கொள்ளாத வரை அது எப்போதும் வெற்றி பெறும். எவ்வளவு காலம் அது எதிர்கொள்ளப்படாமல் போகிறதோ, அவ்வளவுக்கு அதிகமான இடத்தை எடுத்துக்கொண்டு வலுவடைகிறது. இன்று நம் சமூகம் தீமையால் நிரம்பியுள்ளது. அதைத் தடுக்க நாம் எதுவும் செய்யவில்லை என்றால், சாராம்சத்தில், நாம் அதை ஒப்புக்கொள்கிறோம். நீங்கள் என்ன செய்ய முடியும் என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் செய்யக்கூடிய ஒன்று அதற்கு எதிராக பேசுவது. ஏனென்றால் மௌனம் உடன்பாட்டைக் குறிக்கிறது.

ஒவ்வொரு விசுவாசிக்கும் சாத்தானின் மீது அதிகாரம் உள்ளது

மற்றவர்கள் எப்படியோ "சிறப்பு" விசுவாசிகளாக இருப்பதால் பிசாசின் மீது

அதிகாரம் செலுத்த முடியும் ஆனால் உங்களுக்கு அந்த பாக்கியம் இல்லை என்று நினைக்காதீர்கள்,

> இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது.
>
> லூக்கா 10:19

இந்த வேதம் “சூப்பர் பரிசுத்தவான்களுக்கு” மட்டும் எழுதப்படவில்லை; இது இயேசு கிறிஸ்துவில் உள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் எழுதப்பட்டுள்ளது. தேவன் நமக்கு வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார், ஆனால் நாம் அதைப் பயன்படுத்தாவிட்டால் அது நமக்கு எந்த நன்மையும் செய்யாது. பிசாசை எதிர்த்து, அவனுக்கும் அவனுடைய செயல்களுக்கும் எதிராகப் பேசுவதன் மூலமும், அவனுடைய பொய்களை நம்ப மறுப்பதன் மூலமும் அதைச் செயல்படுத்துகிறோம். சாத்தான் இயேசுவிடம் பொய் சொன்னபோது, அவனுடைய பொய்யை மறுதலிக்கும் ஒரு வசனத்தை மேற்கோள் காட்டுவதன் மூலமே அவனுக்கு அவர் எப்போதும் பதிலளித்தார். (லூக்கா 4:1-10). நாமும் பிசாசிடம் திரும்பிப் பேச வேண்டும். வேதம் கூறுகிறது, “என் வார்த்தையுள்ளவனோ, அவன் என் வார்த்தையை உண்மையாய் சொல்வானாக” (எரே. 23:28).

ஒவ்வொரு முறையும் நீங்கள் பயப்படுகிறீர்கள், பயம் சாத்தானிடமிருந்து வருகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரே ஒரு சரியான பயம் தேவனுக்கு பயப்படுவதாகும், தேவபக்தியாகும், அது அவருக்கு எல்லாவற்றிற்கும் மேலாக கனத்தை,க் கொடுக்கும் பிரமிப்பூட்டும், மரியாதைக்குரிய பயம். வேதம் இதை “கர்த்தருக்கு பயப்படுதல்” என்று குறிப்பிடுகிறது. கர்த்தருக்குப் பயப்படுவது என்பது தேவன் நமக்குத் தீங்கு விளைவிப்பார் என்று பயப்படுவதை நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை. தேவன் எப்போதும் நல்லவர், ஆனால் நம்முடைய சொந்த முட்டாள்தனத்தின் மூலம் அவருக்கு கீழ்ப்படியாமல் இருப்பதன் மூலம் பிசாசுக்கு கதவுகளைத் திறக்கிறோம். இந்தக் காரணத்திற்காகவே, தேவன் மீது பயபக்தியுடன் இருக்குமாறு வேதம் நம்மைத் தூண்டுகிறது. அவரைப் பற்றிய இந்த மனப்பான்மை நம்மை வாழ்க்கையில் சரியான பாதையில் செல்ல வைத்து, அவருக்குக் கீழ்ப்படியாமல் போவது பெரிய விஷயமில்லை என்று நினைப்பதைத் தடுக்கும். நம்முடைய பாவங்களுக்காக நாம் மன்னிக்கப்படலாம், ஆனால் சரியானதைச் செய்வது இன்னும் சிறந்தது.

நீதிமொழிகள் 9:10, "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று கூறுகிறது.

சில சூழ்நிலைகள் நியாயமான எச்சரிக்கை அல்லது அக்கறையின் வடிவில் ஞானத்தை உபயோகிக்க அழைக்கின்றன. அதாவது நெருப்பு, ஆழமான நீரில் இறங்குவது (நாம் சிறந்த நீச்சல் வீரர்களாக இல்லாவிட்டால்), கதவுகளை பூட்டாமல் படுக்கைக்குச் செல்வது, உடல் வலி அல்லது அசாதாரண அறிகுறிகளை மருத்துவரிடம் செல்லாமலேயே ஒரு வருடம் வரை தாங்கிக்கொள்வது, அல்லது போக்குவரத்து நிறுத்தத்தில் நிற்காமல் போவதால் காயமடைவது போன்று பொது அறிவைப் பயன்படுத்தாததால் பலர் காயமடைகிறார்கள். ஆனால் இந்த நாட்களில் பொது அறிவு பொதுவாக இல்லாமலிருக்கிறது. ஞானம் என்பது புனிதமாக்கப்பட்ட பொது அறிவு என்று நான் நம்புகிறேன். தேவன் நமக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அதிலிருந்து பயனடைய நாம் அதைப் பயன்படுத்த வேண்டும்.

ஒரு சில பயங்கள் நல்லவையாக இருக்கின்றன, ஏனென்றால் அவை நம்மைத் தீங்கிலிருந்து நம்மை காக்கின்றன; இருப்பினும், நாம் என்ன செய்ய வேண்டும் என்று நம்புகிறோமோ, அல்லது நாம் செய்ய விரும்பும் விஷயங்களைச் செய்வதிலிருந்து நம்மைத் தடுக்கும் பயங்கள் அனைத்தும் பிசாசிடமிருந்து வந்தவை.

இனியும் பாதிக்கப்பட்டவரல்ல

காயப்பட்ட அல்லது சாதகமாகப் பயன்படுத்தப்பட்ட பலர் பாதிக்கப்பட்ட மனநிலையுடன் தங்கள் வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். அப்படிச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். பிசாசு உங்களை ஒருமுறை காயப்படுத்தியிருந்தால், நீங்கள் பலியாகிவிட்டீர்கள் என்ற பொய்யை ஏற்றுக்கொண்டு உங்களைத் தொடர்ந்து காயப்படுத்த அனுமதிக்காதீர்கள். நீங்கள் ஒரு காலத்தில் பலியாகியிருக்கலாம், ஆனால் தேவனுடைய பிள்ளையாக நீங்கள் இப்போது ஒரு புதிய சிருஷ்டியாக இருக்கிறீர்கள், பழையவைகள் மறைந்துவிட்டன (2 கொரி. 5:17). எனது குழந்தைப் பருவத்தில் நான் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானேன், ஆனால் எனக்கு தெரிந்த ஒருவருக்கு அவை அனைத்தும் நடந்ததாக இப்போது உணர்கிறேன்,

> இன்று நம் சமூகம் தீமையால் நிரம்பியுள்ளது. அதைத் தடுக்க நாம் எதுவும் செய்யவில்லை என்றால், சாராம்சத்தில், நாம் அதை ஒப்புக்கொள்கிறோம்.

ஏனென்றால் நான் இப்போது அந்த ஆதரவற்ற பாதிக்கப்பட்டவள் அல்ல. நான் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய நபர், நீங்களும் அப்படித்தான். நம்மை நேசிக்கிற கிறிஸ்துவின் மூலம் நாம் முற்றிலும் ஜெயம்கொண்டவர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:37).

பிசாசுக்கு இடமளிக்க வேண்டாம் என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் கற்பிக்கிறது (எபே. 4:27). நாம் அவருக்கு பல்வேறு வழிகளில் இடம் கொடுக்கலாம். எபேசியர் 4:27 பிசாசுக்கு இடமளிப்பதற்கான ஒரு வழியாக கோபத்தைப் பிடித்து மன்னிக்க மறுப்பதைப் பற்றி குறிப்பாகப் பேசுகிறது, ஆனால் தவறான மனப்பான்மையும் அதே விளைவுகளை ஏற்படுத்தும். பல ஆண்டுகளாக, ஒரு கிறிஸ்தவளாக இருந்தபோதிலும், தேவன் எனக்கு அதிகாரத்தை வழங்கியிருந்தபோதிலும், கசப்பான, சுய பரிதாபம் மிகுந்த, மன்னிக்காத மனப்பான்மையே எனக்கு இருந்தது. ஆனால், என்னுடைய கெட்ட மனப்பான்மையுடன், அவருடைய வல்லமையையும் என்னால் வைத்திருக்க முடியாது என்பதை உணர்ந்தேன். எனக்காக வருந்துவதற்கு எனக்கு ஒரு காரணம் இருந்தது. ஒருவேளை உங்களுக்கும் கூட இருக்கலாம், ஆனால் கடந்த காலத்திலிருந்து நம்மை விடுவித்து புத்தம் புதிய வாழ்க்கையை வாழ ஏதுவாக இயேசு நமக்காக மரித்ததால் அப்படி உணர நமக்கு உரிமை இல்லை.

சாத்தான் துன்புறுத்துகிறான்

மக்கள் அனுபவிக்கும் பல விதமான பயங்கள் மற்றும் அச்சங்கள் அவர்களைத் துன்புறுத்துவதற்கு தானே அல்லாமல் வேறு எந்த காரணத்திற்காகவும் வடிவமைக்கப்படவில்லை. பல வகையான ஃபோபியாக்கள்(அச்சங்கள்) உள்ளன. அவற்றைப் பட்டியலிட வழி இல்லை, ஆனால் அவை ஒவ்வொன்றும் அவற்றால் அச்சுறுத்தப்படுபவர்களுக்கு மிகவும் உண்மையானதாகத் தோன்றும். பொதுப் பேச்சு, உயரம், இடுக்கமான இடங்கள், கூட்டம், கோமாளிகள், கிருமிகள், இருள், புயல்கள், பாம்புகள் மற்றும் சிலந்திகள் போன்றவற்றைப் பற்றிய பயம் நமக்கு இருக்கிறது. ஜெர்ரி சீன்ஃபீல்ட் ஒருமுறை கூறினார், "ஒரு பெண் தனது கால்களில் சூடான மெழுகு ஊற்றி, முடியை அதன் வேர்களோடு பிடுங்கக்கூடிய தைரியத்தைப் பெற்றிருந்தாலும் சிலந்திக்கு பயப்படுவதென்பது எனக்கு மிகப்பெரிய மர்மங்களில் ஒன்றாக இருக்கிறது."

நோமோபோபியா போன்ற சில பயங்கள் குறிப்பாக அசாதாரணமானவை, அதாவது உங்கள் மொபைல் போன் இல்லாமல் இருப்பது அல்லது

மொபைல் சாதனங்களைப் பயன்படுத்த கூடாத நிலையிலிருப்பது என்ற பயம். இத்தகைய பயங்களால் துன்பப்படும் நபர்களுக்காக நான் மிகவும் பரிதாப்படுகிறேன். ஆனால் அவற்றைக் கடந்து செல்வதற்கான ஒரே வழி அவைகளை எதிர்கொள்வதே என்று நான் நம்புகிறேன். சிலருக்கு ஒரு நிபுணரின் ஆலோசனை அல்லது சிகிச்சை தேவைப்படுகிறது. நீங்கள் எதைச் செய்ய வேண்டும் என்றாலும், பயத்தை மட்டும் பொறுத்துக்கொள்ளாதீர்கள், அது உங்களைக் கட்டுப்படுத்த அனுமதிக்காதீர்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார், மேலும் நீங்கள் அமைதியையும் மிகுந்த மகிழ்ச்சியையும் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நீங்கள் பயத்தை உணர்ந்தால், உடனடியாக தேவன் மீது நம்பிக்கை வைத்து பயந்துக்கொண்டே செய்யுங்கள்!

உங்கள் பயத்தை எதிர்த்துவிடுங்கள்; பயம் உங்களை ஒரு நேர்மறையான முடிவுக்கு ஒரு போதும் கொண்டு செல்லாது. உங்கள் விசுவாசத்திற்கும், நீங்கள் நம்புவதற்கும் நேராக செல்லுங்கள்.

-டி. டி. ஜேக்ஸ்

பயத்தை ஒன்றாக இணைந்து எதிர்கொள்வது

எனக்கு ஞாபகம் இருக்கும் வரை இருட்டைக் கண்டு பயந்தேன். ஒரு இளம் பெண்ணாகவும், பதின்வயதினராகவும், நான் சத்தங்களை கேட்டு, பயந்து படுக்கையில் படுத்திருப்பேன். மீண்டும் மீண்டும், நான் என் பெற்றோரைக் கூப்பிடுவதுண்டு. அவர்கள் வீடு பாதுகாப்பாக இருக்கிறது என்று எனக்கு உறுதியளிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவேன்.

நான் இறுதியாக தூங்குவேன், நன்றாக தூங்க மாட்டேன். நான் அடிக்கடி கனவுகளால் துன்புறுத்தப்பட்டேன், பீதியில் எழுவதுண்டு.

நானே இவ்வாறாக என்னிடமே சொல்லிக்கொள்வேன். நிச்சயமாக, நான் பெரியவளாகும் போது இவை அனைத்தும் சரியாகிவிடும் என்று. ஆனால் அது ஒருபோதும் சரியாகவில்லை. ஒவ்வொரு இரவும், வயது வந்தவளாக இருந்தாலும், நான் அதே எட்டு வயது சிறுமியாக இருந்தேன். சத்தங்களைக் கேட்டு போர்வைகளுக்குள் முடங்கிவிடுவேன்.

இருளைப் பற்றிய பயம் என்னை முப்பதுகளிலும் பின்தொடர்ந்தது. திருமணமான பெண்ணாக இருந்தாலும், என் கணவர் டாமை நான் வழக்கமாக எழுப்பி, வீட்டைச் சுற்றிப் பார்த்து சரியாக இருக்கிறதென்று உறுதி செய்து, என் பயத்தைத் தணிக்க முயற்சித்தேன். நான் அவமானமாக உணர்ந்தேன், ஆனால் வேறு என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை.

பின்னர், அது இன்னும் மோசமாகிவிடாது என்று நான் நினைத்தபோது, டாம் இரவு நேரத்தில் வேலைக்கு செல்லும்படி நேரிட்டது. என்னுடைய மிகப்பெரிய பயமாகிய இரவில் தனிமையாக இருப்பதுடன் நேருக்கு நேர் மோத வேண்டியதாயிற்று.

அந்த நேரத்தில் தானே நான் தேவனுடனான நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்ள ஆரம்பித்தேன். எனது கடுமையான பயத்திற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று அவரிடம் கேட்டேன். அவர் என் இருதயத்தில் பேசியதை என்னால் மறக்கவே முடியாது: “இருள் பயத்தை நாம் ஒன்றாக எதிர்கொள்வோம்.”

பயம் பற்றிய வேதவசனங்களை மனப்பாடம் செய்ய கர்த்தர் என்னை வழிநடத்தினார். இரவில், நான் என் படுக்கையில் உட்கார்ந்து, ஆவியில் ஜெபித்து, பல்வேறு வேதவசனங்களை உரக்கப் பேசுவேன்: “தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். நீ படுக்கும்போது

பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக் கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும்." (2 தீமோ. 1:7; நீதி. 3:24).

நான் தொடர்ந்து ஜெபித்தேன், அவருடைய வார்த்தையால் என் மனதை நிரப்பினேன், என்னால் முடிந்தவரை அடிக்கடி பேசினேன். படிப்படியாக, தேவன் ஒரு அதிசயத்தை நிகழ்த்தி, இவ்வளவு காலமாக எனக்கு துணையாக இருந்த பயத்தின் சக்தியை உடைத்தார். பல வருடங்களுக்குப் பிறகு, "இருட்டைக் கண்டு நான் பயப்படவில்லை" என்று இறுதியாக என்னால் சொல்ல முடிந்தது.

- டோனா

அத்தியாயம் 7

பயத்திற்கான மாற்று மருந்து

அன்பிலே பயம் இல்லை; பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. 1 யோவான் 4:18

நாம் பயப்பட வேண்டியதில்லை என்பதற்கு ஒரு காரணம், தேவன் எப்பொழுதும் நம்முடனே இருக்கிறார் என்பது நமக்குத் தெரியும் என்பதை நீங்கள் படித்திருப்பீர்கள். நாம் பயந்து வாழத் தேவையில்லை என்பதற்கு மற்றொரு முக்கிய காரணம், தேவன் நம்மை முழுமையாக நேசிக்கிறார். பயம் நம்மை ஆள அனுமதிக்கும் வரை, தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பைப் பற்றி நாம் தொடர்ந்து கற்றுக்கொண்டு அதை அனுபவித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

தேவன் நம்மை நேசிப்பதால், அவர் எப்போதும் நம்மை நன்றாக கவனித்து, நமக்கு உதவுவார். எல்லா நேரத்திலும், எல்லா சூழ்நிலைகளிலும் அவர் நம்மை நேசிக்கிறார் என்ற அறிவில் நாம் நம்பிக்கையுடனும், பாதுகாப்பாகவும் இருக்க முடியும். நாம் தேவனுடைய அன்பில் வேரூன்றியவர்களாக இருக்க வேண்டும், எது எவ்வளவு மோசமாகத் தோன்றினாலும், அவரின் அன்பிலிருந்து நம்மை எதுவும் பிரிக்க முடியாது என்று அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார்:

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மையே பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? . . . இல்லை, இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புக்கூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும், நம்முடைய

கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். ரோமர் 8:35, 37-39

தேவனின் அன்பிலிருந்து எதுவும் நம்மைப் பிரிக்க முடியாது என்று பவுல் “நிச்சயமாக” கூறுகிறதைக் கவனியுங்கள். அதில் நாம் நம்பிக்கை வைக்கலாம். தேவன் உங்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதைப் பற்றி அடிக்கடி சிந்திப்பது உங்கள் வாழ்க்கையில் உள்ள அச்சங்களை எதிர்கொள்ள உதவும். தேவன் அவர்களை நேசிக்கிறார் என்று மற்றவர்களிடம் சொல்வது எளிது. ஆனால் அவர் நம்மை நேசிப்பதைப் பற்றி நினைக்கும் போது அது கடினமாகிறது. உங்களிடமாக தொடர்ந்து பாயும் தேவனின் பரிபூரண அன்பை நீங்கள் தெரிந்து கொள்ள பிசாசு நிச்சயமாக விரும்புகிறதில்லை, ஏனென்றால் அது உங்களை வலிமையானவர்களாகவும், அச்சமற்றவர்களாகவும், பாதுகாப்பாகவும், நம்பிக்கையுடையவற்களாகவும் மாற்றிவிடும் என்று அவனுக்குத் தெரியும்.

பாதுகாப்பின்மை

பாதுகாப்பற்ற மக்கள் சுய கவனம் செலுத்துகிறவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி அவர்கள் தொடர்ந்து கவலைப்படுகிறார்கள். மேலும் அவர்கள் அனுபவிக்கும் அச்சங்கள் முடிவற்றவை. அவர்களால் நல்ல உறவுகளை வளர்க்க முடியாது, ஏனென்றால் அவர்கள் மற்றவர்களுடன் நல்ல நண்பர்களாக இருப்பதற்குப் பதிலாக மற்றவர்களைக் கவர முயற்சி செய்கிறார்கள்.

> பாதுகாப்பற்றவர்களுக்கு தேவனின் அன்பைப் பெறுவதே மருந்து.

பாதுகாப்பற்ற ஒரு நபருடன் நான் பழகும் போது அது எனக்கு மிகவும் வருத்தமளிக்கிறது. ஏனென்றால் அவர்கள் செய்யும் மற்றும் சிந்தித்து முடிவெடுக்கும் அனைத்தும் அவர்களின் பாதுகாப்பின்மையைப் பிரதிபளிக்கிறது. அவர்கள் போதாமையின் பயம் காரணமாக வாய்ப்புகளை நிராகரிக்கிறார்கள். மேலும் அவர்களின் பாதுகாப்பின்மை மற்றவர்கள் அவர்களை சார்ந்திருக்க முடியுமா என்று சந்தேகிக்க வைக்கிறது. பாதுகாப்பற்றவர்களுக்கு தேவனின் அன்பைப் பெறுவதே மருந்து. இது ஆத்துமாவை (உள்ளான வாழ்க்கை) குணப்படுத்தும் ஒரு தைலம் போன்றது, அதைச் செய்யக்கூடிய ஒரே விஷயம் இது தான் என்று நான் தனிப்பட்ட முறையில் நினைக்கிறேன். எல்லோரும் நேசிக்கப்பட வேண்டும் என்று

விரும்புகிறார்கள். ஆனால் எல்லா நேரங்களிலும் நம்மீது ஊற்றப்படும் தேவனின் அன்பை புறக்கணித்து விட்டு அன்பை நாம் தவறான இடங்களில் தேடுகிறோம். (ரோமர் 5:5)

தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் அடிக்கடி கேட்கலாம். ஆனால் நாம் உண்மையில் கேட்கிறோமா, அவருடைய அன்பின் அற்புதமான சக்தியை நாம் புரிந்துகொள்கிறோமா? நம் மனத்தால் ஒன்றைப் புரிந்துகொள்வதும், அதை நம் இதயத்தால் கேட்டு, உண்மையாக அதை நம்பி பெற்றுக்கொள்வதும் வேறு. கண்ணாடி முன் நின்று, என்னையே நான் பார்த்து, “ஜாய்ஸ், கடவுள் உன்னை நேசிக்கிறார்!” என்று சத்தமாகச் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது. நான் அந்த வார்த்தைகளைப் பற்றி யோசித்து, அந்த உண்மை என் வாழ்க்கையில் நிஜமாகும் வரை அடிக்கடி என்மீது அதை பேசினேன்.

நீங்கள் எதிர்பார்த்த விதத்தில் உங்கள் பிரார்த்தனைகளுக்குப் பதில் கிடைக்காத போது, அல்லது வலி, இழப்பு அல்லது சோகத்தை அனுபவிக்கும் போது, “தேவனே, நீங்கள் என்னை நேசிக்கவில்லையா?” என்று நீங்கள் எப்போதாவது கூறியிருக்கிறீர்களா? நான் கேட்டிருக்கிறேன், நீங்களும் கேட்டிருக்கலாம் என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் இப்போது அப்படிச் சொல்லமாட்டேன், ஏனென்றால் தேவனின் அன்பிலிருந்து எதுவும் நம்மைப் பிரிக்க முடியாது என்று அறிந்திருக்கிறேன்.

> நாம் மன்னிக்கப்பட்டு விட்டோம் என்பதை நினைக்க இயலாத அளவு நாம் பாவிகளாக இருப்பதைப் பற்றி மதம் நமக்கு நிறைய கற்றுக் கொடுத்துள்ளது.

நாம் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும்போது, நமக்கு நிறைய பயங்கள் இருக்கும். அவற்றில் பல நம்மைப் பற்றியவை. நம்முடன் நாம் வைத்திருக்கும் உறவு மிகவும் முக்கியமானது, மேலும் அந்த உறவை ஆரோக்கியமாக மாற்றுவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஏனென்றால் நாம் யார் என்பதை நாம் விரும்பவில்லை என்றால், நம்முடைய குறைபாடுகள் காரணமாக பெரும்பாலான நேரங்களில் குற்ற உணர்ச்சிக்குள்ளாவோம். அது நம்மை ஒருபோதும் உண்மையிலேயே வாழ்க்கையை அனுபவிக்க அனுமதிக்காது. நாம் நம்மை நேசிக்க வேண்டும் என்று சொல்லும் அளவிற்கு கூட நான் செல்வேன். நான் அதை வலியுறுத்தும் போது, பெரும்பாலான மக்கள் ஒரு சுவரை எழுப்பி, அது சரியாக இருக்க முடியாது, அது சுயநலமான

மற்றும் சுயத்தை சார்ந்த மனப்பான்மையை பிரதிபலிக்கிறது என்று உடனடியாக நினைக்கிறார்கள்.

நாம் மன்னிக்கப்பட்டு, புதிய சிருஷ்டியாக்கப்பட்டுவிட்டோம் என்பதை நினைக்க இயலாத அளவு நாம் பாவிகளாக இருப்பதைப் பற்றி மதம் நமக்கு நிறைய கற்றுக் கொடுத்துள்ளது.

நிச்சயமாக நாம் நமது பாவத்தை நினைத்து வருந்தி அதை மேற்கொள்ள முற்பட வேண்டும். ஆனால் நமது மோசமான தருணங்களில் கூட, தேவன் இன்னும் நம்மை நேசிக்கிறார். அவருடைய அன்பைப் பெற்றுக்கொள்வது என்பது சுயநலமானதாகவோ அல்லது சுயத்தை சார்ந்ததாகவோ இருப்பது அல்ல ஒரு சமநிலையான முறையில் நம்மை நேசிப்பதாகும்.

எனக்கு தன்னையே வெறுக்கும் ஒரு தோழி இருந்தாள், அவளுக்காக ஜெபிக்கும்படி எங்கள் தேவாலயத்தின் போதகரிடம் அவள் கேட்ட நேரம் எனக்கு நினைவிருக்கிறது. அவளுக்கு எதற்காக ஜெபம் தேவை என்று அவர் கேட்டபோது, "நான் என்னை வெறுக்கிறேன்" என்று பதிலளித்தாள். பாதிரியார் ஓரிரு அடிகள் பின்வாங்கி அவளைப் பார்த்து, "நீ யாரென்று நினைக்கிறாய்? உன்னை வெறுக்க உனக்கு உரிமை இல்லை, ஏனென்றால் இயேசு உன் மீது கொண்ட மிகுந்த அன்பினால் மிகவும் துன்பப்பட்டார். அவருக்கு நன்றி செலுத்துவதற்கான ஒரு வழி அவருடைய அன்பைப் பெற்று உன்னை நேசிப்பதாகும்."

நாம் தன்னலமற்றவர்களாக இருக்க வேண்டும். எப்போதும் மற்றவர்களுக்கு உதவ விரும்புகிறோம், ஆனால் நாம் அதைச் செய்யலாம், இன்னும் நம்மை தெய்வீக வழியில் நேசிக்கலாம். உண்மையில், நான் என்னை எவ்வளவு அதிகமாக மதிக்கிறேனோ, என்னுடன் சமாதானமாக இருக்கிறேனோ, அவ்வளவு அதிகமாக என்னை மறந்து தேவைப்படுபவர்களுக்கு உதவ விரும்புகிறேன். உங்களுடன் சமாதானம் செய்துகொள்ளவும், தேவன் உங்களைப் படைத்த தனித்துவமான நபரைப் பாராட்டவும் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்மை நாமே நேசிப்பதற்கும் தேவன் நம்மை நேசிப்பதால் நம்மை நாம் நேசிப்பதற்கும் வித்தியாசம் உள்ளது, ஏனென்றால் தேவன் நம்மைப் படைத்தார் மற்றும் நம்மை ஒரு பரிபூரண அன்புடன் நேசிக்கிறார். தன்னை நேசிப்பது என்பது தேவ அன்பைப் பெறுவதாகும். அவர் நம்மை மதிக்கிறார், நாம் நம்மை மதிக்க வேண்டும் என்று விரும்புகிறார். உங்கள் அன்பான வார்த்தைகளை எளிமையாக ஏற்றுக்கொண்டு நன்றி சொல்லும் திறன் இல்லாத ஒருவரை நீங்கள் எப்போதாவது பாராட்ட முயற்சித்திருக்கிறீர்களா?

நான் முயற்சித்திருக்கிறேன். அது முகத்தில் அறைந்தது போல் இருக்கும். அவர் தனது அன்பை நம்மீது ஊற்றும்போது நாம் அதற்கு தகுதியானவர்கள் என்று நினைக்காத படியால். நாம் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் அது தேவனை காயப்படுத்துகிறது என்று நான் நினைக்கிறேன்.

இயேசு நம்மை மீட்க வந்ததற்குக் காரணம், தேவனின் அன்பைப் பெறுவதற்கு நாம் ஒருபோதும் நல்லவர்களாக இருக்க முடியாது என்பதாலே. அவருடைய அன்பு பரிசுத்த ஆவியின் மூலமாக நம்மீது தாராளமாகப் பொழிந்திருக்கிறது என்று வேதம் கூறுகிறது (ரோமர் 5:5). தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களைப் பொழிகிறார் என்று மல்கியா தீர்க்கதரிசி கூறினார் (மல். 3:10). தேவன் கஞ்சத்தனமானவர் அல்ல நாம் அவரை நேசிக்கவும் அவருடைய நன்மையையும் அன்பையும் பெறுவதற்கு நம் இதயங்களைத் திறக்க வேண்டும் என்று மட்டுமே அவர் விரும்புகிறார்.

தேவன் உங்களை நேசிப்பதற்கு அல்லது உங்களை ஆசீர்வதிப்பதற்கு முன்பு நீங்கள் சிறப்பாக நடந்துகொள்ள வேண்டும் மற்றும் குறைவாக பாவம் செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் உண்மை என்னவென்றால், நீங்கள் தேவனின் அன்பை எவ்வளவு அதிகமாகப் பெறுகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் அவரை நேசிப்பீர்கள். பிறகு, அந்த அன்பினால், நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிய விரும்புவீர்கள். தேவன் நம்மை நேசிப்பதற்காக நாம் அவருக்குக் கீழ்ப்படிவதில்லை, ஆனால் நாம் முற்றிலும் தகுதியற்றவர்களாக இருந்தாலும் அவர் நம்மை மிகவும் அதிகமாக நேசிப்பதால் கீழ்படிகிறோம்.

நான் சில சமயங்களில் என் நண்பர்கள், என் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் இருக்கும் போது, ஏதோ ஒரு காரணத்திற்காக, ஒரு பரு போன்ற எளிமையான ஒன்று கூட அவர்கள் தங்களைப் பற்றி மிகவும் மோசமாக உணர வைப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் அப்படி உணர்ந்தபோது, அது என்னை மிகவும் புண்படுத்தியது. அவர்கள் அற்புதமானவர்கள், சிறப்பு வாய்ந்தவர்கள், மதிப்புமிக்கவர்கள், நேசிக்கப்படுபவர்கள் என்று அவர்களை நம்ப வைக்க முயற்சித்தேன். ஆனால் அவர்கள் தங்கள் தவறுகளில் மூழ்கி என்னை நம்ப மறுத்துவிட்டனர். அந்த அனுபவங்களை நான் தேவன் எப்படி உணருவார் என்பதோடு ஒப்பிடும்போது, அவருடைய பிள்ளைகளில் பலர் அவருடைய அன்பை நிராகரிப்பதால், நான் அவர்களுக்காக வருத்தப்படுகிறேன்.

தேவனின் அன்பைப் பெற்றுக்கொள்ளுங்கள், அது உங்கள் பாதுகாப்பின்மை அனைத்தையும் குணப்படுத்தட்டும். மேலும் நீங்கள்

பயப்பட வேண்டியிருந்தாலும், தைரியமாக வாழ்க்கையை எதிர்கொள்ள உங்களுக்குத் தேவையானதைச் செய்ய உங்களுக்கு தைரியத்தைத் தரட்டும்.

நீங்கள் உங்கள் மீது கோபமாக இருக்கிறீர்களா?

எப்பொழுதும் ஏதாவது ஒரு விஷயத்தில் கோபமாக இருக்கும் ஒரு பெண்ணை நான் அறிவேன். அவள் மற்றவர்களிடம் கோபமாக இருப்பதாகத் தோன்றினாலும், அவள் உண்மையில் தன் மீது கோபமாக இருந்தாள். அவளுடன் இருப்பது அசௌகரியமாக இருந்தது மற்றும் மக்களை பதற்றப்படுத்தியது. அவள் தன்னிடமிருந்து எதிர்பார்க்கும் விஷயங்களின் பட்டியலுடன் ஒரு பரிபூரணவாதியாக இருந்தாள், எந்த நேரத்திலும் அவள் தன் சொந்த எதிர்பார்ப்புகளின் அளவை எட்டவில்லை என்றால், அவள் கோபமடைந்தாள். அவள் செய்த எல்லாவற்றிலும் அவள் வெற்றி பெறும் வரை, செய்ய நினைத்த அனைத்தையும் அவள் செய்து முடிக்கும் வரை அவள் தன்னைப் பற்றி மோசமாக உணர்ந்தாள். சில அரிய சந்தர்ப்பங்களில் அவள் தன் பட்டியலில் இருந்தவற்றையெல்லாம் செய்து முடிப்பாளென்றால் நன்றாகவும் பெருமையாகவும் உணர்வாள். அவள் பெருமைக்கும் குற்ற உணர்ச்சிக்கும் இடையில் கஷ்டப்பட்டாள் - அவள் நன்றாகச் செய்தால் பெருமையடைவாள் மற்றும் செய்யாவிட்டால் குற்ற உணர்வடைவாள். இது உங்களுக்கும் பரிட்சியமாகத் தெரிகிறதா? தேவனின் அன்பையும் அங்கீகாரத்தையும் தங்களால் வாங்க முடியாது என்பதை அவர்கள் உணரும் வரை அவள் செய்ததைப் போலவே நிறைய பேர் தங்களைத் தாங்களே வருத்திக் கொள்கிறார்கள், ஏனென்றால் நாம் எவ்வளவு பரிபூரணமானவர்கள் என்று நினைத்தாலும், நமக்கு எப்போதும் ஏதாவது குறைவு இருக்கத்தான் செய்யும். நாம் பாவத்தில் இருந்தபோதே இயேசு நமக்காக மரித்தார், எனவே அவருடைய அன்பைப் பெற நாம் எதுவும் செய்யவில்லை என்பதைக் காணலாம் (ரோமர் 5:6-8).

> தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புக்கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்.
>
> எபேசியர் 2:4-5

தேவனின் அன்பு ஒரு பரிசு, அவர் நம்மை மிகவும் நேசிக்கிறார், அவர் தமது ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை நம் பாவங்களுக்கான

கிரயத்தை செலுத்தவும், நம் இடத்தில் துன்பப்படவும் அனுப்பினார் என்பதே அந்த அன்பின் சான்றாகும்.

தன்னை விரும்பாமலும், பாதுகாப்பற்றவளாகவும் இருப்பதையும் நான் புரிந்துகொள்கிறேன். ஏனென்றால். ஒரு காலத்தில் நான் அப்படித்தான் இருந்தேன். நான் ஒரு பாதுகாப்பற்ற நபராக வெளியே தோன்றவில்லை, ஆனால் என் மனதிலும் இருதயத்திலும் அவ்வாறாக நான் இருந்தேன். என் கணவர் தனது வாழ்க்கையில் எல்லாவற்றிலும் எப்போதும் எனக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் மற்றும் எப்போதும் என்னுடனே இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். இதன் விளைவாக, அவர் திணறிக்கொண்டிருந்தார் மற்றும் கையாளப்பட்டதாக உணர்ந்தார். என்னைச் சுற்றியுள்ள உலகத்திற்கு நான் எப்படி தோற்றமளித்தேனோ உண்மையில் நான் அப்படியாக இல்லை. மக்கள் என்னிடம் என்ன எதிர்பார்க்கிறார்களோ அதன் அடிப்படையில் என்னை என்னால் விரைவாக மாற்றிக் கொள்ள முடிந்தது.

டேவ் ஒரு முறை என்னிடம் கேட்டது எனக்கு நினைவிருக்கிறது, “நீ உன் அப்பா இருக்கும்போது ஏன் முற்றிலும் வேறுபட்ட நபராக மாறுகிறாய்?” நான் அப்படி இருந்தேன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவர் சொல்வது சரிதான். நான் என் தந்தையுடனிருக்கும் போது என் நடத்தையை மாற்றினேன். ஏனென்றால் நான் அவருடன் இருக்கும் போது பயந்தும் பாதுகாப்பற்றவளாக உணர்ந்தும் இருந்தேன். எனக்கு எதிராக அவர் செய்த பாவத்தைப் பற்றி நான் அவரை ஒருபோதும் எதிர்கொண்டதில்லை, மேலும் நான் அவருடனிருக்கும் போது நானாக இருக்கும் சுதந்திரத்தை பெற நான் அதைச் செய்ய வேண்டியிருந்தது. இறுதியில் நான் செய்தேன், ஆனால் நான் அதைச் செய்யத் தயாராக இருப்பதற்கு நீண்ட நேரம் எடுத்தது. நான் அதைச் செய்யும்போது கூட, அவரது எதிர்வினை என்னவாக இருக்கும் என்று நடுக்கமும் மிகுந்த பயமும் இருந்தது. நான் பயந்துதான் செய்தேன் என்று உறுதியாகச் சொல்ல முடியும். அவரது எதிர்வினை நேர்மறையானதாக இல்லாவிட்டாலும், அது ஒரு படி முன்னேற்றமாயிருந்து, மேலும் அவரைப் பற்றிய எனது பயத்தை வெறுமனே எதிர்கொண்டது அந்த பயத்தை பலவீனப்படுத்தியது. நான் மீண்டும் வேறொரு முறை துஷ்பிரயோகம் பற்றி அவரிடம் பேசினேன். இறுதியில் அவர் மனந்திரும்பி இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

கிறிஸ்துவில் பாதுகாப்பு

தேவன் நமக்கு அவரில் பாதுகாப்பை வழங்குகிறார். அந்த வாக்குத்தத்தத்திற்கு

இந்த வேத வாக்கியம் ஒரு சிறந்த உதாரணம்.

> பயங்கரமான குழியிலும், உளையான சேற்றிலுமிருந்து என்னை தூக்கி எடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தினார்.
>
> சங்கீதம் 40:2

தேவன் நம்மை விடுவிக்கிறவர், ஆனால் பிரச்சனையை, பிரச்சனை என்று ஒப்புக்கொள்ள மறுத்தாலோ அல்லது அதை பிறரைக் கட்டுப்படுத்த ஒரு ஆயுதமாக பயன்படுத்தினாலோ, அதில் இருந்து நம்மை விடுவிக்க முடியாது. "என்னால் எதுவும் செய்ய இயலாது, நான் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறேன்" என்று பலர் நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காததற்கு சாக்காகப் பயன்படுத்துவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நாம் சாக்கு போக்கு சொல்லும் எதிலிருந்தும் ஒருபோதும் விடுபடவே மாட்டோம்.

> நாம் சாக்கு போக்கு சொல்லும் எதிலிருந்தும் நாம் ஒருபோதும் விடுபடவே மாட்டோம்.

நாம் இயேசுவை நமது இரட்சகராகப் ஏற்றுக்கொள்ளும் போது, நாம் மரிக்கும் போது பரலோகத்திற்குச் செல்வது மட்டுமல்ல, நாம் பூமியில் இருக்கும்போதும் சுதந்திரமாகவும் வெற்றியுடனும் வாழ முடியும். கடந்த காலத்திலிருந்து நம்மை விடுவித்து, நம்மைக் குணப்படுத்த தேவனை அனுமதிப்பது அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்கான ஒரு வழியாகும். அவருடைய கிருபையின் வெற்றிக் கோப்பைகளாக மாறுவோம்! அவர், இருதயம் உடைந்தவர்களைக் குணப்படுத்துவதிலும், பயப்படுபவர்களை தைரியமுள்ளவர்களாக மாற்றுவதிலும் வல்லவர்.

அப்போஸ்தலன் பேதுரு மிகவும் பாதுகாப்பற்றவராகவும் பயந்தவராகவும் இருந்தார், அச்சுறுத்தப்பட்டபோது, அவர் கிறிஸ்துவை அறிந்திருக்கவில்லை என்று மூன்று முறை மறுதலித்தார் (லூக்கா 22:54-62). ஆனால் பின்னர், பரிசுத்த ஆவியானவர் அவர் மீது வந்த பிறகு, அவர் எருசலேமின் தெருக்களில் தைரியமாக பிரசங்கித்தார். மேலும் அந்த நாளில் சுமார் மூவாயிரம் ஆத்துமாக்கள் தேவாலயத்தில் சேர்க்கப்பட்டனர் (அப் 2:41). என்ன ஒரு அற்புதமான மாற்றம்! நம்மைச் சார்ந்து இருந்தால் நாம் எவ்வளவு கோழையாக இருக்க முடியும் என்பதையும், இயேசுவையும் அவருடைய கிருபையையும் சார்ந்திருந்தால் எவ்வளவு தைரியமாக இருக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது.

பயம் மற்றும் பாதுகாப்பின்மைக்கு எதிராக நீங்கள் ஆக்ரோஷமாக இருக்க முடிவு செய்து, தேவன் விரும்புவதைத் தவிர வேறு எதையும் செய்ய மறுக்கும் வரை, உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் பயத்துடனும், அச்சத்துடனும் இருப்பீர்கள். நீங்கள் கர்த்தரிலும் அவருடைய வல்லமையின் வல்லமையிலும் பலமுள்ளவர்கள் (எபே. 6:10). பலவீனமாகவும் பயமுள்ளவர்களாகவும், பாதுகாப்பற்றவராகவும், அச்சம் நிறைந்தவர்களகவும் அல்ல உங்களை வலிமையானவராகப் பார்க்கத் தொடங்குங்கள். தேவனின் பார்வையில் நிபந்தனையின்றி நேசிக்கப்படும், மதிக்கத்தக்க மற்றும் மதிப்புமிக்க ஒருவராக உங்களைப் பாருங்கள். உங்களைப் பற்றி நீங்கள் என்ன நம்புகிறீர்கள் என்பது மிகவும் முக்கியமானது. தேவன் நமக்காக எவ்வளவு செய்திருந்தாலும், நாம் அதை நம்பவில்லை என்றால், அதை ஒருபோதும் நம்முடையதாக்கிக் கொள்ள மாட்டோம். விசுவாசம் மற்றும் அவருடைய வார்த்தையை நம்புவதன் மூலம் நாம் தேவனிடமிருந்து பெறுகிறோம், மேலும் பயம் மற்றும் பாதுகாப்பின்மையை பிசாசிடமிருந்து பெறுகிறோம்.

நீங்கள் பாதுகாப்பற்றவர்களாக இருப்பது தேவனின் சித்தம் அல்ல. பாதுகாப்பின்மை என்பது உங்கள் ஆளுமையின் ஒரு பகுதி மட்டுமல்ல, நீங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டிய ஒன்றும் அல்ல.

நீங்கள் பாதுகாப்பற்றவர்களாக இருப்பது தேவனின் விருப்பம் அல்ல. பாதுகாப்பின்மை என்பது உங்கள் ஆளுமையின் ஒரு பகுதி மட்டுமல்ல, நீங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டிய ஒன்றும் அல்ல. தேவன் உங்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள், ஏனென்றால் அது பாதுகாப்பற்றவர்களுக்கான சிகிச்சையாகும், மேலும் அது உங்களை தைரியமாக்கும்.

தேவனின் அன்பு நமது பரிபூரணம் என்று அழைக்கப்படும் நிலையின் அடிப்படையில் வெவ்வேறு அளவுகளில் கொடுக்கப்படுவதில்லை. தேவன் அன்பாயிருக்கிறார். அவர் நம்மை நேசிக்கிறார், ஏனென்றால் அவர் அன்புள்ளவர் நேசிக்க விரும்புகிறார். நீங்கள் என்ன செய்தாலும், அது தேவன் உங்களை நேசிப்பதைத் தடுக்காது. அவருடைய அன்பைப் பெற்றுக்கொள்வதிலிருந்து அது உங்களைத் தடுக்கலாம், ஆனால் அவருடைய அன்பு எதுவாக இருந்தாலும் எப்பொழுதும் குணமாக்கவும், விடுவிக்கவும் உங்களுக்காய் இருக்கிறது.

தைரியமானவன் பயப்படாதவன் அல்ல, அந்த பயத்தை வெல்பவனே.

- நெல்சன் மண்டேலா

பயத்தின் மூலம் பாடுவது

பயம் விசித்திரமான நேரங்களில், விசித்திரமான வழிகளில் தாக்குகிறது. உதாரணமாக, இருபது ஆண்டுகளுக்கு முன்பு (எனக்கு பதினெட்டு வயதாக இருந்தபோது) யாராவது என்னிடம் ஒரு நாள் பாட பயப்படுவேன் என்று சொல்லிருந்தால், நான் அதை நம்பியிருக்க மாட்டேன்!

அப்போது, நான் பிறந்து வளர்ந்த இந்தோனேசியாவில் வாழ்ந்தேன். நான் பாடகர் குழுவில் பாடி வளர்ந்தேன், அதன் ஒவ்வொரு நிமிடத்தையும் நான் விரும்பினேன். நான் தொழில்ரீதியாக பாடுவதற்கும் சென்றேன், பிரபலமான இசைக் குழுக்களுடன் பணிபுரிந்தேன் மற்றும் தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சிகளை நடத்தினேன். பாடுவது என் இரத்தத்தில் இருந்தது.

என்னுடைய இருபதுகளின் ஆரம்பத்தில், நான் அமெரிக்காவுக்குச் சென்றேன், அங்கு என் கணவரைச் சந்தித்தேன். எங்களுக்கு அழகான ஒரு மகள் பிறந்தாள், பல ஆண்டுகளாக நான் மகிழ்ச்சியுடன் பின்னனியில் பாடினேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, கடவுள் என் இதயத்தில் பாடி ஆராதனையை நடத்துவது பற்றி பேச ஆரம்பித்தார். நான் மிகவும் தயங்கினேன். நான் தேவனிடம், “நான் இதைச் செய்ய வேண்டும் என்று நீர் விரும்பினால், போதகர் தானே என்னிடம் கேட்க வேண்டும்.”என்று சொன்னேன்.

நிச்சயமாக, அடுத்து என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு நாள் ஆராதனைக்குப் பிறகு, என் போதகர் என்னை அணுகி, “நீங்கள் பாடக் கூடியவர் என்று கேள்விப்பட்டேன். உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதா?” என்றார்.

நான் அவரிடம் ஆம் என்று சொன்னேன், ஆனால் நான் மிகவும் பயந்தேன். நான் பல வருடங்களாகப் பாடாமல் இருந்தேன், மீண்டும் பாடுவதைப் பற்றி நான் பயந்தேன். மேலும், ஒரு பாப் பாடலைப் பாடுவது ஒரு விஷயம், ஆனால் முன்னணி வழிபாடு முற்றிலும் வேறுபட்டது.

அடுத்த இரண்டு வருடங்கள், நான் என் தேவாலயத்தில் என்னால் இயன்ற அளவு ஆராதனையை நடத்தினேன், அது என் வாழ்க்கையை முற்றிலும் மாற்றியது. புதிதாய் தொடங்குபவர்களுக்கு, இது தேவனுடனான ஆழமான, நிறைவான உறவின் தொடக்கமாக இருந்தது.

ஆனால் நான் தோல்வியடைவேனா அல்லது வெற்றி பெறுவேனா என்று எனக்குத் தெரிந்திராதபோது மேடையில் எழுந்து நின்ற அந்த

தைரியமான முடிவு மற்ற துறைகளிலும் எனக்கு ஒரு புதிய நம்பிக்கையை அளித்தது. சிறிது காலத்திற்குப் பிறகு, நான் ஒரு புதிய, சவாலான பாத்திரத்தை ஏற்க, வேலையில் ஒரு தைரியமான முடிவை எடுத்தேன். அந்த முடிவு இன்னும் பெரிய வாய்ப்புகளுக்கு வழிவகுத்தது.

நான் முன்பு இருந்த பெண் இல்லை என்று நேர்மையாக சொல்ல முடியும். நான் தைரியமாகவும், அதிக நம்பிக்கையுடனும், புதிய விஷயங்களை முயற்சிக்கவும் மிகவும் பொருத்தமானவள். இவையெல்லம் நான் பயந்துக்கொண்டே பாட முடிவு செய்தபோது தொடங்கியது.

- மெலனி

அத்தியாயம் 8

தைரியமாக வாழ்தல்

ஒருவனும் பின்தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப்போகிறார்கள்; நீதிமான்களோ சிங்கத்தைப் போல தைரியமாயிருக்கிறார்கள்.

நீதிமொழிகள் 28:1

பரலோகத்தில் சக்தி பற்றாக்குறை இல்லை, தேவன் மந்தநிலையில் இல்லை. நமக்குத் தேவையான எதற்கும் அவர் போதுமானதை விட அதிகமாக இருக்கிறார். யோபு, "தேவன் எவ்வளவு பெரியவர்அநம் அறிவிற்கு அப்பாற்பட்டவர்!" என்றான்." (யோபு 36:26).

நாம் இதுவரை செய்திராத ஒன்றைச் செய்வதற்கான ஒரு சவாலையோ அல்லது ஒரு வாய்ப்பையோ எதிர்கொள்ளும்போது, அதைச் செய்ய முடியுமா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்கிறோம். ஆனால் அது முற்றிலும் தவறான கேள்வியாகும். நாம் கேட்க வேண்டியது என்னவென்றால், "தேவனே, உம்மால் முடியுமா?" தேவன் நம்மைக் காரியங்களைச் செய்யும்படி கேட்கவில்லை; நம் மூலம் காரியங்களைச் செய்ய அனுமதிக்கும்படி அவர் கேட்கிறார்.

தேவன் உங்களிடம் கேட்கும் எதையும் நீங்கள் செய்ய முடியும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். உங்கள் கண்களை அவர் மீது வைத்து, அவர் போதுமானவர் என்பதை உணர்ந்தால், அது எவ்வளவு கடினமாக இருந்தாலும் அல்லது உங்களுக்கு எவ்வளவு அனுபவம் இல்லாவிட்டாலும் உங்களால் செய்ய இயலும். பயத்தின் மூலம் உங்களுக்கான ஆசீர்வாதங்களை பிசாசு திருட விடாதீர்கள். மனிதர்களால் முடியாதது தேவனால் கூடும் (லூக்கா 18:27).

> தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணாவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.
>
> 1 கொரிந்தியர் 2:9

நாம் அவரை நேசித்து, அவரை விசுவாசித்தால், தேவன் நமக்காகவும், அவர் மூலமாகவும் எவ்வளவு செய்ய விரும்புகிறார் என்பதை நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது என்று இந்த வசனம் சொல்கிறது. நம்பிக்கை தைரியத்திற்கு வழிவகுக்கிறது, தைரியம் வெற்றிக்கு வழிவகுக்கிறது. தைரியமே பயத்திற்கான பதில். பயம் வரும், ஆனால் தைரியம் அதை விரட்டும். தண்ணீரில் நடக்க பேதுரு படகில் இருந்து இறங்க வேண்டியிருந்தது (மத். 14:29). யோசுவாவும் ஆசாரியர்களும் தண்ணீர் பிரிவதற்கு முன்பு யோர்தான் நதியிலே தங்கள் கால்களை வைக்க வேண்டியிருந்தது (யோசு. 3:5-17). நீங்களும் நானும் அடிக்கடி பயப்படும்போது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். நாம் எடுக்கும் ஒவ்வொரு துணிச்சலான அடியிலும், நாம் நமது இலக்கை அடைய நெருங்கி வருகிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவில் உள்ள விசுவாசிகள், அவர்களிமிருந்த தேவனின் வல்லமையின் மகத்துவத்தை அவர்கள் புரிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனக்கண்களை தேவன் திறக்கும்படி ஜெபித்தார், (எபே. 1:18-19). நாம் அனைவரும் அதை செய்ய வேண்டும். விசுவாசிகளுக்கு சவால்களோ மற்றும் எதிர்ப்புகளோ இருக்க கூடாதென்று பவுல் ஜெபிக்கவில்லை; கிறிஸ்துவின் மூலம் தங்களுக்குக் கிடைக்கும் வல்லமையை அவர்கள் அறிந்து புரிந்து கொள்ள வேண்டும் என்று ஜெபித்தார். ஏழையாக வாழ்ந்த ஒருவரைப் பற்றிய கதைகளை நாம் அனைவரும் கேள்விப்பட்டிருக்கிறோம், ஆனால் அவர் இறந்தபோது, அவரது மெத்தைக்குள்ளே ஒரு மில்லியன் டாலர் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்த கோடீஸ்வரனைப் போல் நாமும் தேவனுடைய எல்லா வளங்களும் நமக்கு இருந்தாலும், நம்மிடம் இருப்பது மிகக் குறைவு என்று ஒரு ஏழையைப் போல நாம் இல்லை என்பதை உறுதி செய்வோமாக. எதையும் செய்யாமலிருக்க மறுத்துவிடுங்கள், ஏனென்றால் எதையும் செய்ய சக்தி இருக்கிறது என்று உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

> எதையும் செய்யாமலிருக்க மறுத்துவிடுங்கள், ஏனென்றால் எதையும் செய்ய சக்தி இருக்கிறது!

நம்மில் செயல்படும் அவருடைய வல்லமையின் மூலம் நாம் கேட்கவோ,

சிந்திக்கவோ அல்லது கற்பனை செய்யவோ முடியாததை விட அதிகமாக தேவன் செய்ய வல்லவர் (எபே. 3:20). தேவன் நமக்காகச் செய்வதில்லை. நம்மில் கிரியை செய்யும் தம்முடைய வல்லமையின் மூலம் அதைச் செய்கிறார் என்று இந்த வேதம் கூறுகிறது.

நமது மனித பலம் அல்ல, தேவனின் வல்லமையே கிரியை செய்கிறது என்பதை நாம் பார்த்து புரிந்து கொள்ளும் வரை, நம்மால் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறோமோ அதை மட்டுமே செய்ய முயன்று நின்றுவிடுவோம். ஆனால் தேவன் நம் வாழ்க்கையில் துணையாக இருந்தால், எல்லாம் சாத்தியமாகும். நம்மால் பெரிய காரியங்களைச் செய்வது மட்டுமல்ல, கடினமான காரியங்களையும் செய்ய முடியும்.

இரண்டு செட் இரட்டைக் குழந்தைகள் கொண்ட ஒரு இளம் ஜோடியை நான் அறிவேன், மூத்த இரண்டு பையன்களுக்கு ஆடிசம் என்ற குறைபாடு உள்ளது.. அவர்கள் என்ன செய்கிறார்களோ அதைப் பார்த்து நான் தொடர்ந்து ஆச்சரியப்படுகிறேன். கிட்டத்தட்ட நிலையான கவனிப்பு தேவைப்படும் சிறப்புத் தேவைகளைக் கொண்ட குழந்தையைப் பெற்ற மற்றொரு அழகான ஜோடியை நான் அறிவேன், மீண்டும் அவர்களின் திறனையும் கண்டு வியக்கிறேன். மிகவும் கடினமான காரியங்களினூடாக சென்றுக் கொண்டிருக்கும் நபர்களைப் பார்த்து, “நீங்கள் அதை எப்படிச் செய்ய முடியும் என்று எனக்குத் தெரியவில்லை” என்று கூறுகிறோம் அல்லது நினைக்கிறோம். அவர்கள் அதைச் செய்வது மட்டுமல்லாமல், முகத்தில் புன்னகையுடன் செய்கிறார்கள். அவர்கள் குறை கூற மாட்டார்கள், அவர்களின் வாழ்க்கை மிகவும் பிஸியாக இருந்தாலும், மற்றவர்களுக்கு உதவ அவர்கள் நேரத்தைக் கண்டுபிடிப்பார்கள்.

பல உடல் பிரச்சனைகளுக்கு ஆளான ஒரு கடுமையான பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பெண் வழங்கிய செய்தியை நான் சமீபத்தில் கேட்டேன். அவளுடைய வாழ்க்கை மிகவும் கடினமாக இருந்தது, ஆனால் அது நல்ல வாழ்க்கை என்று அவள் வலியுறுத்தினாள்.

அதை அவர்கள் எப்படி செய்கிறார்கள்?

இத்தகைய கடினமான சூழ்நிலைகளை மக்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர்? சில நேரங்களில் நான் கேலிக்குரியதாக இருக்கும் சிறிய விஷயத்தைப் பற்றி புகார் செய்து கொண்டிருப்பேன், ஆனால் மற்ற நேரங்களில் நான் மிகவும் கடினமான சூழ்நிலைகளினூடாக சென்றிருக்கிறேன், எனக்கு நெருக்கமானவர்களைத் தவிர வேறு யாருக்கும் அதைப் பற்றி எதுவும் தெரியாது.

சிலர் என்ன செய்கிறார்கள் என்பதற்கான பதில் இதுதான்: தேவனுடைய கிருபையால் (வல்லமையால்) தான். கிருபை என்பது ஆற்றல், திறன் மற்றும் தெய்வீக தயவு அல்லது நாம் தகுதியற்றவர்களாக இருக்கும்போது தேவன் நமக்காக ஏதாவது செய்கிறார், நமக்கு உதவுகிறார். கிருபை என்பது அபிஷேகம், தேவனின் தயவு மற்றும் நமது பலவீனங்களையும் இயலாமைகளையும் சந்திக்க பரிசுத்த ஆவியின் வல்லமையாகும். தேவன் நமக்கு கிருபையையும் அதிக கிருபையையும் தருகிறார் என்று அப்போஸ்தலன் யாக்கோபு கூறினார் (யாக்கோபு 4:6). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவரின் கிருபை ஒருபோதும் தீர்ந்து விடுகிறதில்லை. ஆனால் சில நேரங்களில் நாம் நமக்குக் கிடைக்கும் கிருபையைப் பெற்றுக்கொள்வதை நிறுத்திக்கொள்கிறோம். நமக்குத் தேவையான எல்லா கிருபையையும் நாம் பெற முடியும், அவர் இன்னும் போதுமானதை விட அதிகமான கிருபையைக் கொண்டிருப்பார். தேவன் உங்களுக்கு உதவ விரும்புகிறார். ஏன் அவரை செய்ய விடக்கூடாது?

நாம் பயத்தினால் அல்ல, விசுவாசத்தின் மூலம் கிருபையைப் பெறுகிறோம். தேவனுடைய வல்லமையைப் பெற்றுக் கொள்ளும் வழி விசுவாசமே. கிருபையினால் தான் நாம் இரட்சிக்கப்படுகிறோம் (எபே. 2:8), நாம் எப்படி இரட்சிக்கப்படுகிறோமோ, அப்படியே நம்முடைய அன்றாட வாழ்க்கையை வாழ வேண்டும். விசுவாசம் தேவனுடைய ஆசீர்வாதத்தை விலை கொடுத்து வாங்காது. விசுவாசமானது, இயேசு எதற்காக விலைகிரயம் செலுத்தி வாங்கி நமக்கு கிருபையாக கொடுக்கிறாரோ அதை பெற்றுக்கொள்ளும் கரமாகும்.

தேவனுடைய வல்லமையைப் பெற்றுக் கொள்ளும் வழி விசுவாசமே.

இதைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவ, ஒரு விளக்கைப் பற்றி சிந்தியுங்கள். விளக்கு வேலை செய்ய தேவையான சக்தி சுவரிலுள்ள மின்சார சாக்கெட்டில் உள்ளது. விளக்கிற்கு தன்னளவில் சக்தி இல்லை; அது ப்ளக்-இன் செய்யப்பட்டால் மட்டுமே வேலை செய்யும். அதைச் செருகுவதற்கு முன் அதை இயக்க முயற்சித்தால், மின் பற்றாக்குறை இருப்பதாக அர்த்தமில்லை. விளக்கு இணைக்கப்படவில்லை என்று அர்த்தம். விளக்கு நமக்குத் தேவையான அனைத்து ஒளியையும் வழங்க முடியும், ஆனால் அது மின்சாரம் கிடைக்கும் ப்ளகில் செருகப்பட்டு இயக்கப்பட வேண்டும்.

நீங்கள் துண்டிக்கப்பட்டுள்ளீர்களா?

கொலோசெயர் 1:4-ல் உள்ள விசுவாசம் என்ற வார்த்தையின் விரிவாக்கம், “உங்கள் முழு மனித ஆளுமையும் [தேவன்] மீது முழுமையான நம்பிக்கை மற்றும் அவரது வல்லமை, ஞானம் மற்றும் நற்குணம் ஆகியவற்றில் நம்பிக்கை வைப்பது”. இந்த விளக்கத்தை நான் விரும்புகிறேன். தேவன் எதையும் செய்ய வல்லவர் என்றும், அதைச் செய்யத் தெரிந்த ஞானமுள்ளவர் என்றும், தகுதியற்றவர்களுக்காகவும் அதைச் செய்ய விரும்பும் அளவுக்கு நல்லவர் என்றும் அது எனக்குச் சொல்கிறது. நமது பங்கு என்ன? நாம் தேவனை சார்ந்து, அவரை முழுமையாகச் சார்ந்து, நம்மைத் தாழ்த்துகிறோம், கேட்கிறோம், இயேசுவைத் தவிர நம்மால் எதுவும் செய்ய முடியாது என்பதை அறிகிறோம் (யோவான் 15:5). நாம் நம்மில் ஒன்றுமில்லை, ஆயினும் நாம் கிறிஸ்துவுக்குள் எல்லாமுமாக இருக்கிறோம்.

கிறிஸ்துவில் நீங்கள் யார் என்பதை நீங்கள் உண்மையாகப் பார்த்து, அவர் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் வல்லமையை உணர்ந்து கொண்டால், உங்கள் வாழ்க்கையையும் முடிவுகளையும் பயம் ஆளுவதை நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள். தேவனுடன் உங்கள் நாளைத் தொடங்கவும், ஒவ்வொரு காலையிலும் தேவன் இல்லாமல் நீங்கள் ஒன்றுமில்லை என்பதையும், அந்த நாளில் செய்ய வேண்டியதை உங்கள் சொந்த பலத்தில் செய்ய முயற்சிப்பது முட்டாள்தனம் என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று நான் உங்களை ஊக்குவிக்கிறேன். ஒருவேளை கஷ்டப்பட்டு செய்யலாம் ஆனால் அதை அனுபவித்து செய்ய மாட்டீர்கள், மேலும் அந்த நாள் முடிவில் நீங்கள் சோர்வடைந்திருப்பீர்கள்.

தேவனுக்கு ஒரு சிறந்த திட்டம் உள்ளது. அவர்மீது விசுவாசம் வைப்பதன் மூலம் அவருடைய இளைப்பாறுதலுக்குள் நுழைய அவர் நம்மை அழைக்கிறார் (மத். 11:28). அவர் அளிக்கும் இளைப்பாறுதல் வகை வேலையிலிருந்து ஓய்வு எடுப்பது அல்ல; நாம் வேலை செய்யும் போது ஓய்ந்திருப்பதாகும்.

அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தின் ஒரு கட்டத்தில், அவர் எல்லாரையும் விட கடினமாக உழைத்ததாகவும், ஆனால் அவர் அந்த வேலையைச் செய்வதில்லை என்றும் கூறினார். தேவனுடைய கிருபை அவனுக்குள்ளும் அவன் மூலமும் வேலைசெய்துகொண்டிருந்தது. வெளிப்படையாக, பவுல் முடிவுகளை எடுத்தார், நடவடிக்கை எடுத்தார், பயம் அவரைத் தடுக்க அனுமதிக்கவில்லை, ஆனால் தேவனுடைய கிருபையின்றி அவரால் எதுவும் செய்ய முடியாது என்பதையும் அவர் அறிந்திருந்தார். பவுல்

மின்சாரத்தோடு இணைக்கப்பட்டிருந்தான். அவருக்கு இருந்த அதே வாய்ப்பு உங்களுக்கும் எனக்கும் உள்ளது. நாமும் கூட தேவனுடைய வல்லமையோடு நம்மை இணைத்துக் கொள்வதிலும் உறுதியாக இருக்க முடியும்.

குறுகிய-சுற்று விசுவாசிகள்

சிலர் தேவனுடைய வல்லமையையும் கிருபையையும் கேட்கிறார்கள், பின்னர் அதை இழக்கிறார்கள் அல்லது தடுக்கிறார்கள். அவ்வாறான குறுகிய சுற்று மின்சக்திக்கு என்ன காரணம்? இதைப் பற்றி யோசித்துப் பாருங்கள்: வயரில் ஷார்ட் சர்க்யூட் ஏற்பட்டால், வயரிங் பிரச்சனையால், உத்தேசிக்கப்பட்ட உபகரணங்களுக்குள் செல்ல வேண்டிய மின்சாரம் வேறு இடத்திற்குத் திருப்பி விடப்படுகிறது என்று அர்த்தம்.

ஃப்யூஸ் உருகுவது அல்லது சர்க்யூட் பிரேக்கர் ட்ரிப்பிங் செய்வது போன்ற விஷயங்களிலும் இதைப் பற்றி நாம் சிந்திக்கலாம். சில விசுவாசிகளுக்கு இது நடக்கும் என்று நினைக்கிறேன். ஏன்? வீட்டில் உள்ள மின்சாரத்தை ஒருங்கிணைந்து வழங்கும் சாதனத்தில் மின்சாரத்தை இழந்தால், ஃபூஸ் உருகியிருக்கலாம் அல்லது ட்ரிப் ஆகியிருந்திருக்கலாம். மேலும் மின்சாரம் மீண்டும் பாயும் முன் ஃபூஸ் மாற்றப்பட வேண்டும் அல்லது பிரேக்கரை மீட்டமைக்க வேண்டும். நமது அன்றாட வாழ்வில், மின் ஓட்டம் நின்று விட்டால், அதன் ஓட்டத்திற்கு ஏதாவது தடையாக இருப்பதால், நாம் மாற்றத்தை செய்ய வேண்டியிருக்கும். தேவனுடைய வல்லமையை நம் வாழ்வில் தடை செய்யும் பல விஷயங்கள் இருக்கிறது. பின்வரும் மூன்று எடுத்துக்காட்டுகளை விட நிறைய காரியங்கள் உள்ளன, ஆனால் இவற்றின் மூலம் நீங்கள் சொல்ல வேண்டிய கருத்தை புரிந்துக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

1. புகார்

சில கடினமான பணிகளை நிறைவேற்ற மக்கள் வல்லமையை அல்லது கிருபையைக் கேட்கலாம். அவர்கள் அதைப் பெறுகிறார்கள், விஷயங்கள் நன்றாகச் செல்கின்றன, ஆனால் அவர்கள் அந்த பணியை முடிக்க என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி புகார் செய்யத் தொடங்குகிறார்கள். கிருபை என்பது தேவனின் நற்குணத்தைக் காட்டவும், அதைப் பெறுபவர்களின் இதயங்களில் நன்றியைத் தூண்ட வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. அது நடக்காதபோது, நாம் தேவனின் வல்லமையை சுருக்கிவிடலாம். நீங்கள் அந்த வல்லமை பாய்வதைத் தொடர விரும்பினால்,

நீங்கள் நன்றியுடன் இருக்க வேண்டும். “நன்றியுள்ளவர்களாக இருங்கள் மற்றும் அவரிடம் அவ்வாறு சொல்லுங்கள்” (சங்கீதம் 100:4 விரிவாக்க வேதாகமம்). நன்றியுள்ள வாழ்க்கை ஒரு வல்லமை மிகுந்த வாழ்க்கையாகும்.

கஷ்டமாக இருந்தாலும் அவளுடைய நல்ல வாழ்க்கையைப் பற்றிய செய்தியைப் பிரசங்கித்த பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் நான் அடையாளம் கண்டுகொண்டது இந்த நன்றி மனப்பான்மையே. அவளுடைய வாழ்க்கை கடினமாக இருந்தாலும், அவளால் செய்ய முடியாத பல விஷயங்கள் இருந்தாலும், அவளால் செய்யக்கூடிய ஒவ்வொரு காரியத்திற்கும் அவள் நன்றியுள்ளவளாக இருக்கிறாள். அவளுக்கு முணுமுணுக்கும் மனப்பான்மை இல்லை, ஆனால் நன்றியுள்ளவளாக இருக்கிறாள். அதுவே அவள் வாழ்வில் வல்லமையைப் பாயச் செய்கிறது. நன்றியுடன் இருப்பது நாம் செய்யக்கூடிய மிக வல்லமை வாய்ந்த விஷயங்களில் ஒன்றாகும், மேலும் அதைச் செய்ய மறந்துவிடுவது மிகவும் எளிதானது.

பவுல் விசுவாசிகள் காரியங்கள்-ஆவிக்குரிய ரீதியாக வளர்வது போன்ற விஷயங்களைக் கூட தங்கள் சொந்த பலத்தில் செய்ய முயற்சிக்காமல், தேவன் அவர்களுக்கு தொடர்ந்து உதவ அனுமதிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். முணுமுணுக்காமல், குறைகாணாமல், புகார் செய்யாமல் எல்லாவற்றையும் செய்யும்படி அவர்களை ஊக்குவிக்கிறார் (பிலி. 2:12-14).

பழைய ஏற்பாட்டு புத்தகமான தானியேல் புத்தகமானது, தானியேல் என்ற இளைஞனின் கதையைச் சொல்கிறது, அவர் அதிக வல்லமையைக் கொண்டிருந்தார். அவன் ஜீவனை இழக்க நேரிட்டபோதிலும் சமரசம் செய்து கொள்ளாத ஆற்றல் அவனுக்கு இருந்தது (தானி. 1:8; 6:11-12), மேலும் தேவன் அவனைப் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கையினிமித்தம் தன்னை சிங்கங்களின் குகைக்குள் தள்ளுவதற்கு ஒப்புக்கொள்ளும் அளவிற்கு அவருக்கு வல்லமை இருந்தது. (தானி. 6:16-23) ஆனால் தானியேல் ஒரு நாளைக்கு மூன்று முறை தனது ஜன்னல்களைத் திறந்து வைத்து, குனிந்து, சத்தமாக தேவனுக்கு நன்றி செலுத்துவதை வழக்கமாக கொண்டிருந்தார் (தானி. 6:10). சிங்கங்களின் கெபியில் போடப்படுவார், சிங்கங்கள் தின்றுவிடும் என்று அவர் அச்சுறுத்தப்பட்டபோதும், அவர் எப்போதும் செய்ததைப் போலவே ஒரு நாளைக்கு மூன்று முறை பிரார்த்தனை செய்தார், தேவனுக்கு நன்றி செலுத்தினார். அவர் பயந்து ஒளிந்துக் கொள்ளவில்லை, அல்லது அச்சுறுத்தல்களால் கைவிடவில்லை. அவர் விசுவாசமுள்ள மனிதராகவும், நன்றியுணர்வு கொண்டவராகவும் இருந்தார், அந்த ஆவிக்குரிய இயக்கவியல் அவருக்கு வல்லமையை அளித்தது.

2. சுய பரிதாப உணர்வு

கடினமான காரியங்களைச் செய்யும்படி கேட்கப்படும்போது நமக்காக நாம் வருத்தப்பட்டுக்கொள்வது தேவனுடைய வல்லமையைப் பெறுவதற்கான நமது திறனைக் குறைக்கும். நாம் ஒன்று வல்லமை வாய்ந்தவர்களாகவோ அல்லது பரிதாபகரமானவர்களாகவோ தான் இருக்க முடியும். ஆனால் ஒரே நேரத்தில் இருவருமாக இருக்க முடியாது. சுய பரிதாபம் என்பது விக்கிரகாராதனையாகும். ஏனென்றால் அது நம்மை உள்நோக்கித் திருப்பி, நாம் எப்படி உணர்கிறோம் மற்றும் வாழ்க்கை நமக்கு எவ்வளவு நியாயமற்றது என்று நினைக்கிறோம் என்பதில் கவனம் செலுத்த செய்கிறது.

> நீங்கள் துன்பத்தில் இருக்கும்போது ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்காக நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியுமா?

ஒருவரின் வாழ்க்கைத் தரம், பெரிய அளவில், அந்த நபரின் கண்ணோட்டத்தைப் பொறுத்தே இருக்கிறது. உதாரணமாக, இரண்டு பேருக்கு எதிர்பாராத வகையில் அதிக விலைகிரயம் செலுத்தி வண்டியைப் பழுது பார்க்கும் நிலை ஏற்படலாம். ஒருவர் அதற்காக தன் நிலை பற்றி வருத்தப்படலாம், புகார் செய்யலாம், கோபப்படலாம், மற்றவரோ அதைச் சரிசெய்வதற்கு அவருக்கு போதிய நிதி இருக்கிறதற்காக தேவனுக்கு நன்றி செலுத்தலாம். இருவருக்கும் ஒரே மாதிரியான பிரச்சனை இருந்தாலும், பிரச்சனை அவர்களின் வாழ்க்கையின் தரத்தை தீர்மானிக்கவில்லை, அவர்களின் கண்ணோட்டமே அதை தீர்மானிக்கிறது.

உங்கள் மனப்பான்மை உங்களுடையது, நீங்கள் எதைப் பற்றியும் மோசமான அணுகுமுறையைக் கொண்டிருக்க விரும்பவில்லை என்றால் யாரும் உங்களை கட்டாயப்படுத்த முடியாது. நீங்கள் கடினமான மற்றும் வெளித்தோற்றத்தில் நியாயமற்ற ஒன்றைச் சந்திக்கிறீர்கள் என்றாலும், உங்களுக்காக வருந்துவது அதை மோசமாக்கும். சுய பரிதாபம் மனச்சோர்வுக்கும் பெரும்பாலும் மன உளைச்சலுக்கும் வழிவகுக்கிறது. இது மக்கள் தங்களுக்கு இருக்கும் பிரச்சனை போன்ற பிரச்சனை இல்லாதவர்கள் மேல் பொறாமை கொள்ள செய்கிறது. நீங்கள் துன்பத்தில் இருக்கும்போது ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் ஒருவருக்காக நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியுமா?

3. மகிமைக்கு பேராசையாக இருப்பது

சிலர் தேவனின் கிருபையைப் பெற்று (வல்லமை, தயவு, உதவி, திறன்), அவர்கள் பெரிய காரியங்களைச் செய்கிறார்கள் அல்லது கடினமான ஒன்றைச் சாதிப்பதில் வெற்றி பெறுகிறார்கள். முதலில் அவர்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள், ஆனால் சில காலத்துக்குப் பிறகு, அவர்கள் தேவன் செய்ததற்கான மகிமையை தாங்கள் எடுத்துக்கொள்ளத் தொடங்குகிறார்கள்.

தானியேல் புத்தகத்தில் இதற்கு ஒரு சிறந்த உதாரணம் உள்ளது. பாபிலோனின் ராஜா தேவனின் கிருபையால் பெரியாளாக ஆனார், மேலும் அவர் தனது வெற்றிக்கான மகிமையையும் பெருமையையும் தவறாமல் தேவனுக்கு வழங்கினார். ஆனால் சிறிது காலத்துக்குப் பிறகு, அவர் தனக்கென ஒரு நினைவுச்சின்னத்தை உருவாக்கி, தனது சாதனைகள் அனைத்தையும் பெருமைப்படுத்தத் தொடங்கினார். இதன் விளைவாக, அவர் தனது ராஜ்யத்தை இழந்து, ஒரு காட்டு மிருகத்தைப் போல வாழ்ந்தார், கடைசியில் அவர் தன்னைத் தாழ்த்தி, தனது பாவத்திற்காக வருந்தினார். தேவனுக்குரிய மகிமையை எடுத்துக்கொள்வது நம் வாழ்வில் தேவனுடைய வல்லமையின் ஓட்டத்தை நிச்சயமாகத் தடுக்கும்.

தேவன் தம்முடைய மகிமையை வேறொருவருக்குக் கொடுக்க மாட்டார் என்று ஏசாயா மூலம் கூறினார் (ஏசா. 48:11). எந்த மனிதனும் தேவனுக்கு முன் மகிமைப்படக்கூடாது என்று அப்போஸ்தலன் பவுல் கூறினார் (1 கொரி. 1:29). மேலும் தாவீது சங்கீதம் 36:11 இல், “பெருமையின் கால் என்னை முந்த வேண்டாம்” (விரிவாக்க வேதாகமம்) என்று கூறுகிறார்.

பெருமை உங்களைத் துரத்தும்போது, தேவனிடம் ஓடி, அவர் உங்களுக்கு வழங்கிய கிருபைக்காக அவருக்கு நன்றி சொல்லத் தொடங்குங்கள். பெருமை விசுவாசிகளின் வல்லமையை குறைக்கும். நிச்சயமாக, நமது வல்லமையைக் குறைக்க இன்னும் பல வழிகள் உள்ளன. எந்த வகையான மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பாவமும் அதைச் செய்யும். தேவன் உங்களுடன் எதையாவது பற்றி கிரியை செய்து கொண்டிருப்பாரென்றால், உடனடியாக மனந்திரும்பி அவருக்குக் கீழ்ப்படியுங்கள் என்று நான் கடுமையாக பரிந்துரைக்கிறேன். தேவன் நீங்கள் நன்றாக இருக்க வேண்டுமென்று தான் விரும்புகிறார். நாம் அவரை விடாமுயற்சியுடன் பின்பற்றினால் நமக்கு உதவ அவருடைய பரிசுத்த ஆவி நம்முள் இருக்கிறார். அதற்காக ஸ்தோத்திரம்.

உங்கள் மின்சக்தி மூலத்துடன் இணைக்கப்பட்டிருங்கள், தேவன் உங்கள் மூலம் என்ன செய்ய முடியும் என்பதைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்!

பகுதி 2

பயத்தை எதிர்கொள்ளுதல்

முழு படிக்கட்டுகளையும் பார்க்காவிட்டாலும் விசுவாசம் முதல் அடி எடுத்து வைக்கிறது.

மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர்.

என் பயம் பறந்தோடியபோது

பல ஆண்டுகளாக, பயம் என்னில் சிறந்ததைப் பெற அனுமதித்தேன். ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடுமோ என்ற பயம், காயம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம், வீட்டை விட்டு வெளியே வரக்கூட பயந்தேன். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, நான் விமானத்தில் பறக்க பயந்தேன்.

நான் சிறுவயதில் பலமுறை பறந்தேன். நான் சிறிது நேரம் நன்றாக இருப்பேன், பிறகு பீதி உருவாகும். என் கண்கள் கண்ணீரால் குழமாகும், நான் மூச்சு விட கூட போராடுவேன்.

எனக்கு திருமணமாகி குழந்தைகள் பிறந்தவுடன், நான் பறப்பதை முற்றிலும் நிறுத்திவிட்டேன். என் மனதில், எனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் என்னவாகும் என்று எண்ணிணேன். அதிர்ஷ்டவசமாக, எனக்கு ஒரு பொறுமையான கணவர் இருக்கிறார். குடும்ப விடுமுறைக்காக செல்லும் போது, விமானத்தில் பறப்பதைத் தவிர்க்க, நாங்கள் இயற்கை எழில் மிகுந்த பாதை வழியாக பல ஆயிரக்கணக்கான மைல்கள் கார் ஓட்டிச் செல்வதுண்டு.

இது நடந்து பத்து வருடங்களுக்குப் பிறகு, எனக்குள் ஏதோ ஒன்று தோன்றியது. நான் நினைத்தேன், மிஷேல், நீ ஏதோ காரியங்களை இழந்துக்கொண்டிருக்கிறாயா? உன் அச்சங்களுக்கு நீ தொடர்ந்து அடிபணியலாம், ஆனால் அது எத்தகைய வாழ்க்கையாக இருக்கிறது?

தேவன் என் பெலனானவர், அவர் இல்லாமல் என்னால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் அவர் என்னை எதையும் செய்யும்படி வற்புறுத்தப் போவதில்லை என்பதை உணர அவர் எனக்கு உதவினார் - நான் அந்த முதல் படியை எடுக்க வேண்டியிருந்தது.

நான் நினைத்தேன், இந்த முதல் படி ஒரு குழப்பமாக இருக்கும். நாங்கள் பயணத்தைத் திட்டமிட்டோம், டிக்கெட்டுகளை வாங்கினோம், நிச்சயமாக, புறப்படும் நாள் வந்தது. நான் பயந்தேன், ஆனால் நான் சுதந்திரமாக இருக்க விரும்பினால் நான் செய்ய வேண்டிய ஒன்று இதுவாக இருந்தது.

விமான நிலையத்தில், அவர்கள் எங்கள் குழுவை ஏற அழைத்தபோது, நான் பயப்பட ஆரம்பித்தேன். திடீரென்று அறையிலிருந்து காற்று வெளியேற்றப்பட்டது. ஆனால் நான் எழுந்து நின்று விமானத்திற்குள்

நிற்கும் வரை படிப்படியாக நடக்க ஆரம்பித்தேன். அந்த முதல் விமானத்தை நான் ரசித்தேன் என்று சொல்ல முடியாது, ஆனால் மோசமானது முடிந்துவிட்டது என்று எனக்குத் தெரிந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக, நான் பயந்ததால் நான் வேண்டாம் என்று சொன்ன விஷயங்களை முயன்று செய்ய அதிக நம்பிக்கை ஏற்பட்டது. பயம் என்னைத் தடுக்க முயற்சிக்கும் நாட்கள் இன்னும் என்னிடம் உள்ளன. ஆனால் நான் அந்த முதல் படியை எடுத்தவுடன், அது மிகவும் எளிதாகிறது - மேலும் எனது உலகம் இன்னும் கொஞ்சம் விரிவடைகிறது.

- மிஷேல்

அத்தியாயம் 9

ஒரு சமயத்தில் ஒரு அடி எடுக்கவும்

நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருகிறார்.
சங்கீதம் 37:23

நீங்கள் இந்தப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போது, நீங்கள் ஜெயிக்க விரும்பும், உங்களை தடுக்கும் ஏதோவொரு பயத்தைப் பற்றி நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். நீங்கள் "பயந்துக்கொண்டே அதைச் செய்ய" விரும்புவீர்கள், ஆனால் அதே நேரத்தில் அந்த நடவடிக்கையை எடுப்பதைப் பற்றி நினைக்கும் போதுகூட அதனால் மேற்கொள்ளப்பட்டவராக உணரலாம். அப்படியானால், என்னால் அதை புரிந்துகொள்ள முடிகிறது. என் தந்தை என்னை எப்படி பாலியல்ரீதியாக துஷ்பிரயோகம் செய்தார் என்பதைப் பற்றி நான் எதிர்கொள்ள வேண்டிய நேரம் வரப்போகிறது என்று தேவன் எனக்குத் தெரியப்படுத்தியபோது நானும் அவ்வாறே உணர்ந்தேன். என்னுடைய வேலையை விட்டுவிட்டு ஊழியத்திற்குப் படிக்கும்படி தேவன் என்னிடம் கேட்டபோது, அது என் இருதயத்தின் கனவாக இருந்தபோதும் எனக்கு தயக்கம் இருந்தது - இதுபோன்ற பல சூழ்நிலைகளை என்னால் சொல்ல முடியும், எனவே என்னை நம்புங்கள், அந்த பயம் மிகவும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். பயத்தை எதிர்கொள்ளும் எண்ணமே பயமாக இருக்கிறது!

எதையும் வெல்வதற்கான சிறந்த வழி, நீங்கள் பின்னர் எடுக்க வேண்டிய மற்ற எல்லா படிகளையும் பற்றி சிந்திக்காமல் ஒரு நேரத்தில் ஒரு அடி எடுத்து வைப்பது தான் என்று நான் நம்புகிறேன். தேவன் நமக்கு ஒவ்வொரு நாளுக்கான கிருபையைத் தருகிறார், ஏனென்றால் நாம் அவரை நம்ப

வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர் நம் எதிரிகளிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக நம்மை விடுவிக்கிறார் என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் கற்பிக்கிறது (உபா. 7:22). என் தந்தையை நான் எதிர்கொண்ட பிறகும் அவரைப் பற்றிய பயம் எனக்கு உடனடியாக மறைந்து விடவில்லை. ஆனால் நான் பல வருடங்கள், பயம் என்ன சொல்கிறதோ அதற்கு பதிலாக தேவன் நான் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் என்று நான் நினைத்தேனோ அதை விடாப்பிடியாக செய்த போது,கொஞ்சம் கொஞ்சமாக சிறிய சிறிய வெற்றிகளைப் பெற்றேன். பின்னர் நான் கிட்டத்தட்ட சுதந்திரமாகிவிட்டேன் என்று உண்மையாக என்னால் சொல்ல முடியும். நான் "கிட்டத்தட்ட" என்று சொல்கிறேன், ஏனென்றால், எனக்கு இன்னும் ஒரு பயம் இருக்கிறது, நானும் தேவனும் அதை வெல்ல ஒன்றாக வேலை செய்து கொண்டிருக்கிறோம்.

பெரும்பாலான மக்கள் தங்கள் பயத்தை ஜெபித்துப் போக்க விரும்புகிறார்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். "தேவனே, நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் விரும்புகிறீரோ அதை நான் செய்யும்படி தயவுசெய்து இந்த பயத்திலிருந்து என்னை விடுவித்தருளும்" என்று அவர்கள் ஜெபிக்கிறார்கள். நான் அதை பல ஆண்டுகளாக முயறசித்தேன், ஆனால் தேவன் அந்த ஜெபத்திற்கு பதிலளிக்கவில்லை. ஆனால், "தேவனே, இந்த நாளுக்கான தைரியத்தை எனக்குத் தாரும் ஒவ்வொரு அடிக்கும் தேவையான தைரியத்தை எனக்குத் தாரும்" என்று நான் ஜெபிக்கத் தொடங்கியபோது அவர் பதிலளித்தார்.

ஒரு நாளுக்கு ஒன்று என்ற முறையை தான் மது போதைக்கு அடிமையாயிருப்பவர்கள் தங்கள் அடிமைதனத்தை மேற்கொள்ள ஆல்க?ாலிக்ஸ் அனானிமஸ் என்ற முன்னால் குடிகாரர்கள் சங்கம் கற்றுக்கொடுக்கிறது. சாலையில் மிகத் தூரமாகப் பார்த்தால் அது மிகவும் சிரமமாக தோன்றும், ஆனால் ஒரு நேரத்தில் ஒரு அடி எடுத்து வைத்தால், நம்மால் அதைச் செய்ய முடியும் என்று நம்ப முடிகிறது.

தொடரவும்

எந்தவொரு பகுதியிலும் சுதந்திரம் பெற தேவனுடனான நமது பயணம் வாழ்நாள் அர்ப்பணிப்பாக இருக்க வேண்டும். வேதாகமத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தை உள்ளது, அதை நாம் கவனிக்காமல் இருக்கலாம், ஆனால் அது மிகவும் முக்கியமானது மற்றும் நாம் அதை கவனமாக கவனிக்க வேண்டும். அந்த வார்த்தை 'தொடர்ந்து' என்பதாகும். நாம் தேவனுடைய வார்த்தையில் தொடர்ந்து இருக்கச்

சொல்லப்பட்டிருக்கிறோம், அப்போது நாம் சத்தியத்தை அறிந்துக் கொள்வோம், அது நம்மை விடுதலையாக்கும் (யோவான் 8:31-32). நாம் வார்த்தையைப் படிப்பதால் மட்டும் அந்த சுதந்திரம் மாயமாக கிடைக்காது, ஆனால் நாம் அதற்குக் கீழ்ப்படியும் போது, நாம் விடுதலை அடைகிறோம். நாம் எப்போதாவது தான், வார்த்தையில் நேரத்தைச் செலவிட்டாலோ, அல்லது நாம் பிரச்சனையில் இருக்கும்போது மட்டும் அதை நாடினால், அது நமக்கு பெரிதாக உதவாது.

சுதந்திரம் கிடைக்கிறது, ஆனால் அதில் தொடர்ந்து நடப்பதற்கு, தேவனைப் பற்றியும், உங்களுக்கான அவருடைய திட்டத்தைப் பற்றியும், உங்கள் மனதைப் புதுப்பிப்பது பற்றியும் கற்க, உங்கள் நேரத்தைச் செலவிட வேண்டும். நீங்கள் ஒரு டாக்டராக விரும்பினால், பல வருட படிப்பு இல்லாமல் நீங்கள் வெற்றியடைவீர்கள் என்று எதிர்பார்க்க மாட்டீர்கள், அதே வழியில் தான் ஒரு வெற்றிகரமான கிறிஸ்தவராக மாறுவது பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும்.

நான் இந்த புத்தகத்தை எழுதுகையில், நான் நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தேவனுடைய வார்த்தையை தீவிரமாக படித்து வந்திருக்கிறேன், ஒரு காலத்தில் என்னை வேதனைப்படுத்திய பல விஷயங்களிலிருந்து நான் விடுபட்டுள்ளேன் என்று சொல்ல முடியும். நான் இன்னும் விடுவிக்கப்பட வேண்டிய விஷயங்களைப் பற்றி கவலைப்படுவதிலிருந்தும் கூட நான் விடுபட்டிருக்கிறேன், ஏனென்றால் நான் வாழ்நாள் பயணத்தில் இருக்கிறேன் என்று எனக்குத் தெரியும். என்னால் விட்டுவிட முடியாது. என்னால் கைவிட முடியாது. என்னால் விட்டுக்கொடுக்க முடியாது. வாழ்க்கையில் இனிமேலிருக்கும் நல்ல காரியங்களை நோக்கி நான் முன்னேறிக் கொண்டிருக்கிறேன் வாழ்க்கையில், நாம் முன்னோக்கி செல்கிறோம் அல்லது பின்னோக்கிச் செல்கிறோம்; நாம் வெறுமனே நிலையாக இருக்க முடியாது.

என்னால் விட்டுவிட முடியாது. என்னால் கைவிட முடியாது. என்னால் விட்டு கொடுக்க முடியாது.

பவுல் கொலோசெயர்களுக்கு எழுதினார், "உங்கள் ஜெபத்தில் [வாழ்க்கையில்] ஊக்கமாயும், சோர்வடையாமலும், உறுதியாயிருந்து, [உங்கள் ஜெபத்தில்] [இரண்டும்] எச்சரிக்கையாயிருந்து, [உங்கள் ஜெபத்தில்] நன்றியுணர்வோடு இருங்கள்" (கொலோ. 4:2 விரிவாக்க வேதாகமம்). விசுவாசத்தில் தம்முடைய சீடரும் மகனுமான தீமோத்தேயுவுக்கு எழுதிய

கடிதத்தில், "நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு;" (2 தீமோ. 3:14). கலாத்தியர்களுக்கு, அவர் பாவத்திற்கு அடிமையாக இருப்பதைக் குறித்து எழுதினார், "ஆனபடியால், நீங்கள் மறுபடியும் அடிமைதனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்." (கலா. 5:1).

சுதந்திரம் முதலில் பெறப்பட வேண்டும், பின்னர் பராமரிக்கப்பட வேண்டும் என்பதை பவுல் நன்கு அறிந்திருந்தார். இது ஒருமுறை நடக்கும் நிகழ்வு அல்ல, ஆனால் ஒவ்வொரு நாளும் சரியானதைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும் என்ற வாழ்நாள் அர்ப்பணிப்பு என்பது அவருக்குத் தெரியும். ஒருமுறை பெற்ற சுதந்திரத்தை இழந்தவர்கள் அல்லது பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் பாவமான வாழ்க்கைக்குத் திரும்பியவர்களை விவரிக்க இன்று கிறிஸ்தவர்கள் பின்வாங்கினவர்கள் என்ற பதத்தைப் பயன்படுத்துகின்றனர். அந்த வார்த்தை எனக்கு பிடிக்கவில்லை, ஏனென்றால் நாம் "சறுக்கி விழுகிறோம்" என்பதாக நான் நினைக்கவில்லை. நாம் எல்லா நேரங்களிலும் தேர்வுகள் செய்கிறோம் என்று நினைக்கிறேன், ஆயிரக்கணக்கானவை, சிறிய தேர்வுகள் மற்றும் பெரிய தேர்வுகளை. நாம் தொடர்ந்து செய்து கொண்டேதான் இருக்கிறோம் சரியானவற்றை தொடர்ந்து செய்தால், நாம் சுதந்திரத்தைப் பெறுவது மட்டுமல்லாமல், அதைக் காப்பாற்றியும் கொள்வோம்.

ஒவ்வொரு பயணமும் ஒரு அடியில் தொடங்குகிறது, மேலும் ஒரு அடி எடுத்து வைக்க மட்டுமே தேவன் நம்மிடம் கேட்கிறார். அந்த விசுவாச அடியை எடுத்து, பின் மற்றொன்று பின் இன்னொன்று என்று எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால் ஒரு நேரத்தில் ஒன்றைப் பற்றி மட்டும் சிந்தியுங்கள். உங்கள் பயணம் எவ்வளவு கடினமாக இருக்கும், எவ்வளவு நேரம் எடுக்கும் என்றெல்லாம் நீங்கள் நினைத்தால், நீங்கள் தொடங்குவதற்கு முன்பே தோற்கடிக்கப்படுவீர்கள். தேவனுக்குக் கீழ்ப்படிந்து நீங்கள் செய்யும் எதையும் நீங்கள் தனியாகச் செய்ய வேண்டியதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் எப்போதுமே உங்களுடன் இருப்பார், ஒவ்வொரு அடியிலும் உங்களைப் பலப்படுத்தி ஊக்குவிப்பார். உங்கள் வாழ்க்கையில் இந்த நேரத்தில் நீங்கள் ஒரு கடினமான சவாலை எதிர்கொண்டிருப்பீர்களேயென்றால், பயப்பட வேண்டாம், ஏனென்றால் தேவன் உங்களுடன் இருக்கிறார்.

தொடங்குதல்

நான் சிறந்த ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் அனுபவிக்க

விரும்பினால், நான் உடற்பயிற்சி செய்ய வேண்டும், எடையைத் தூக்க வேண்டும், இதயத்தை பலப்படுத்தும் பயிற்சிகள் செய்ய வேண்டும் என்று பல ஆண்டுகளாக எனக்குத் தெரியும். என் எழுத்து வேலையால் நான் உட்கார்ந்தே இருக்க வேண்டிருக்கிறது, ஒரு மருத்துவர் சமீபத்தில் என்னிடம் மருத்துவத் தொழில் இப்போது உடற்பயிற்சி இல்லாத உட்கார்ந்த வாழ்க்கை முறையை புதிய புற்றுநோயாகக் கருதுகிறது என்றார். உட்காருவதால் கேன்சர் வரும் என்று அவர் கூறவில்லை, ஆனால் அதிகமாக உட்காருவது நம் ஆரோக்கியத்திற்கு மிகவும் கேடு என்று அவர் என்னிடம் பதிய முயன்றார்.

என் கணினியில் நிறைய நேரம் செலவழிக்கும் போது அவர் எனக்கு ஒரு வேலையைக் கொடுத்தார். நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு ஒரு முறையாவது நிற்கவும் சுற்றி நடக்கவும் சொன்னார், நாற்பத்தைந்து விநாடிகள் வால் சிட் செய்யுங்களென்றார். எனக்கு முதுகுவலி இருப்பதால் அந்த பயிற்சியை எனக்கு அவர் குறிப்பாக பரிந்துரைத்தார். வால் சிட் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியாத பட்சத்தில், அது கடினமானது என்று மட்டும் சொல்லிவிடுகிறேன்! நீங்கள் பின்னாக சுவரில் சாய்ந்துக் கொண்டு, உங்கள் கால்களை தரையில் நட்டு, சுவரில் பாதியளவு கீழே சறுக்கி, நாற்பத்தைந்து வினாடிகள் முதல் ஒரு நிமிடம் வரை அந்த நிலையில் இருக்க வேண்டும். அல்லது அதற்கு மேலும் இருக்கலாம். உங்கள் தசைகள் தீயில் எரிவதைப் போல உணர்வீர்கள், ஆனால் அந்த “எரிதல்” உங்களுக்கு நல்லதாக இருக்க வேண்டும்.

நாம் நம் வாகனங்களில் அமர்ந்திருக்கிறோம்; நாம் நம் கணினிகளுக்கு முன்னால் அமர்ந்திருக்கிறோம்; நாம் தொலைபேசியில் பேசும் போது அமர்ந்திருக்கிறோம்; நாம் உட்கார்ந்தே தொலைக்காட்சி பார்க்கிறோம். நாம் ஒரு சந்திப்பிற்காக உட்கார்ந்து காத்திருக்கிறோம், மேலும் பல காரணங்களுக்காக நாம் அமர்ந்தேயிருக்கிறோம். இன்றைய நமது வாழ்க்கை முறைகளும் சமூகமும் நமக்கு எப்போதும் ஒரு நாற்காலியை வழங்குகின்றன என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். நாம் படிக்கட்டில் ஏறுவதை விட எஸ்கலேட்டர்களில் ஏறுகிறோம் மற்றும் லிஃப்ட்களில் செல்கிறோம். நம்மில் பெரும்பாலோர் அசைவில்லாமலே இருக்கிறோம். பின்னர் வயதாகும்போது, நாம் ஏன் விறைப்பாக உணர ஆரம்பிக்கிறோம், மூட்டு வலி மற்றும் ஆற்றல் இல்லை, உடல்நிலை சரியில்லாமல் இருப்பது ஏன் என்று நாம் ஆச்சரியப்படுகிறோம்.

நீண்ட காலமாக நான் பயிற்சி செய்யாததற்கு சாக்குப்போக்குகளைச் சொன்னேன். நான் செய்யும் அனைத்துப் பயணங்களுடனும் எத்தகைய உடற்பயிற்சி அட்டவணையை எப்படி வைத்திருக்க முடியும் என்று நான்

நினைத்தேன். அதுமட்டுமின்றி, வாரத்தில் மூன்று நாட்கள் ஜிம்மிற்குச் செல்ல முடியாத அளவுக்கு நான் மிகவும் பிஸியாக இருந்தேன். நான் சொந்தமாக வீட்டில் சில பயிற்சிகளை செய்ய முயற்சித்தேன், அப்போதெல்லாம் என்னை நானே காயப்படுத்திக் கொண்டேன், அதனால் உடற்பயிற்சி செய்யாமல் இருப்பதற்கு இது மற்றொரு சாக்காக அமைந்தது. ஆனால் ஒரு நாள் எனக்கு ஒரு எண்ணம் வந்தது, அது "தேவனின் சிந்தனை" என்று எனக்குத் தெரியும். (நம்முடைய ஒவ்வொரு எண்ணமும் தேவனிடமிருந்து இல்லை என்றாலும், சில எண்ணங்கள் அவரிடமிருந்து வருகிறது. அவர் நம்மிடம் பேசும் பல வழிகளில் இதுவும் ஒன்று. இது எனக்கு தேவனுடைய சிந்தனையாக இருந்தது.) நான் வேலை செய்யாததற்கு என் சாக்குகளை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தபோது, திடீரென நான் நினைத்தேன். உன்னால் செய்ய முடிந்ததை மட்டும் ஏன் செய்யக்கூடாது, உன்னால் செய்ய முடியாததைப் பற்றி கவலைப்பட வேண்டாமே? எதுவும் செய்யாமலிருப்பதை விட ஏதாவது செய்வது சிறந்ததே!

> எதுவும் செய்யாமலிருப்பதை விட ஏதாவது செய்வது சிறந்ததே!

நாம் நடவடிக்கை எடுக்கும்போது தேவன் தோன்றுகிறார், நாம் எதுவும் செய்யாதபோது அல்ல.

உங்களால் செய்ய முடிந்ததைச் செய்யுங்கள், உங்களால் செய்ய முடியாததைப் பற்றி கவலைப்படாதீர்கள். எதுவும் செய்யாமலிருப்பதை விட ஏதாவது செய்வது சிறந்ததே!

நான் என் உடலின் நிலையை கண்ணாடியில் நன்றாகப் பார்த்தேன், அது குறிப்பிடத்தக்க அளவில் நலிந்து விட்டதை எளிதாகக் காண முடிந்தது. அந்த நேரத்தில் நான் ஏதாவது நடவடிக்கை எடுக்காவிட்டால், ஊழியத்தில் என்னுடைய கடைசி மூன்றில் ஒரு பகுதிக்கு நான் போதுமான வலிமையுடன் இருக்க முடியாது என்பதை தேவன் எனக்குத் தெரியப்படுத்தினார். தேவன் எனக்கு நியமித்ததை முடிப்பது எனக்கு மிகவும் முக்கியம், எனவே எனக்கு ஒரு பயிற்சியாளரை நியமித்துக்கொண்டேன். எனது ஆரம்பத் திட்டம் என்னவென்றால், நான் வீட்டில் செய்யக்கூடிய சில பயிற்சிகளை அவர் எனக்குக் கற்றுத் தர வேண்டும், பின்னர் ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறைஅவரைப் பார்த்து புதிய பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே. ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், நான் ஆரம்பித்தவுடன்-அந்த முதல் படியை எடுத்தவுடன்-என் உடலிலும் என்

ஆற்றல் அளவிலும் ஒரு பெரிய வித்தியாசத்தை நான் பார்க்க ஆரம்பித்தேன், அதை மேலும் மேலும் செய்ய விரும்பினேன். அது 2005 இல் இருந்தது, இப்போது நான் ஒரு பயிற்சியாளருடன் வாரத்தில் என்னால் உண்மையாகவே செய்ய முடியாது என்றாலொழிய மூன்று நாட்கள் உடற்பயிற்சி செய்கிறேன் நாம் உண்மையிலேயே என்ன செய்ய விரும்புகிறோமோ அதைச் செய்ய எப்போதுமே நேரத்தைக் கண்டுபிடிக்கலாம்.

நீங்கள் எதை எதிர்கொண்டிருந்தாலும், அந்த முதல் படியை நீங்கள் எடுத்தால், அடுத்தது மற்றும் அதற்கடுத்ததெல்லாம் அவ்வளவு கடினமாக இருக்காது. நாம் நடவடிக்கை எடுக்கும்போது தேவன் தோன்றுகிறார், நாம் எதுவும் செய்யாதபோது அல்ல.

நீங்கள் இருட்டைப் பற்றி பயப்படுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம், எனவே நீங்கள் ஐம்பது வயதாக இருந்தாலும் விளக்குகளை எரித்து தூங்குகிறீர்கள். இதனால் நீங்களும் உங்கள் வாழ்க்கைத்துணையும் வெவ்வேறு அறைகளில் தூங்க வேண்டியிருக்கிறது, ஏனென்றால் அவர்களால் விளக்குகளை வைத்து தூங்க முடியாது. நீங்கள் சிறு குழந்தையாக இருந்ததிலிருந்து இருளைக் கண்டு பயந்ததால். நீங்கள் விளக்குகளை அணைக்க விரும்புகிறீர்கள், சுதந்திரத்திற்கான உங்கள் பயணத்தை நீங்கள் படுக்கையில் ஏறி ஐந்து நிமிடங்களுக்கு விளக்குகளை அணைத்து இருட்டில் இருக்கப் பழகுவதின் மூலம் தொடங்கலாம். அதற்கு மேல் உங்களால் இருட்டில் இருக்க இயலவில்லையென்றால், விளக்குகளை மீண்டும் இயக்கவும். அடுத்த இரவு, ஆறு நிமிடங்களுக்கு விளக்குகளை அணைக்கவும், இவ்வாறாக தொடர்ந்து நேரத்தை அதிகரித்து பழகிக்கொள்ளலாம். இப்படியாக, இருளைப் பற்றிய உங்கள் பயத்தைப் போக்க உங்களுக்கு இரண்டு வருடங்கள் தேவைப்பட்டாலும் பரவாயில்லை, எதையும் செய்யாமல் இருப்பதை விட, கொஞ்சம் கொஞ்சம் முன்னேறுவது நல்லது. இத்தகைய ஏற்பாட்டால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்களென்றால், மேற்கொண்டு நீங்கள் எதுவும் செய்ய வேண்டியதில்லை. நீங்கள் விளக்குகள் எரிந்துக்கொண்டிருக்கையில் தூங்கும்போது தேவன் உங்களை எவ்வளவு நேசிக்கிறரோ அவ்வளவாகவே நீங்கள் இருட்டில் தூங்கும் போதும் நேசிக்கிறார்

நாம் நடவடிக்கை எடுக்கும்போது தேவன் தோன்றுகிறார், நாம் எதுவும் செய்யாதபோது அல்ல.

நான் பாம்புகளைக் கண்டு பயப்படுகிறேன், ஒரு வினாடிக்குக் கூட ஒன்றை எடுக்கவோ அல்லது அவற்றுடன் விளையாடுவதற்கு முயற்சி

செய்யவோ நான் விரும்பவில்லை. இது நான் செய்ய விரும்பும் ஒன்று அல்ல, நான் அதைச் செய்வதற்கு எந்த காரணமும் இல்லை. அதுமட்டுமல்ல, ஏதேன் தோட்டத்தில் ஏவாளிடம் தேவன் அவளுக்கும் சர்ப்பத்திற்கும் பகை உண்டாக்கியிருப்பதாக கூறினார் (ஆதி. 3:15).

எனக்கு ஸ்கை டைவிங்கில் ஆர்வம் இல்லை, நான் முயற்சித்தால், அது என்னை பயமுறுத்தும். அதையும் நான் செய்ய விரும்பவில்லை. ஆனால் வேறு பல விஷயங்களைக் கண்டு நான் பயந்திருக்கிறேன், நான் அதை மேற்கொள்ளவேண்டுமென்று தேவன் எனக்குத் தெரியப்படுத்தினார், அதனால் நான் அந்த விஷயங்களில் கவனம் செலுத்தினேன்.

பிறரைப் பிரியப்படுத்துவதில்லை என்ற பயம் எனக்கு இருந்தது, அதை நான் மேற்கொள்வது எனக்கு முக்கியமானது. தேவன் என் மேல் பிரியமாயில்லை என்று நான் பயந்தேன், அதையும் மேற்கொள்ள. வேண்டியிருந்தது . போதுமான அளவு செய்யவில்லை என்று நான் எப்போதும் பயந்தேன், அதனால் அதையும் நான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதைப்போன்று இன்னும் அதிகம் என்னால் பகிர முடியும், ஆனால் நான் என்ன சொல்கிறேன் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

உங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதிலிருந்து அல்லது தேவனுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து சில வகையான பயம் உங்களைத் தடுக்கிறது என்றால், அதற்கு சாக்குப்போக்கு சொல்லாதீர்கள் அல்லது உங்கள் வாழ்நாள் முழுவதும் அதை சகித்துக்கொண்டிருக்காதீர்கள். அதை மேற்கொள்ள ஒரு படி எடுங்கள், பின்னர் இன்னொன்று, பின்னர் இன்னும் ஒன்று என்று எடுங்கள். நீங்கள் முழு சுதந்திரம் அடையும் வரை அது எவ்வளவு நேரம் எடுத்தாலும் கைவிட வேண்டாம்,. நீங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கும் வரை நீங்கள் ஒருபோதும் தோல்வியடைய மாட்டீர்கள்.

செயலாற்ற தன்மை சந்தேகத்தையும் பயத்தையும் வளர்க்கிறது. செயலாற்றுதல் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்க்கிறது. நீங்கள் பயத்தை மேற்கொள்ள விரும்பினால், வீட்டில் உட்கார்ந்து அதைப் பற்றி சிந்திக்க வேண்டாம். வெளியே சென்று பிஸியாக இருங்கள் (செயலாற்றுங்கள்).

டேல் கார்னகி

சந்தேகத்தை சமாளித்தல்

நான் பல ஆண்டுகளாக தொழில் ரீதியாக பாடி மிகவும் பிரபலமாகிவிட்டேன். எனது பாடும் வாழ்க்கை எனது வாழ்க்கையின் கனவாக இருந்தது, அதைச் செய்ய தேவன் என்னை அழைத்தார் மற்றும் அபிஷேகம் செய்தார் என்று நான் உறுதியாக உணர்ந்தேன். என் குரலில் ஏதேனும் தவறு நடக்கலாம் என்ற சிறு எண்ணம் கூட எனக்கு மிகவும் பயமாக இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், எனக்கு தொண்டை அழற்சி ஏற்பட்டபோது, நான் உணர்ந்த பயம் என்னை மேற்கொண்டுவிடும் போல அதிகமாக இருந்தது.

நான் என் தொழில் வாழ்க்கையின் உச்சத்தில் இருந்த போது, எனது குரல் நாண்களுக்கு மிக அருகில் புற்றுநோய் கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. அந்தக் கட்டியை அகற்ற அறுவை சிகிச்சை செய்யப் பட வேண்டும் என்று எனக்குத் தெரியும். அறுவை சிகிச்சை என் குரலை பாதிக்காமல் இருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் அறுவை சிகிச்சைக்குப் பிறகு என் குரல் இப்போது இருப்பதைப் போன்று ஒருபோதும் இருக்காது என்று டாக்டர்கள் மிகுந்த வருத்தத்துடன் கூறினார்.

தேவன் மீது விசுவாசம் வைக்க நான் மிகவும் கடினமாக முயற்சித்தேன், ஆனால் சந்தேகம் என்னை தொடர்ந்து ஆட்கொண்டது. இறுதியாக, நான் அந்த முழு சூழ்நிலையையும் தேவனிடம் ஒப்புவிக்க முடிந்தது. நான் பாடுவதில் அல்ல, இயேசுவை அறிந்துகொள்வதில்தான் என் மகிழ்ச்சி இருக்கிறது என்று என் மனதில் தீர்மானித்து, அறுவை சிகிச்சையின் முடிவை அவர் மேல் வைத்துவிட்டேன்.

டாக்டர்கள் சொன்னது சரிதான். செயல்முறைக்குப் பிறகு, என் குரல் முன் போல் இருக்கவில்லை. ஆனால் நான் தொடர்ந்து குணமடைந்து, பாடங்கள் எடுத்து, என் குரல் நாண்களை வலுப்படுத்த பயிற்சிகள் செய்தபோது, என் குரல் திரும்பியது. அது இறுதியில் முன்பு இருந்ததை விட இன்னும் சிறப்பாக இருக்கும் நிலையை அடைந்தது!

இந்த சூழ்நிலையின் மூலம், நான் தேவனை சந்தேகிக்காமல், எல்லாவற்றிலும் அவருக்கு முதலிடம் கொடுக்க கற்றுக்கொண்டேன், மேலும் அவர் எப்போதும் நமக்கு சிறந்ததைச் செய்வார் என்பதை அறிந்துக்கொண்டேன்.

- சிண்டி

அத்தியாயம் 10

சந்தேகத்திற்கும் இரட்டை எண்ணத்திற்கும் எதிர்த்து நிற்கவும்

அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்க்ள் எழும்புகிறதென்ன?

லூக்கா 24:38

சந்தேகம் என்பது வேறில்லை, வேறு பெயரில் உள்ள பயமேயாகும். நான் சில நேரங்களில் சந்தேகத்தை "குறைந்த அளவிலான பயம்" என்று குறிப்பிடுகிறேன், ஏனெனில் அது மிகவும் நுட்பமானது. மற்ற பயங்கள் வெளிப்படும் அதே வழிகளில் இது வெளிப்படாது, இருப்பினும் இது பயமேயன்றி வேறில்லை. ஒருவேளை தேவன் நமக்குத் தேவையான உதவியைக் கிடைக்க செய்யமாட்டார் என்று பயந்து அவரை சந்தேகிக்கிறோம் அல்லது அவர் சொல்லுவதை நாம் சரியாக கேட்டு சரியான முடிவுகளை எடுக்க முடியுமா என்று சந்தேகிக்கிறோம். ஒருவேளை நாம் ஒரு நண்பர் அல்லது உறவினரால் ஏமாற்றத்தை அனுபவித்திருக்கலாம், இப்போது நாம் அந்த நபரை நம்ப முடியுமா என்று சந்தேகிக்கிறோம். அல்லது ஒருவேளை நாம் தேவனிடம் ஏதாவது கேட்டு, அதைப் பெற்றுக் கொள்ளாமல் இருந்திருக்கலாம், இப்போது நாம் அவரை சந்தேகிக்கிறோம். தேவன் நாம் கேட்பதைக் கொடுக்கவில்லை என்றால், அது நமக்குச் சிறந்ததாக இருக்காது என்பதை நாம் உணர வேண்டும்.

தேவன் மீது நாம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆனால் சாத்தானோ நம் வாழ்க்கையை வெவ்வேறு வழிகளில் வெளிப்படும் பல்வேறு பயங்கள் கட்டுப்படுத்த

வேண்டுமென்று விரும்புகிறான். தற்போது, இந்த கையெழுத்துப் பிரதியை விமானத்தில் பயணம் செய்யும் போது படித்துக்கொண்டிருக்கும் போது, எங்கள் கால அட்டவணையில் நாங்கள் சிறிது பின்தங்கியிருப்பதை உணர்ந்தேன், இதனால் மதிய உணவு சந்திப்புக்கு நான் தாமதமாகலாம். நான் தாமதமாக வருவது எனக்காகக் காத்திருக்கும் நபரை எரிச்சலடையச் செய்துவிடுமோ என்று பயந்தேன். இறுதியில் நான் சரியான நேரத்திற்குதான் சென்றேன். ஆனால் இந்த வகையான விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும், ஏனென்றால் பிசாசு தனக்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பும் நம் சிந்தனையில் பயத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறான். பயம் என்ற புத்தகத்தை எழுதிக்கொண்டிருக்கும் போதே எனக்கு பயம் ஏற்பட்டது.

கிரேக்கத்தில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டில், சந்தேகம் என்ற வார்த்தையைப் பார்த்தால், அதன் அர்த்தம் “வழி இல்லாமல் இருப்பது” அல்லது “வளங்கள் இல்லாமல் இருப்பது, சங்கடத்தில் இருப்பது, குழப்பத்தில் இருப்பது அல்லது இழப்பில் இருப்பது” என்று பொருள்படுகிறது. சந்தேகம் என்பது “இரண்டு வழிகளில் நிற்பது ” என்றும் பொருள்படும், மேலும் எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதில் நிச்சயமற்ற நிலையில் இருப்பதையும் குறிக்கிறது.

மக்கள் சந்தேகத்தில் இருக்கும்போது, அவர்கள் சில சமயங்களில், “எல்லாம் காற்றில் இருப்பது போல் உள்ளது” என்று கூறுகிறார்கள், அதாவது என்ன நடக்கப் போகிறது என்பது அவர்களுக்குத் தெரியாது, ஒருவேளை விஷயங்கள் குழப்பமாகவும் நிச்சயமற்றதாகவும் தோன்றலாம்.

இந்த நிலையில் உள்ளவர்கள் நிச்சயமாக இரட்டை எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஒரு காரியத்தைச் செய்ய முடிவு செய்து, பின்னர் தங்கள் முடிவை சந்தேகிக்கத் தொடங்குகிறார்கள். அதனால் அவர்கள் வேறு ஏதாவது செய்ய முடிவு செய்கிறார்கள். பின்னர், அவர்கள் அதை நிச்சயமற்றதாக உணர்கிறார்கள், எனவே அவர்கள் தாங்கள் எடுத்த முதல் முடிவுக்கே திரும்புகின்றனர். இது அவர்கள் மிகவும் குழப்பமடையும் வரை தொடர்ந்து, அவர்கள் அதை கைவிட்டுவிடலாம் அல்லது எந்த முடிவையும் எடுக்காமலே போகலாம்.

நாம் உண்மையிலேயே பயமின்றி வாழ விரும்பினால், சந்தேகமின்றி வாழ கற்றுக்கொள்ள வேண்டும். தைரியமாக வாழ, நாம் விசுவாசத்தில் நடக்க வேண்டும். பிசாசு நம் நம்பிக்கைக்கு எதிரான போருக்கு நம் வாழ்வில் சந்தேகத்தை அனுப்புகிறான். இதைப் பற்றி நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் சந்தேகத்தால்

நிறைந்திருப்பதையும், முடிவெடுக்க முடியாமல் இருப்பதையும் நான் வெறுக்கிறேன்.

இயற்கை ரீதியாக அவர்கள் வயது முதிர்ந்தவர்களாக இருந்த போதிலும் ஆபிரகாமுக்கும் அவன் மனைவிக்கும் ஒரு குழந்தை பிறக்கும் என்று தேவனிடமிருந்து ஒரு வாக்குத்தத்தைப் பெற்றிருந்தான். (ஆதி 18:11). அவர்களுக்கு ஒரு அதிசயம் தேவைப்பட்டது, அவர்கள் தேவனுக்காக காத்திருந்தார்கள், ஆனால் வாக்குறுதி நிறைவேற தாமதமானது. ஆபிரகாம் காத்திருந்தபோது, "அவிசுவாசமோ அல்லது அவநம்பிக்கையோ தேவனின் வாக்குத்தத்தைக் குறித்து அவன் சந்தேகப்பட அனுமதித்காமல் அவர் தேவனுக்கு துதியையும் மகிமையையும் கொடுத்ததால் அவர் பலமடைந்து விசுவாசத்தில் பலப்படுத்தப்பட்டார்" (ரோமர் 4:20) என்று பவுல் எழுதினார்)

மரணத்தருவாயில் இருந்த தன் மகளை குணமாக்க இயேசு வருவார் என்று காத்திருந்தபோது யவீருக்கு சந்தேகப்படுவதற்கு வாய்ப்பு கிடைத்தது (மாற்கு 5:22-23). இயேசு வந்து அவளைக் குணமாக்குவதாகச் சொன்னார், ஆனால் வழியில் உதவி தேவைப்படும் ஒரு பெண்ணால் அவர் குறுக்கிடப்பட்டார், மேலும் அவர் அவளுக்கு உதவ நின்றார். காத்திருந்த தகப்பன் பொறுமையிழந்து, இயேசு அவசரமாக வர வேண்டுமென்று விரும்பியதை என்னால் எளிதில் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஒருவேளை அவளைக் காப்பாற்ற இயேசு சரியான நேரத்தில் வர இயலுமா இல்லையா என்று அவன் சந்தேகப்பட்டிருக்கலாம். யவீரு இயேசுவுக்காகக் காத்திருந்த போது, அவருடைய வேலைக்காரன் ஒருவன் வந்து அவனுடைய மகள் இறந்துவிட்டாள் என்று சொன்னான். இயேசு அந்தச் செய்தியைக் கேட்டு, "பயப்படாதே; விசுவாசமாயிரு" என்றார். (மாற்கு 5:36). இது மிகவும் எளிமையானதாகத் தெரிகிறது, ஆனால் நீங்கள் அழுத்தி கொண்டிருக்கும் பிரச்சனையில் இருந்தால், அது மிக கடினமாக தோன்றும்.

சந்தேகம் உங்கள் விசுவாசத்தை திருட எவ்வளவு அதிகமாய் அனுமதிக்கிறீர்கள்? அது மிக வேகமாக ஏற்படும், பிசாசு ஏதாவது நல்லது நடக்கும் வாய்ப்பை திருடிவிட்டதை கூட நாம் அடையாளம் காண முடியாத அளவு மிக துரிதமாக நடைபெறும். நம் அனைவருக்குமே நமக்கு எதிராக சந்தேகத்தின் தாக்குதல்கள் ஏற்படுகின்றன, எனவே அது உங்களுக்கு நடந்தால் ஆக்கினைகுள்ளாக வேண்டாம். முக்கியமானது என்னவென்றால், அதை அங்கீகரித்து, அதை எதிர்த்து ஆபிரகாமைப் போல் இருந்து, தேவன் மீதான உங்கள் நம்பிக்கையைப் பற்றி சந்தேகமோ அல்லது அவநம்பிக்கையோ உங்களை அலைக்கழிக்க அனுமதிக்க கூடாது.

> சந்தேகம் உங்கள் விசுவாசத்தை திருட எவ்வளவு அதிகமாய் அனுமதிக்கிறீர்கள்?

நம் சந்தேகங்களை நியாயப்படுத்துவது எளிது. சாத்தான் பல விஷயங்களைப் பற்றி உறுதியற்றவர்களாகவும், நிச்சயமற்றவர்களாகவும் இருக்க செய்து நாம் அனுபவிக்கும் சந்தேகங்களுக்கு நல்ல காரணங்களையும் தருவான். தேவன் நாம் கேட்பதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் மிகவும் அதிகமாக செய்ய வல்லவராக இருக்கிறார். (எபே. 3:20), ஆனால் நாம் விசுவாசத்தில் கேட்க வேண்டும் என்று தேவன் கூறுகிறார்.

> ஆனாலும் அவன் எவ்வளவாயினும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருகிறான்,அப்படிபட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவன்.
>
> யாக்கோபு 1:6-8

சுய சந்தேகம்

சுய சந்தேகம் நமது மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்றாகும். நாம் தேவனை சந்தேகிப்பதை விட நம்மையே சந்தேகிக்கிறோம் என்று நான் நம்புகிறேன். நம்மில் பெரும்பாலானோர் தேவனால் எல்லாம் சாத்தியம் என்று உறுதியாக நம்புகிறோம், ஆனால் அவர் நமக்காக முடியாததைச் செய்வார் என்று சந்தேகிக்கிறோம். தேவனிடமிருந்து நம்மால் கேட்க முடியுமா இல்லையா என்று சந்தேகிக்கிறோம். நாம் சரியான முடிவுகளை எடுக்கிறோமா என்று சந்தேகிக்கிறோம், ஒவ்வொரு நாளும் சிறிதோ, பெரிதோ அல்லது வாழ்க்கையையே மாற்றக்கூடிய அநேக தீர்மானங்களை நாம் எடுக்க வேண்டி இருப்பதால் இது வேதனையளிக்கிறது.

சில நேரங்களில் நாம் எதைப் பற்றியாவது சரியாக இருக்கிறோமா என்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஒரே வழி, தவறாக இருப்பதற்கான வாய்ப்பைப் பெற தயாராக இருப்பதுதான். இது ஆச்சரியமாக இருக்கிறது-நாம் ஒரு தவறு செய்தாலும் கூட, தேவன் அதை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து நல்லதைச் செய்வார் (ரோமர் 8:28). வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்வதில் பெரும்பகுதி நம் தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டது என்று நான் நம்புகிறேன்.

தேவனிடமிருந்து எப்படி கேட்பது என்பதை கற்றுக்கொள்வதற்கான ஒரே வழி பயிற்சி மூலம் தான். தேவனுடைய வார்த்தையின் மூலமாகவும், நம் வாழ்க்கை அனுபவத்தின் மூலமாகவும் கற்றுக்கொள்கிறோம். நான் இன்னும் அடிக்கடி தேவனிடம் இருந்து கேட்பது எப்படி என்று படிக்கிறேன், அவரிடமிருந்து கேட்பது எப்படி என்று வேதத்தை அடிப்படையாகக் கொண்ட, நான் பார்க்கும் எந்த ஒரு புதிய புத்தகத்தையும் வாங்குவது என் வழக்கம். தேவனின் குரலைக் கேட்பது பற்றி நான் நிறைய கற்றுக்கொண்டேன், ஆனால் இந்த பகுதியில் எனது விசுவாசத்தை வலுவாக வைத்திருக்க விரும்புகிறேன், அதற்கான வழி படிப்பதும் முறையாக படிப்பதும்தான்.

> வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்வதில் பெரும்பகுதி நம் தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டது என்று நான் நம்புகிறேன்.

நீங்கள் அடிக்கடி இப்படி நினைக்கிறீர்களா:

நான் அதைச் செய்திருக்கக் கூடாது!
நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது!
நான் அதை வாங்கியிருக்கக் கூடாது!
நான் அங்கு சென்றிருக்கக் கூடாது!
நான் அதைச் சாப்பிட்டிருக்கக் கூடாது!
நான் நீண்ட நேரம் அல்லது சரியான வழியில் ஜெபிக்கவில்லை!
நான் மளிகைக் கடையில் அதிகம் செலவு செய்தேன்!
நான் அதிகம் பேசுகிறேன்!
நான் அமைதியாக இருக்க வேண்டும்!
நான் பேசியிருக்க வேண்டும்!
நான் ஒரு சிறந்த பெற்றோராக இருக்க வேண்டும்!
முடிவுகளை எடுப்பதில் எனக்கு சிக்கல் உள்ளது!

நீங்கள் எப்போதாவது நல்ல முடிவுகளை எடுக்க விரும்பினால், அதைச் செய்வதில் உங்களுக்கு சிக்கல் இருப்பதாகக் கூறுவதை நிறுத்துங்கள். தேவனின் குரலை நீங்கள் தெளிவாகக் கேட்கிறீர்கள் என்றும் நீங்கள் நல்ல முடிவுகளை எடுக்க முடியும் என்றும் நீங்கள் நம்புகிறீர்கள் என்றும் அறிக்கையிட தொடங்குங்கள்.

நாம் செய்திருக்க வேண்டிய அல்லது செய்யதிருக்க கூடாத ஆனால் இப்போது எதுவும் செய்ய முடியாத விஷயங்களைப் பற்றி அதிகமாகச்

சிந்திப்பது ஒரு பரிதாபமான கொடுங்கோன்மையாகும். நாம் தவறு செய்யும் வரை காத்திருந்து பின்னர் அதை மீண்டும் மீண்டும் நினைவூட்டுவதை சாத்தான் விரும்புகிறான். ஆனால் நாம் தவறு செய்வதற்கு முன் தவறான திசையில் செல்லும் போது தேவன் நமக்கு ஒரு உள் எச்சரிக்கையை அல்லது அமைதியின்மையைக் கொடுக்கிறார். ஆனால், நாம் சரியானதைச் செய்கிறோம் என்று நினைக்கும் போது, அது தவறாக முடிந்தால், தேவன் எப்போதும் போலவே நம்மை நேசிக்கிறார். மேலும் நமக்கு உதவி தேவைப்பட்டால், அவர் நமக்கு உதவுவார்.

> நாம் சரியானதைச் செய்கிறோம் என்று நினைக்கும் போது, அது தவறாக முடிந்தால், தேவன் எப்பொழுதும் போலவே நம்மை நேசிக்கிறார். மேலும் நமக்கு உதவி தேவைப்பட்டால், அவர் நமக்கு உதவுவார்.

நீங்கள் தேவனிடமிருந்து கேட்கவும், பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படவும் விரும்பினால், தேவனிடமிருந்து உங்களால் கேட்க முடியும் என்று நம்புங்கள். பின்னர் உங்கள் சித்தத்தை அவரிடம் ஒப்படைக்க தயாராக இருங்கள். மேலும் உங்கள் முன்னேற்றத்திற்காக நீங்கள் காத்திருக்கும் போது நன்றியுடன் விசுவாசத்தில் தொடர்ந்து இருங்கள். அவர் ஜெபித்தபின், இயேசு, “பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்” (யோவான் 11:41). அவருடைய பிதா அவருக்கு செவிக்கொடுத்தாரா இல்லையா என்று அவர் சந்தேகிக்கவேயில்லை அல்லது ஆச்சரியப்படவில்லை. அவர் கேட்டதற்காக அவருக்கு நன்றி கூறினார். நீங்களும் பிரார்த்தனை செய்த பிறகு அதையே செய்ய பரிந்துரைக்கிறேன்; தேவன் உங்களுக்கு செவிசாய்க்கிறார், அவரிடமிருந்து நீங்கள் கேட்க முடியும் என்ற வாக்குமூலம் உங்கள் இருதயத்தில் விசுவாசத்தை வளர்க்கட்டும்.

“பிதாவே, நீர் எனக்கு செவிகொடுத்ததற்கு நன்றி” என்று இயேசு கூறியபோது, சாத்தானின் பொய்களை (தேவன் தனக்குச் செவிசாய்க்கவில்லை என்று அவரிடம் சொல்லியிருக்கலாம்) மூழ்கடிக்க அவர் வாய்மொழியாக விசுவாசத்தை ஒப்புக்கொண்டாரோ? இது சாத்தியம் என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால் நம்முடைய பிரதான ஆசாரியராக, இயேசு நாம் கடந்து செல்லும் எல்லா காரியங்களையும் அவரும் கடந்து சென்றார். எபிரேயருக்கு எழுதியவர், இயேசு “நம்முடைய பலவீனங்களை உணர்ந்து அவற்றோடே (பலவீனங்களோடு) தன்னைப் பகிர்ந்துகொள்கிறார்” என்று கூறுகிறார்., மேலும் அவர் “நம்மைப் போலவே எல்லா வகையிலும்

சோதிக்கப்பட்டதால்" (எபி. 4:15) நாம் எப்படி உணர்கிறோம் என்பதை அவர் புரிந்துகொள்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் நான் கடந்து செல்லும் அதே விஷயங்களைக் கடந்து சென்று, நாம் எப்படி பிசாசினால் தாக்கப்படுகிறோமோ அவ்வாறாகவே அவரும் பிசாசினால் தாக்கப்பட்டார்.

பயம் தன்னை எப்படி வெளிப்படுத்தினாலும் அது ஒரு பயங்கரமான எதிரி, ஆனால் தேவனுடைய உதவியால் நாம் பிசாசின் பொய்களை அடையாளம் கண்டு அவருடன் நம் நடையில் முன்னேறி செல்லலாம். நாம் ஆவிக்குறிய போரில் இருக்கிறோம் என்பது உண்மைதான் என்றாலும், தேவனுடைய வார்த்தையின்படி, நாம் ஏற்கனவே வெற்றியைப் பெற்றுள்ளோம். நம் அன்றாட வாழ்க்கையில் அதை வெறுமனே நடத்திக்கொண்டிருக்கிறோம். எனவே அறிவிக்க வேண்டிய மற்றொரு நல்ல உண்மை என்னவென்றால், "எனக்கு வெற்றி இருக்கிறது."

ஒருவேளை நீங்கள் சந்தேகத்தை பயத்தின் ஒரு வடிவமாக நினைத்துப் பார்த்திருக்காமல் இருக்கலாம். ஆனால் அது அப்படியாகத் தான் இருக்கிறது. மேலும் இது எதிர்த்து நிற்க வேண்டிய ஒன்று. நீங்கள் தவறான திசையில் சென்று கொண்டிருந்தாலோ அல்லது தவறான முடிவை எடுத்திருந்தாலோ அதை உங்களுக்குக் காட்டும்படி தேவனிடம் கேட்பது நல்லது. ஆனால் உங்கள் முடிவுகளைப் பற்றி நீங்கள் எப்போதும் தவறாக இருக்கிறீர்கள் என்று பயப்பட வேண்டாம். தேவன் நமக்கு சுதந்திரமான விருப்பத்தைத் தந்திருக்கிறார், அதாவது நாம் செய்யும் எல்லாவற்றிலும் அவர் ஈடுபட விரும்பினாலும், நாம் சிந்திக்கவும், திட்டமிடவும், ஞானத்தைப் பயன்படுத்தவும், தேர்வுகள் செய்யவும் அவர் விரும்புகிறார். பல சமயங்களில் நாம் ஏதாவதொன்றை செய்ய தேவன் விரும்புவதில்லை. நம்முடைய தேர்வு அவருடைய வார்த்தைக்கு ஏற்ப இருக்கும் வரை அவர் நமக்குத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை அளிக்கிறார். இதற்கு ஒரு தந்தை ஒரு நல்ல உதாரணம் சொன்னார். தன் மகனையும் மகளையும் போய் விளையாடச் சொல்லும் போது, அவர்கள் அறைகளிலே விளையாடலாம் அல்லது கொல்லைப்புறத்தில் விளையாடலாம். அதைப் பற்றி அவருக்கு எந்த முன்னுரிமையும் இல்லை என்றார். அவர்கள் தங்கள் பொம்மைகளுடன் விளையாடலாம் அல்லது வெளியே சென்றும் விளையாடலாம். அவர்கள் விளையாட வேண்டும் அவ்வளவு தான்.அதை தான் அவர் விரும்புகிறார். அதை எப்படிச் செய்கிறார்கள் என்பது அவர்களைப் பொறுத்தது. சிறு குழந்தைகளை விளையாடச் சொல்லிவிட்டு, அவர்கள் தவறான விதமாக விளையாடுகிறார்களோ என்று பயப்படுவதை

சிறு குழந்தைகளை விளையாடச் சொல்லிவிட்டு, அவர்கள் தவறாக விளையாடுகிறார்கள் என்று பயப்படுவதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா?

உங்களால் கற்பனை செய்ய முடியுமா? தேவன் நம்மை சிறு குழந்தைகளாக தம்மிடம் வரச் சொல்கிறார் (மத். 18:3), அப்படியானால் ஒரு நம்பிக்கையான மனப்பான்மையுடன் அவரை அணுக வேண்டும் என்று அர்த்தம்.

தவறாக இருப்போமோ என்ற பயம் தவறு

தவறாக இருப்போமோ என்ற பயம், சுயசந்தேகம் மற்றும் இரட்டை மனப்பான்மையின் வேர், ஆனால் தவறான முடிவுகளை எடுப்பது தவறானவர்களாக நம்மை ஆக்குவதில்லை என்பதை நாம் உணர்ந்தால், பல துன்பங்களைத் தவிர்க்கலாம். நாம் எடுக்கும் எல்லா முடிவுகளும் சரியாக இருந்தாலும் இல்லாவிட்டலும் தேவன் நம்மை நேசிக்கிறார். எனவே தவறாக இருக்க நாம் பயப்படத் தேவையில்லை. பெரிய காரியங்களைச் செய்பவர்கள் பொதுவாக முதல் பல முயற்சிகளில் தோல்வி அடைவார்கள், ஆனால் அவைகள் தோல்விகள் என்று அவர்கள் நம்புவதில்லை. அவர்கள் ஏதோ ஒன்றை முயற்சித்தார்கள், அது பலன் அளிக்கவில்லை என்பதாகவே அதை எடுத்துக் கொள்கிறார்கள்.

நான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் போது, நான் தவறு செய்தால் (நான் செய்கிறேன்), எனது தயாரிப்பாளர்கள் என்னிடம், "அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம், ஏனென்றால் அதை சரி செய்து விடலாம்" என்று செல்வார்கள்.அவர்களின் கருத்து என்ன? அனைவரும் பார்க்கும் வகையில் தொலைக்காட்சியில் வரும் முன் எடிட்டிங் நடைமுறைகள் மூலம் அதை அகற்றி சரிசெய்யலாம் என்று அர்த்தம். நாம் தவறுகள் செய்யும் போது தேவனும் அவற்றை சரி செய்து விடுவாரென்று நினைக்கிறேன். மேலும் நமது தவறுகளை எடுத்துக் கொண்டு அவற்றிலிருந்து ஏதாவது நல்லதைச் செய்வதற்குத் தேவையான அனைத்து எடிட்டிங் உபகரணங்களும் அவரிடம் உள்ளன என்று நான் நம்புகிறேன். நீங்கள் தவறு செய்திருக்கலாம் என்று நீங்கள் நினைக்கும் போது, அதை ஏற்றுக்கொண்டு அதை நன்மைக்காகச் செய்யும்படி தேவனிடம் கேளுங்கள் (ரோமர் 8:28).

ஒரு தவறைக் கையாள்வதற்கான மற்றொரு நல்ல வழி, அதை வெறுமனே ஒப்புக்கொண்டு வாழ்க்கையில் அடுத்த சவாலுக்குச் செல்வது தான். நான் என் தவறுகளை மூடிமறைக்க அல்லது சாக்குப்போக்கு சொல்ல முயற்சிக்காமல்

ஒப்புக்கொண்டால், மக்கள் என்னை அதிகமாக மதிக்கிறார்கள் என்பதை நான் கண்டேன்.

> நான் என் தவறுகளை மூடிமறைக்க அல்லது சாக்குப்போக்கு சொல்ல முயற்சிக்காமல் ஒப்புக்கொண்டால், மக்கள் என்னை அதிகமாக மதிக்கிறார்கள் என்பதை நான் கண்டேன்.

நீங்கள் தவறாக இருப்பதை இன்னும் நேர்மறையான வழியில் பார்க்கலாம் மற்றும் அதைப் பற்றிய பயத்தை இழக்கலாம். ஒவ்வொருவரும் தவறு செய்கிறார்கள், எனவே உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள் மற்றும் நீங்கள் வாழ்க்கையில் பயணம் செய்யும் போது, தேவன் உங்களுக்குக் கற்பிப்பார் என்று நம்புங்கள்.

நீங்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டியிருக்கும் போது, அதைப் பற்றி ஜெபித்து, உங்கள் விருப்பங்களைப் பற்றி சிந்தித்து, நீங்கள் செல்லக்கூடிய ஒவ்வொரு வழியின் நன்மை தீமைகளையும் கருத்தில் கொண்டு, பின்னர் தைரியமாக முடிவெடுக்கவும். நீங்கள் சில சமயங்களில் தவறாக இருக்கலாம். ஆனால் நீங்கள் நினைப்பதை விட நீங்கள் புத்திசாலியாக இருப்பதால் நீங்கள் தவறாக இருப்பதை விட சரியாக இருப்பீர்கள். நீங்கள் கிறிஸ்துவின் மனதைக் கொண்டிருக்கிறீர்கள். அவருடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார். (1 கொரி. 2:16; யோவான் 14:17). ஒவ்வொரு நாளும் நீங்கள் படுக்கையில் இருந்து எழுந்தவுடன், தேவன் உங்களுடன் இருப்பதால் நீங்கள் ஒரு நல்ல நிலைமையில் இருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.

தேவன் உங்கள் பட்சமாக இருக்கிறார், எனவே யார் உங்களுக்கு எதிராக இருக்கிறார்கள் அல்லது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது முக்கியமல்ல (ரோமர் 8:31). தேவனுக்காக தைரியமாக வாழுங்கள், அவர் உங்களுக்கு வழங்கிய வாழ்க்கையை அனுபவியுங்கள். சந்தேகமும் இரட்டை எண்ணமும் உங்கள் அமைதியையும் மகிழ்ச்சியையும் திருட விடாதீர்கள்.

நன்றியுணர்வு கடந்த காலத்தைப் பார்க்கிறது மற்றும் அன்பு நிகழ்காலத்தைப் பார்க்கிறது; பயம், பேராசை, காமம் மற்றும் லட்சியம் ஆகியவை எதிர்நோக்குகின்றன.

- சி. எஸ். லூயிஸ், தி ஸ்க்ரூடேப் லெட்டர்ஸ்

என் பயத்தின் மூலம் தடுமாற்றம்

எனக்கு பதினோரு வயதாகி, நான் ஐந்தாம் வகுப்பில் இருந்தபோது, ஜூனியர் லீடர் ஆவதற்கான தேர்வுகள் விரைவில் நடைபெறும் என்று பள்ளியில் எங்களுக்கு அறிவிப்பு வந்தது. இந்த நாளுக்காக நான் நீண்ட நாட்களாக காத்திருந்தேன். முயற்சிகளுக்குத் தயாராக இருப்பதற்காக நான் மிகவும் கடினமாக உழைத்தேன், ஆனால் வேறு என்ன எதிர்பார்க்க வேண்டும் அல்லது என்ன தேவை என்று எனக்குத் தெரியவில்லை.

முயற்சியின் முதல் நாள் பயம் தாக்கியது. நான் என் வகுப்பைச் சேர்ந்த பத்து அல்லது பதினைந்து பெண்களுடன் மட்டுமல்லாமல், ஏற்கனவே அணியில் இருந்த ஆறாம் மற்றும் ஏழாம் வகுப்பு பெண்களுடன் போட்டியிடுவேன் என்று கண்டுபிடித்தேன். துள்ளிக்குதிப்பது நான் பழகியதைப் போல இல்லை என்பதையும், குட்டிகரணம் அடிக்கையில் எனக்கு ஏதாவது சிரமம் இருந்தால் யாரும் எனக்கு உதவ மாட்டார்கள் என்பதையும் நான் விரைவாக அறிந்துகொண்டேன்.

பயிற்சியாளர் எங்கள் திறமைகளை மதிப்பீடு செய்ய வேண்டும், ஆனால் எந்தவித குட்டிகரணமும் செய்ய முடியவில்லை என்றால், நாங்கள் உட்கார்ந்து இருக்க வேண்டும் என்று எங்களிடம் கூறினார். எனவே, நான் ப்ளீச்சர்களில் தங்கினேன். பிறகு என் அப்பா என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்றபோது, நான் காரில் ஏறி அழ ஆரம்பித்தேன். அவர் என்னிடம் என்னவாயிற்று என்று கேட்டார், நான் இவ்வாறு சொன்னேன், “நான் என் டம்ப்லிங் செய்யவில்லை. நான் விழுந்து என்னை காயப்படுத்திக்கொள்ளவேனோ என்று மிகவும் பயந்தேன்” என்று. அவர் என்னை ஊக்குவித்து, அதைச் செய்ய இன்னும் இரண்டு இரவுகள் இருப்பதாக எனக்கு நினைவூட்டினார், ஆனால் பயத்திற்கு எதிராக நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று அவர் கூறினார். நான் அதை பற்றி மட்டும்தானா கவலைப்படுகிறேன் என்று அவர் என்னிடம் கேட்டார், நான் சொன்னேன், “நான் வயதில் மூத்த பெண்கள் மற்றும் பயிற்சியாளர் முன் விழுந்தால் வெட்கப்படுவேன் என்றும் எனக்கு பயமாக இருக்கிறது” என்றேன். அவர் என்னிடம் சொன்னார், “சில நேரங்களில், நாம் பயந்து காரியங்களைச் செய்ய வேண்டும்!” வீட்டிற்கு செல்லும் வழியில் நாங்கள் பிரார்த்தனை செய்தோம், நான் நன்றாக உணர ஆரம்பித்தேன், ஆனாலும் நான் இன்னும் பதட்டமாக இருந்தேன்.

அடுத்த நாள் இரவு என் அப்பா என்னை சோதனைக்கு அழைத்துச் சென்றபோது, நான் ஓடி வந்து அவரது கைகளில் குதித்து அவரை இறுக்கமாக அணைத்துக் கொண்டேன். என்னவாயிற்று என்று அவர் என்னிடம் கேட்டார், "நான் அதைச் செய்துவிட்டேன்! என்று நான் சொன்னேன், நீங்கள் சொன்னது போல், நாம் பிரார்த்தனை செய்ததைப் போலவே நான் பயந்து கொண்டேதான் செய்தேன். மேலும், நான் அதை நன்றாக செய்தேன்!"

நான் குழுவில் சேர்ந்தேன், ஆனால் நான் கற்றுக்கொண்ட மிக முக்கியமான பாடம் என்னவென்றால், சில நேரங்களில் நீங்கள் பயந்து கொண்டே செய்ய வேண்டும்!

- சோஃபி

அத்தியாயம் 11

கடந்த காலத்தைப் பற்றி வருந்தவோ அல்லது எதிர்காலத்தைப் பற்றி பயப்படவோ மறுக்கவும்

உங்கள் கண்கள் நேராய் நோக்கக்கடவது; உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய் பார்க்கக்கடவது.

நீதிமொழிகள் 4:25

அவருடைய பெயர் என்ன என்று மோசே தேவனிடம் கேட்டபோது, “இருக்கிறவராகவே இருக்கிறேன்” (யாத்திராகமம் 3:14) என்று தேவன் பதிலளித்தார். கடுமையான புயலின் போது சீடர்கள் இயேசுவுடன் படகில் இருந்தபோது மிகவும் பயந்தார்கள். அவர்களுடைய பயத்திற்கு இயேசு பதிலளித்தார், “திடன் கொள்ளுங்கள், நான் தான் பயப்படாதிருங்கள் என்றார்” (மத். 14:27).

தேவன் இந்த நேரத்தில் இருக்கிறார். அவர் இன்று இருக்கிறார். அவர் தன்னை “நான் இருந்தேன்” அல்லது “நான் இருப்பேன்” என்று குறிப்பிடாமல் “நான் இருக்கிறேன்” என்று குறிப்பிடுகிறார். அவர் எங்கும் நிறைந்தவர், அதாவது அவர் எல்லா நேரத்திலும், எல்லா இடங்களிலும் இருக்கிறார். கடந்த காலத்தின் வருத்தத்தில் அல்லது எதிர்காலத்தைப் பற்றிய பயத்தில் நாம் வாழ்ந்தால், இன்று அவர் நமக்காக வைத்திருப்பதை இழக்கிறோம். உங்கள்

> உங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமான தருணம் நிகழ்காலமே.

வாழ்க்கையின் மிக முக்கியமான தருணம் நிகழ்காலம். நிகழ்காலத்தில் இருப்பதன் மூலம் அதில் முழுமையாக வாழுங்கள்.

நாம் அனைவரும் கடந்த காலத்தில் தவறுகளை செய்துள்ளோம், எதிர்காலத்தில் நாம் அனைவரும் இன்னும் தவறுகளை செய்வோம். நாம் அனைவரும் கடந்த காலத்தில் அநீதிகளைச் சகித்திருக்கிறோம், மேலும் எதிர்காலத்தில் சில சமயங்களில் அவற்றை அனுபவிப்போம், ஆனால் இன்று அவற்றைப் பற்றி கவலைப்படுவதும் வருத்தப்படுவதும் நேரத்தை வீணடிப்பதாகும். இன்று நாம் நமது கடந்த காலத்தை எடுத்துக்கொண்டு அதை மீட்டெடுக்கும்படி தேவனிடம் கேட்கலாம் அல்லது அதை “மறுசுழற்சி” செய்து நல்லதாக மாற்றும்படி கேட்கலாம். குப்பைத் துண்டுகளை மறுசுழற்சி செய்வதற்கும், அவற்றைப் பயன்படுத்தக்கூடிய பொருட்களாக மாற்றுவதற்கும் மக்கள் அனைத்து வகையான வழிகளையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். அந்த யோசனையை உருவாக்கியவர்கள் தங்களை மிகவும் ஆக்கப்பூர்வமாக இருப்பதற்காக பாரட்டிக்கொள்ளலாம், ஆனால் தேவன் கால தொடகத்திலிருந்து குப்பைகளை மறுசுழற்சி செய்து வருகிறார். அவர் நம் இருதயம் மற்றும் வாழ்க்கையின் உடைந்த துண்டுகளை எடுத்து, அவற்றை பயனுள்ள ஒன்றாக மாற்றுகிறார்.

தேவன் தனது ராஜ்யத்தில் பயன்படுத்த முட்டாள்தனமான, பலவீனமான மற்றும் தாழ்ந்த மற்றும் உலகத்தால் இழிவுபடுத்தப்பட்டதைத் தேர்ந்தெடுக்கிறார் என்று அப்போஸ்தலன் பவுல் கூறினார். எந்த மனிதனும் தம் முன்னிலையில் மேன்மைபாராட்டக் கூடாது என்பதற்காக அவர் இதைச் செய்கிறார் (1 கொரி. 1:26-31).

நான் இளமை பருவத்திலிருந்த போது, நான் எல்லா வகையிலும் உடைந்திருந்தேன். என் இருதயம் உடைந்திருந்தது, என் ஆத்துமா காயப்பட்டிருந்தது, எனக்கு மிகவும் மோசமான சுய உருவம் இருந்தது, எனக்கு உண்மையான நம்பிக்கை இல்லை. எனக்குள் ஏதோ ஒன்று, தேவன் என்று இப்போது நான் அறிந்திருக்கிறேன், நான் பெரிய காரியங்களைச் செய்ய முடியும் என்று என் ஆத்துமாவிடம் கிசுகிசுத்தார், ஆனால் அது சாத்தியமற்றதாகத் தோன்றியது, என் மனம் அத்தகைய எண்ணத்தை எதிர்த்துப் போராடியது. அதோடு, நான் குப்பை மற்றும் பயனற்றவள் என்ற தவறான எண்ணங்களை சாத்தான் தொடர்ந்து என் மனதில் விதைத்தான். நான் சகித்துக் கொண்ட துஷ்பிரயோகத்தால் நான் பாதிக்கப்பட்டிருந்ததால், எனக்கு எப்பொழுதுமே இரண்டாம் தரமான வாழ்க்கைதான் கிடைக்குமென்று என்று அவன் என்னிடம் கூறினான.

அதிர்ஷ்டவசமாக, தேவனை அவருடைய வார்த்தையின் மூலம் நான் எவ்வளவு அதிகமாக அறிந்துகொண்டேனோ, மேலும் அவர் என் வாழ்க்கையில் கிரியை செய்வதை எவ்வளவு அதிகமாகப் பார்த்தேனோ, அவ்வளவு அதிகமாய் சாத்தான் ஒரு பொய்யன் என்பதையும், எனது நிகழ்கால வாழ்க்கைக்கு கடந்தகால வாழ்க்கையை நான் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டியதில்லை என்பதையும் உணர்ந்தேன். உங்களுக்கும் அப்படித்தான். உங்கள் வரலாறு உங்கள் விதி அல்ல. இந்த வசனம் குறிப்பிடுவது போல், கடந்த காலத்தை விட்டுவிட்டு இப்போது உங்களுக்காக அவர் வைத்திருக்கும் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டியதன் அவசியத்தை தேவன் தெளிவாகக் குறிப்பிடுகிறார்:

> முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்! இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.
>
> ஏசாயா 43:18-19

இந்த வேதாகமப் பகுதியை நான் முதன்முதலில் அறிந்தபோது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது என்பதை நான் இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன். புதிய தொடக்கம் தேவைப்படும் எவருக்கும் இது நம்பிக்கை நிறைந்ததொன்றாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரில் வாழும்போது, பழையவைகள் ஒழிந்து, எல்லாமே புத்தம் புதியதாக மாறுகிறது என்பது தேவனின் வாக்கு (2 கொரி. 5:17). நேற்றைய வருத்தத்தில் வாழ்வது, நமது கடந்த காலத்தை மாற்றி, நமக்கு ஒரு புதிய தொடக்கத்தைத் தரும் அளவுக்கு தேவன் பெரியவர் என்று நாம் நம்பவில்லை என்பதைக் குறிக்கிறது. ஆனால் அவர் அப்படி செய்கிறார். இந்த வாக்குத்தத்தை உள்ளடக்கிய சில வசனங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை என்னால் தள்ளிவிட முடியாது:

> நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது.
>
> புலம்பல் 3:22-23
>
> ஆனால் நான் ஒன்று செய்கிறேன்: பின்னானவைகளை

மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் இலக்கை நோக்கி தொடருகிறேன்.

பிலிப்பியர் 3:13-14

இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன். முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை.

ஏசாயா 65:17

நாம் கிறிஸ்துவைப் ஏற்றுக்கொள்ளும் போது நம் வாழ்வில் உள்ள அனைத்தும் உடனடியாக மாறாது. நாம் வித்தியாசமாகத் தோன்றுவதில்லை, அல்லது நம் சூழ்நிலைகளெல்லாம் உடனடியாக மேம்படுவதில்லை, ஆனால் மாற்றத்திற்கான சாத்தியம் இப்போது தேவனிடமிருந்து நாம் பெற்ற வாக்குறுதியாகும். அவர் நம்மை புதிய ஆவிக்குரிய களிமண்ணாக ஆக்குகிறார் என்று நான் கூற விரும்புகிறேன். நாம் அவரை அனுமதித்தால், அவர் நம்மை அவருடைய சாயலாக உருவாக்குவார் (ரோமர் 8:29). என்ன ஒரு பெரிய மாற்றம் என்று கற்பனை செய்து பாருங்கள். ஒரு காலத்தில் நாம் எப்படி இருந்தோமோ அதிலிருந்து இயேசு எப்படி இருக்கிறாரோ அப்படியாக மாறுவது - இப்போது அது ஒரு அற்புதமான மாற்றம்.

நம்பிக்கையின் வல்லமை

நாம் நம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், அதே நேரத்தில் கடந்த காலத்தைப் பற்றிய வருத்தத்துடனோ அல்லது எதிர்காலத்தைப் பற்றி பயத்துடனோ வாழ்வோமென்றால் அது மிகவும் கடினமானதாக இருக்கும். நம்பிக்கை என்பது நமக்கு நல்லது நடக்கப் போகிறது என்ற நேர்மறையான எதிர்பார்ப்பாகும். நாம் ஜீவனுள்ள நம்பிக்கைக்குள் பிறந்தோம் என்று அப்போஸ்தலன் பேதுரு கூறினார் (1 பேதுரு 1:3). ராபர்ட் ஷுல்லர் கூறினார், “உங்கள் காயங்கள் அல்ல, உங்கள் நம்பிக்கையே, உங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கட்டும்.”

எனது முப்பது வயதின் ஆரம்பக் காலம் வரை எனக்கு ஏமாற்றமான வாழ்க்கை தான் இருந்தது. நான் நிறைய வலிகளையும் அநீதிகளையும் அனுபவித்தேன், சிறப்பான ஏதோவொன்றை எதிர்பார்த்து, அது நடக்காவில்லை என்றால் நான் ஏமாற்றமடைவேன் என்று பயந்தேன். “எதுக்கு கஷ்டம்?” என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். கடந்த காலத்திலிருந்து எனது வருத்தங்கள் எனது நிகழ்காலத்தை அழிக்க

மட்டுமல்லாமல், எனது எதிர்காலம் இருண்டதாகத் தான் இருக்கும் என்பதாய் நான் உணர்ந்துக் கொண்டிருந்தேன். ஆனால், தேவனுடனான எனது அனுபவமும் அவருடைய வார்த்தையில் உள்ள வாக்குத்தத்தங்களும் என் எதிர்பார்ப்புகளை மாற்றிவிட்டன. இப்போது எனக்கு நம்பிக்கை இருக்கிறது! நான் அடிக்கடி சொல்வேன், "எனக்கு வாழ்க்கையில் ஒரு நல்ல தொடக்கம் இல்லை, ஆனால் நான் ஒரு சிறந்த முடிவைப் பெற விரும்புகிறேன்." என்று. உங்களுக்கும் அப்படித்தான்.

> நான் வாழ்க்கையில் ஒரு நல்ல தொடக்கத்தைக் கொண்டிருக்கவில்லை, ஆனால் நான் ஒரு சிறந்த முடிவைப் பெற விரும்புகிறேன்.

சவுல், வேதத்திலுள்ள ஒரு நல்ல உதாரணம். அவர் இஸ்ரவேலின் முதல் ராஜாவாக இருந்தார், தேவன் அவரை அந்த பதவிக்கு அபிஷேகம் செய்திருந்தாலும், அவர் கலகக்காரராக இருந்தார். ஒரு கட்டத்தில், சாமுவேல் தீர்க்கதரிசியிடம், சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக ஆக்கியதற்கு வருந்துவதாக தேவன் கூறினார். சாமுவேல் துக்கமடைந்து இரவெல்லாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான் (1 சாமு. 15:10-11). தேவன் ஏமாற்றமடைந்தார் என்று நான் உறுதியாக நம்பினாலும், அவர் சாமுவேலிடம் சவுலைப் பற்றி வருத்தப்படுவதை நிறுத்திவிட்டு, அவனுடைய இடத்தைப் பிடிக்க ஒரு ராஜாவை அபிஷேகம் செய்யும்படி கூறினார் (1 சாமு. 16:1). இந்த வசனங்கள் கொண்டு வரும் செய்தியை நான் எப்போதும் ரசித்திருக்கிறேன், ஏனென்றால் நாம் எதிர்பார்த்தபடி நடக்காத விஷயங்களைப் பற்றி நாம் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மைக்கு அவை ஒரு மாதிரியாக இருக்கின்றன. நாம் மனந்திரும்பி, நமது தோல்வி அல்லது ஏமாற்றத்திற்காக வருந்தவேண்டும், பின்னர் புதிதாக அடுத்த காரியத்திற்கு செல்ல வேண்டும். மக்கள் தோல்வியுற்றாலும், தேவனுக்கு ஒருபோதும் திட்டம் இல்லாமல் இல்லை.

நீங்கள் செய்யாத எதற்கும் அல்லது உங்களுக்கு செய்யப்பட்ட எதற்கும் தேவனிடம் பரிகாரம் இல்லாமல் இல்லை. பிசாசு உங்கள் நம்பிக்கையை இனியும் பறித்து விட அனுமதிக்க வேண்டாம் என்று வருந்தி கேட்டுக்கொள்கிறேன். நம்பிக்கை ஒரு சிறந்த ஊக்கம். தினமும் காலையில் உங்கள் வாழ்க்கைக்கு ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டிருக்கும் ஒரு நல்ல தேவனுக்கு நீங்கள் சேவை செய்கிறீர்கள் என்று நம்புவது, படுக்கையில் இருந்து எழுவதற்கு ஒரு காரணமாக இருக்கிறது.

2017 டிசம்பரில் நான் திடீரென ஒரு பலவீனப்படுத்தும் நோயால் பாதிக்கப்பட்டேன். நான் முன்பு மிகவும் வலுவாக இருந்தேன் மற்றும் நிறைய சகிப்புத்தன்மையுடன் இருந்தேன், ஆனால் எனக்கு முற்றிலும் ஆற்றல் இல்லாததால் திடீரென்று என்னால் அதிகம் செய்ய முடியவில்லை. ஜெபத்தின் வல்லமையை நம்பும் ஒரு பெண்ணாக, தேவனுடைய சுகத்திற்காக அல்லது என் பிரச்சினைக்கான பதில்களுக்காக நான் தினமும் ஜெபித்தேன்-பெரும்பாலும் ஒரு நாளைக்கு பல முறை ஜெபித்தேன். மருத்துவம் ஒரு சிறிய உதவியை வழங்கியது. அதிக நேரம் கடினமாக உழைத்ததால் ஏற்பட்ட மன அழுத்தத்தால் எனக்கு அட்ரீனல் சோர்வு ஏற்பட்டுள்ளது என்றார்கள். நான் ஒரு வருடம் முதல் பதினெட்டு மாதங்கள் வரை நான் வெளிப்புறமாகவும் உள்புறமாகவும் ஓய்வெடுக்க வேண்டும் என்றும், நான் முன்பு இருந்ததைப் போல என்னால் கடினமாக உழைக்க முடியாது என்றும் நான் நம்பிய மற்றும் நீண்ட காலமாக அறிந்த ஒரு மருத்துவர் என்னிடம் கூறினார். பதினெட்டு மாதங்களுக்கு நான் ஓய்வெடுக்க விரும்பவில்லை என்பதால், இவை அனைத்தும் எனக்கு உணர்ச்சி ரீதியாக மிகவும் கடினமாக இருந்தது, ஆனால் எனக்கு வேறு வழியில்லாததால் நான் மிகவும் சோர்ந்து போனேன்.

எனக்காக தேவன் ஏதாவது செய்ய வேண்டியிருந்தது. நான் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் எனக்கு இருந்தன, மேலும் நான் செய்ய வேண்டியதைச் செய்வதற்குத் தேவையான ஆற்றலைக் கொடுக்க தேவன் உண்மையுள்ளவராக இருந்தார். ஆனால் எனது வாழ்க்கைமுறையில் சில பெரிய மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது. பலர் ஜெபித்தார்கள், ஒவ்வொரு நாளும் நான் ஏதாவது வித்தியாசத்தைக் காண்பேன் என்று நம்பி, ஒரு நல்ல மனப்பான்மையைக் காத்துக்கொள்ள என்னால் முடிந்த அனைத்தையும் செய்தேன். நாளுக்கு நாள் நான் அப்படியே இருந்தேன். சில நேரங்களில் அது ஊக்கமிழக்கக்கூடியதாக இருந்தது, ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். கிட்டத்தட்ட பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு, வெளிப்படையான காரணமேதுமின்றி, நான் வலுவாக உணர ஆரம்பித்தேன். முதலில் சில நாட்கள் அவ்வப்போது உணர்ந்தேன், ஆனால் அடுத்த சில மாதங்களில் நான் மீண்டும் நன்றாக உணர்ந்தேன். நான் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்ய தேவையான பெலன் இருந்தது. பதினெட்டு மாதங்கள் ஏன் எடுத்தது? என் பிரார்த்தனைகள் ஏன் சீக்கிரமாக பதிலளிக்கப்படவில்லை? ஏன் என்று தெரியவில்லை. “ஏன்?” என்ற கேள்வியை கேட்பதை நாம் நிறுத்துவதே இல்லை, ஆனால் அதற்கு பதில் கிடைப்பது அரிது. நம்பிக்கையாக இருக்க எப்போதுமே பதிலளிக்கப்படாத கேள்விகள் இருக்க வேண்டியிருக்கும்.

தேவன் பதில் அளிக்க எவ்வளவு காலம் எடுத்தாலும், நாம் ஒருபோதும் கைவிடக்கூடாது என்பதை இந்த அனுபவத்திலிருந்து நான் கற்றுக்கொண்டேன். நமது முழுமையான விடிவு காலத்திற்காக நாம் காத்திருக்கும்போது, தொடர்ந்து செல்வதற்கு தேவன் நமக்கு பலம் தருகிறார். உங்கள் நம்பிக்கையை எதுவும் திருடிவிட வேண்டாம் என்று இந்தக் கதை உங்களை ஊக்குவிக்கட்டும். நம்பிக்கையை ஒரு பழக்கமாக ஆக்குங்கள், உங்கள் வாழ்க்கையில் விஷயங்கள் ஒருபோதும் சிறப்பாக இருக்காது என்ற பயத்திலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தேவன் இருக்கிறவராகவே இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் செய்ய வல்லவர், நீங்கள் கடந்த காலத்திலோ எதிர்காலத்திலோ அல்ல, நிகழ்காலத்தில் வாழ வேண்டும் என்பதே அவருடைய விருப்பம். நான் நோய்வாய்ப்பட்டபோது, நான் கட்டாயப்படுத்தப்படுவதற்கு முன்பு என்னை நன்றாக கவனித்துக் கொள்ளவில்லை என்று வருந்தினேன். ஆனால் வருத்தத்தை சுமப்பது அதிக மன அழுத்தத்தை சேர்க்கும் என்று எனக்குத் தெரியும், அதனால் நான் மனந்திரும்பினேன், எனக்குக் கற்பித்து என்னைக் குணப்படுத்தும்படி தேவனிடம் கேட்டேன்.

வருத்தத்தில் வாழ்வதன் மூலம் இன்று தேவன் உங்களுக்காக வைத்திருப்பதை தவற விட்டு விடாதீர்கள். இன்று உங்கள் வாழ்வில் முக்கியமான நாள். இது உண்மையில் உங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமான நாள், ஏனென்றால் இப்போது உங்களுக்கு என்று உறுதியாக இருக்கும் ஒரே நாள் இதுவே, எனவே அதில் முழுமையாக வாழுங்கள் மற்றும் உங்கள் கடந்த காலத்தையும் உங்கள் எதிர்காலத்தையும் தேவன் பார்த்துக்கொள்வாரென்று நம்புங்கள்.

பயத்தை தோற்கடித்தல்

எல்லோரும் தவறு செய்கிறார்கள். நீங்கள் இப்பொழுது எதிர் கொள்வது பல வருடங்களுக்கு முந்தைய தவறுகளாகவோ அல்லது ஐந்து நிமிடங்களுக்கு முந்தைய தவறுகளாகவோ எதுவாகவும் இருக்கலாம். கடந்த காலம் உங்களுக்கு பின்னால் உள்ளது. இந்த நாளைத் திருடக்கூடிய வருத்தம், எதிர்காலத்தைப் பற்றிய பயம், குற்ற உணர்வு, கசப்பு, மன்னிக்க முடியாத மனப்பான்மை அல்லது வேறு எந்தவிதமான எதிர்மறையான மற்றும் பயனற்ற உணர்ச்சிகளால் நீங்கள் இப்போது வாழும் தருணத்தை வீணாக்காதீர்கள். நான் அத்தியாயம் 1 இல் எழுதியது போல், உங்கள் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை நீங்கள் தேர்வு செய்யலாம், எனவே உங்கள்

விவகாரங்களில் தேவன் தலையிடுவதற்கான கதவைத் திறக்கும் ஒரு தேர்வு செய்யுங்கள்.

நான் குறிப்பிட்டுள்ளபடி, அச்சம் என்பது ஒரு வகையான பயம். அச்சம் என்பது நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்ய முடியாது அல்லது நீங்கள் அதைச் செய்யும்போது அனுபவிக்க முடியாது என்ற பயம். இது தெரியாததைப் பார்த்து பீதியை உணர்கிறது, ஏனென்றால் எதிர்காலம் என்ன என்பதைச் சரியாகக் காட்டும் ஒரு நல்ல வரைபடத்தை உங்களுக்கு முன்னால் நீங்கள் காணவில்லை. தேவன் மர்ம புத்தகங்களை எழுதினால், நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் ஒரு புத்தகமாக இருக்கும். தேவன் நம்மைக் கவனித்துக்கொள்வதாக வாக்களித்துள்ளார், ஆனால் அவர் அதை எப்படி அல்லது எப்போது செய்வார் என்ற விவரங்களை நமக்குத் தரவில்லை.

> தேவன் மர்ம புத்தகங்களை எழுதினால், நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் ஒரு புத்தகமாக இருக்கும்.

ஓய்வு எடுப்பது முதல் உணவுகளை சாப்பிடுவது வரை எதற்கும் நாம் பயப்படலாம், ஆனால் எந்த விதமான அச்சமும் நமக்குத் தேவையான ஆற்றலை நம்மிலிருந்து வடிகட்டிவிடுகிறது. மளிகைக் கடைக்குச் செல்வது அல்லது நெரிசலான நேரத்தில் வேலைக்குச் செல்வது போன்ற எளிய விஷயங்களுக்கு கூட நாம் பயப்படும்போது, நாம் உண்மையில் என்ன செய்கிறோமென்றால், அவற்றைச் செய்ய இயலாது அவற்றை அனுபவிக்க இயலாது என்பதை முன்கூட்டியே தீர்மானித்துவிடுகிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், நாம் எல்லாவற்றையும் தேவனோடும் அவருடைய மகிமைக்காகவும் செய்யும்போது எல்லாவற்றையும் அனுபவிக்க முடியும்.

உதாரணமாக, நீங்கள் உங்கள் வீட்டைச் சுத்தம் செய்யப் போகிறீர்கள் என்று தீர்மானிக்கலாம், ஏனென்றால் அவர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் நன்றாகக் கவனித்துக் கொள்கின்றீர்களென்று தேவன் மகிழ்ச்சியடைய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். அல்லது அதைச் செய்ய நீங்கள் பயப்படலாம், நீங்கள் எவ்வளவு பயப்படுகிறீர்கள் என்பதை அடிக்கடி வாய்மொழியாகவும் கூறலாம். நிச்சயமாகவே, சுத்தம் செய்தேயாக வேண்டுமென்ற நேரம் வரும்போது, நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்யும் நேரம் முழுவதும் உங்களுக்கு மோசமான மனப்பான்மையே இருக்கும். நீங்கள் செய்ய வேண்டிய எதையும், ஒரு நல்ல மனப்பான்மையுடன் செய்யலாம், ஏனென்றால் ஒரு மோசமான மனப்பான்மை அதைச் செய்யும் பொறுப்பிலிருந்து உங்களை விடுவிக்காது.

நான் முன்பே குறிப்பிட்டது போல், பதினான்கு ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு பயிற்சியாளருடன் வாரத்திற்கு மூன்று முறை பயிற்சி செய்து வருகிறேன். நான் உடற்பயிற்சி செய்வது பற்றி நினைக்கும் போது என் மனதில் அச்சம் எழும்புவதை உணரமுடியும். ஆனால் நான் எப்படியும் அதைச் செய்யப் போகிறேன் என்பதால், நான் அதை அனுபவித்தே செய்யலாமே என்பதை கற்றுக்கொண்டேன்.

நீங்கள் எதற்காவது பயப்படத் தொடங்கும் போதெல்லாம், நீங்கள் செய்ய வேண்டியதை நல்ல மனப்பான்மையுடன் செய்ய தேவன் உங்களுக்கு கிருபை அளிக்க வேண்டும் என்று உடனடியாக ஜெபியுங்கள். தேவன் ஜெபங்களுக்கு பதிலளிக்கிறார், ஆனால் நீங்கள் ஜெபிக்காத ஜெபத்திற்கு அவரால் பதிலளிக்க முடியாது. நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் தேவனின் உதவியைக் கேளுங்கள், அதை உங்களால் எளிதாக செய்யமுடியும்.

தேவன் இஸ்ரவேலர்களிடம் தங்கள் எதிரிகளுக்கு பயப்படவோ அஞ்சவோ வேண்டாம் என்று கூறினார் (உபா. 20:1). திருடன் “திருடவும் கொல்லவும் அழிக்கவும்” மட்டுமே வருகிறான் என்று இயேசு கூறினார், ஆனால் அவரோ “ஜீவனைக் கொடுக்கவும் அது பரிபூரணப்படவும்” வந்தார் (யோவான் 10:10). வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய விஷயங்களைக் கண்டு பயந்தால் நாம் எப்படி வாழ்க்கையை அனுபவிக்க முடியும்? இந்த வசனத்தைக் கவனியுங்கள்:

> நீங்கள் எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்யுங்கள்.
>
> கொலோசெயர் 3:23

நாம் செய்ய வேண்டிய வேலையைப் பற்றி பயந்தால் நாம் மனப்பூர்வமாக வேலை செய்ய முடியாது. சாத்தான் நம் அன்றாட வாழ்க்கையை அனுபவிக்காமல் இருக்க எல்லா விதமான வழிகளையும் கொண்டு வருகிறான். அவைகளில் பல மிகவும் தந்திரமானவைகள், தேவன் அவற்றை நமக்கு வெளிப்படுத்தவில்லை என்றால் நாம் அவர்களை ஒருபோதும் அடையாளம் காண மாட்டோம். அவ்வாறாகத்தான் நான் தேவன் என் கண்களைத் திறக்கும் வரை, பல வருடங்கள் வருத்தத்திலும், அச்சத்திலும் கழித்தேன். அப்படி செய்ததின் மூலம் அந்த நாளை நான் இழந்துக்கொண்டிருந்தேன். தேவன் இருக்கிறவராகவே இருக்கிறார்.

அப்படியென்றால் அவர் தற்போது இருக்கிறார். அவருடைய சந்நிதியில் வாழ்ந்து இன்பமும் பயனும் அடைய வேண்டுமானால், நேற்றோ நாளையோ அல்ல, இன்றிலே கவனம் செலுத்த வேண்டும்.

இயற்கையாகவே, நாம் அனைவரும் எதிர்காலத்திற்கான சில திட்டங்களைச் செய்கிறோம், நீதிமொழிகள் நம்மை நல்ல காரியதரிசிகளாகவும் புத்திசாலித்தனமாக திட்டமிடவும் ஊக்குவிக்கிறது (நீதி. 16:9; 27:23), ஆனால் அது எதிர்காலத்தை பயத்துடனும் அச்சத்துடனும் பார்ப்பதற்கு முற்றிலும் வேறுபட்டது. ஓய்வூதியத்திற்கான ஒரு புத்திசாலித்தனமான நிதித் திட்டத்தை வைத்திருங்கள், ஆனால் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். உங்கள் குழந்தைகளின் கல்லூரி படிப்பு மற்றும் திருமண செலவுகளுக்காக இப்போதே சேமியுங்கள், ஆனால் அவற்றைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால், கடந்த காலத்தைப் பற்றி சிந்திக்காதீர்கள் அல்லது எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். நிகழ்காலத்தில் முழுமையாக வாழ்வதில் கவனம் செலுத்துங்கள். உங்கள் மகிழ்ச்சியை ஒதுக்கி வைக்காதீர்கள் அல்லது எதிர்காலத்திற்கு அதைத் தள்ளிப் போடாதீர்கள்.

மருத்துவ வல்லுநர்கள் இன்று நாம் வாழ்வதன் மதிப்பைக் கண்டுபிடித்து, இப்போது நாம் என்ன செய்கிறோம் என்பதில் கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் அதை கவனப்பயிற்சி என்று குறிப்பிடுகிறார்கள். அவர்கள் கண்டுபிடித்தது ஒன்றும் புதிதல்ல, ஏனென்றால் சாலமோன் பிரசங்கியில் அதைப் பற்றி பேசினார். பிரசங்கி 5:1 கூறுகிறது, “நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதில் முழு கவனத்தைக் கொடுங்கள்.” இதை நான் அவ்வளவு நன்றாக செய்கிறதில்லை, ஏனென்றால் நான் செய்யப்போகும் அடுத்த காரியத்தைப் பற்றி யோசித்துக்கொண்டே வழக்கமாக ஒரு காரியத்தைச் செய்து வருகிறேன், ஆனால் நான் அதைப் பற்றி ஜெபிக்கிறேன், தேவன் எனக்கு உதவுகிறார். சில பழக்கங்களை உடைப்பது கடினம், ஆனால் நாம் அதில் தேவனின் உதவியுடன் விடாமுயற்சியுடன் இருந்தால், நாம் மாறலாம்.

இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம். (சங்கீதம் 118:24).

ஒரு மனிதன் செய்யும் மிகப்பெரிய கண்டுபிடிப்புகளில் ஒன்று, அவனுடைய பெரிய ஆச்சரியங்களில் ஒன்று, அவனால் செய்ய முடியாது என்று பயந்ததை அவனால் செய்ய முடியும் என்பதைக் கண்டுபிடிப்பதாகும்.

- - ஹென்றி ஃபோர்டு

தனியாக இருப்பதற்கான பயத்தை வெல்வது

நான் சிறு வயதிலிருந்தே, தனிமையில் இருக்க எனக்கு பயங்கரமான பயம் இருந்தது. அடித்தளத்திற்கு தனியாக செல்ல விரும்பியதில்லை. தனியாக ஒரு கூடை துணிகளை மாடிக்கு கொண்டு செல்ல விரும்பியதில்லை. பன்னிரண்டு வயதில் கூட, என் அம்மா தெருவின் மறுமுனையிலிருந்த அக்கம்பக்கத்தினரிடம் செல்ல வேண்டியிருந்த போது ஐந்து நிமிடம் கூட வீட்டில் இருக்க விரும்பமாட்டேன், இதை போன்று சொல்லிக்கொண்டே போகலாம். இவை அனைத்தும்.ஏதோ என்னை பயமுறுத்திவிடுமோ, எனக்கு ஏதாவது ஆகிவிடுமோ, நான் பாதுகாக்கப்படமாட்டேனோ என்ற பயத்தினால் தான் ஏற்பட்டது.

எனக்கு எட்டு வயதாக இருந்தபோது பயங்கரமான பேய் திரைப்படத்தைப் பார்ப்பதில் இருந்து இது தொடங்கியது என்று நான் நம்புகிறேன். எப்போதும் என்னுடன் இருங்கள், எப்போதும் என் விஷயங்களை எனக்காக செய்யுங்கள் என்று கெஞ்சிக்கொண்டே நண்பர்களின் மறைவின் கீழ் நான் மறைந்திருந்ததால் இந்த பயம் இன்னும் வேரூன்றியது,

என் இருபதுகளிலெல்லாம், நான் எப்போதும் யாரோ ஒருவருடன் இருக்க விரும்பினேன் என்று நினைக்கிறேன், நான் தேவனிடம் கொடுக்க வேண்டிய ஆழமான வேரூன்றிய பயத்தை உணர்ந்தேன். நான் மற்றவர்களை எவ்வளவு சார்ந்திருக்கிறேன் என்பதை உணர்ந்தேன், குடும்பத்தினர், ரூம்மேட்கள், கணவர் என்று எப்போதும் யாருடனாவது இருக்க விரும்பினேன்.

நான் தனியாக இருந்தால், நான் குறிவைக்கப்படுவேன், எனக்கு ஏதாவது மோசமானது நடக்கும் என்று அர்த்தமா? நான் தனியாக இருந்தால், நான் நேசிக்கப்படவில்லை, யாரும் என்னுடன் இருக்க விரும்பவில்லை என்று அர்த்தமா? இந்த பயம் என்னை உலுக்கி தூக்கத்தை இழக்கும் நிலைக்கு கொண்டு வந்தது.

அது என்ன என்ற பயத்தை நான் உணர்ந்தவுடன், நான் இந்த பயத்திலிருந்து வெளியேறி, தைரியமாகவும், தனியாக காரியங்களைச் செய்யவும் எனக்கு அநேக வாய்ப்புகள் வந்தன. அவை அனைத்தும் ஏற்கனவே என் வழியில் வந்திருக்கலாம், ஆனால் நான் எப்போதும் யாரையாவது என்னுடன் வைத்திருக்கப் பார்த்துக் கொண்டேன். எனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் விட்டு முற்றிலும் ஒருவரும் தெரியாத வேறொரு.

மாநிலத்திற்கு என்னை போகும் படி தேவன் அழைத்தது மிகப்பெரிய வாய்ப்பு என்று நான் நம்புகிறேன். என் ஒவ்வொரு துளியிலும் நான் அவரை நம்ப வேண்டியிருந்தது.

ஆறரை ஆண்டுகளில், நான் வகுப்புகளுக்குக் கட்டாயமாக செல்ல வேண்டியிருந்தது மற்றும் அறிமுகமான ஒருவரால் அறிமுகப்படுத்தப்படாமல் புதிய நண்பர்களை உருவாக்க வேண்டியிருந்தது. மளிகைக் கடை, மருத்துவரின் சந்திப்புகள் மற்றும் கார் பழுதுபார்க்கும் கடைக்கு நானே செல்ல வேண்டியிருந்தது. நான் நேசிக்கப்படாததாலோ அல்லது அழைப்புகள் இல்லாததாலோ அல்ல, தேவன் எனக்கு ஏதோவொன்றை கற்பிக்க முயன்றதால் நான் ஒரு வருடம் நன்றி படைப்பின் நாளையும், புத்தாண்டையும் தனியாகக் கொண்டாட வேண்டியிருந்தது.

நான் கொஞ்சம் கொஞ்சமாக இந்த பயத்தை வென்று வருகிறேன். அது முழுமையாகப் போகவில்லை, ஆனால் நான் அதை தேவனிடம் ஒப்புக்கொடுக்காதிருந்தால், அதைப் பொறுத்துக்கொண்டே இருந்திருந்தால், கடந்த பதினாறு மாதங்களாக எனது சொந்த குடியிருப்பில் என்னால் தனியாக வாழ்ந்திருக்க முடியாது என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

- மேகன்

அத்தியாயம் 12

தைரியமாகவும், வலுவாகவும் இருங்கள்

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை திடப்படுத்திக் கொண்டு, முதல் நாளில் அணிவகுத்து நின்ற ஸ்தலத்திலே, மறுபடியும் போர் செய்ய அணிவகுத்து நின்றார்கள்.

நியாதிபதிகள் 20:22

தேவன் நமக்கு தைரியத்தை அளிக்கிறார், சாத்தான் நமக்கு பயத்தை அளிக்கிறான்; தேர்வு செய்வது நம்முடையது. இஸ்ரவேலர்கள் "தைரியம் கொண்டார்கள்" என்ற கூற்று என்னைக் கவர்ந்தது. தைரியம் எப்பொழுதும் இருக்கிறது ஆனால் அதனால் நமக்கு நன்மை ஏற்பட வேண்டுமானால் அதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்க வைக்கிறது,. நாம் தைரியத்தைத் தேர்ந்தெடுக்கும்போது, பயம் நம்மில் குடியிருக்க இடமில்லை.

நாம் பொதுவாக ஒரு பிரச்சனையிலிருந்து விடுபட முயற்சி செய்வதில் கவனம் செலுத்துகிறோம். ஆனால் பிரச்சனைக்கான பதிலைப் பெறுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று நான் நம்புகிறேன். நல்ல பழக்கங்களை உருவாக்குதல், கெட்ட பழக்கங்களை உடைத்தல் என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதினேன். அதில் உள்ள கற்பித்தல் கொஞ்சம் அசாதாரணமானது என்று நான் நம்புகிறேன், ஏனென்றால் கெட்ட பழக்கங்களிலிருந்து தானாகவே விடுபட நல்ல பழக்கங்களை வளர்ப்பதில் கவனம் செலுத்த மக்களை இது தூண்டுகிறது. உதாரணமாக, நான் உடல் எடையை குறைக்க வேண்டும் மற்றும் என்னால் சாப்பிட முடியாதவற்றில் நான் தொடர்ந்து கவனம் செலுத்தினால், அது மோசமான உணவுகளை அதிகமாக சாப்பிடத் தூண்டும். ஆனால் நான் உண்ணக்கூடிய அனைத்து

ஆரோக்கியமான உணவுகளிலும் கவனம் செலுத்தினால், நான் சிறந்த தேர்வுகளைச் செய்து இறுதியில் எடையைக் குறைப்பேன்.

நான் எல்லா நேரத்திலும் என் தவறுகளில் கவனம் செலுத்தினால், அவை பெரும்பாலும் அதிகரிக்கும். ஆனால் தேவன் என்னை எவ்வளவு தூரம் கொண்டு வந்திருக்கிறார், அவர் ஏற்கனவே என்னை எவ்வளவு மாற்றிவிட்டார் என்பதில் நான் கவனம் செலுத்தினால், அவர் இன்னும் அதிகமாக செய்வார் என்று எனக்கு நம்பிக்கை ஏற்படும்.

எதில் கவனம் செலுத்துகிறோமோ அதுதான் நம் வாழ்வில் உருவாகிறது. எனக்கு டேவின் படம் வேண்டும், ஆனால் நான் எனது கேமரா லென்ஸை அவர் மீதில்லாமல் ஒரு மரத்தில் ஃபோகஸ் செய்தால், ஒரு மரத்தின் படத்தை தான் பெறுவேன். பயப்படாமல் இருப்பதை விட தைரியமாக இருப்பதில் கவனம் செலுத்த முயற்சிக்கவும். அப்பொழுது முன்பை விட நீங்கள் மிகவும் தைரியமாகவும், துணிவாகவும் இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். வித்தியாசமாக சிந்திக்க உங்கள் மனதைப் பயிற்றுவிக்க நேரம் ஆகலாம், ஆனால் இறுதியில் அது பலனளிக்கும். தவறான செயலைச் செய்வதன் மூலம் உங்கள் பெலனை வீணடிக்காதீர்கள், அது உங்களுக்கு சரியான பலனை ஒருபோதும் தராது. பயத்துடன் சண்டையிடுவது அதை அகற்றுவதற்கு பதிலாக அதை வலுப்படுத்தும். செய்ய வேண்டிய சிறந்த விஷயம், அதை தைரியமாக எதிர்கொள்வதும், பயம் செய்ய வேண்டாம் என்று சொல்வதைச் செய்வதும் ஆகும்.

பயம் நீங்க வேண்டி பிரார்த்தனை மட்டும் வேண்டாம். மாறாக, தைரியம், துணிவு மற்றும் நம்பிக்கை உங்களை நிரப்ப தேவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். நமது தவறான சிந்தனை பெரும்பாலும் நம்மை தோற்கடிக்கிறது, ஆனால் தவறான சிந்தனை நம்மை தோற்கடிக்கும் என்பதால், சரியான சிந்தனை நமக்கு உதவும். ரோமர் 12:2, தேவனுடைய வார்த்தையால் நம் மனம் முழுமையாக புதுப்பிக்கப்படாவிட்டால், தேவன் நமக்காக வைத்திருக்கும் நல்ல வாழ்க்கையை நாம் ஒருபோதும் அனுபவிக்க மாட்டோம் என்று சுட்டிக்காட்டுகிறது.

> பயம் நீங்க வேண்டி பிரார்த்தனை மட்டும் வேண்டாம். மாறாக, தைரியம், துணிவு மற்றும் நம்பிக்கையுடன் உங்களை நிரப்ப கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள்.

நான் தேவனுடன் நடக்கத் தொடங்கிய ஆரம்ப ஆண்டுகளில், தேவன் ஏற்கனவே எனக்குக் கொடுத்த விஷயங்களைப் பெற நிறைய நேரத்தையும் முயற்சியையும் செலவிட்டேன். கிறிஸ்துவுடனான எனது

உறவின் மூலம் அவைகள் ஏற்கனவே என்னிடமிருந்தது என்பது எனக்கு அப்போது தெரியாது. அவர் தனது கிருபையால் அவற்றை இலவசமாகக் கொடுத்தார், ஆனால் நான் அதை உணராததால், என்னிடம் ஏற்கனவே இருப்பதைப் பெற முயற்சி செய்து கொண்டிருந்தேன். நான் தேவனின் அன்பைப் பெற முயற்சி செய்துக்கொண்டிருந்தேன், ஆனால் நான் பாவத்தில் இருக்கும்போதே அவர் என்னை நேசித்தார் (ரோமர் 5:8). எல்லாவற்றையும் சரியாகச் செய்வதன் மூலம் நான் தேவனுடன் சரியாக இருக்க முயற்சித்தேன், ஒவ்வொரு நாளும் நான் ஏமாற்றமடைந்தேன், ஏனென்றால் நான் எவ்வளவு சரியாகச் செய்தாலும், நான் எப்போதும் ஏதாவது தவறு செய்தேன். இயேசு என்னுடைய எல்லா பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, தேவனுடன் அவருடைய சரியான நிலைப்பாட்டை எனக்குக் கொடுத்ததால், நான் ஏற்கனவே தேவனுடன் சரியாக இருக்கிறேன் என்பதை பின்னர் நான் அறிந்தேன் (2 கொரி. 5:21). நான் ஏற்கனவே பெற்று இருந்ததைப் பெற முயற்சிப்பதிலிருந்து என்னை விடுவித்த எண்ணற்ற பிற பாடங்களைக் கற்றுக்கொண்டேன்.

இஸ்ரவேலர்களை யோர்தான் நதியைக் கடந்து வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் செல்லும்படி தேவன் யோசுவாவை நியமித்தார். யோசுவா 1:9ல், அவர் யோசுவாவிடம், “பலங்கொண்டு, திடமனதாயிரு.” என்றார். “பலத்துடனும் தைரியத்துடனும் இரு” என்று தேவன் முதலில் கூறியதைக் கவனியுங்கள், அதன் பிறகே “பயப்படாதே” என்றார்.

ஒரே நேரத்தில் பயத்தையும் தைரியத்தையும் அனுபவிக்க முடியும் என்று நினைக்கிறேன். மேலும் எது வலிமையானதோ அதுதான் ஆட்சி செய்யும். தனக்கு உதவி செய்யும்படி ராஜாவைக் கேட்டு, தன் மக்களைக் காப்பாற்ற தேவன் எஸ்தரை அழைத்தபோது அவள் பயந்தாள், ஆனால் அவள் உபவாசித்து ஜெபித்து, தேவன் சொன்னபடி தைரியத்துடன் செய்து முடித்தாள் (எஸ்தர் 4:16-5:3) அவளுக்கு பயத்தை விட தைரியம் அதிகமாக இருந்தது. பயத்தின் உணர்வுகள் ஒருபோதும் முற்றிலும் மறைந்துவிடாது, ஆனால் தைரியத்திற்காக தேவனை தவறாமல் தேடினால், நாம் செய்ய வேண்டியதைச் செய்ய நாம் எப்போதும் பலமாக இருப்போம். பயந்துக் கொண்டே தான் செய்வோம்! தைரியம் பயத்தை எதிர்கொள்கிறது அதை தாண்டி மேலும் நகரும்.

ஊக்கம்

தைரியமாக இருப்பதற்கு, நமக்கு அடிக்கடி ஊக்கம் தேவை என்று

தோன்றுகிறது. தேவன் பின்னர் யோசுவாவிடம் சொன்ன அதே வார்த்தைகளைத்தான், மோசே யோசுவாவிடம் பேசியிருந்தார். எனவே அவர் அவற்றை ஒன்றுக்கும் மேற்பட்ட முறை கேட்க வேண்டியிருந்தது.

> நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள். அவர்களுக்கு பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னைவிட்டு விலகுவதும் இல்லை, உன்னை கைவிடுவதும் இல்லை என்று சொன்னான்.
>
> உபாகமம் 31:6

மோசே யோசுவாவை ஊக்கப்படுத்தினார். சிறிது நேரம் கழித்து, தேவனும் யோசுவாவை உற்சாகப்படுத்தினார். சாத்தான் நம்மை “விரக்தியடைய” செய்ய விரும்புகிறான். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தேவன் நமக்காக வைத்திருக்கும் தைரியத்தைத் தடுக்க அல்லது தடை செய்ய விரும்புகிறான். தேவன் நம்மை பயபடுவதற்காகப் படைக்கவில்லை, மேலும் அவர் நமக்கு பயத்தின் ஆவியைக் கொடுக்கவில்லை. அவர் நமக்கு தைரியம், நம்பிக்கை, தைரியம் மற்றும் நம்பிக்கையைத் தருகிறார், ஆனால் நாம் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்ததை நாம் எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்துகிறோமோ, அது அவ்வளவு வலிமையாகிறது.

வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தின் வழியாக மக்களை வழிநடத்திய யோசுவா பலமுறை தைரியமாகவும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டியிருந்தது, ஏனென்றால் அவர்கள் சென்ற இடமெல்லாம் அவர்கள் தேசத்தை உடைமையாக்க எதிரிகளை வெல்ல வேண்டியிருந்தது. நீங்கள் தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக பிரச்சனையை எதிர்கொள்கிறீர்கள் என்று நீங்கள் உணரலாம், ஆனால் தேவன் உங்களுடன் இருக்கிறார் மற்றும் அவரைப் பின்பற்றினால் உங்களை எப்போதும் வெற்றிக்கு அழைத்துச் செல்வார் என்ற உண்மையை நீங்கள் அறிந்து, விழிப்புடன் இருக்க வேண்டும். உங்கள் போராட்டங்களுக்கு முடிவே இல்லை என்று நீங்கள் நினைக்கலாம் என்று நான் நம்புகிறேன், ஆனால் அது இருக்கிறது என்பதையும் சரியாக எப்போது இருக்கும் என்பதையும் தேவன் அறிவார்.

நீங்கள் தேவனின் பிள்ளைகள், நீங்கள் அவருக்கு மதிப்புமிக்கவர்கள். நாம் நம்மை பயத்திற்கு அடிமையாக்கும் அடிமைத்தனத்தின் ஆவியை பெறாமல் அப்பா பிதாவே என்று அழைக்கக்கூடிய புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறோம் என்று பவுல் நமக்கு கற்பிக்கிறார் (ரோமர் 8:15). அப்பா என்பது

டாடி என்ற ஆங்கில வார்த்தைக்கு இணையான நெருக்கமான வார்த்தை. நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் தேவனிடம் நெருங்கி வந்திருக்கிறோம் (எபே. 2:13) மற்றும் அவருடன் சுதந்திரவான்களாயிருக்கிறோம். தேவன் நம்மைத் தத்தெடுத்து, தம்முடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் நமக்கு முழு உரிமைகளையும் கொடுத்திருக்கிறார் (ரோ. 8:15-17; 2 கொரி. 6:18).

நாம் பயப்படக்கூடிய எல்லா கெட்ட விஷயங்களிலும் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, நம் தந்தை யார் என்பதில் கவனம் செலுத்துவோம், அவர் நம் பக்கத்தில் இருப்பதால், பயப்பட ஒன்றுமில்லை என்பதை நினைவில் கொள்வோம்.

தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஊக்கமளிக்கும் ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் ஊக்குவிப்பவர். நமக்கு உதவவும் ஊக்கப்படுத்தவும் அவர் நம்மில் வாழ்கிறார், மேலும் மற்றவர்களை ஊக்குவிக்க நம்மூலமாக செயல்பட விரும்புகிறார். சாத்தானுடன் சேர்ந்து சோர்ந்து போவதற்கு பதிலாக கிறிஸ்துவின் மூலம் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று மக்கள் நம்புவதற்கு அவர்களை உற்சாகப்படுத்தி உதவுவோம். நம்மில் எவரும் சாத்தானை மனமுவந்து அனுமதிக்க மாட்டோம், ஆனால் அவன் அடிக்கடி நுழைந்து விடுகிறான். அவன் மக்களின் திறன்கள் மற்றும் முடிவுகளைப் பற்றிய எண்ணங்கள், கற்பனைகள் மற்றும் மனப்பான்மைகளை நம் மனதில் வைக்கிறான், மேலும் யாரையும் ஒருபோதும் ஊக்கப்படுத்தாமல் இருப்பதில்லை என்று நாம் உறுதியாக இருந்தாலொழிய, அத்தகைய எண்ணங்களை வெளிப்படுத்துவோம். மேலும் மக்களை ஊக்கமிழக்கச் செய்ய பிசாசு நம்மைப் பயன்படுத்துவதை ஒருபோதும் உணர கூட மாட்டோம். நமது வார்த்தைகளில் ஆற்றல் உள்ளது. நீதிமொழிகள் 18:21 அவைகள் ஜீவன் மற்றும் மரணத்தின் வல்லமையைக் கொண்டுள்ளது, எனவே நாம் ஜீவனைக் கொடுக்கும் வார்த்தைகளை மட்டுமே பேசத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நான் ஊழியம் செய்யத் தொடங்கின போது அநேகர் என்னை ஊக்கமிழக்கச் செய்தனர், என்னால் அதை செய்ய முடியாது, செய்யக்கூடாது என்று சொன்னார்கள், ஆனால் தேவன் எனக்கு தைரியம் கொடுத்தார். அவர் தனிப்பட்ட முறையில் என்னை ஊக்குவித்தார். மேலும் அவர் என்னை உறுதிப்படுத்திய சிலரை என் வாழ்க்கையில் வைத்தார். அவர்கள் எனக்காக இருந்தார்கள், நான் வெற்றிபெற விரும்பினார்கள், அவர்களின் ஆதரவு எனக்கு ஒரு பெரிய உந்துதலாக இருந்தது. என்னை ஊக்கமிழக்கச் செய்தவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக சரியானவர்கள் என்று தோன்றிய

போது அது என்னை மிகவும் கடினமான காலங்களில் முன்னோக்கி செல்ல வைத்தது. ஊக்குவிப்பு என்பது ஒரு மிக முக்கியமான ஊழியம் மற்றும் நாம் அடிக்கடி ஈடுபட வேண்டிய ஒன்றாகும். மற்றவர்களை உயர்த்துவது சிலருக்கு இயல்பாக வரும். ஆனால் எல்லோருக்கும் அப்படி இல்லை, இயற்கையாகவே அந்தத் திசையில் நாட்டமில்லாதவர்கள் வேண்டுமென்றே ஊக்கமளிக்க வேண்டும். ஒரு நபர் அல்லது பொருளில் என்ன தவறு இருக்கிறது என்பதைப் பார்ப்பதே எனது முதல் தூண்டுதலாக இருக்கும், ஆனால் எனது முதல் தூண்டுதல் பொதுவாக என் மாம்சத்திலிருந்து வருகிறது என்று தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்தார். மேலும் நான் அவற்றைச் செயல்படுத்துவதற்கு முன் எனது தூண்டுதல்கள் அவருடைய வார்த்தையுடன் ஒத்துப்போவதை உறுதி செய்ய வேண்டும்.

> எனது முதல் உந்துதல் பொதுவாக என் மாம்சத்திலிருந்து வருகிறது என்று தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்துள்ளார், மேலும் நான் செயல்படும் முன் எனது தூண்டுதல்கள் அவருடைய வார்த்தையுடன் உடன்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய பல போதனைகளில் மற்றவர்களுக்கு ஊக்கமளிப்பதைப் பற்றிய போதனைகளை உள்ளடக்கினார். இது எனக்கு பிடித்த ஒன்று:

> மேலும், சகோதரரே நாங்கள் உங்களுக்கு போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்கு புத்தி சொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.
>
> 1 தெசலோனிக்கேயர் 5:14

சில சமயங்களில் நாம் மற்றவர்களை எச்சரிக்க (எச்சரிக்கவும் அல்லது கண்டிக்கவும்) வேண்டியிருக்கும், ஆனால் மனச்சோர்வடைந்த (பயந்த) மற்றும் பலவீனமானவர்களை (ஏசா. 35:3-4) ஊக்குவிக்கவும் இருக்கிறோம். சரியான நேரத்தில் நாம் பெறும் ஊக்கத்திலிருந்து நாம் எவ்வளவு வலிமையைப் பெற முடியும் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. வெகு காலத்திற்கு முன்பு ஒருவர் எனக்கு ஒரு குறுஞ்செய்தியை அனுப்பினார், “நீங்கள் சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருக்கிறீர்கள் என்று உங்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.” அடுத்த சில நாட்களில் அந்த உரையை பலமுறை மீண்டும் படித்தேன்.

நாங்கள் சமீபத்தில் எனது கால அட்டவணையில் சில மாற்றங்களைச் செய்திருந்தோம், அந்த உறுதியளிக்கும் வார்த்தைகள் நாங்கள் சரியானதைச் செய்தோம் என்று நம்புவதற்கு எனக்கு பலம் அளித்தது. நான் இருக்க வேண்டிய இடத்தில் நான் சரியாக இருக்கிறேன் என்று உறுதிப்படுத்தியது எனக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்தது.

நமக்கு மிகவும் சாதாரணமாகத் தோன்றும் மற்றொரு நபரிடம் நாம் சொல்ல வேண்டிய அல்லது சொல்லக்கூடிய ஒன்றைப் பற்றி நாம் சிந்திக்கலாம், ஆனால் அது அவர்களுக்கு கிட்டடத்தட்ட அதிசயமாக இருக்கலாம். ஒன்று நிச்சயம்: நீங்கள் மற்றவர்களை உண்மையாக ஊக்குவிக்கும் போது நீங்கள் ஒருபோதும் தவறான செயலைச் செய்ய முடியாது.

தியானம் செய்து அறிவிக்கவும்

தேவனுடைய வார்த்தை நாம் அதை தியானிக்க கற்றுக்கொடுக்கிறது. உணவில் உள்ள ஊட்டச்சத்தை பெறுவதற்கு நாம் உணவை நன்றாக மென்று சாப்பிடுவது போலவே, தேவனுடைய வார்த்தையிலிருந்து அதிகமான பலனைப் பெற நாம் அவருடைய வார்த்தையை தியானிக்க வேண்டும். தியானம் செய்வது என்பது உங்கள் மனதில் மீண்டும் மீண்டும் எதையாவது அடிக்கடி சிந்திப்பதாகும்.

> இந்த நியாயபிரமாணப் புஸ்தகம் உன் வாயைவிட்டு பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவை-களின்படியெல்லாம் நீ செய்ய கவனமாயிருக்கும்படி இரவும், பகலும் அதை தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்போது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்போது புத்திமானாயும் நடந்துக் கொள்ளுவாய்.
>
> யோசுவா 1:8

யோசுவா மற்றும் இஸ்ரவேலர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குச் செல்ல ஆயத்தமாகிக்கொண்டிருந்தபோது தேவன் இந்த அறிவுறுத்தலைக் கொடுத்தார். அவர்கள் வாயிலிருந்து தம்முடைய வார்த்தையை அறிவிக்கும்படியும், அதைப் பற்றி சிந்திக்கும்படியும் அவர் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்படிச் செய்வது, அதற்குக் கீழ்ப்படியும் திறனைக் கொடுக்கும். இந்த மிக முக்கியமான உண்மையை வேகமாக கடந்து செல்ல வேண்டாம். தேவனுடைய வார்த்தையை தியானிப்பதும் அறிவிப்பதும் நீங்கள் செய்யக்கூடிய மிக முக்கியமான காரியங்களில் ஒன்றாகும். மேலும் இது நீங்கள் கற்பனை செய்வதை விட அதிகமாக உங்களுக்கு உதவும்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் அறிவிக்கக்கூடிய மற்றும் சிந்திக்கக்கூடிய ஒரு எடுத்துக்காட்டு இங்கே:

> நான் தேவனுடைய பிள்ளை, அவர் என்னை நேசிக்கிறார். அவர் எப்போதும் என்னுடன் இருக்கிறார், எனவே நான் பயப்பட மாட்டேன். என்னுடைய பெலனாகிய கிறிஸ்துவின் மூலமாக என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும். நான் பலவீனமாக உணரும்போது, தொடர்ந்து முன்னோக்கி செல்ல அவர் என்னை ஊக்குவிக்கிறார். நான் கிறிஸ்துவில் தைரியமாகவும், துணிவுடனும், நம்பிக்கையுடனும் இருக்கிறேன். எனக்கு எதிராக உருவாக்கப்பட்ட எந்த ஆயுதமும் வெற்றியடையாது, ஏனென்றால் உலகத்தில் இருப்பவரை விட என்னில் இருப்பவர் பெரியவர்.

இந்த பிரகடனம் வேதத்தின் பல பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அவற்றை தியானிக்க ஒரு சிறந்த வழி, முப்பது நாட்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை இதை அறிவித்தால், உங்களைப் பற்றியும் உங்கள் திறன்களைப் பற்றியும் நீங்கள் நன்றாக உணருவீர்கள்.

மாற்கு 4:24 நாம் கேட்கும் விஷயங்களில் கவனமாக இருக்க கற்றுக்கொடுக்கிறது, மேலும் நாம் கேட்கும் உண்மைக்கு நாம் கொடுக்கும் சிந்தனையின் அளவுக்கு ஏற்றபடி தான் நல்லொழுக்கமும் அறிவும் நம்மிடமாக திரும்ப வரும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நாம் கேட்கும் அல்லது வாசிக்கும் வார்த்தையை எவ்வளவு அதிகமாக அறிவிக்கிறோமோ, தியானிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அது நமக்கு அர்த்தமுள்ளதாக இருக்கும், மேலும் அது நம் வாழ்வில் அதிக நல்ல பலனைத் தரும். நாம் ஒன்றைக் கேட்பதால் அதைக் கற்றுக்கொண்டோம் என்று அர்த்தமாகாது. கேட்பதும் அறிவதும் இரண்டு வெவ்வேறு விஷயங்கள். மக்கள் பத்து வருடங்களாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தேவாலயத்திற்குச் செல்லலாம், மேலும் அவர்கள் வார்த்தையைத் திரும்பத் திரும்பக் கேட்டிருந்தாலும், அவர்கள் அதைப் பற்றி எதுவும் தெரியாதது போல் வாழ்கிறார்கள். அதற்குக் காரணம், அவர்கள் அவற்றை தகவல்களாகப் பெற்றுக்கொள்கின்றனர். அதைப்பற்றி அதிகமாக சிந்தித்து படிப்பதின் மூலம் வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்கிறதில்லை.

நாம் ஒத்துழைத்து நம் பங்கைச் செய்யாதவரை நமது ஊழியர்களால் நம்மை ஆவிக்குரிய ரீதியில் வலுவடைய செய்ய உதவ முடியாது. யாராவது தேவனுடைய வார்த்தையைக் கற்பிக்கும்போது நீங்கள் கேட்கும் ஒவ்வொரு

வசனத்திற்கும் குறிப்பை எழுதலாம். பிறகு, உங்களுடைய சொந்த வேத வாசிப்பு நேரத்தில், நீங்கள் ஒவ்வொன்றையும் பார்க்கவும், சத்தமாக வாசிக்கவும், தனிப்பட்ட முறையில் உங்களுக்கு எப்படியாக அர்த்தமாகிறது என்று யோசிக்கவும். சிலர் தேவாலயத்திற்குச் செல்ல வேண்டும் அவ்வளவு தான் என்று நினைக்கிறார்கள், ஆனால் அவர்கள் அங்கே உட்கார்ந்தால், அது அவர்களை ஒருபோதும் வலுவான கிறிஸ்தவர்களாக மாற்றாது, நாள் முழுவதும் ஒரு கேரேஜில் உட்கார்ந்திருப்பதால் அவர்கள் ஒரு வாகனமாக மாற மாட்டார்கள்.

ஒவ்வொரு முறையும் நீங்கள் தைரியமாக இருக்க தியானிக்கும் போது, நீங்கள் பயத்தை தோற்கடிக்கிறீர்கள். உங்களை பயத்தில் இருந்து விடுவிப்பதற்காக தேவனிடம் வெறுமனே ஜெபிக்க வேண்டாம், ஆனால் உங்களுக்கு அற்புதமான தைரியத்தையும் நம்பிக்கையையும் தரும்படி ஜெபிக்குமாறு நான் உங்களுக்கு மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

தைரியம் ஒரு வாய்ப்பைப் பெறுகிறது

தைரியம் துணிச்சலானது, அதாவது ஒன்றும் செய்யாமல் சும்மா உட்கார்ந்திருப்பதை விட ஒரு வாய்ப்பை எடுத்து ஏதாவது செய்ய முயற்சிக்கிறது. “யாராவது அதைப் பற்றி ஏதாவது செய்ய வேண்டும்” என்று நாம் அடிக்கடி கூறுகிறோம், ஆனால் நாம் ஏதாவது செய்ய வேண்டியிருந்தால் என்ன செய்வது? எதுவும் செய்யாதது எதையும் உருவாக்காது.

> எதுவும் செய்யாதது எதையும் உருவாக்காது.

தைரியமாக இருப்பதற்கும் முட்டாள்தனமாக இருப்பதற்கும் இடையே ஒரு மெல்லிய கோடு தான் இருக்கும் நேரங்கள் உள்ளன. எனவே ஞானத்தைப் பயன்படுத்துங்கள், ஆனால் பயத்தில் பின்வாங்க வேண்டாம். ஒரு வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள பயப்பட வேண்டாம். உங்களால் ஏதாவது செய்ய முடியுமா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். தோல்வி பயம் உங்களை முயற்சி செய்யாமலிருக்க செய்ய அனுமதிக்காதீர்கள்.

சில சமயங்களில் நாம் செய்ய வேண்டும் என்று நினைக்கும் ஒரு விஷயத்தைப் பற்றி நீண்ட காலம் யோசித்து, முயற்சிக்கும் முன்னரே நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்துவிடுவோம் என்று நான் நம்புகிறேன். பேதுரு இயேசு தன்னை படகிலிருந்து வெளியே வந்து தண்ணீரில் நட

என்று சொல்ல வேண்டுமென்று சொன்னார். பின்னர் அவர் படகிலிருந்து இறங்கி இயேசுவுடன் சிறிது நேரம் தண்ணீரில் நடந்தார், ஆனால் அவர் புயலைப் பார்க்கவும் அதைப் பற்றி சிந்திக்கவும் தொடங்கியதால் மூழ்கத் தொடங்கினார் (மத். 14:28-31). இயேசு, “வா” என்று சொன்னதும், விசுவாசத்தால் பாய்ந்து செயலாற்றினார் பின்னர் அவர் என்ன செய்கிறார் என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பித்ததும், அவரைத் தோற்கடிக்க பயம் கதவைத் திறந்துவிட்டது போலத்தான் இருக்கிறது.

அதிகப்படியான சிந்தனையால் செயல்படுவதை விட உள்ளுணர்வால் அதிகம் செயல்படுகிறேன். இயற்கையாகவே, நான் ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன் அவற்றைப் பற்றி யோசிக்கிறேன், ஆனால் நான் ஏதாவது செய்ய முடியும் என்றும், தேவன் நான் அதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் என்றும் என் இருதயத்தில் உணர்ந்தால், நான் விரைவாக நடவடிக்கை எடுப்பேன். ஏனென்றால் நன்மையான அல்லது பயனுள்ளது எதையும் நான் செய்யவிடாமல் தடுக்க பிசாசு தன்னால் இயன்றதைச் செய்வான் என்று எனக்குத் தெரியும். அது சில சமயங்களில் நான் சில விஷயங்களைப் பற்றி அதிகம் யோசித்திருக்க வேண்டும், அப்படிச் செய்வது ஒரு சிக்கலைத் தவிர்த்திருக்கலாம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் செயலில் ஈடுபடும் நபராக இருப்பது என் வாழ்க்கையில் பிரச்சனைகளை விட பல நன்மைகளை உருவாக்கியுள்ளது.

நான் சில சமயங்களில் ஆலோசனை கேட்கிறேன் அல்லது நான் என்ன செய்யப் போகிறேன் என்பதைப் பற்றி வேறொருவர் என்ன நினைக்கிறார் என்பதைப் பார்த்து சரி செய்யப் பார்க்கிறேன். ஆனால் நான் நடவடிக்கை எடுப்பதற்கு முன் எனக்கு பலரின் ஒப்புதல் தேவைப்படுவதில்லை. சில நேரங்களில், பலரின் கருத்துக்களைப் பெறத் தொடங்கும் போது, நாம் குழப்பமடைகிறோம், ஏனென்றால் பெரும்பாலான நேரங்களில் நாம் பேசும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு கருத்துக்கள் இருக்கும்.

நாம் அனைவரும் வித்தியாசமானவர்கள் என்பதை நான் உணர்கிறேன். நீங்கள் என்னைப் போல் இல்லாமல் இருக்கலாம். ஒருவேளை நீங்கள் சிந்திக்க அதிக நேரம் தேவைப்படலாம், அப்படியானால், அது நல்லது தான். ஆனால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீகளோ அதை செய்யாத அளவுக்கு என்ன தவறு நடக்கக்கூடும் என்பதைப் பற்றி அதிகமாக சிந்திக்க வேண்டாம் என்று நான் உங்களை ஊக்குவிக்கிறேன்.

அவருடைய வார்த்தை அல்லது பகுத்தறிவு (பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல்) மூலமாக தான் தேவன் நம்மை வழக்கமாக வழிநடத்துகிறார்.

பகுத்தறிவு என்பது ஒரு ஆழமான அறிவாகும், இது சில நேரங்களில் நமது இயல்பான சிந்தனையுடன் முரண்படலாம். எவ்வித வெளிப்படையான காரணமின்றி, எங்களுடன் பணிபுரியும் ஒருவர் ஒரு பிரச்சனையாக இருப்பாரென்று என்று நான் கடுமையாக உணர்ந்த நேரங்கள் உள்ளன. ஆனால் அப்படியாக சந்தேகப்படக்கூடாது அல்லது நியாயம் தீர்க்க கூடாது என்பதற்காக நான் அந்த நபரை எங்கள் ஊழியர்களில் ஒருவராக வைத்திருந்தேன். நிச்சயமாகவே, அவர் இறுதியில் கலவரத்தைத் தூண்டுவதன் மூலமோ அல்லது ஒரு சந்தர்ப்பத்தில் எங்களிடமிருந்து திருடுவதன் மூலமோ சிக்கலை ஏற்படுத்தினார். உங்கள் உணர்வுகள் அல்லது இயல்பான எண்ணங்களை நம்புவதை விட உங்கள் இருதயத்தை (உங்கள் ஆவியை) நம்புவது மிகவும் புத்திசாலித்தனம்.

நீங்கள் எப்போதாவது ஒருவரிடம் ஒரு கேள்வியைக் கேட்கும் போது, அவர்கள் விரைவாகச், “சரி, நான் என்ன நினைக்கிறேன்ஸ, “என்று சொல்லி, பின்னர் அவர்கள் நினைத்ததைச் சொன்னார்களா? வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், நாம் கடைசியாக ஆலோசனையைப் பெற வேண்டிய இடம் நம் தலையின் உச்சியிலிருந்து அல்லது வேறு ஒருவர் தலையின் உச்சியிலிருந்து தான். சரியான பதிலை நாங்கள் விரும்புகிறோம், இது பொதுவாக நம் தலையின் மேலிருந்து வருவதை விட சற்று ஆழமாக செல்கிறது.

இந்த அத்தியாயத்தை முடிக்கும் போது, பயத்தை விட தைரியம் வலிமையானது என்பதை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்துகிறேன். பயத்திற்கான பதில் எப்போதுமே ஒன்றுதான்: “பலமாகவும் தைரியமாகவும் இருங்கள், ஏனென்றால் கர்த்தர் உங்களோடு இருக்கிறார்.”

ஒவ்வொரு முறையும் நம் அச்சங்களை எதிர்கொள்ளும்போது, நாம் பலம், தைரியம் மற்றும் நம்பிக்கையைப் பெறுகிறோம்.

- தியோடர் ரூஸ்வெல்ட்

பாதுகாப்பற்ற தன்மையை வெல்வது

நான் பாதிப்புக்குள்ளாக்கப்படுவதற்கு பயப்படுகிறேன். பாதிப்புக்குள்ளாக்கப்படுவதைப் பற்றி வெளிப்படையாக இருப்பது கொஞ்சம் முரண்பாடாக இருக்கிறதா? பயம் ஒரு தடையல்ல என்று ஒப்புக்கொள்வது முரண்பாடாக இருக்கிறதா? நாம் உண்மையிலே பாதிக்கப்பட கூடிய தருணங்கள் தான் சவாலாக இருக்கும். பாம்புகள், சிலந்திகள், கரப்பான் பூச்சிகள், நீரில் மூழ்குதல் மற்றும் உயரம் போன்ற உங்கள் வழக்கமான பயங்கள் எனக்கு எந்த பயத்தையும் ஏற்படுத்தாது.

நான் ஒரு கூச்ச சுபாவமுள்ள பெண் அல்ல - இதற்கு நேர்மாறானவள். நான் உள்ளே முடங்கியில்லாமல் வெளியே செல்லக்கூடிய, உரையாடல் மிகுந்த (அரட்டை), சுதந்திரமான மற்றும் சாகசப் பழக்கம் உடையவள், மேலும் நான் எட்டு உடன்பிறப்புகளைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவள், இயற்கையாகவே அதிக நம்பிக்கையுடன் இருப்பவள். நான் தைரியமாக சரியான சூழ்நிலையில் தலையிட்டு கிட்டத்தட்ட எதையும் வெளிப்படையாக நீண்டு விவாதிக்க தயாராக இருப்பவள்.

ஆனால் இருதயம் சம்பந்தப்பட்ட விஷயங்களாகிய அன்பு, நம்பிக்கை, நெருக்கம் மற்றும் ஆழமான உறவுகள் போன்றவை என்னை கவலையுடன் சுவாசிக்கவும், என் இருக்கையில் நெளியவும் செய்கிறது. ஏனென்றால் என் பிரச்சனைகள், கடந்த கால தவறுகள், குணநலன் குறைபாடுகள் மற்றும் தோல்விகள் அங்கே அம்பலப்படுத்தப்படுகிறது. பழைய பாதுகாப்பின்மை மற்றும் சமநிலையற்ற உணர்ச்சிகள் எனக்குள்ளே தோன்றுகிறது. அதற்கு நான் உடல் ரீதியாக எதிர்வினையாற்ற ஆரம்பிக்கிறேன். என் இதயத்துடிப்பு அதிகரிக்கிறது, நான் இயல்பை விட அதிகமாக படபடக்கிறேன், எனக்கு கொஞ்சம் குமட்டல் ஏற்படுகிறது, மேலும் என் கழுத்தின் பின்பகுதியில் உள்ள முடிகள் கூட சிலிர்த்து எழுந்து நிற்கின்றன.

அப்போது என் மனம் பல்வேறு இடத்திற்கு ஓடத் தொடங்குகிறது. நான் என்னைப் பற்றி அதிகம் வெளிப்படுத்துவதாக யூகிக்கிறேன். நான் ஏற்கனவே பகிர்ந்ததைப் பற்றி யோசித்து, அதை ரகசியமாக வைத்திருக்க வேண்டுமா என்று யோசிக்கிறேன். அது மரியாதையுடன், நிராகரிக்கப்படாமல் பெற்றுக்கொள்ளப்பட்டது என்று நான் நம்பலாமா? இனிமேல் என்னை மற்றவர் அவ்வாறாகத்தான் பார்ப்பார்களா? அந்தக் கேள்விகள் தோன்றிய பிறகு நான் என்னைத் தூர விலக்க முடிவு

செய்கிறேன். ஏனென்றால் மற்றவர் என்னைத் தாக்கவோ அல்லது காயப்படுத்தவோ விரும்பினால் எனது பாதிப்புக்குள்ளாக்கப்படும் தன்மை என்னைப் பாதுகாப்பற்றவளாக ஆக்கிவிட்டது என்பதை நான் உணர்ந்தேன்.

வேடிக்கையென்னவென்றால், நான் வெளிப்படையான நபர்களை நோக்கி ஈர்க்கப்படுகிறேன். அவர்களின் தோல்வியுற்ற இலக்குகளை அல்லது உடைந்த இருதயங்களை அவர்கள் எப்படி ஒப்புக்கொள்கிறார்கள், எப்படி அவர்களது பலவீனம் அவர்களிடம் இருந்த சிறந்ததை மாற்றியது, வரவிருக்கும் அனைத்திற்கும் அவர்களின் குறைபாடுகளை விளம்பரப்படுத்தினாலும் அதை ஏற்றுக்கொள்வதை நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு எந்த வித கட்டுப்பாடும் இல்லை என்பதை நான் பிரமிப்புடன் கவனிக்கிறேன். ஒரு நண்பர் என்னுடன் தனிப்பட்ட ஒன்றைப் பகிர்ந்து கொள்ளும்போது நான் விசேஷமாகவும் நம்பிக்கையுடனும் உணர்கிறேன். அந்த நபருக்காக நான் இருக்கிறேன் என்பதில் எனக்கு மகிழ்ச்சியும் மரியாதையும் கிடைக்கிறது.

“அவர்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்” (வெளி. 12:11). தேவனுடைய வார்த்தை வல்லமையானது. அவருடைய வார்த்தை குணமாக்கும். அவருடைய வார்த்தை பாதுகாப்பையும், நம்பிக்கையையும் தருகிறது. நான் என் பயத்திற்கு மேல் தேவனுடைய வார்த்தையை தேர்வு செய்கிறேன். நான் பயத்தை தேவனுடைய தைரியத்துடன் எதிர்கொள்வேன், நான் பயந்தாலும் பாதிக்கப்படக்கூடியவளாக இருப்பேன்.

- ஆட்டம்

அத்தியாயம் 13

பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் இருக்க கற்றுக்கொள்ளுங்கள்

நம்பிக்கை உண்டாயிருக்கிறதினால் திடனாயிருப்பீர், தோண்டி ஆராய்ந்து சுகமாய் படுத்துக் கொள்வீர். பயப்படுத்துவாரில்லாமல் நித்திரை செய்வீர். அநேகர் உமது முகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணுவார்கள்.

யோபு 11:18-19

பாதுகாப்பற்ற உணர்வு மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவை பயத்தின் அறிகுறிகளாகும், அவற்றின் ஆதாரம் பிசாசு. மக்கள் வாழ்க்கையில் பெரிதாக சாதிக்காமல் இருப்பதற்கு இந்த இரண்டு பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டிருப்பது தான் காரணம். தேவன் நமக்கு அவர் மீது பாதுகாப்பையும் நம்பிக்கையையும் தருகிறார், ஆனால் நிச்சயமாக, பிசாசு நம்மிடமிருந்து இரண்டையும் திருட விரும்புகிறான்.

பலரைப் போலவே, நான் சிறுவயதில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதால் என்னை நானே கவனித்துக் கொள்ள வேண்டும் என்று நீண்ட காலமாக உணர்ந்துக்கொண்டிருந்தேன். என் மீது உண்மையான அக்கறை கொண்டவர்கள் யாரும் இல்லை என்று தோன்றியது. அடுத்த வேதனை மிகுந்த நிகழ்வு எப்பொழுது ஏற்படும் என்று கவனித்துக் கொண்டு என்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றே இருந்தேன். என் பெற்றோரை என்னால் நம்ப முடியவில்லை, மேலும் நான் வேறு சில உறவினர்களை

அணுகி உதவி கேட்டாலும், அவர்கள் அதில் ஈடுபட விரும்பவில்லை. அந்தக் காலத்தில் இன்செஸ்ட் (தகாத உடலுறவு) என்பது கேள்விப்படாத ஒன்று. அது பல குடும்பங்களில் நடந்துக்கொண்டிருந்தது, ஆனால் யாரும் அதைப் பற்றி பேசவில்லை. இது மிகவும் இழிவானது, அது நிகழும் சூழ்நிலையில் ஈடுபடுவதைத் தவிர்த்து விடுவதை விட, மக்கள் அதைப் பற்றி சிந்திக்கக்கூட விரும்பவில்லை.

நான் நேசிக்கப்பட்டதாக உணரவில்லை, நாம் நேசிக்கப்படுவதை உணராதபோது பாதுகாப்பற்றும், நம்பிக்கையின்றியும் உணர்வோம். எனக்கு பதினெட்டு வயதாக இருந்தபோது, என் மீது ஆர்வம் காட்டிய முதல் இளைஞனை நான் மணந்தேன். ஐந்து வருடங்கள் அவர் எனக்கு துரோகம் செய்து பலமுறை என்னைக் கைவிட்ட பிறகு, நான் அவரை விவாகரத்து செய்தேன். ஆனால் என் பாதுகாப்பின்மையும் நம்பிக்கையின்மையும் இன்னும் மோசமாகியது. நான் அன்பைக் கண்டுபிடிக்க மிகவும் அவசியமாக இருந்தேன், ஆனால் பெரும்பாலும் காயமடைந்தவர்களைப் போலவே நான் எல்லா தவறான இடங்களிலும் அதைத் தேடினேன். ஐம்பத்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நான் திருமணம் செய்து கொண்ட டேவை சந்தித்தபோது, கடுமையான குடிப்பழக்கம் உள்ள ஒரு மனிதருடன் நான் டேட்டிங் செய்து கொண்டிருந்தேன்.

என்னிடம் நிபந்தனையற்ற அன்பைக் காட்டிய முதல் நபர் டேவ், ஆனால் நான் என் ஆத்துமாவில் மிகவும் உடைந்து காயப்பட்டிருந்தால், காதல் என்றால் என்ன என்றே எனக்குத் தெரியவில்லை, அதை எப்படிப் பெற்றுக் கொள்வது என்றும் எனக்குத் தெரியவில்லை. அடுத்த பேரழிவு எனக்கு நேரிடும் என்று நான் பயந்து வாழ்ந்தேன். டேவ் என்னை திருமணம் செய்து கொள்வாயா என்று கேட்ட அந்த இரவில், அவர் எங்கள் சந்திப்பிலிருந்து என்னை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு என்னிடம் ஏதோவொன்றை பேச வேண்டும் என்று என்னிடம் கூறினார், நான் நினைத்தேன், இதோ நான் பயந்தது வந்துவிட்டது, என்னிடமிருந்து பிரியப் போகிறார் என்று நினைத்தேன். எனக்கு நல்லது நடக்கும் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை, ஆனால் டேவ் என் வாழ்க்கையில் வந்தது எனக்கு நடந்த மிகச் சிறந்த விஷயங்களில் ஒன்றாகும், ஏனென்றால் அவர் என்னை நிபந்தனையின்றி நேசித்தது மட்டுமல்ல, அவர் கிறிஸ்துவின் குணாதிசயத்தையும் மாதிரியாகக் கொண்டிருந்தார். என் கோப ஆவேசத்தால் மற்றும் எதிர்மறையான உணர்வுகளால் நாங்கள் பல கடினமான ஆண்டுகளை சகித்தோம். ஆனாலும் அவர் என்னுடனே நிலைத்திருந்தார்.

நான் அவரைச் சந்தித்தபோது அவர் ஒரு வலுவான கிறிஸ்தவராக இருந்தார். நாங்கள் தவறாமல் தேவாலயத்திற்குச் சென்றோம், ஆனால் என் வாழ்க்கையில் குணப்படுத்த வேண்டிய வலிமிகுந்த இடங்களுக்குள் தேவனை அனுமதிக்கத் தொடங்குவதற்கு முன் இன்னும் பல ஆண்டுகள் கடந்துவிட்டன. இறுதியில் தேவன் என்னை எவ்வளவு பரிபூரணமாக நேசித்தார் என்பதை நான் கற்றுக்கொண்டேன், அது எனக்கு பாதுகாப்பையும் நம்பிக்கையையும் கொடுத்தது.

ர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்.

> பயங்கரமான குழியிலும், உளையான சேற்றிலிமிருந்து என்னை
> தூக்கியெடுத்து, என் கால்களை கன்மலையின் மேல் நிறுத்தி,
> என் அடிகளை உறுதிபடுத்தினார்.
>
> சங்கீதம் 40:1-2

பொய்களைக் கேட்பதை நிறுத்துங்கள்

பிசாசு நம் மனதில் எல்லாவிதமான பொய்யான எண்ணங்களையும் எற்படுத்துகிறான். அவற்றை நாம் நம்பினால், அவை நமக்கு நிஜமாகிவிடும். நீங்கள் ஒரு கூச்ச சுபாவமுள்ளவர், நம்பிக்கை இல்லாதவர், உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று அவர் உங்களை நம்ப வைத்திருக்கலாம். அல்லது, "பாதுகாப்பற்ற தன்மையை" நீங்கள் எளிமையாக ஏற்றுக்கொண்டிருக்கலாம். நாம் நன்றாகக் கற்றுக் கொள்ளும் வரை, பொதுவாக நம்மைத் துன்பப்படுத்தும் விஷயங்களை எதிர்க்காமல், விஷயங்களை எப்படி இருக்கிறதோ அப்படியே ஏற்றுக்கொள்கிறோம். உங்கள் வாழ்க்கையை மோசமாக பாதிக்கும் எத்தனை பொய்களை நீங்கள் நம்பலாம் என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? நான் தேவனுடைய வார்த்தையைக் கற்கத் தொடங்கும் வரையிலும், என்னைப் பற்றிய அவருடைய திட்டம் நான் அனுபவித்துக் கொண்டிருந்ததை. விட மிகச் சிறந்ததாக இருப்பதைக் கண்டுபிடிக்கும் வரை நான் ஒருபோதும் அதைப் பற்றி யோசிக்கவே இல்லை.

> உங்கள் வாழ்க்கையை மோசமாக பாதிக்கும் எத்தனை பொய்களை நீங்கள் நம்பலாம் என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

நான் முழுமையான பயத்தின் சூழலில் வளர்ந்தேன், எனக்குத் தெரிந்ததெல்லாம் அதுதான். பயம் எனது நிலையான துணை என்று சொல்வது சரியானது என்று நான் நினைக்கிறேன். அது எல்லா

விதங்களிலும் வெளிப்பட்டது. பாதுகாப்பின்மை மற்றும் நம்பிக்கையின்மை என்பது இரண்டு மட்டுமே, ஆனால் அதில் பல இருந்தது. பற்றாக்குறை பற்றிய பயம், மக்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற பயம், எனது தோல்விகள் மற்றும் பிறவற்றின் காரணமாக தேவன் என் மீது கோபமாக இருந்தால், எனக்கு இருந்ததை நான் உணராமல் இருக்கலாம் என்ற பயம் எனக்கு இருந்தது. அது உங்களுக்கும் உண்மையாக இருக்கலாம்.

நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் படிக்கும்போது, அவர் நீங்கள் பெற்றிருக்க விரும்பும் வாழ்க்கையை உன்னிப்பாகக் கவனியுங்கள். நீங்கள் அத்தகைய வாழ்க்கையை வாழ விரும்பவில்லையென்றால், பிசாசின் பொய்களை எதிர்கொண்டு தேவனின் சத்தியத்தின் மூலம் அவற்றை ஒவ்வொன்றாக தோற்கடிக்கத் தொடங்குங்கள். நம்முடைய மகிழ்ச்சி நிறைவாக, பரிபூரணமாக இருக்க வேண்டும் என்று தாம் விரும்புவதாக இயேசு அடிக்கடி கூறினார் (யோவான் 15:11; 16:24; 17:13), எனவே உங்களுக்கு மகிழ்ச்சி இல்லை என்றால், நீங்கள் உங்கள் சிறந்த வாழ்க்கையை வாழவில்லை.

நாம் கவலைப்படுவதை தேவன் விரும்பவில்லை. கவலை பாதுகாப்பின்மை மற்றும் நீங்கள் கவனிக்கப்பட மாட்டீர்கள் என்ற பயம் ஆகியவற்றிலிருந்து வருகிறது, அது பிசாசின் பொய்களில் வேரூன்றியுள்ளது. நாம் அவரை நம்பினால் நம்மைக் கவனித்துக்கொள்வதாக தேவன் வாக்குறுதி அளித்திருக்கிறார்.

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.

> அதனால் நாம். தைரியங்கொண்டு கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே.?”
>
> எபிரெயர் 13:5-6

தேவன் உண்மையுள்ளவர், அவரால் பொய் சொல்ல முடியாது, அவர் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கிறார். அவர் ஏதாவது வாக்குறுதி அளித்தால், அவர் தமது பங்கைச் செய்யத் தவறுவதில்லை, ஆனால் அவர் நமக்காக வைத்திருக்கும் நல்ல வாழ்க்கையைப் பெறவும் அனுபவிக்கவும் நாம் அவரை நம்ப வேண்டும். இயேசுவின் மூலம் தேவனுடன் அன்பான மற்றும் நம்பிக்கையான உறவை வளர்த்துக் கொள்ள நேரம் எடுக்கும் தான், ஆனால்

நீங்கள் அவருடைய வார்த்தையை உண்மையுடன் படித்து அவருடன் நேரத்தை செலவிடும்போது, நீங்கள் எல்லா வகையிலும் ஆவிக்குரிய ரீதியில் வளருவீர்கள்.

நம் வாழ்வில் எதுவும் மாறுவதற்கு முன், நாம் சத்தியத்தை அறிந்திருக்க வேண்டும். அதை தேவனுடைய வார்த்தையில் காணலாம். அவருடைய வார்த்தையே உண்மை! இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனும் என்றார் (யோவான் 14:6). அதிகமான உண்மைகளுக்கு நம் கண்கள் திறந்திருக்கிறபடியால், தேவன் நமக்காக வைத்திருப்பதை நாம் அதிகம் அனுபவிக்க முடியும். நாம் எப்போதும் அறிந்தவற்றில் வெறுமனே திருப்தியடைந்து கொள்ள முடியாது.

நீங்கள் பாதுகாப்பற்றவராகவோ அல்லது தன்னம்பிக்கை இல்லாமலோ இருந்தால், நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அல்லது எப்படி இருக்கிறதோ அப்படியே அதை ஏற்றுக்கொள்ளாதீர்கள். தேவனிடம் அடிபணியுங்கள்; பிசாசை எதிர்த்து நில்லுங்கள், அவன் ஓடிப்போவான் (யாக்கோபு 4:7). துன்புறுத்தும் ஒன்றை நாம் அதிலிருந்து விடுபட முடியும் என்று நமக்குத் தெரியாததால், நம் வாழ்வில் நிலைத்திருக்க அதை அனுமதித்திருந்தால், தேவனின் விருப்பத்தைப் பற்றிய உண்மையை உணர்ந்துகொள்வது, சிறந்ததைக் கொடுக்க அவர் கொண்டிருக்கும் திட்டத்தை உணர்ந்து கொள்வது மிகவும் உற்சாகமானது. ஆனால் உண்மையை அறிவது ஒரு படி மட்டுமே. அதை நம் வாழ்வில் பொருத்துவது அடுத்து நடக்க வேண்டும்.

உங்கள் விசுவாசத்தைப் பயன்படுத்துங்கள்

நீங்கள் பாதுகாப்பின்மை மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவற்றைக் கடக்க வேண்டும் என்றால், வெற்றிக்கான திறவுகோல் தேவன் மீது உங்கள் நம்பிக்கையை வைத்து, அவர் உங்களை வழிநடத்தும்போது, நீங்கள் முன்பு பயந்ததினால் செய்யாமலிருந்த புதிய விஷயங்களை செய்ய இறங்க வேண்டும். வேலையில் பதவி உயர்வைத் தொடர உங்களுக்கு நம்பிக்கை இல்லாமலிருந்திருக்கும் என்றால், நீங்கள் தகுதியுடையவர் என்று நீங்கள் நம்பும் பதவிக்கு விண்ணப்பிக்கவும். உங்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றால், தேவன் உங்களுக்கு சரியான காரியத்தை வைத்திருக்கிறார் என்பதில் உறுதியாக இருங்கள் மற்றும் தொடர்ந்து செய்து கொண்டே இருங்கள். இறுதியில் நீங்கள் உங்களுக்கான சரியான சூழ்நிலையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

நீங்கள் தனிமையாக இருந்தால், மக்களுடன் நட்பு கொள்ள முயற்சி செய்ய

முடியாத அளவுக்கு பாதுகாப்பற்றவராக இருந்தால், வெளியேறி நட்பாக இருங்கள். உட்கார்ந்து அழைப்பிதழ்களுக்காக காத்திருக்க வேண்டாம்; அழைப்பாக இருங்கள்! மற்றவர்களை அணுகுங்கள் -, அவர்களும் தனிமையில் இருக்க வாய்ப்புகள் உண்டு. உங்கள் நம்பிக்கையை நீங்கள் எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்துகிறீர்களோ, அவ்வளவு வலுவாக மாறும். நம்பிக்கை என்பது தேவன் மீது நம்பிக்கை. இது "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமாயிருக்கிறது" என்று எபி. 11:1 ல் கூறப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஏதாவது நடக்கும் என்று உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், அதை முதலில் உங்கள் இருதயத்தில் வைத்திருப்பீர்கள் (நீங்கள் நம்புகிறீர்கள்), பின்னர் தேவனுடைய சரியான நேரத்தில் அதை நீங்கள் நிஜத்தில பெறுவீர்கள்.

> உங்கள் நம்பிக்கையை நீங்கள் எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்துகிறீர்களோ, அவ்வளவு வலுவாக அது மாறும்.

உங்களுக்கு என்ன வேண்டுமோ தேவையோ அதை தேவனிடம் கேளுங்கள். அவருடைய வார்த்தை கூறுகிறது, "நீங்கள் தேவனிடம் கேட்காததால் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள்" (யாக்கோபு 4:2). நாம் நினைப்பதற்கும் வேண்டிக் கொள்கிறதற்கும் மிகவும் அதிகமாக தேவன் செய்ய வல்லவர் (எபே. 3:20). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நீங்கள் தேவனிடம் அதிகமாக கேட்க முடியாது. நீங்கள் கேட்பது உங்களுக்கு சரியாக இருக்காது என்றால், அவர் அதை உங்களுக்கு கொடுக்க மாட்டார். ஆனால் சரியான நேரத்தில், அவர் உங்களுக்கு அதைவிட சிறந்ததைத் தருவார்.

இந்த வசனம் எனக்கு மிகவும் ஊக்கமளிக்கிறது, மேலும் இது உங்களுக்கும் ஊக்கமளிக்கும் என்று நம்புகிறேன்:

> ஆதலால் நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளை பெற்றுக்கொள்வோமென்று விசுவாசியுங்கள். அப்போது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.
> மாற்கு 11:24

முதலில் நாம் நம்புகிறோம் பின்னர் பெறுகிறோம். கேட்பதற்கும் பெறுவதற்கும் இடையில் எவ்வளவு காலம் கழியும் என்பதை இந்த வசனம் நமக்குக் கூறவில்லை. நாம் பொதுவாக சிறிது காலம் காத்திருக்க வேண்டும், நாம் அப்படி செய்யும்போது, நம் நம்பிக்கை சோதிக்கப்படுகிறது. ஆனால்

சரியான நேரத்தில், தேவன் தம்மை வலிமையாகக் காட்டுகிறார், மேலும் நாம் கேட்பது தேவனுடைய விருப்பமாக இருப்பதால் நம் ஜெபத்திற்கு பதிலளிக்கப்படுகிறது.

நம்பிக்கை மிகவும் வல்லமை வாய்ந்தது, அது, விடுவிக்கப்படும்போது கிடைக்கும் வல்லமை பயத்தை வெல்ல உதவும். ஜெபிப்பதன் மூலமும், சொல்வதன் மூலமும், செய்வதன் மூலமும் நம் விசுவாசத்தை விடுவிக்கிறோம் என்று நான் கற்பிக்கிறேன். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நாம் ஜெபிக்கும்போது, தேவனின் உதவியைக் கேட்கும்போது விசுவாசம் விடுவிக்கப்படுகிறது. நாம் தேவனுடைய வார்த்தையை நம் வாயிலிருந்து அறிவிக்கும்போது அது வெளியிடப்படுகிறது. தேவன் நமக்குக் கொடுக்க விரும்புவதைப் பெற விரும்பினால், தேவன் சொல்வதை நாம் சொல்ல வேண்டும். விசுவாசம் நிறைந்த செயலை மேற்கொள்வதும் விசுவாசத்தை விடுவிக்கிறது.

ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு பிராத்தனைக்கு பதிலைப் பெற்றுக் கொள்ளும் போது, அது உங்கள் நம்பிக்கையை அதிகரிக்கிறது, மேலும் ஒவ்வொரு முறையும் நீங்கள் ஏதாவது செய்து வெற்றியை அனுபவிக்கும் போது, அதுவும் உங்கள் நம்பிக்கையையும் அதிகரிக்கிறது. நீங்கள் எவ்வளவு நம்பிக்கையுடன் இருக்கிறீர்களோ, அவ்வளவு பாதுகாப்பாக நீங்கள் இருப்பீர்கள். உங்கள் வாழ்க்கையில் தேவன் செயல்படுவதைப் பார்ப்பது உற்சாகமானது மட்டுமல்ல, அது உங்களைப் பாதுகாப்பாக உணரவும் செய்கிறது. தேவன் நம்மை நிபந்தனையின்றி நேசிக்கிறார் என்று நாம் நம்புகிறோம், ஏனென்றால் அவர் தம் வார்த்தையில் அதை மீண்டும் மீண்டுமாக கூறுகிறார், தேவன் நமக்காகச் செய்யும் செயல்கள் சிறியதாகத் தோன்றினாலும் அவற்றின் மூலம் அவருடைய அன்பு நம் வாழ்க்கையிலே வெளிப்படுவதைக் காணும்போது அதை நம்பமுடிகிறது.

> உங்கள் வாழ்வில் தேவனின் அன்பு வெளிப்படும் என்று எதிர்பார்த்து, காத்திருங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர்கள் தேவனின் அன்பை ஆழமாகவும் அந்தரங்கமாகவும் தெரிந்துகொள்ளவும் அனுபவிக்கவும் ஜெபித்தார் (எபே. 3:17-19). உங்கள் வாழ்வில் தேவனின் அன்பு வெளிப்பட வேண்டும் என்று எதிர்பார்த்து, உற்று நோக்கி காத்திருக்க உங்களை ஊக்குவிக்கிறேன். அவர் செய்யும் ஒன்றை கூட தவற விட்டுவிடாமல் இருக்க முயற்சி செய்யுங்கள். தேவன் பெரும்பாலும் மக்கள் மூலம் செயல்படுகிறார். எனவே உங்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்காக ஏதாவது அன்பான செயல் செய்தால்,

அது உண்மையில் தேவன் அவர்கள் மூலம் உங்களை நேசிக்கிறார். தேவன் பதிலளிக்கும் அனைத்து ஜெபங்களையும் பற்றி அடிக்கடி ஆழ்ந்து சிந்தியுங்கள்.

இன்று காலை டேவ் முதுகில் காயம் ஏற்பட்டது, அதனால் நகர முடியவில்லை. ஆனால் நாங்கள் பிரார்த்தனை செய்தோம், அவர் ஒரு அழற்சி எதிர்ப்பு மருந்தை எடுத்துக் கொண்டார்

மருந்து மற்றும் ஐஸ்ஸை அவ்வப்போது உபயோகித்தார். தற்போது ஐந்து மணி நேரம் ஆகிவிட்டது, அவர் அதிசயமாக நன்றாக இருக்கிறார். அவர் முதுகு மட்டும் இப்போது கொஞ்சம் இறுக்கமாக இருக்கிறது. இது பிரார்த்தனைக்கான பதில்!

என் கண்ணில் ஏதோ ஒரு வலி இருந்தது. நான் அதைப் பற்றி ஜெபித்தபோது, அந்தப் பக்கத்திலிருக்கும் என் காது வலித்துக் கொண்டிருந்ததால் என் கழுத்து அந்த வலியை ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. நான் என் கழுத்தில் ஒரு வெப்பமூட்டும் திண்டை வைத்தேன், விரைவில் என் கண் வலிக்கவில்லை. மற்றொருவர் ஜெபத்திற்கான பதில்!

தேவன் மிகவும் ஆச்சரியமானவர், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பல ஆண்டுகளாக தேவன் நமக்காக இதுபோன்ற விஷயங்களைச் செய்தும், நாம் அவருக்குத் தகுதியான மதிப்பைக் கொடுக்கவில்லை.

தேவன் என்னுடைய அன்றாட வாழ்வின் நடைமுறை அம்சங்களில் கூட அவருடைய அன்பைக் காட்டுகிறார் என்பதை இத்தகைய அனுபவங்களின் மூலம் இப்போது நான் அறிவேன். தேவனுடைய அன்பைக் கவனித்துப் பார்க்கும்படி நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அவ்வாறு செய்வது உங்கள் நம்பிக்கை மற்றும் பாதுகாப்பை உண்மையிலேயே அதிகரிக்கும்.

நீங்கள் தேவனிடம் பாதுகாப்பாக இருக்கிறீர்கள்

பாதுகாப்பை வரையறுக்க எனக்கு எளிதான வழி, அது பாதுகாப்பு உணர்வு என்று சொல்வதுதான். சிறுவயதில் அதைத்தான் நான் இழந்து கொண்டிருந்தேன் என்று நினைக்கிறேன். நான் ஒருபோதும் பாதுகாப்பாக உணரவில்லை. ஆனால் தேவன் என்னை அதிலிருந்து விடுவித்துவிட்டார், இப்போது நான் பாதுகாப்பாக உணர்கிறேன். அவர் எப்பொழுதும் என்னைக் கவனித்துக்கொள்வார் என்ற அவரின் வாக்குறுதி என்னிடம் உள்ளது என்று

நான் நம்புகிறேன். அவர் உங்களையும் கவனித்துக்கொள்வார்

> சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன்;
> கர்த்தாவே நீர் ஒருவரே என்னை சுகமாய் தங்கப்பண்ணுகிறீர்.
>
> சங்கீதம் 4:8

நான் இந்த வேத வாக்கியத்தை விரும்புகிறேன், ஏனென்றால் நான் சிறுமியாக இருந்தபோது நான் ஒருபோதும் பாதுகாப்பாக தூங்கவில்லை. என் அப்பா எப்போது என் அறைக்குள் வந்து தொடக்கூடாத இடங்களில் கைகளை வைப்பார் என்று எனக்குத் தெரியாது. இப்போதோ நான் தூங்கச் செல்லும்போது, பாதுகாப்பாக இருக்கிறேன் என்று எனக்குத் தெரியும்.

இன்றைய உலகில், பாதுகாப்பின்மையை அல்லது பாதுகாப்பற்ற தன்மையை உணரலாம். உலகம் முழுவதும் வன்முறை அதிகரித்து வருகிறது. ஷாப்பிங் மால்கள், திரையரங்குகள் மற்றும் பள்ளிகளில் சீரற்ற துப்பாக்கிச் சூடு நடப்பதாகக் கேள்விப்படுகிறோம். "தேவன் ஏன் அந்த மக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவில்லை?" என்று நீங்கள் கேட்கலாம். ஏன் என்று எனக்குத் தெரியாது என்று ஒப்புக்கொள்கிறேன், ஆனால் உலகில் உள்ள கெட்ட விஷயங்கள் என்னை நல்லதைக் காணவிடாமல் தடுக்க நான் விரும்பவில்லை. ஊடகங்கள் மற்றும் நம்மைச் சுற்றியுள்ள சாதாரண உரையாடல்களை மட்டுமே நாம் கேட்டால், நாம் கேட்பதெல்லாம் கெட்டவை என்று தோன்றுகிறது, ஆனால் நல்ல விஷயங்களும் உள்ளன. நாம் அவைகளை கவனிக்கவோ அல்லது அவைகளைப் பற்றி பேசவோ பிசாசு விரும்புவதில்லை.

> உலகில் உள்ள கெட்ட விஷயங்கள் என்னை நல்லதை பார்க்க விடாமல் தடுக்க நான் விரும்பவில்லை.

நம் வாழ்வில் நமக்கு ஒருபோதும் பிரச்சனை வராது என்பதற்கு நமக்கு உத்தரவாதம் இல்லை, ஆனால் தேவன் எப்போதும் நம்முடன் இருப்பார் என்றும், அவர் நம்மை ஆறுதல்படுத்தி ஊக்குவிப்பார் என்றும் உறுதியளிக்கிறோம் (சங். 23:4; ஏசா. 41:10).

தேவன் தம்முடைய வார்த்தையில் துன்மார்க்கரைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று கூறுகிறார், ஏனென்றால் அவர்கள் விரைவில் புல்லைப் போல வெட்டப்படுவார்கள். நாம் கர்த்தரை நம்பி, தொடர்ந்து நன்மை செய்ய வேண்டும் (சங். 37:1-3). உலகம் சொல்வதை விட தேவன் சொல்வதில் அதிக கவனம் செலுத்த முயற்சிப்போம்.

பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் இருப்பது எவ்வளவு அற்புதமான விஷயம்! இதன் பொருள் நமக்கு ஒருபோதும் பிரச்சனை இருக்காது என்பதில்லை, ஆனால் அதனூடாக கடந்து சென்று நாம் பாதுகாப்பான இடத்திற்கு வருவோம். நாம் கஷ்டங்களின் ஊடாக செல்லும் போது, அவர் நம்முடன் இருப்பார் என்று தேவன் கூறுகிறார்:

> பயப்படாதே, நான் உன்னை மீட்டுக்கொண்டேன்; நான் உன்னைப் பெயர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது, நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை, நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய், அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது.
>
> ஏசாயா 43:1-2

“கடந்து செல்வது” நமக்கு சுவாரஸ்யமாக இருப்பதில்லை, ஆனால் பிரச்சனையிலிருந்து வெளிவரும் வாக்குறுதி நமக்கு நம்பிக்கையையும், பாதுகாப்பையும் தருகிறது. இவை தேவனிடமிருந்து நமக்குக் கிடைக்கும் பரிசுகள், ஒரு பரிசைத் திறந்து பார்க்காமல் விட்டுவிடக்கூடாது. நீங்கள் முன்னேறிச் சென்று உங்கள் தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை பிசாசுக்குக் காட்ட வேண்டிய நேரம் இது!

பகுதி 3

பயத்திலிருந்து சுதந்திரமாக நடப்பதற்கான மனநிலை

அன்பு என்பது மகிழ்ச்சி, வெறுப்பு, பொறாமை மற்றும் எல்லாவற்றையும் விட மிக எளிதாக பயத்தின் வாயில்களைத் திறக்கும் முக்கியத் திறவுகோலாகும்.

-ஆலிவர் வெண்டெல் ஹோம்ஸ் சீனியர்.

பயம் ஒரு பொய்

அது காலை ஏழு முப்பது மணியாக இருந்தது, அதற்குள்ளாகவே கவலை மற்றும் பயத்தின் பழக்கமான அலையை என்னால் உணர முடிந்தது. என் கணவர் எட் பயணம் செய்யும் போதெல்லாம், இரவில் பயம் என் இருதயத்தைப் பற்றிக் கொள்ளும், அவர் பல ஆண்டுகளாக பயணம் செய்கிறார் இப்போது ஏன்? என்று நான் நினைப்பேன்! நான் ஏன் திடீரென்று பயப்படுகிறேன்? பயத்தைத் தடுக்க நான் பொதுவாக அதே வழக்கத்தையே செய்ய முயற்சித்தேன்: பயத்தை மறுத்து, மெலடோனின் எடுத்து, ஜெபம் செய்தேன். பெட்ரூம் கதவைப் பூட்டுவதுதான் கொஞ்சம் நிம்மதியைத் தந்தது.

இப்படியாக பயந்துக் கொண்டிருந்த ஒரு இரவுக்குப் பிறகு, நான் அவமானத்தையும் விரக்தியையும் உணர்ந்தேன். சில நம்பத்தகாத பயத்திற்கு நான் பயப்படும்போது, அன்பான தேவன் மீதான நம்பிக்கை மற்றும் ஜெபத்தின் வல்லமை பற்றி மற்றவர்களிடம் எப்படி பேசுவது? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். நான் ஒரு விசுவாசியாக, கிறிஸ்துவிலிருக்கும் ஜீவனைப் பற்றி யாரிடமும் பேசுவதில் எந்தத் தகுதியும் இல்லாத ஒரு ஏமாற்றுக்காரியாக உணர்ந்தேன். எட் உட்பட எனது பயத்தைப் பற்றி யாரிடமும் சொல்லும் தைரியத்தை என்னால் திரட்ட முடியவில்லை.

மற்றொரு பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்த நிலையில், பல ஆண்டுகளுக்கு முன்பு நான் பார்த்த ஒரு ஆலோசகரை அழைத்து பேச முடிவு செய்தேன். கடந்த கால காயங்கள் மற்றும் துஷ்பிரயோகம் குணமடைய தேவனைப் பார்க்க அவள் அன்புடன் எனக்கு உதவினாள். என் இரவு நேர பயத்தின் அவமானத்தையும் விரக்தியையும் அவளிடம் சொன்னேன்.

அவள் பொறுமையாகக் கேட்டுவிட்டு, “ஜோன், நீ இரவு உறங்கச் செல்வதற்கு முன் நீ குழந்தையாக இருந்தபோது உன் அண்ணன் உன்னிடம் சொல்வான் என்று என்னிடம் நீ சொன்னது உனக்கு நினைவிருக்கிறதா?”என்று கேட்டாள்.

என் தலையில் மின்விளக்கு எரிவது போல் இருந்தது. நான், “ஆம்! என்றேன். அவன் சொல்வான், ‘இன்றிரவு உன் படுக்கையறைக் கதவைப் பூட்டுவது நல்லது, ஏனென்றால் நான் என்ன செய்வேன் என்று உனக்குத் தெரியாது.” என்பான்.

பயத்தைப் பற்றி நான் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தபோதிலும், என் வாழ்க்கையில் எட் தான் பாதுகாப்பான நபர் என்பதை எனது ஆலோசகர் எனக்கு நினைவூட்டினார். எனவே, அவர் பயணம் செய்யும் போது, பழைய பழக்கமான முறை மீண்டும் தொடங்கியது: உதவியற்ற தன்மை, பயம், அவமானம், அசைக்க முடியாத பயம். என்னைப் பொறுத்தவரை, கதவைப் பூட்டுவது பழைய பொய்க்கு பழைய பதில். சில மாதங்களுக்குள், கதவைத் பூட்டாமல் திறந்த நிலையில் தூங்க ஆரம்பித்தேன்! என்னை நேசிக்கும் தேவனுக்குள்ளிருப்பதே எனக்குரிய வெற்றி என்ற உண்மையைக் கொண்டு பயத்தின் பொய்யை மாற்றினேன். நான் பயப்பட ஒன்றுமில்லை, ஏனென்றால் நான் அவருடைய அன்பிலே இளைப்பாற முடியும்.

- ஜோன்

அத்தியாயம் 14

நீங்கள் அச்சமின்றி நேசிக்க முடியும்

உங்களை நேசிக்க அனுமதிக்கும் பயத்திலிருந்து விடுதலை

> அன்பில் பயம் இல்லை [பயம் என்பது இல்லை], ஆனால் முழுமையான (முழுமையான, பரிபூரணமான) அன்பு பயத்தை கதவுகளுக்கு வெளியே திருப்பி, பயத்தின் ஒவ்வொரு தடயத்தையும் வெளியேற்றுகிறது!
>
> 1 யோவான் 4:18

பலர் அன்பாயிருக்க பயப்படுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் காயப்படுவார்கள் என்று பயப்படுகிறார்கள். அன்பு பாதிக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டும், அது பிறரை நேசித்த மற்றும் பிறரால் நேசிக்கப்பட்டு, பின்னர் காயப்பட்டு, நேசிப்பதாகக் கூறிய ஒருவரால் அல்லது நேசித்த ஒருவரால் மோசமாக காயப்படுத்தப்பட்ட, காட்டிக்கொடுக்கப்பட்ட அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட்ட எவருக்கும் இது மிகவும் பயமாக இருக்கிறது. என் தந்தை என்னை எவ்வளவு நேசித்தார் என்று எல்லா நேரங்களிலும் என்னிடம் கூறினார், ஆனால் அவரது அன்பு என்னை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ய அனுமதித்தது. என் அம்மா என்னை நேசிப்பதாக கூறினார், ஆனால் அவள் என்னை கைவிட்டாள். மேலும் எனது முதல் கணவர் என்னை காதலிப்பதாக கூறினார், ஆனால் அவர் துரோகம் செய்தார். நான் டேவைச் சந்தித்த போது, காதல் என்றால் என்ன என்றே எனக்குத் தெரியாது, அதை எப்படிக் கொடுப்பது அல்லது பெறுவது என்றும் எனக்குத் தெரியவில்லை.

தேவனின் அன்பைப் பெறக் கற்றுக்கொண்ட பிறகும், அவரை நம்புவதன் மூலமும், என்னை நேசிப்பதாகக் கூறியவர்களை நம்பத் தொடங்கினேன். நம்மை நேசிப்பவர்கள் நம்மை ஒருபோதும் காயப்படுத்த மாட்டார்கள் என்று நான் கூறமாட்டேன், ஏனென்றால் எல்லா விதத்திலும் அவர்கள் அப்படி செய்ய சாத்தியம் இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, மனிதர்களாகிய நாம் ஒருவரையொருவர் காயப்படுத்துகிறோம், ஏமாற்றுகிறோம், ஆனால் தேவனுடன் நடப்பதன் மூலம் மன்னிக்கவும் ஆரோக்கியமான உறவுகளை தொடர்ந்து கட்டியெழுப்பவும் கிருபையைப் பெறுகிறோம். நான் டேவை மிகவும் நேசிக்கிறேன். ஆனால் அவர் என்னை ஏமாற்றும் அல்லது என் உணர்வுகளை புண்படுத்தும் நேரங்களும் உண்டு. அது நிகழும்போது, நான் தேவனிடம் சென்று எனக்குத் தேவையான ஆறுதலையும் சுகத்தையும் பெற கற்றுக்கொண்டேன். டேவ் என்னை நேசிக்கிறார், வேண்டுமென்றே என்னை காயப்படுத்தவில்லை என்பது எனக்குத் தெரியும்.

நம்முடைய பல புண்படுத்தும் உணர்வுகள் நம்முடைய நம்பத்தகாத எதிர்பார்ப்புகளிலிருந்து வருகின்றன. யாராவது நமக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் நாம் அதை எதிர்பார்க்கிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது, அதனால் அவர்கள் அதைச் செய்ய மாட்டார்கள். எத்தனை முறை, நீங்கள் காயமடையும் போது, "இதை விட அதிகமாக உங்களிடமிருந்து நான் எதிர்பார்த்தேன்" அல்லது "நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை" அல்லது "நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன்" என்று நீங்கள் நினைக்கிறீர்களா அல்லது கூறுகிறீர்களா? மற்றவர்களை நேசிப்பது என்பது மனிதர்களின் சிறப்பான குணத்தை நாம் நம்புவதாகும் (1 கொரி. 13:4-7) என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் கற்பிக்கிறது, அதைச் செய்ய நாம் தயாராக இருந்தால், உணர்ச்சிகரமான வேதனையைத் தவிர்க்கலாம்.

> நம்முடைய பல புண்படுத்தும் உணர்வுகள் நம்முடைய நிதர்சனமில்லாத எதிர்பார்ப்புகளிலிருந்து வருகின்றன.

நம் முடிவுகளையும் செயல்களையும் பயம் தீர்மானிக்க விடாமல் வாழக் கற்றுக்கொண்டால், நாம் பயமின்றி நேசிக்க முடியும். நாம் எச்சரிக்கையாகவோ அல்லது பயமாகவோ உணர்ந்தாலும், விசுவாசத்தின் ஒரு படியை நாம் எடுக்கலாம். நான் அடிக்கடி சொல்வேன், "வெளியே வந்து கண்டுபிடி." பாதுகாப்பாக இருக்க ஒரே வழி என்று நினைத்து, மற்றவர்களிடம் இருந்து

விலகாதீர்கள் அல்லது உங்களை தனிமைப்படுத்திக்கொள்ளாதீர்கள். எல்லாத் தனிமையும் நம்மைத் தனிமையாக, நிறைவடையாத வாழ்க்கையை வாழ வைக்கிறது. தேவன் மற்றவர்கள் நமக்கு தேவைப்படும்படியாக படைத்திருக்கிறார், நாம் அனைவரும் வித்தியாசமாக இருந்தாலும், நாம் ஒன்றாக வாழ்க்கையைக் கொண்டாடும்போது ஒருவரையொருவர் நிறைவடையச் செய்கிறோம்.

நாம் ஏற்கனவே பார்த்தபடி, தேவனின் பரிபூரண அன்பு பயத்தை விரட்டுகிறது என்று வேதம் நமக்குக் கற்பிக்கிறது (1 யோவான் 4:18). தேவனின் அன்பைப் பெறும் போது மற்றவர்களை நேசிக்கும் தைரியத்தை அது அளிக்கிறது. லட்சக்கணக்கான மக்கள் யாராவது தங்களை நேசிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள், மேலும் “தேவனே, என்னைப் பயன்படுத்துங்கள்” என்று நாம் கூறலாம். தேவனின் அன்பை நம் வழியாக அவர்களுக்குப் பாய அனுமதிப்பவர்களாக நாம் இருக்க முடியும். அவருடைய அன்பு நம்மைக் குணப்படுத்துவது போல, நம் மூலம் அவருடைய அன்பு மற்றவர்களையும் குணப்படுத்தும்.

அன்பில்லாமல் வாழ்க்கை இல்லை

> நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்தில் நிலைக்கொண்டிருக்கிறான்.
>
> 1 யோவான் 3:14

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள “ஒருவரையொருவர்” என்பது தேவன் மீதுள்ள விசுவாசத்தின் மூலம் அவருக்கு சொந்தமானவர்களைக் குறிக்கிறது. இந்த வேதம் வல்லமை வாய்ந்தது, இது விரைவாக கடந்து செல்லக்கூடிய ஒன்றல்ல. அது என்ன சொல்கிறது என்று யோசித்துப் பாருங்கள். நாம் நேசிக்கவில்லை என்றால், நாம் மரணத்திருக்கிறோம். நாம் உயிருடன் இல்லை என்று அர்த்தம் இல்லை, ஆனால் நமக்கு உண்மையான ஜீவன் இல்லை, சந்தோஷம் அல்லது சமாதானம் இல்லை என்று அர்த்தம். நாம் “நடைபிணங்களாக” இருப்போம்” நாம் உயிருடன் தான் இருக்கிறோம், ஆனால் வாழ்க்கை அர்த்தமற்றதாக இருக்கிறது. நாம் அன்பிற்காக உருவாக்கப்பட்டதால், அது இல்லாமல் நாம் ஒருபோதும் உண்மையிலேயே சந்தோஷமாக இருக்க முடியாது. தொண்ணூறு வயதுக்கு மேற்பட்ட பிரபல நடிகர் டிக் வான் டைக், நாம் எவ்வளவு வயதானாலும், “நம் அனைவருக்கும்

ஏதாவது செய்ய வேண்டும், யாரையாவது நேசிக்க வேண்டும், மேலும் நம்புவதற்கு ஏதாவது வேண்டும்" என்று கூறினார். நமக்கு தேவன் தேவை என்பதையும் சேர்த்துக் கொள்கிறேன், வான் டைக் சொன்னதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

1 யோவான், அன்பைப் பற்றி பல அற்புதமான வசனங்களை உள்ளடக்கியிருக்கிறது. உதாரணமாக, " தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால், தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்!" (1 யோவான் 4:12). நிலைத்திருப்பது என்பது வாழ்வது, தங்கி நிலைத்திருப்பது; தேவன் அன்பாக இருப்பதால், நாம் மற்றவர்களை நேசிக்கும்போது தேவன் அங்கே இருக்கிறார். அவருடைய அன்பு நம்மில் பரிபூரணமடைகிறது. அதாவது அன்பு சுழற்சி முடிந்தது. அன்பு தேவனிடமிருந்து வருகிறது, நம்மால் பெற்றுக் கொள்ளப்படுகிறது, மேலும் நம் மூலமாக தேவனிடமும் மற்றவர்களிடமும் பாய்கிறது. "அவர் முதலில் நம்மை நேசித்ததால் நாம் நேசிக்கிறோம்" (1 யோவான் 4:19).

> அன்பு தேவனிடமிருந்து வருகிறது, நம்மால் பெற்றுக்கொள்ளப்படுகிறது, மேலும் நம் மூலமாக தேவனிடமும் மற்றவர்களிடமும் பாய்கிறது.

பூமியில் இருப்பதற்கான நமது நோக்கம் எதுவாக இருந்தாலும், நம்முடைய முதன்மை நோக்கம் தேவனின் அன்பை நம் மூலமாக பாயவிடுவதுதான். "நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது." (1 யோவான் 3:23). தேவன் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார் என்று நாம் அடிக்கடி ஆச்சரியப்படுகிறோம், மேலும் இந்த ஒரு வசனம் அவருடைய எதிர்பார்ப்புகளை சுருக்கமாகக் கூறுகிறது. நீங்கள் கேட்கலாம், "கீழ்ப்படிதல் பற்றி என்ன? இது மிக முக்கியமான விஷயம் அல்லவா?" தேவனையும் மற்றவர்களையும் உண்மையாக நேசித்தால், கீழ்ப்படிவோம் என்பதே இரகசியம். நாம் எதைச் செய்யக் கூடாது (பாவம்) என்பதைப் பற்றி கவனித்துக்கொண்டிருப்பதற்கு பதிலாக நாம் என்ன செய்ய வேண்டும் (தேவன் மற்றும் மக்களை நேசித்தல்) என்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நாம் எதில் கவனம் செலுத்துகிறோமோ அதுவே நம் வாழ்வில் உற்பத்தியாகிறது. அவர்கள் ஆவியில் நடந்தால், மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டார்கள் என்று கலாத்தியர்களிடம்

பவுல் கூறினார் (கலா. 5:16), “மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றாமல் இருக்க முயற்சி செய்யுங்கள், அப்போது நீங்கள் ஆவியில் நடக்கலாம் என்று அவர் சொல்லவில்லை.”

தேவன் மீது கவனம் செலுத்துங்கள். அவர் உங்களை எவ்வளவு நேசிக்கிறார். அவரை நேசிப்பதிலும் மற்றவர்களை நேசிப்பதிலும் கவனம் செலுத்துங்கள், உங்களின் பல பிரச்சினைகள் மறைந்துவிடும். மற்றவர்கள் (தேவன் உட்பட) நமக்கு என்ன செய்ய முடியும் மற்றும் செய்ய வேண்டும் என்பதில் நாம் அதிகமாக கவனம் செலுத்துகிறோம், ஆனால் தேவனுக்காகவும் மற்றவர்களுக்காகவும் நாம் என்ன செய்ய முடியும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். நமக்கு நிறைய விஷயங்கள் தலைகீழாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது, ஒரு சிறிய மாற்றம் மிகவும் உதவியாக இருக்கும்.

நீங்கள் ஜெபிக்கும்போது, தேவன் உங்களுக்காக என்ன செய்ய வேண்டும் என்ற பட்டியலை அவரிடம் கொடுத்து உங்கள் ஜெப நேரத்தைத் தொடங்க வேண்டாம். அதற்கு பதிலாக, அவர் உங்களுக்காக ஏற்கனவே செய்ததற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள், பின்னர் நீங்கள் அவருக்கும் மற்றவர்களுக்கும் எப்படி சேவை செய்யலாம் என்று கேளுங்கள். நீங்கள் ஆசீர்வதிக்கக்கூடிய ஒருவரை நினைத்து, அவரை ஆசீர்வதியுங்கள். அதைச் செய்யுங்கள். நம் மீது நாம் எவ்வளவு குறைவாக கவனம் செலுத்துகிறோமோ, அவ்வளவு சந்தோஷமாக இருப்போம்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஓடும் நதியாக இருக்க வேண்டும், தேங்கி நிற்கும் குளம் அல்ல. தேவன் நமக்குக் கொடுக்கும் ஒவ்வொரு நல்ல விஷயமும் நம் மூலம் மற்றவர்களுக்கு பாய்ந்து செல்ல வேண்டும். மற்றவர்களுடன் அன்பாக நடப்பது தேவனுக்கு மிகவும் முக்கியமானது, ஏனென்றால் உலகம் அவரை அதன் மூலமாக தான்அறியும் (யோவான் 13:35). “சகோதரர்களை” (நம்முடைய சக கிறிஸ்தவர்கள்) நேசிக்க வேண்டும் என்று நமக்குச் சொல்லப்படுகிறது, ஆனால் நாம் எல்லா மக்களையும்அு எல்லா வகையான மக்களையும், எளிதில் நேசிக்காதவர்களையும்கூட நேசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அன்பு என்பது நாம் காத்திருந்துப் பெற்றுக்கொள்ளும் ஒரு உணர்வு அல்ல; மக்களை எப்படி நடத்துவோம் என்பது குறித்து நாம் எடுக்கும் முடிவு. ஒருவர் உங்களை காயப்படுத்தியிருந்தால், உதவி தேவைப்படும் அவருக்கு உதவ வேண்டுமென்று உங்களுக்கு தோன்றாமலிருக்கலாம். ஆனால் தேவன் செய்வதோ அவரை நேசிப்பதாகும். நாம் அவரின் பிரதிநிதிகளாக இந்த உலகத்திலே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

அன்பின் தேவை

மற்றவர்களை நேசிப்பதற்கு, நாம் விரும்புவதை எப்போதும் பெற்றுக் கொள்ளும் வகையில் நம்மை நாமே கவனித்துக் கொள்ள தொடர்ந்து முயற்சி செய்துக் கொண்டிராமல், தன்னலமற்ற முறையில் வாழ்வது எப்படி என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் நான் விரும்புவதை விரும்பும் நபர், நான் கவனமாக இல்லாவிட்டால், அதைப் பெறுவதற்கு, பிறரை பற்றி எண்ணாமல் என்னைப் பற்றி மட்டும் எண்ணிக் கொண்டிருக்கக்கூடும். நான் இயற்கையாகவே அதிக தன்னலமற்ற, தியாகியாக இருக்க விரும்புகிறேன், ஆனால் அது என்னுடைய இயல்பான குணம் அல்ல, எனவே மற்றவர்களுக்கு முதலிடம் கொடுப்பதன் மூலம் வேண்டுமென்றே தன்னலமற்றவளாக இருப்பது எப்படி என்பதை நான் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. என்னைப் பற்றி என்ன? என்ற மனப்பான்மையைத் தூண்டும் எண்ணங்களுடன் நான் போராடும் போது நான் சொல்லும் மிகவும் பயனுள்ள வசனங்களில் ஒன்று பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் உள்ளது:

> ஒன்றையும் வாதினலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.
>
> பிலிப்பியர் 2:3-4

நம்மை விட மற்றவர்களை நாம் சிறந்தவர்களாகக் கருத வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துவதில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன், ஆனால்

“நாம் அவர்களை தேவனுக்கு மிகவும் முக்கியமானவர்களாக பார்க்க வேண்டும் மற்றும் அவர்களை அப்படி நடத்த வேண்டும். நாம் மற்றவர்களை விட சிறந்தவர்கள் என்று ஒருபோதும் நினைக்கக்கூடாது. பவுல் இவ்வாறு கூறினார், “உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாதிருக்கவேண்டும்.” (ரோமர் 12:3)

> “உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாதிருக்கவேண்டும்.” (ரோமர் 12:3)

பிலிப்பியரில் உள்ள இந்தப் பகுதி,

பிறருக்கு நாம் செய்ய விரும்புவதைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் நம் சொந்த ஆசைகளை எப்போதும் விட்டுவிட வேண்டும் என்று பரிந்துரைக்கவும் இல்லை. இந்த பகுதியில் சமநிலையற்ற மனப்பான்மை கொண்ட ஒரு நபர் எளிதில் கட்டுப்படுத்தலாம் மற்றும் கையாளப்படலாம். ஒவ்வொரு நாளும் நீங்கள் சுயநலமாக இருக்காமல், மற்றவர்களுக்கு உதவுவதற்கு உங்களுக்கு உதவுமாறு தேவனிடம் கேட்டு பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதே இலக்காக கொள்ளவேண்டும்.

நாம் மக்களுக்கு உதவக்கூடிய சில வழிகள் வெளிப்படையாக இருக்கிறது. நாம் அவைகளைப் பற்றி நீண்ட நேரம் சிந்திக்கவோ அல்லது ஜெபிக்கவோ தேவையில்லை, அவை நாம் செய்ய விரும்புகிறவையா என்று தேவனிடம் கேட்கக்கூடாது. உதாரணமாக, ஒரு மளிகைக் கடையில் ஒரு முதியவர் நமக்குப் பின்னால், அவருடைய வண்டியில் இரண்டு பொருட்களை வைத்துக்கொண்டு இருக்கும் போது, நம்முடையதோ முழுவதுமாக நிரம்பியிருந்தால், அவர்களை நம் முன்னே செல்ல அனுமதிக்க நம் உள்ளுணர்வில் அறிந்திருக்க வேண்டும். இயேசு அப்படியாகத் தான் செய்வார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். கர்ப்பமாக இருக்கும் ஒரு பெண் தன் கைக்குழந்தையைக் கையால் பிடித்துக் கொண்டு, மளிகை வண்டியையும் தள்ளிக்கொண்டு தன் காருக்குச் செல்வதைக் கண்டால் நாம் வண்டியைத் தள்ளிச் சென்று மளிகைப் பொருட்களை அவளது வாகனத்தில் ஏற்ற உதவ முன்வர வேண்டும். நடைபாதையில் யாராவது நமக்கு முன்னால் நடந்து சென்றுக் கொண்டிருக்கும் போது, அவர்கள் தங்கள் ஷாப்பிங் பையை தவற விட்டதால், பொருட்களெல்லாம் வெளியே வெவ்வேறு திசைகளில் உருண்டோடிக்கொண்டிருக்குமென்றால், மனித நேயத்தால் அந்த நபருக்கு உதவும் முயற்சியில் பொருட்களை சேகரித்துக் கொடுக்கலாம். இத்தகைய செயல்கள் பெரும்பாலும் “ கருணை செயல்கள்” என்று குறிப்பிடப்படுகின்றன. நாம் அவற்றை செய்கிறோம், ஏனென்றால் நாம் செய்யத்தக்க சரியான செயல்கள் அவை. நம் மனதை மற்றவர்கள் மீது வைத்திருப்பதை விட வேறு எதுவும் நம்மைப் பற்றிய எண்ணத்தை மாற்ற நமக்கு உதவாது. நாம் செல்லும் எல்லா இடங்களிலும் மற்றும் நாம் செய்யும் எல்லாவற்றிலும் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கும், சேவை செய்வதற்கும், உதவுவதற்கும் வாய்ப்புகளைத் தேடுவது, சுயநலம் மற்றும் சுயத்தை மையப்படுத்தும் மாம்சப் பண்புகளுக்கு மரணத்தையும் நம் ஆவிக்கு உயிரையும் கொண்டுவருகிறது.

சில சமயங்களில் தேவன் நம்மைச் சோதிப்பதற்காகவே சூழ்நிலைகளை அமைக்கிறார். நாம் அவசரமாக இருக்கும் போது அவர் அடிக்கடி இதைச்

செய்வார். அப்போதுதான் நாம் ஒரு முடிவை எடுக்க வேண்டும்: இந்த சூழ்நிலையில் தேவனின் கருணையைக் காட்டுவதை விட எனது இறுக்கமான காலவரிசை முக்கியமா?

வாழ்க்கையில் நமக்கு இருக்கும் ஒரு பெரிய பயம் என்னவென்றால், நாம் விரும்புவது நமக்கு கிடைக்காது என்பதுதான். அதனால்தான் சூழ்நிலைகள், மனிதர்கள் மற்றும் சில சமயங்களில் தேவனைக் கூட கட்டுப்படுத்த முயற்சிக்கிறோம். நாம் பெறுவதை விட கொடுப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும், அவ்வாறு நாம் செய்யும்போது, தேவனின் முகத்தில் புன்னகை பூக்க வைக்கும் மகிழ்ச்சியான மக்களாக இருப்போம். ஒவ்வொருவரும் அவற்றைச் செய்ய உறுதிபூண்டால், சிறிய கருணை செயல்கள் உலகையே மாற்றும்.

வாழ்க்கையில் நமக்கு இருக்கும் ஒரு பெரிய பயம் என்னவென்றால், நாம் விரும்புவது நமக்கு கிடைக்காது என்பதுதான்.

சிலருக்கு உதவுவது கடினம்

சிலருக்கு உதவுவது கடினம். அவர்களுக்கு உதவி தேவைப்பட்டாலும், யாருக்கும் கடன்பட்டிருக்க விரும்பாததால், அதைப் பெற்றுக் கொள்ள அவர்கள் பயப்படுகிறார்கள். நாம் உதவி செய்ய முற்படும்போது, திட்டவட்டமாக நிராகரிக்கப்பட்டால் சற்று சங்கடமாக இருக்கும். அது முகத்தில் அறைவது போல் உணரலாம் அல்லது குறைந்தபட்சம் நாம் நிராகரிக்கப்பட்டதாக உணரலாம்.

ஸ்டார்பக்ஸில் எனக்கு முன்னால் வரிசையில் இருந்த ஒருவருக்கு காபிக்கு பணம் கொடுக்க ஒருமுறை முயன்றது எனக்கு நினைவிருக்கிறது. நான் அவளை பயமுறுத்திவிட்டதைப் போன்று காணப்பட்டாள், ஒரு கப் காபி வாங்கி கொடுக்க அனுமதிக்க மறுத்தாள். இன்றைய சமூகத்தில், பலவிதமான வன்முறைச் செயல்கள் நடைபெறுவதால், என் உண்மையான நோக்கம் என்னவென்று அவளுக்குத் தெரியாதிருந்ததால், அவள் பயந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். ஆனால் உதவி அல்லது பரிசுகளைப் பெறத் தெரியாதவர்களுக்காக நான் வருந்துகிறேன். அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, அடுத்த சில முறை நான் ஒரு எதேச்சையான கருணைச் செயலைச் செய்யத் தொடங்கியபோது எனக்குள் பயம் ஏற்பட்டது, அதனால் நான் பயந்துக் கொண்டே செய்ய வேண்டியிருந்தது! சிலருக்கு எப்படிப் பெறுவது என்று தெரியாததால் நாம் கொடுப்பதை நிறுத்திக் கொள்ள முடியாது.

எதேச்சையான வன்முறை செயல்களை எதேச்சையான கருணை செயல்களால் தோற்கடிப்போம்

சுவர்களை இடித்து விடுங்கள்

யாராவது என்னை காயப்படுத்தினால், நான் முதலில் செய்ய ஆசைப்படுவது கண்ணுக்கு தெரியாத ஒரு சுவரை எழுப்ப வேண்டும், அது எனக்கும் என்னை காயப்படுத்தியவருக்கும் இடையில் நிற்கிறது. மீண்டும் என்னை காயப்படுத்த உங்களுக்கு வாய்ப்பு கிடைக்காது என்று நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். நான் உன்னை என் வாழ்க்கையிலிருந்து விலக்கி வைப்பேன், அதனால் நீ என்னை காயப்படுத்த முடியாது. ஆயினும், தேவன் நமக்குக் கொடுப்பதைப் போலவே, நாமும் சில சமயங்களில் பிறருக்கு மேலும் மேலும் வாய்ப்புகளைக் வழங்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். நம்முடைய சுதந்திரத்திற்காக இயேசு செலுத்திய விலை வேதனையாகும். மேலும் நாம் நேசிக்கப்படுதல் மற்றும் அன்பாக இருப்பது போன்ற அற்புதமான மர்மத்திற்குள் நுழைய விரும்பினால், சில சமயங்களில் நாம் காயப்படுத்தப்பட தயாராக இருக்க வேண்டும். நம்முடைய சொந்தச் சுவர்களை எழுப்புவதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக தேவன் மீது நம்பிக்கை வைப்போமானால், தேவனே நமக்கு பாதுகாப்புச் சுவராக இருப்பார். பிறரை நேசித்து, அதனால் ஒருபோதும் காயமடையாதிருப்பது சாத்தியம் என்று நான் நினைக்கவில்லை, ஆனால் நம்மை குணப்படுத்தும் இயேசு நம்மில் வாழ்கிறார், அவர் நம் காயங்கள் அனைத்தையும் கட்டி, நம் காயங்களை ஆற்றுகிறார். (சங்கீதம் 147:3).

அச்சமற்ற அன்பு நம் எதிரியான சாத்தானை தோற்கடிக்கும், அவன் நம் வாழ்நாளில் இதுவரை கண்டிராத அளவுக்கு சண்டையையும் வெறுப்பையும் பரப்புவதில் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறான். நாம் அவனை எதிர்த்துப் போராட வேண்டும், தீமையை வெல்லும் ஒரே வழி நன்மை செய்வதுதான் (ரோமர் 12:21). அன்பிலே நடப்பது ஆவிக்குரிய போராகும். மேலும் அது நம்மை மகிழ்ச்சியடையச் செய்கிறது, ஏனெனில் இயேசுவே, “வாங்குவதைவிட கொடுப்பதே பாக்கியம்”என்று சொல்லியிருக்கிறாரே. (அப்போஸ்தலர் 20:35).

நிராகரிப்பு அல்லது புறக்கணிப்பு பற்றிய பெரும்பாலான அச்சங்கள் மற்றவர்களின் ஒப்புதல் வேண்டுமென்ற விருப்பத்தினால் ஏற்படுகின்றது. பிறரின் கருத்துகளின் அடிப்படையில் உங்கள் சுயமரியாதையை அடிப்படையாகக் கொள்ளாதீர்கள்.

- ஹார்வி மேக்கே

எதிர்ப்பாராத பயம்

நான் இளமையாக இருந்தபோது, என் வாழ்க்கை முழுவதும் விளையாட்டைச் சுற்றியே இருந்தது. ஒரு விளையாட்டுப் பருவம் முடிந்தவுடன், மற்றொன்று தொடங்கியது. நடுநிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது, வெள்ளிக்கிழமை இரவு விளையாட்டுகளில் உயர்நிலைப் பள்ளி கால்பந்து வீரர்களைப் பார்க்கும்போது, நானும் ஒரு நாள் அவர்களைப் போலவே இருப்பேன் என்று நினைப்பேன்!

விளையாட்டில் சிறந்து விளங்குவதுதான் என்னையும் என் அப்பாவையும் இணைத்த ஒரே பகுதி. அவர் மிகவும் பாசமுள்ளவர் அல்ல, வகுப்பறையிலோ அல்லது விளையாட்டுக்களத்திலோ நான் வெற்றி பெறும் போது மட்டுமே அவர் என்னைப் பற்றி பெருமிதம் கொள்வதாக உணர்ந்தேன். நான் அவ்வளவு அதிகம் படிக்காததால், விளையாட்டில் சிறந்து விளங்குவதே அவருடைய அங்கீகாரத்தைப் பெறுவதற்கான ஒரே வழியாக இருந்தது.

எனது உயர் நிலை பள்ளி ஆண்டு நெருங்கும் போது, நான் கால்பந்து மற்றும் கூடைப்பந்தாட்டத்தை முயற்சிக்க ஆர்வமாகவும் தயாராகவும் இருந்தேன். சோதனைகளுக்கு சில நாட்களுக்கு முன்பு, என் முழங்காலில் வலி ஏற்பட்டது, நான் ஒரு மருத்துவரை சந்திக்க வேண்டியிருந்தது. சந்திப்பின் போது, மருத்துவர் என்னைப் பார்த்து, எந்த விளையாட்டு வீரரும் கேட்க விரும்பாத மூன்று வார்த்தைகளைக் கூறினார்: “உனக்கு அறுவை சிகிச்சை தேவை.” அது விழுங்குவதற்கு கடினமான மாத்திரையாக இருந்தாலும், அது உயர் நிலை பள்ளி மட்டுமே என்பதை எனக்கு நினைவூட்டினேன். என் வாழ்நாள் கனவு மறுக்கப்படாது; அது வெறுமனே காத்திருக்க வேண்டும் அவ்வளவு தான்..

எனது ஜூனியர் ஆண்டின் தொடக்கத்தில், எனது மற்றொரு முழங்காலில் வலி ஏற்பட்டது, அது என்னை மீண்டும் அதே நிலைமைக்கு கொண்டு சென்றது: பெரிய அறுவை சிகிச்சை, விளையாட்டுகளைத் தவறவிட்டது. பயம் என்னை ஆட்கொள்ளத் தொடங்கிய சரியான தருணம் இதுதான். நான் நினைத்தேன், நான் இவ்வளவு கடினமாக உழைத்த என் கனவு வாழ்க்கையை எப்போதாவது வாழ முடியுமா? என்னால் விளையாட்டு விளையாட முடியாவிட்டால் எனக்கு இன்னும் நண்பர்கள் இருப்பார்களா? என் அப்பா என்ன நினைப்பார்? அவர் இன்னும் என்னைப் பற்றி பெருமைப்படுவாரா? அவர் இன்னும் என்னை நேசிப்பாரா?

பயத்தை அல்லது மற்றொரு அறுவை சிகிச்சையை நான் சமாளிக்க வேண்டிய கடைசி நேரம் அது என்று நான் கூற விரும்புகிறேன், அப்படி கூறினால் இரண்டுமே தவறாக இருக்கும். நான் தவறவிட்டுவிடுவேனோ அல்லது தெரியாதைப் பற்றிய(நான் விரும்பியது பறிக்கப்பட்டுவிடுமோ), என்ற பயங்களை கடக்க வேண்டியது மட்டுமல்ல என் திறன்களுக்குப் பதிலாக கிறிஸ்துவில் எனது பாதுகாப்பு மற்றும் நோக்கத்தை நான் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

- டேவிஸ்

அத்தியாயம் 15

நீங்கள் ஏற்றுக்கொண்டு / ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழலாம்

நிராகரிக்கப்படுவோம் என்ற பயத்திலிருந்து விடுதலை

> சீஷரை நேநாக்கி: உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான், உங்களை அசட்டைபண்ணு-கிறவன் என்னை அசட்டைபண்ணுகிறான், என்னை அசட்டைபண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறான் என்றார்.
>
> லூக்கா 10:16

நான் இந்தப் புத்தகத்திலே குறிப்பிட்ட அச்சங்களைப் பற்றி பேச விரும்புகிறேன், ஆனால் அவை அனைத்தை பற்றியும் என்னால் பேச முடியாது என்று எனக்குத் தெரியும்; எனவே, பெரும்பாலான மக்களைத் துன்புறுத்துவதாக நான் கருதுவதைப் பற்றி எழுதத் தேர்ந்தெடுத்துள்ளேன். பொதுவானவை முதல் மிகவும் அசாதாரணமானவை வரை அனைத்து வகையான ஃபோபியாக்களும் உள்ளன. ஒருவர் உயரத்தைப் பற்றி பயப்படலாம், மற்றொருவர் பட்டாம்பூச்சிகளுக்கு பயப்படுகிறார், மற்றொருவர் மோசமான வானிலைக்கு பயப்படுகிறார். ஆனால் மக்கள் எத்தகைய பயத்தை எதிர்கொண்டாலும், அது ஒரு மூலத்திலிருந்து வருகிறது, அது பிசாசே. எல்லா பயத்திற்கும் நாம் விடைகொடுக்க வேண்டும் மற்றும் அதன் தொடக்கத்திலே அதை எதிர்க்க கற்றுக்கொள்ள வேண்டும். நம் வாழ்வில் ஏதாவது எவ்வளவு காலம் இருக்க அனுமதிக்கிறோமோ, அவ்வளவு ஆழமாக அது வேரூன்றுகிறது, மேலும் அதை அகற்றுவது கடினமாகும்.

எனது தனிப்பட்ட அனுபவம்

நான் நேசிக்கப்படவில்லை என்று உணர்ந்து பல வருடங்களைக் கழித்ததால் என் வாழ்க்கையில் நிராகரிப்பின் நீண்ட கால வேர் இருந்தது. தேவன் நம்மை துஷ்பிரயோகிக்கப்படவும் நிராகரிக்கப்படுவதற்காகவும் அல்ல, ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும், நேசிக்கப்படுவதற்கும் படைத்தார். நீங்கள் நிராகரிக்கப்படும் போது, இயேசுவும் அவருடைய சீஷர்களும், அவருடைய காலத்திலிருந்த மதத்தலைவர்கள் சிலரால் நிராகரிக்கப்பட்டதால் நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பதை அறிந்திருக்கிறார் என்பதில் உறுதியாயிருங்கள். தேவன் இயேசுவை பூமிக்கு அனுப்பின காரியத்தை இயேசு செய்து முடிப்பதைத் தடுக்க நிராகரிப்பின் வலியைப் பயன்படுத்துவதே சாத்தானின் நோக்கமாகும்.

> தேவன் நம்மை ஏற்றுக்கொ-ள்ளப்படுகிறதற்காகவும் அன்பிற்காகவும் படைத்தார். துஷ்பிரயோகத்திற்காகவும் நிராகரிக்கப்படுவதற்காகவும் அல்ல.

> அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.
>
> ஏசாயா 53:3

இயேசு அனுபவித்த நிராகரிப்பின் அளவை நம்மில் எவரும் எப்போதாவது அனுபவித்திருப்போமா அல்லது அனுபவிப்போமா என்று நான் சந்தேகிக்கிறேன். ஆனால் மற்றவர்களின் நிராகரிப்பு அவரை மாற்றவில்லை. அவர் தேவனுடைய குமாரன் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் என்ன செய்ய பூமிக்கு வந்தார் என்பதை அவர் அறிந்திருந்தார், மேலும் அவர் மக்களை நிராகரிப்பதை விட தம்முடைய பிதாவின் அன்பின் மீது தனது கண்களை வைத்திருந்தார். நாமும் அவ்வாறே செய்ய கற்றுக்கொள்ள வேண்டும்.

நிராகரிப்பின் வேர் என்ற சொற்றொடரை நான் பயன்படுத்தும்போது, ஒரு நபர் மிகுந்த நிராகரிப்புக்கு ஆளாகியிருக்கிறார், அதனால் ஏற்படும் பயம் அவர்கள் செய்யும் அனைத்தையும் பாதிக்கிறது. நிராகரிப்பின் வேர் கொண்டவர்கள்

பெரும்பாலும் மிகவும் மகிழ்ச்சியற்ற வாழ்க்கையையே வாழ்கின்றனர். தாங்கள் நிராகரிக்கப்படுவதாகவும், அப்படி இல்லையென்றாலும் மக்கள் அவர்களை விரும்புவதில்லை அல்லது நேசிப்பதில்லை என்றும் அவர்கள் நம்புகின்றனர். மர்லின் மன்றோ ஒருமுறை கூறினார், “எனது முழு வாழ்க்கையும் ஒரு பெரிய நிராகரிப்பு போல் உணர்கிறேன்.” ஒரு பிரபல சினிமா நட்சத்திரம் இப்படியாக சொல்லுவது சுவாரசியமாக இருக்கிறது. பலர் அவளைத் தேடி, அவளைத் தெரிந்து கொள்ள விரும்பி, அவளுடைய படம் அல்லது ஆட்டோகிராப் வேண்டும் என்று அவளிடம் கேட்கும் போது எப்படி நிராகரிக்கப்பட்டவளாக உணர்ந்தாள்?

அவளுடைய குழந்தைப் பருவம் மிகவும் கடினமாக இருந்தது. அவரது தாயார் மனநலம் பாதிக்கப்பட்டவர், அவருக்கு தந்தை இல்லை. அவர் தனது இளமையை வளர்ப்பு இல்லங்கள் மற்றும் அனாதை இல்லங்களில் கழித்தார். வயது வந்தவளாக, அந்த ஆரம்பகால தனிமையான வருடங்களின் நிராகரிப்பு மற்றும் வலிக்கு அப்பால் அவள் ஒருபோதும் நகரவில்லை என்று தெரிகிறது. மர்லின் மன்றோ மிகவும் மகிழ்ச்சியற்ற வாழ்க்கை வாழ்ந்தார் என்பதை பெரும்பாலான வரையரைகளிலிருந்து நாம் அறிவோம். அவர் பலவிதமான ஆண்களுடன் உறவுகளை வைத்திருந்தார், அவர்களில் பலர் திருமணமானவர்கள். அவர் முப்பத்தாறு வயதில் பார்பிட்யூரேட்(தூக்க மாத்திரைகள்) அதிகமாக உட்கொண்டதால் இறந்தார்.

மர்லின் மன்றோவின் மிகவும் பிரபலமான திரைப்படங்களில் சில நகைச்சுவைகள் என்பது குறிப்பிடத்தக்கது. நன்கு அறியப்பட்ட நகைச்சுவை நடிகர்களின் கதைகளை நான் கேள்விப்பட்டிருக்கிறேன், அவர்கள் நடிக்கும்போது வேடிக்கையாக இருந்தனர், ஆனால் அவர்களின் அன்றாட வாழ்க்கையில் அவர்கள் மகிழ்ச்சியற்றவர்களாகவும் மனச்சோர்வடைந்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள் மக்களுக்காக ஒரு பாத்திரத்தை வகித்தனர், இது மகிழ்ச்சியையும் சிரிப்பையும் தந்தது, ஆனால் அவர்களின் சொந்த வாழ்க்கையில் அதை அனுபவிக்கவில்லை.

மேடையில் நகைச்சுவை நடிகராக இருந்த ஒரு பிரபலம் ஆனால் நிஜ வாழ்க்கையில் ஒரு வேடிக்கையாக இருந்ததாகக் கூறப்படுபவர் லூசில் பால் என்பவர். நிஜ வாழ்க்கையில் சமாளிக்க மிகவும் முரட்டுத்தனமான மற்றும் விரும்பத்தகாத நடிகைகளில் ஒருவர் என்று நான் கேள்விப்பட்டேன். அவள் ஒரு சராசரியான மற்றும் மிகவும் சிக்கலான ஆளுமை கொண்டவர் மற்றும் மிகவும் பாதுகாப்பற்றவள் என்று கூறப்பட்டது, இது நிராகரிப்பின் வேரின் ஒரு வெளிப்பாடாகும்.

தொடர்ந்து கேலி செய்து கொண்டிருக்கும் நபர்களை நான் அறிவேன். அவர்கள் கேட்கும் அனைத்தும் நகைச்சுவையாக இருக்கும் என்று எண்ணி சில கருத்துக்களைத் தூண்டுகின்றனர். ஆனால் அவை பெரும்பாலான சமயம் எரிச்சலூட்டுகின்றன. எப்பொழுதும் அப்படி இருக்காது என்று எனக்குத் தெரியும். ஆனால் பல சமயங்களில் மக்கள் உறவுகளில் நகைச்சுவை பாத்திரத்தை ஏற்றுக்கொள்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் ஆழ்ந்த பாதுகாப்பற்றவர்கள் மற்றும் அவர்கள் உண்மையிலேயே யார் என்பதை மக்கள் அறிந்தால் அவர்கள் நிராகரிக்கப்படுவார்கள் என்று நினைக்கிறார்கள். உண்மையாகவே நகைச்சுவை உணர்வு உள்ளவர்களையும் நான் அறிவேன்; இது அவர்களின் ஆளுமையின் ஒரு பகுதியாகும், அவர்களுக்கு இருக்கும் எந்த பிரச்சனையாலும் அல்ல.

நிராகரிப்பின் மூலத்துடன் எனக்கு தனிப்பட்ட அனுபவம் உள்ளது. என் குழந்தைப் பருவத்தில் என்னை நேசிக்க வேண்டியவர்களால் நிராகரிக்கப்பட்டதை நான் அனுபவித்தது மட்டுமல்லாமல், அது என் வாழ்க்கையில் ஒரு மாதிரியாக/வடிவமாகத் தோன்றியது. சில சமயங்களில் நான் நிராகரிக்கப்பட்டேன் என்று நினைக்கிறேன். ஏனென்றால் என் குழந்தை பருவத்தில் ஏற்பட்ட வலி காரணமாக, எனது ஆளுமை மிகவும் விரும்பத்தகாததாக இருந்தது. நான் எளிதாக இருக்கக்கூடிய அல்லது விரும்பக்கூடிய ஒரு நபர் அல்ல. நான் டேவை சந்தித்தபோது, அவர் நிபந்தனையின்றி என்னை ஏற்றுக்கொண்டார், ஆனால் அது நடக்கும் வரை, அந்த வகையான ஏற்றுக்கொள்ளுதல் எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

தேவன் உங்களை ஒருபோதும் நிராகரிக்க மாட்டார்

யோவான் 6:37 ல், தம்மிடம் வருபவர்கள் ஒருபோதும் தள்ளப்பட மாட்டார்கள் அல்லது நிராகரிக்கப்பட மாட்டார்கள் என்று இயேசு கூறினார். அந்த ஒரு வேத வசனத்தை எடுத்துக்கொண்டு, எந்தக் காரணத்திற்காகவும் தேவன் நம்மை நிராகரித்துவிடுவார் என்ற பயத்திலிருந்து நம்மை விடுவித்துவிடலாம்.

> தம்மிடம் வருபவர்கள் ஒருபோதும் தள்ளப்பட மாட்டார்கள் அல்லது நிராகரிக்கப்பட மாட்டார்கள் என்று இயேசு கூறினார்.

தேவன் நம்மை நிபந்தனையின்றி நேசிக்கிறார், அந்த உண்மையை புரிந்துகொள்வது பெரும்பாலும் கடினம். இவ்வுலகில் நாம் பெற்றுக் கொள்வதில் பெரும்பாலானவை நாம் சில நிபந்தனைகளை நிறைவேற்றுவதை அடிப்படையாகக் கொண்டவை, ஆனால்

தேவனுடனான நமது உறவில் அது இல்லை. தேவன் அன்பாயிருக்கிறார், நம்மை நேசிப்பது என்பது நம் நடத்தையின் அடிப்படையில் அவர் செய்வதோ அல்லது செய்யாததோ அல்ல.

தேவன் நம்மை எவ்வளவு நேசிக்கிறார், அவர் நம்மை எப்படிப் பார்க்கிறார் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டியதே முக்கியமான விஷயங்களில் ஒன்று. அவருடைய அன்பில் நமக்கு நம்பிக்கை இருந்தால், நிராகரிப்பின் வலி அல்லது பிறரைப் பற்றிய பயம் நம்மை அல்லது நம் முடிவுகளைக் கட்டுப்படுத்த அனுமதிக்க மாட்டோம்.

ராகாமஃபினின் பிரதிபலிப்பு என்ற புத்தகத்திலே,பெர்னன் மானிங், அயர்லாந்திலிருக்கும் தன் வீட்டிற்கு வந்த ஒரு பாதிரியாரைப் பற்றிய கதையை எழுதுகிறார். அவர் தனது வயதான மாமாவுடன் கில்லர்னி ஏரியின் மீது சூரிய உதயத்தைப் பார்த்த பிறகு, பாதிரியார் தனது மாமாவின் முகத்தில் ஒரு பெரிய புன்னகையைக் கவனித்து, “சீமஸ் மாமா, நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள்” என்று கருத்து தெரிவித்தார்.

அவனுடைய மாமா, “ஆம் அப்படி தான்” என்று பதிலளித்தார்.

ஏன் என்று பாதிரியார் கேட்டபோது, “இயேசுவின் தகப்பன் என்னை மிகவும் நேசிக்கிறார்” என்று மாமா வெறுமனே கூறினார்.

இந்த மனிதனின் கூற்று பெருமையால் நிரம்பியது என்று நினைத்து, “இவர் யாரென்று நினைக்கிறார்?” என்று கேட்க நாம் விரும்பலாம். ஆனால் அப்போஸ்தலனாகிய யோவான், தான் இயேசு நேசித்த சீஷர் என்று பலமுறை கூறினார் (யோவான் 19:26; 20:2; 21:7, 20). அவர் தேவனுடைய அன்பில் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தார், அது அவருடைய அடையாளமாக மாறியது. அவர் யார் என்று கேட்டபோது, அவர் ஒரு சீஷன், ஒரு அப்போஸ்தலர் அல்லது ஒரு சுவிசேஷகர் என்று சொல்லவில்லை. “இயேசு நேசிக்கும் சீஷன் நானே” என்று அவர் வெறுமனே கூறினார். சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், நாம் அனைவருமே அப்படி சொல்லலாம். நாம் அனைவருமே சரியாக தான் இருப்போம்! “தேவன் என்னை மிகவும் நேசிக்கிறார்” “நான் அவரின் கண்மணி” (சங். 17:8), அல்லது “நான் அவருக்கு மிகவும் பிடித்தவன்” என்று நாம் அனைவருமே கூறலாம் அது சரியாகவும் இருக்கும். தேவன் நம்மை ஒரு பெரிய மனித கூட்டமாக மட்டும் பார்க்கவில்லை; அவர் நம்மை தனிப்பட்டவர்களாகப் பார்க்கிறார், கையாளுகிறார்.

தேவன் நம்மை எவ்வளவு நேசிக்கிறார் என்பதையும், அவருடைய வார்த்தையில் நம்மைப் பற்றி அவர் கூறும் அனைத்து அற்புதமான

விஷயங்களையும் பற்றி அதிகம் சிந்திப்பது, பிறரின் நிராகரிப்பு அல்லது மறுப்புக்கு நாம் ஒருபோதும் பயப்படாத அளவிற்கு நம் நம்பிக்கையை அதிகரிக்கும் என்று நான் நம்புகிறேன்.

தேவன் நம்மை சிருஷ்டித்தார் என்று கூறுகிறார், ஆனால் நாம் ஒரு விபத்து அல்லது தவறு என்று நினைக்க வேண்டும் என்று பிசாசு விரும்புகிறான். உண்மை என்னவென்றால், தேவனுடைய சொந்தக் கரங்களால் அவர் நம் தாயின் வயிற்றில் நம்மை வடிவமைத்தார், நாம் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டோம் (சங். 139:13; ஆதி. 1:26-27). இந்த எண்ணம் என்னை "அடடா!" என்று சொல்லத் தூண்டுகிறது. தேவன் நம் ஒவ்வொருவரையும் மதிக்கிறார், அவருடைய பார்வையில் நாம் விஷேசமானவர்கள். தேவன் ஆதாம் மற்றும் ஏவாள் உட்பட சிருஷ்டிப்பை முடித்த பிறகு, "அது மிகவும் நல்லது" என்று அவர் கண்டார் (ஆதி. 1:31). தேவன் நம்மை நல்லவராக பார்க்கிறார். நம் செயல்கள் அனைத்தும் நல்லதாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் அவர் படைத்த நம்மில் உள்ள பகுதி நன்றாக இருக்கிறது.

நாம் நம்மைப் பற்றி நினைக்க வேண்டியதை விட அதிகமாக நினைக்க வேண்டாம் என்று வேதம் சொல்கிறது (ரோ. 12:3), ஆனால் நம்மைப் பற்றி அதிகம் நினைக்காததும் ஒரு பிரச்சனையாக இருக்கலாம். நாம் சரியான சமநிலையைக் கண்டுபிடிக்க வேண்டும். கிறிஸ்து இல்லாமல் நாம் ஒன்றும் இல்லை, ஆனால் அவர் மூலமாக நாம் தேவன் கொடுத்திருக்கும் திறன்களைக் கொண்ட அற்புதமான உயிரினம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். வெவ்வேறு கைரேகைகள் மற்றும் டிஎன்ஏ (மரபணு) கொண்ட நாம் அனைவரும் எண்ணற்ற வித்தியாசங்கள் கொண்டிருக்கிறோம். எந்த இருவரின் கண்களின் கருவிழிகளில் ஒரே மாதிரியான சுழலும் வடிவமும் இல்லை என்று நேற்றிரவு நான் கேள்விப்பட்டேன்.

> நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால்,
> உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள்,
> அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.
>
> சங்கீதம் 139:14

தான் பிரமிக்கத்தக்க விசித்திர வினோதமாக உருவாக்கப்பட்டது தனக்கு நன்றாகவே தெரியும் என்று தாவீது அறிவித்தார். அவர் குப்பை அல்லது வீண் அல்லது முக்கியமற்ற ஒருவர் அல்ல என்பதை அவர் அறிந்திருந்தார். தேவன் அவரைப் படைத்ததில் என்ன செய்தார் என்பதை அவர் அடையாளம் கண்டுகொண்டார், மேலும் அது மிகவும் பிரமிக்கத்தக்க

விசித்திர வினோதமாக இருந்தது என்று அவர் சொன்னபோது, அதைப் பற்றி பேசுவதற்கு கூட ஆச்சரியமாக இருக்கிறது என்று நினைக்கிறார். முற்பிதாக்களும் சீடர்களும் அப்போஸ்தலர்களும் தங்களைப் பற்றி கூறிய சில விஷயங்களைப் பார்த்த பிறகு தேவனின் பார்வையில் நாம் எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறோம் என்பதை நம்மில் அநேகர் இன்னும் அதிகமாக உணர வேண்டியிருக்கிறது என்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

ஒரு நாளின் முடிவில், பெரும்பாலானவர்களின் சுய உருவம் பெரும்பாலும் மற்றவர்களிடமிருந்து அவர்கள் பெற்ற செய்திகளைப் பொறுத்தே இருக்கும். நான் நலமாக இருக்கிறேனா? அவர்களுக்கு என்னை பிடிக்குமா? யாராவது என்னை நேசிக்கிறார்களா? எனது குடும்பத்தினரும் நண்பர்களும் எதிர்பார்க்கும் அளவு நான் இருக்கிறேனா? மற்றவர்களின் ஒப்புதலுக்காக அல்லது அவர்கள் ஏற்றுக்கொண்டதை தெரிவிக்கும் சில வார்த்தைகளுக்காக நாம் ஏங்கி காத்திருக்கிறோம். ஆனால், தேவன் நம்மைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதன் வெளிச்சத்தில், நாம் ஏற்கனவே தேவனின் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதைக் கருத்தில் கொள்ளாமல் மக்களின் அங்கீகாரத்திற்காக நாம் பசியாக இருப்பது வருத்தமளிக்கிறது.

இயேசுவை எனக்கு தெரியாது என்று மூன்று முறை சபித்து மறுத்த பேதுருவின் பெயர், இயேசு நேசித்த சீஷன் என்று தன்னை அறிவித்த யோவானின் பெயருடன் சேர்த்து தான் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது (மத். 26:69-75; யோவான் 20:2). ஏழு பிசாசுகள் விரட்டியடிக்கப்பட்ட மகதலேனா மரியாளின் பெயர், ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி என்று குறிப்பிடப்படும் இயேசுவின் தாயான மரியாளின் பெயருடன் சரியாக எழுதப்பட்டிருக்கிறது, அவர் பெரும்பாலும் (லூக்கா 1:26-35, 48; 8:2). தங்கள் விசுவாசத்தை மறுக்க மறுத்ததற்காக சிலுவையில் அறையப்பட்ட அல்லது எரிக்கப்பட்ட அல்லது சிங்கங்களால் தின்னப்பட்ட அனைவருடனும் என் பெயரும் உங்கள் பெயரும் சரியாக எழுதப்பட்டுள்ளன.

நேர்மறை சிந்தனை அமர்வுகள்

முதலில் விசித்திரமாகத் தோன்றும் ஒன்றைச் செய்ய நான் உங்களை ஊக்குவிக்க விரும்புகிறேன். ஆனால் நீங்கள் அதைச் செய்தால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். எண்ணங்களை வேண்டுமென்றே சிந்திக்கும் திறன் உங்களிடம் உள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் மனதில் என்ன தோன்றுகிறது என்று பார்த்து பின்னர் அதை பற்றி சிந்திக்க நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

தேவனுடைய வார்த்தையுடன் ஒத்துப்போகாத கற்பனைகள், பகுத்தறிவுகள், கோட்பாடுகள், வாதங்கள் மற்றும் உயர்ந்த கருத்துக்களைத் தூக்கி எறியுமாறு அப்போஸ்தலன் பவுல் அறிவுறுத்துகிறார் (2 கொரி. 10:5). நாம் விரும்பாத எண்ணத்தை அகற்றிவிட்டு, நமக்குத் தேவையான ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் என்று இது நமக்குச் சொல்கிறது.

> ஒவ்வொரு நாளும் ஐந்து அல்லது பத்து நிமிட சிந்தனை அமர்வை செய்யுமாறு நான் உங்களுக்கு சவால் விடுகிறேன், அதில் நீங்கள் தேவன் உங்களைப் பற்றி சிந்திக்கும் விதமாக நீங்கள் சிந்திக்க வேண்டும்

ஒவ்வொரு நாளும் ஐந்து அல்லது பத்து நிமிட சிந்தனை அமர்வை செய்யுமாறு நான் உங்களுக்கு சவால் விடுகிறேன், அப்போது நீங்கள் தேவன் உங்களைப் பற்றி எப்படி சிந்திக்கிறாரோ அப்படி சிந்தியுங்கள். இந்த வேத அடிப்படையிலான ஒப்புதல் வாக்குமூலங்களை சிந்தித்து அறிக்கையிடுங்கள்:

- நான் தேவனின் கண்மணி (சங். 17:8).
- நான் பிரமிக்கத்தக்க விசித்திர வினோதமாக உண்டாக்கப்பட்டேன் (சங். 139:14).
- தேவன் என்மேல் பாடி மகிழ்கிறார் (செப். 3:17).
- நான் தேவனின் பார்வையில் விலையேறப்பெற்றவன் (ஏசா. 43:4).
- கிறிஸ்துவின் சிந்தை எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது (1 கொரி. 2:16).

இந்த பரிந்துரைகளுடன் நீங்கள் தொடங்கலாம், ஆனால் பட்டியலில் இன்னும் சேர்க்குமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன். சில வீட்டுப்பாடங்களைச் செய்து, நீங்கள் எவ்வளவு அற்புதமானவர் என்பதைச் சொல்லும் அதிகமான வேதவசனங்களைக் கண்டறியுங்கள். இந்த உண்மைகளை நீங்கள் படித்து, ஒப்புக்கொண்டு, தியானிக்கும்போது, உங்களைப் பற்றிய உங்கள் உருவத்தை அவை மாற்றிவிடும். இதைச் செய்வது உங்களைச் சுற்றியுள்ளவர்களை புதிய மற்றும் நேர்மறை வெளிச்சத்தில் பார்க்க உதவும்.

நம் வாழ்நாள் முழுவதும் மக்கள் நம்மிடம் பேசிய எல்லா எதிர்மறையான வார்த்தைகளையும் பற்றி நம்மில் பெரும்பாலோர் அதிகமாக யோசித்திருக்கிறோம். “நீ ஒருபோதும் எதையும் செய்ய மாட்டாய்!” என்று

என் தந்தை என்னிடம் பலமுறை சொன்னது எனக்கு நினைவிருக்கிறது, நான் தவறு செய்ததையும், என்னால் எதையும் சரியாகச் செய்ய முடியாது என்று கூறியதையும் நினைவில் வைத்திருக்கிறேன். ஒரு பதின் பருவ சிறுமியாக, நான் பதினைந்து முதல் இருபது பவுண்டுகள் அதிக எடையுடன் இருந்தேன், என்னை டேட்டிங்காகவோ பள்ளி நடனங்களில் நடனமாடவோ யாரும் கேட்டதில்லை. யாராவது கேட்டிருந்தால் கூட, என் அப்பா என்னை போக அனுமதித்திருக்க மாட்டார். இவை அனைத்தும் என்னை தாழ்வாகவும் பாதுகாப்பற்றதாகவும் உணர வைத்தது. நான் வயதான போது, ஊழியத்திற்கான தவறான ஆளுமை எனக்கு இருப்பதாக நண்பர்கள் என்னிடம் சொன்னார்கள்.

நான் நிராகரிப்புக்கு மிகவும் பழகிவிட்டதால், நான் அதை நான் எதிர்பார்த்தேன். என்னிடம் ஏதோ தவறு இருப்பதாக நான் உறுதியாக இருந்தேன். எல்லாவற்றிற்கும் மேலாக, என் சொந்த தந்தை என்னுடன் உடலுறவு கொள்ள விரும்பினதால், அது என்னில் ஏதோ ஒரு குறைபாட்டால் இருந்திருக்க வேண்டும், ஏனென்றால் மற்ற பெண்களின் தந்தைகள் அப்படி இல்லை. குறைந்த பட்சம் நான் அந்த தருணத்தில் அப்படியாகத் தான் நினைத்தேன். உலகில் அந்த அனுபவத்தைப் பெற்ற ஒரே பெண் நான்தான் என்பதில் உறுதியாக இருந்தேன். நாளடைவில் நாம் எண்ணக்கூடியதை விட அதிகமானோர் இருப்பதை நான் கண்டுபிடித்தேன், ஆனால் பலர் அதைப் பற்றி பேசுவதற்கு மிகவும் வெட்கப்பட்டார்கள் அல்லது மிகவும் பயப்பட்டார்கள். பல ஆண்டுகளாக, “என்னிடத்தில் என்ன தவறு?” என்று திரும்பத் திரும்ப என் தலையில் ஒரு ஒலிபதிவு ஓடிக்கொண்டிருந்தது..

இயேசு என் பாவத்தை ஏற்றுக்கொண்டு, தேவனுடன் அவருடைய “சரியான” நிலையை எனக்குக் கொடுத்தார் என்பதை அறிந்தபோது நான் எப்படி உணர்ந்தேன் என்பதை என்னால் வெளிப்படுத்த முடியாது. அவர் என்னை நீதிமானாக்கினார் (2 கொரி. 5:21)! என்னில் என்ன தவறு இருக்கிறதென்று கண்டுபிடிக்க நான் இனி முயற்சி செய்ய வேண்டியதில்லை, நீங்களும் முயற்சிக்க வேண்டாம். உங்களால் எல்லாவற்றையும் சரியாகச் செய்ய முடியாவிட்டால், அல்லது நீங்கள் தவறாமல் தவறு செய்தால், அல்லது நீங்கள் மற்றவர்களைப் போல் இல்லை என்றால், உங்களிடம் ஏதோ தவறு இருக்கிறது என்று அர்த்தமல்ல. நீங்கள் விலையேறப்பெற்றவர், தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர், மேலும் அவர் உங்கள் வாழ்க்கைக்கு ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார், எனவே உங்களுக்குச் சொல்லப்பட்ட ஒவ்வொரு எதிர்மறையான விஷயங்களையும் தள்ளி விட்டு, நீங்கள் சிறந்தவராக இருங்கள்.

நீங்கள் நம்புகிறீர்களா?

ஒரு நாள் வகுப்பறையில் ஆறு வயது சிறுமி அமர்ந்திருந்தாள். ஆசிரியர் குழந்தைகளுக்கு பரிணாமத்தை விளக்கப் போகிறார். ஆசிரியர் டாமி என்ற சிறுவனிடம் வெளியில் புல் தெரிகிறதா என்று கேட்டார்.

“ஆம், ஆசிரியரே, நான் புல்லைப் பார்க்கிறேன்.”

ஆசிரியர் சொன்னார், “டாமி, வெளியே சென்று மேலே பார், உன்னால் வானத்தைப் பார்க்க முடியுமா?”

சில நிமிடங்களில் திரும்பி வந்து, “ஆம், நான் வானத்தைப் பார்த்தேன்” என்றார்.

ஆசிரியர் கேட்டார், “நீங்கள் கடவுளைப் பார்த்தீர்களா?” “இல்லை, ஆசிரியரே, நான் கடவுளைப் பார்க்கவில்லை.”

ஆசிரியர் சொன்னார், “சரி, அதுதான் என் கருத்து. அவர் இல்லாததால் நாம் கடவுளைப் பார்க்க முடியாது.”

ஒரு சிறுமி, தான் அந்த பையனிடம் சில கேள்விகளைக் கேட்கட்டுமா என்று ஆசிரியரிடம் கேட்டாள். ஆசிரியரும் ஒப்புக்கொண்டார். அந்த சிறுமி கேட்டாள்: “டாமி, நீ வெளியே மரத்தைப் பார்க்கிறாயா?”

“ஆம், நான் மரத்தைப் பார்க்கிறேன்.”

அவள், “நீ புல்லைப் பார்க்கிறாயா?”

அவன், “ஆம், நான் புல்லைப் பார்க்கிறேன்” என்றான்.

“நீ வானத்தைப் பார்க்கிறாயா?” நீ ஆசிரியரைப் பார்க்கிறாயா?”

டாமி, “ஆம்” என்று கூறினான், மேலும் அவன் கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் சோர்வடைந்திருப்பதை அவனது குரல் சுட்டிக் காட்டியது.

அந்தச் சிறுமி, “ஆசிரியரின் மூளையைப் பார்க்கிறாயா?” என்று கேட்டாள். டாமி, “இல்லை, நான் அவருடைய மூளையைப் பார்க்கவில்லை.”

அந்தச் சிறுமி, “அப்படியானால் இன்று நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளபடி, அவரிடம் மூளை இல்லை என்று அர்த்தம்” என்றாள்.

நீங்கள் பார்க்காத ஒன்றை தேவன் உண்மை என்று சொல்வதால் உங்களால் நம்ப முடிகிறதா? 2 கொரிந்தியர் 5:6-ன்படி, “நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்.”

விசுவாசம் இதுவரை பார்க்க முடியாததை நம்புகிறது, ஆனால் அது சரியான நேரத்தில் பார்க்கப்படும் என்று நம்புகிறது. தேவனுடைய வார்த்தை நம்மைப் பற்றிச் சொல்லும் எல்லா அற்புதமான விஷயங்களையும் நீங்களோ அல்லது நானோ இன்னும் வெளிப்படுத்தாமல் இருக்கலாம், ஆனால் நாம் அவருடைய வார்த்தையில் தொடர்ந்தால், நாம் வெளிப்படுத்துவோம். நாம் கிறிஸ்துவின் சாயலாக மாற்றப்படுவோம் (2 கொரி. 3:18; ரோ. 8:29). தேவனுடைய ராஜ்யத்தில் நாம் பார்ப்பதற்கு முன் நம்ப வேண்டும், ஆனால் உலகில் நாம் நம்ப அதை பார்க்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நம் இதயக் கண்களால் விஷயங்களைப் பார்க்க முடியும், மேலும் அவை நம் இயற்கையான பார்வையால் நாம் பார்க்கும் விஷயங்களை விட உண்மையானவையாக இருக்கும்.

இயேசு என் பாவங்களுக்காக மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று நான் முழுவதுமாக நம்புகிறேன். அது நடப்பதை நான் பார்க்கவில்லை, ஆனால் அது சந்தேகத்திற்கு இடமின்றி உண்மை என்று எனக்குத் தெரியும். அதனால்தான் இந்த உண்மையை மற்றவர்களுக்குக் கற்பிப்பதற்காக நான் என் வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறேன். நான் தேவனைப் பார்த்ததில்லை, ஆனால் அவரை நம்பி அவருக்குச் சேவை செய்வதன் விளைவுகளை நான் தொடர்ந்து காண்கிறேன். ஒன்று நிச்சயம்: இயேசுவுக்கு முன் என் வாழ்க்கை ஒரு முழு அழிவாக இருந்தது, ஆனால் இப்போது அது ஆச்சரியமாக இருக்கிறது!

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, மக்கள் நிராகரிப்புக்கு பயப்படுவதற்கு எந்த காரணமும் இல்லை என்று நாம் அனைவரும் சொல்லலாம் என்று நினைக்கிறேன், ஏனென்றால் தேவன் நம்மை நேசிக்கிறார், அவர் நம் பட்சமாய் இருக்கிறார். தேவன் நம்மைப் பார்க்கும் விதத்தில் நம்மைப் பார்க்க வேண்டிய நேரம் இது, மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை விட நம்மைப் பற்றிய அவருடைய கருத்தே முக்கியமானது.

தேவனோடு நெருங்கிப் பழகும் ஒரு மனிதன் மனிதர்களால் ஒருபோதும் பயப்பட மாட்டான்.

- லியோனார்ட் ராவன்ஹில்

என்னைப் பற்றிய மற்றவர்களின் கருத்துகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்பதைத் தேர்ந்தெடுப்பது

ஒரு திருமணத்திற்காக, கேக், விருந்தினர் பட்டியல், செலவு விவரம், ஆடைகள் வாங்குவது போன்ற எல்லா விவரங்களையும் திட்டமிடுவது யாரையும் கொஞ்சம் பைத்தியமே பிடிக்கும் படி செய்துவிடும்! எனது நிச்சயதார்த்தம் முடிந்தும், மிக முக்கியமான விவரமான-எனது வரவிருக்கும் திருமணத்தைப் பற்றி கவனம் செலுத்தாமல் அதை நான் புறக்கணித்தேன். நானும் என் வருங்கால கணவரும் இளமையாக இருந்தோம், காதலித்தோம், அவர் தேவாலயத்திற்கு தவறாமல் சென்றதால், அவர் ஒரு சிறந்த கணவராக இருப்பாரென்று என்று நான் கருதினேன். நான் கடந்த காலத்தில் என் ஆண் நண்பர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டேன், என் வாழ்க்கையிலிருந்த எல்லா ஆண்களாலும் தவறாக நடத்தப்பட்டேன், அதனால் நான் ஒரு கிறிஸ்தவளாக மாறியபோது, தேவாலயத்தில் இருந்த ஒரு பையனுடன் டேட்டிங் செய்யத் தொடங்கியபோது, அவனே எனக்கு சிறந்தவனாக இருப்பான் என்று நினைத்தேன்.

எங்கள் உறவு நச்சுத்தன்மை வாய்ந்தது என்று எனது குடும்பத்தினரும் தேவாலயத்தின் வழிகாட்டிகளும் என்னை எச்சரித்தனர். அவர் எல்லாவற்றிலும் முதலிடத்தை தான் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லி வளர்க்கப்பட்டார், இது அவரை ஒரு பயங்கரமான நபராக மாற்றவில்லை என்றாலும், அந்த மனநிலை திருமணத்தில் சரியாக இருக்காது.

நான் அவரை திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று என் உள்ளத்தில் எனக்குத் தெரியும், ஆனால் நான் முற்றிலும் பயந்தேன். தனியாக இருக்க பயம். நான் நேசித்த ஒருவரை இழந்துவிடுவோமோ என்ற பயம். நான் விரயம் செய்யும் பணத்தைப் பற்றியும், நான் சந்திக்கும் சங்கடத்தையும் பற்றி பயந்தேன். சமூக வலைதலத்தில் எனது நிலை “உறவில் உள்ளேன்” என்பதிலிருந்து “தனி” என்ற நிலைக்கு சென்றபோது எனது “நண்பர்கள் பட்டியலில்” உள்ள அனைவருக்கும் நான் எப்படி விளக்குவேன்? என்பதைப் பற்றியெல்லாம் நினைத்து நான் சலிப்படைந்தேன்!

ஆனால் பின்னர் நான் கிறிஸ்துவிலிருக்கும் என் மதிப்பை நினைவு கூர்ந்தேன். எரேமியா 29:11 இல், அவர் நம்பிக்கையையும் நல்ல

எதிர்காலத்தையும் வாக்களிக்கிறார். அவர் நான் செழிக்க விரும்பினார், மேலும் நல்லவராக இருந்த இவரை திருமணம் செய்துகொள்வதன் மூலம், அவருடைய ஆசீர்வாதத்தை முழுமையாகப் பெற நான் அனுமதிக்கவில்லை.

எனவே, நான் அதை செய்தேன் - பயந்து.

நான் ஒரு நீண்ட குறிப்பை எழுதினேன், என் மோதிரத்தைத் திருப்பிக் கொடுத்தேன், மேலும் தேவனை நம்பி வாழக்கூடிய ஒரு புதிய உலகத்திற்கு விசுவாச அடி எடுத்தேன். நான் முற்றிலும் உடைந்து போனேன், ஆனால் முழுவதுமாக தேவனை சார்ந்திருந்தேன். ஆ?ா, அவர் செய்தார்! நான் தனியாக இல்லை என்பதை எனக்கு நினைவூட்டும் விதத்தில் நம்பமுடியாத நண்பர்களால் நான் ஆசீர்வதிக்கப்பட்டேன். திருமண திட்டத்திற்காக செலவழிக்கும் என் நேரத்தை தேவாலயத்திலும் சமூகத்திலும் சேவை செய்து செலவழித்தேன். முன் எப்போதும் இல்லாத நோக்கத்தை உணர்ந்தேன். மிகவும் ஆச்சரியமான விஷயம் நடந்தது - என் வருங்கால கனவரும் அதையே செய்தார்! அவர் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. தனக்கு சேவை செய்வதற்குப் பதிலாக மற்றவர்களுக்கு சேவை செய்ய தன்னை அர்ப்பணித்தார்.

என் வருங்கால கணவரைப் பிரிந்து ஒரு வருடம் கழிந்த பிறகு, நாங்கள் மீண்டும் டேட்டிங் செய்ய ஆரம்பித்தோம், ஒரு வருடத்திற்குள்ளாகவே இறுதியாக நான் என் கனவு மனிதனை மணந்தேன். இப்போது, அவர் எனக்காகவும் தேவனுடைய கனவுகளை நிறைவேற்றினார். நாங்கள் இருவரும் இப்போது ஒரு உள் நகர தேவாலயத்தில் இளைஞர் போதகர்களாக சேவை செய்கிறோம், மற்றவர்களுக்கு அவர்களின் பயத்தைப் போக்கி எரேமியா 29:11 வாழ்க்கையை வாழ உதவுகிறோம். இவை அனைத்தும் நான் பயந்துக் கொண்டே செய்ய தெரிந்துக்கொண்டதால் ஏற்பட்டது.

- ஜூலி

அத்தியாயம் 16

நீங்கள் நீங்களாக இருக்க முடியும்

மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், சொல்வார்கள் அல்லது செய்வார்கள் என்ற பயத்திலிருந்து விடுதலை

மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்.

நீதிமொழிகள் 29:25

நிராகரிப்பு பயம் மற்றும் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், சொல்வார்கள் அல்லது செய்வார்கள் என்ற பயம் ஆகியவை ஒரே மாதிரியாக இருப்பதால் அவற்றை ஒரே அத்தியாயத்தில் வைக்க நினைத்தேன். ஆனால் மற்றவர்களின் கருத்துக்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களின் பயம் ஒரு பெரிய பிரச்சனை என்று நான் நினைக்கிறேன். அதனால் இதற்கு ஒரு தனி அத்தியாயமே தகுதியானது. மற்றவர்களை விட அதிகமான மக்கள் இந்த பயத்தை சமாளிக்கிறார்கள் என்று நான் சந்தேகிக்கிறேன். பிறர் நம்மை விரும்ப வேண்டும் என்று விரும்புவது இயற்கையானது, ஆனால் அதை நாம் அதிகம் விரும்பி அதைப் பெறுவதற்காக மக்கள் நம்மைக் கட்டுப்படுத்த அனுமதிக்கும்போது அது ஒரு பிரச்சனையாகி விடுகிறது. இந்த பயத்தை எவரும் அனுபவிக்கலாம், ஆனால் கடந்த காலத்தில் உணர்ச்சி ரீதியாக காயப்பட்ட அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட்டவர்கள் மற்றவர்களை விட அதிகமாக இதனால் போராடுவார்கள்.

மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், சொல்வார்கள் அல்லது செய்வார்கள் என்ற பயத்தால் நாம் பாதிக்கப்படும் போது பிறர் நாம் செய்ய விரும்பும்

அனைத்தையும் நாம் செய்யாவிட்டால் அவர்களுக்கு நம்மைப் பிடிக்காது என்று பயப்படுவதால் அதை செய்வதன் மூலம் மக்கள் நம்மைக் கட்டுப்படுத்த அனுமதிக்கிறோம். எனக்கு ஒரு முறை மிகவும் கட்டுப்படுத்தும் ஒரு முதலாளி இருந்தார், மேலும் அவர் கோபப்படுவார் என்று எனக்குத் தெரிந்ததால், நான் அவரை எதிர்க்காமல் அல்லது அவர் எதையும் தவறாக செய்கிறார் என்று அவர் நினைத்துவிடாதப்படி கவனமாக இருந்தேன்.

என் அப்பா கோபமானவர், அவர் கோபத்தின் மூலம் என் அம்மாவையும் என்னையும் கட்டுப்படுத்தினார். அவரது கோபத்தையும் கோப ஆவேசத்தையும் நாங்கள் சமாளிக்க வேண்டியிருந்தால் அவரை தொடர்ந்து மகிழ்ச்சியாக வைத்திருக்க முயன்று மன அழுத்தத்தில் வாழ்ந்தோம். அவருடனான எனது அனுபவத்தால், மக்களை கோபப்படுத்தி விடுவோமோ என்ற பயம் எனக்கு ஏற்பட்டது, அதனால் மக்கள் என்னைக் கட்டுப்படுத்துவது எளிதாக இருந்தது.

எனக்கு ஒரு தோழி இருந்தாள். அவளுக்கும் சீக்கிரம் கோபம் வரும். நான் விரும்பாவிட்டாலும் அவள் செய்ய விரும்புவதை நான் எப்போதும் செய்தேன். மீண்டுமாக, பிறர் என்னைக் கட்டுப்படுத்த அனுமதித்து, அவர்களைக் கோபப்படுத்தி விடுவோமோ என்ற என் பயம் வேரூன்றி இருந்தது. அவர்கள் என்னிடம் அல்லது என்னைப் பற்றி என்ன சொல்வார்கள், அவர்கள் எனக்கு என்ன செய்வார்கள் அல்லது அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று பயப்படுவதைவிட அவர்கள் காட்டிய கோபத்தைப் பற்றி பயந்தேன். எளிதில் கோபப்படும் ஒருவரைச் சுற்றி இருக்கும்போது நான் இன்னும் சங்கடமாக உணர்கிறேன், ஆனால் அது என்னைக் கட்டுப்படுத்த நான் அனுமதிக்கிறதில்லை.

நாம் விரும்பும் ஒன்றை மக்கள் வைத்திருக்கிறார்கள், நாம் அவர்களை எதிர்கொண்டால் அதைப் பெற்றுக் கொள்ள முடியாது என்று நமக்குத் தெரியும் அதனால் அவர்கள் நம்மைக் கட்டுப்படுத்த அனுமதிக்கலாம், பெரும்பாலும், நாம் மக்களை எதிர்கொள்ள மாட்டோம் அல்லது அவர்களிடம் நேர்மையாக இருக்க மாட்டோம், ஏனெனில் அவர்கள் நம் எதிர்காலத்தை ஏதோ ஒரு வகையில் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். உதாரணமாக, ஒரு நபர் தனது வேலையை இழக்க நேரிடும் என்ற பயத்தில் ஒரு முதலாளி தன்னை தவறாக நடத்தவோ அல்லது அதிக வேலை வாங்கவோ அனுமதிக்கலாம். அல்லது, ஒரு டீனேஜர் தன் சகாக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக தவறு என்று தனக்குத் தெரிந்த விஷயங்களைச் செய்யலாம். ஆனால், நாம் தேவன் மீது நம்பிக்கை

வைத்தால், அவர் நம் எதிர்காலத்தைக் கட்டுப்படுத்துவார், மேலும் தேவன் விதித்த விதியை நிறைவேற்றுவதை யாராலும் தடுக்க முடியாது.

அவர்கள் என்ன நினைக்கலாம், சொல்லலாம் அல்லது என்ன செய்யலாம் என்ற பயத்தின் காரணமாக உங்களை கட்டுப்படுத்த யாரையாவது அனுமதித்துக்கொண்டிருக்கிறீர்களா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன். அப்படியானால், அதிலிருந்து விடுபட முடிவு செய்யுங்கள். அதை எதிர் கொள்ளாமல் விட்டுவிடுவது உங்களைப் பரிதாபத்துக்குள்ளாக்கும் ஒரு பொறி. இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் உள்ள வசனத்தை நினைவில் வையுங்கள்: "மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும், ஆனால் கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைகலத்தில் வைக்கப்படுவான்." (நீதி. 29:25).

தேவனின் சிறந்ததைத் தவறவிடாதீர்கள்

தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார், அது ஒரு நல்ல திட்டம். அவருடைய திட்டம் உண்மையில் மிகச் சிறந்த திட்டம், ஆனால் நாம் தேவனைப் பிரியப்படுத்துவதற்குப் பதிலாக மக்களைப் பிரியப்படுத்துபவர்களாக இருந்தால், நாம் சிறந்ததைத் தவற விட்டுவிட்டு, மக்கள் நமக்கு எதைக் கொடுக்க முயற்சிக்கிறார்களோ அதிலே தங்கி விடுவோம்.

தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார், அவருடைய ராஜ்யத்தில் நாம் செய்ய அவர் நமக்கு ஒன்றை நியமித்திருக்கிறார். ஆனால் நாம் அந்த நோக்கத்தை நிறைவேற்ற, பிரபலமாக இருக்க வேண்டும் மற்றும் விரும்பப்பட வேண்டும் என்ற நமது விருப்பத்தை, நம் வாழ்விற்கான அவரது திட்டம் நிறைவேறுவதற்காக நம் விருப்பத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். நாம் அனைவரும் விரும்பப்படவும், நேசிக்கப்படவும், போற்றப்படவும், ஏற்றுக்கொள்ளப்படவும், பாராட்டப்படவும் விரும்புகிறோம், ஆனால் நாம் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகும் அளவுக்கு இவைகளை விரும்புவதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலன் பவுல் மிகப் பெரிய அப்போஸ்தலர்களில் ஒருவர். அவர் புதிய ஏற்பாட்டில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கை எழுதினார், மேலும் அவர் மக்களிடையே பிரபலமாக இருக்க முயற்சித்திருந்தால், அவர் ஒரு அப்போஸ்தலராக ஆகியிருக்க மாட்டார் என்று கூறினார் (கலா. 1:10). அவர் அப்படி செய்திருந்தால் தேவனை சேவிப்பதன் மூலம் பெற்றுக்கொண்ட மகிழ்ச்சியை அவர் தவறவிட்டிருப்பார்.

> மற்றவர்களின் எண்ணங்கள், வார்த்தைகள் அல்லது செயல்களின் பயம் காரணமாக கோடிக் கணக்கான மக்கள் தங்கள் விதியை தவறவிட்டிருக்கலாம்.

மற்றவர்களின் எண்ணங்கள், வார்த்தைகள் அல்லது செயல்களைப் பற்றிய பயம் காரணமாக கோடிக் கணக்கானோர் தங்கள் விதியை / நோக்கத்தை இழந்திருக்கலாம் என்று நான் துணிந்து கூறுவேன். ஒவ்வொரு முறையும் தேவன் என்னை ஊழியத்தில் ஒரு புதிய நிலைக்கு உயர்த்தும் முன், அந்த தருணத்தில் நான் என் வாழ்க்கையில் இழக்க விரும்பாத மக்களின் மறுப்புடன் பிசாசு எனக்கு எதிராக வந்ததை நான் என் வாழ்க்கையில் கண்டிருக்கிறேன். தேவனுடைய சித்தத்திலிருந்து என்னை விலக்கி வைக்கும் முயற்சியில் அந்தத் தாக்குதல்களைத் தூண்டியது சாத்தானே என்பதை நான் இறுதியாக உணரும் வரை இந்தப் பகுதியில் நான் மிகவும் துன்பப்பட்டேன்.

நான் முதலில் என் வீட்டில் வேத பாடத்தை கற்பிக்க ஆரம்பித்தபோது, பெண்கள் வேதத்தைக் கற்பிக்க கூடாது என்று நம்பிய குடும்பத்தினரும் நண்பர்களும் என்னை ஒதுக்கித் தள்ளினார்கள். தேவன் என் வாழ்க்கையை ஒரு ஆழமான வழியில் தொட்டிருந்தார், மேலும் நான் அவருடன் ஒரு நெருக்கமான உறவில் நுழைந்தபோது, எல்லாவற்றையும் விட அவருடைய சித்தத்தை நான் விரும்ப ஆரம்பித்தேன். எனக்கு நெருக்கமானவர்கள் அதனால் மகிழ்ச்சியடைவார்களென்று எதிபார்த்தேன், ஆனால் அது அப்படியாக இருக்கவில்லை.

நான் தேவனை பின்பற்றுவேனேயென்றால் சில நண்பர்களை இழக்கப் போகிறேன் என்று தோன்றியது. என் வாழ்நாள் முழுவதும் நான் அதை பலமுறை அனுபவித்திருக்கிறேன், நீங்களும் அப்படியாக உணர்ந்திருப்பீர்களென்று நான் உறுதியாக நம்புகிறேன். நம்மை கட்டுப்படுத்த எல்லாவற்றையும் விட நிராகரிப்பு மற்றும் மறுப்பு பற்றிய பயம் அல்லது மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் அல்லது அவர்கள் நமக்கு எப்படி பதிலளிப்பார்கள் என்ற பயத்தை சாத்தான் பயன்படுத்துகிறான்.

சுதந்திரத்தைக் கண்டறிதல்

வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நமது விசுவாசத்தின் நாயகர்களைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்த்தால், அவர்களில் பலர் தேவன் விரும்பியவர்களாக

ஆவதற்கு மற்றவர்களின் பயத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பதை நாம் கவனிக்கிறோம்.

உதாரணமாக, மோசே, இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்ல தேவன் தன்னை அனுப்பினார் என்று சொன்னால் அவர்கள் நம்ப மாட்டார்கள் என்று பயந்தார். அவர் ஒரு நல்ல பேச்சாளர் இல்லை என்று அவர் உணர்ந்தார் (யாத்திராகமம் 4:10; 6:30), மேலும் தேவன் அவருக்குப் பேச உதவுவதாகவும், என்ன சொல்ல வேண்டும் என்பதைக் கற்பிப்பதாகவும் வாக்குறுதி அளித்த பிறகும் கூட (யாத்திராகமம் 4:12), அவன் இன்னும் தேவனிடம் தவறான மனிதனை அவர் கொண்டிருக்கிறாறென்றும் வேறொருவனை அனுப்பும்படியும் அவரிடம் கெஞ்சினான். (யாத்திராகமம் 4:13).

தேவன் இறுதியில் மோசே மீது கோபமடைந்து அவனிடம் லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் நன்றாய்ப் பேசுகிறவன் என்று அறிவேன்; அவன் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு வருகிறான்; உன்னைக் காணும்போது அவன் இருதயம் மகிழும்.

நீ அவனோடே பேசி, அவன் வாயில் வார்த்தைகளைப் போடு; நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து, நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன்.

அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோடே பேசுவான்; இவ்விதமாய் அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய். (யாத்திராகமம் 4:14-16).

தேவன் நம்முடன் எவ்வளவு அசாதாரணமான பொறுமையுடன் இருக்கிறார் என்பதை இந்த உதாரணத்திலிருந்து பார்க்கலாம்.

மோசே தேவனுக்காக மக்களிடம் பேசிய நிகழ்வுகள் உள்ளன, எனவே ஏதோ ஒரு சமயத்தில் அவன் மக்கள் முன் பேசும் பயத்தை மேற்கொண்டிருக்க வேண்டும். மோசே தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், அவர் அவ்வாறு செய்வதை விரும்பாத ஒருவர் எப்போதும் இருப்பார் என்பதை விரைவிலேயே அறிந்துகொண்டார். மோசே இஸ்ரவேலர்களை வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் செல்ல முயன்றபோது, அவர்கள் வனாந்திரத்திலே வழிநெடுக முணுமுணுத்தனர். தேவனோ மோசேயோ என்ன செய்தாலும், மகிழ்ச்சியளிக்காத ஏதோ ஒன்றைக் கண்டார்கள். நாம் என்ன செய்தாலும் 10 சதவீதம் பேர் நம்மை விரும்ப மாட்டார்கள் என்று ஒருமுறை படித்தேன். அதைப் படித்தது எனக்கு உதவியது, ஏனென்றால் நான் தேவனைப்

பின்பற்றப் போகிறேன் என்றால், என்னை விரும்பாத அல்லது என் விருப்பங்களை அங்கீகரிக்காத ஒருவர் எப்போதும் இருப்பார் என்பதை அது எனக்கு மீண்டும் உறுதிப்படுத்தியது.

யோசேப்பு தனது எதிர்காலத்தைப் பற்றி தேவனிடமிருந்து ஒரு கனவு கண்டார். அதை அவர் தனது சகோதரர்களுடன் பகிர்ந்து கொண்டபோது அவர்கள் பொறாமைப்பட்டு அவரை அடிமையாக விற்றனர் (ஆதி. 37). நான் முந்தைய அத்தியாயத்தில் குறிப்பிட்டது போல், தேவன் தாவீதை ராஜாவாக அபிஷேகம் செய்தார், ஆனால் சவுல் (அப்போது ராஜாவாக இருந்தவர்) தாவீது மீது பொறாமை கொண்டார் மற்றும் அவரை வெறுத்தார். தாவீதைக் கொல்ல பல வருடங்கள் முயற்சி செய்தார். மோசே, யோசேப்பு மற்றும் தாவீது அனைவரும் மற்றவர்களின் பயத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும், தங்கள் நோக்கங்களை நிறைவேற்றினர்.

இவர்களெல்லாம் விசுவாச வீரர்கள் தான் ஆனாலும் அவர்கள் தங்கள் அச்சங்களை எதிர்கொண்டு அவற்றைக் மேற்கொள்ள வேண்டியிருந்தது, நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். அப்போஸ்தலன் பேதுரு நிச்சயமாக மற்றவர்களின் கருத்துகளுக்கு பயந்து போராடினார், ஏனென்றால் சன்ெ?ட்ரின்(தேவாலய) உறுப்பினர்கள் இயேசுவைக் கேள்வி கேட்கும் நேரத்திலும், பொந்தியு பிலாத்து இறுதியில் அவருக்கு மரண தண்டனை விதித்தபோதும் அவர் இயேசுவை ூன்று முறை அறியவில்லை என்று மறுதலித்தார். (லூக்கா 22:54-62). இது நிச்சயமாக இயேசுவுக்கு அவருடைய சீடர்களின் ஆதரவு தேவைப்படும் ஒரு சூழ்நிலையாக இருந்தது, ஆனால் பேதுரு அவரை மறுதலித்துவிட்டார். இருந்தபோதிலும், இயேசு பேதுருவை மன்னித்தார், மேலும் அவர் அச்சமற்ற தைரியமான அப்போஸ்தலன் ஆனார்.

பிறர் என்ன நினைப்பார்களோ, என்ன சொல்வார்களோ, என்ன செய்வார்களோ என்ற பயம், தேவனுக்கு எவ்வளவு நெருக்கமாக இருந்தாலும், எவரையும் தாக்கக்கூடும் என்பதை இந்தக் கதைகளிலிருந்து நாம் அறியலாம். பயத்தை விட்டுவிட்டு தைரியமாகவும் துணிச்சலாகவும் மாறலாம்.

நீங்கள் நீங்களாகவே இருங்கள்

நீங்கள் நீங்களாகவே இருப்பீர்கள் அல்லது நீங்கள் யாராக இருக்க வேண்டும், எப்படி இருக்க வேண்டும் என்று மற்றவர்கள் நினைக்கிறார்களோ அவ்வாறாக இருப்பீர்கள். அது எது என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க முடியும். தேவன் உங்களை வழிநடத்துவதைப் பின்பற்றி உங்களுக்கு நீங்களே உண்மையாக இருப்பதன் மகிழ்ச்சியை நீங்கள் பெறலாம் அல்லது

மக்களின் கோரிக்கைகளுக்கு நீங்கள் பயப்படலாம். நம்முடைய வெகுமதி அவரிடமிருந்தே வரும் என்பதை அறிந்து, மனிதனுக்காக அல்லாமல், கர்த்தருக்காக மனப்பூர்வமாக எல்லாவற்றையும் செய்யும்படியாக பவுல் நமக்கு அறிவுறுத்தினார் (கொலோ. 3:23-24).

நாம் மெல்ல மெல்ல, அதைக் கவனிக்காமலே, மக்களை மகிழ்விப்பவர்கள் என்ற வலையில் நழுவிவிடலாம். மக்களைப் பிரியப்படுத்த விரும்புவது மனித இயல்பு, உண்மையில், தேவன் நம்மிடம் "ஒருவரும் தங்கள் நன்மையைத் தேடக்கூடாது, ஆனால் மற்றவர்களின் நன்மையைத் தேட வேண்டும்" என்று சொல்கிறார், (1 கொரி. 10:24). இருப்பினும், அவர்களின் ஒப்புதலுடன் சேர்வதால், நாம் தேவனைப் பிரியப்படுத்த மாட்டோமென்றால், அவரைப் பிரியப்படுத்துவதையே நாம் எப்போதும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

> நீங்கள் நீங்களாகவே இருப்பீர்கள் அல்லது நீங்கள் யாராக இருக்க வேண்டும் என்றும் எப்படி இருக்க வேண்டும் என்றும் மற்றவர்கள் நினைக்கிறார்களோ அவ்வாறாக இருப்பீர்கள். அது எது என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க முடியும்.

நீங்கள் மக்களுக்காக காரியங்களைச் செய்யும் போது, அவற்றைச் செய்வதில் உங்களுக்கு சமாதானம், மனநிம்மதி இல்லை அல்லது நீங்கள் உண்மையிலேயே அவற்றைச் செய்ய விரும்பவில்லை என்றால், நீங்கள் ஏன் அவற்றைச் செய்கிறீர்கள் என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். ஒருவருக்காக நீங்கள் செய்ய விரும்பாத ஒன்றைச் செய்யும்படி தேவன் உங்களிடம் கேட்கலாம், நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பிரியப்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக செய்கிறீர்கள் ஆனால் அந்த நபர் கோபப்படாமல் இருக்கவோ அல்லது உங்களை நிராகரிக்காமல் இருக்கவோ நீங்கள் அதைச் செய்கிறீர்கள் என்றால், நீங்கள் தவறான காரணத்திற்காக அதைச் செய்கிறீர்கள், அது தேவனுக்கு பிரியமில்லாதது.

நான் ஒருமுறை சபையில் சிறிய குழுக்கள் இருந்த ஒரு தேவாலயத்திற்குச் சென்றேன். சரியான நபர்களுடன் இருக்கிறவர்களாக கருதப்பட்டவர்கள் சரியான கட்சிகளுக்கு அழைக்கப்பட்டனர், தேவாலயத்தின் குழு உறுப்பினர்களாக இருக்க பரிந்துரைக்கப்பட்டனர், போற்றப்பட்டனர் மற்றும் தேவாலயத்தில் என்ன நடக்கிறது என்பது பற்றி நன்கு அறிந்திருந்தனர். தேவாலயத்தில் கலந்துகொண்ட பெரும்பாலான மக்களுக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி அவர்களுக்கு நிறைய தெரியும். நான் அந்தக் குழுவில் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தேன், அந்த நேரத்தில்

எனக்கு அது தெரியாது என்றாலும், நான் பாதுகாப்பற்று உணர்ந்து கொண்டிருந்ததாலும் மற்றும் மதிப்பைத் தேடிக்கொண்டிருந்ததாலும் மட்டுமே அதில் ஒரு பகுதியாக இருக்க விரும்பினேன். பெரும்பாலான குழுக்களைப் போலவே, அதற்கும் ஒரு தலைவர் இருந்தார்-அதைக் கட்டுப்படுத்தும் ஒரு பெண்- நான் குழுவிற்கு அழைக்கப்படுவதற்கு, அவள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நான் அந்த தலைவருக்குப் பாராட்டுக்களைச் செலுத்திக் கொண்டிருந்தேன், அவற்றில் பெரும்பாலானவை நேர்மையானவை அல்ல, என்னால் முடிந்த எந்த நேரத்திலும் அவளுக்கு உதவ முன்வந்தேன். சீக்கிரமாகவே நான் ஏற்றுக்கொள்ளப்பட்டேன், அது மிகவும் நன்றாக இருந்தது, ஆனால் அவ்வாறு செய்தது தேவனுக்குப் பிடிக்கவில்லை என்பதை இப்போது நான் அறிவேன். உண்மையில், தேவன் தம்முடைய வார்த்தையைக் கற்பிக்க என்னை அழைத்தபோது, என்னை நியாயந்தீர்த்த, என்னை நிராகரித்த, என்னைப் பற்றி மோசமாகப் பேசிய முதல் நபர்களில் இவளும் ஒருத்தி. அவள் விரும்பியதை எல்லாம் செய்து நான் அவளுடைய ஆதரவைப் பெற்றேன், முதல் முறை அவள் ஏற்றுக்கொள்ளாத ஒன்றை நான் செய்தபோது, அவள் எனக்கு எதிராக மாறினாள்.

அவளை மகிழ்விப்பதற்காக, நான் எனக்கு உண்மையாக இருக்கவில்லை. நாம் பழகும் ஒவ்வொருவரும் நம்மிடமிருந்து வித்தியாசமான ஒன்றை எதிர்பார்க்கிறார்கள், எனவே எல்லா மனிதர்களையும் எப்போதும் மகிழ்விக்க முயற்சித்தால், நாம் குழப்பமடைந்து, சோர்வடைந்து, விரக்தியடைந்து, மகிழ்ச்சியற்றவர்களாக மாறுவோம். நாம் செய்யப்போகும் எல்லாவற்றையும், நாம் எடுக்கவிருக்கும் ஒவ்வொரு அடியையும் ஜெபத்தில் தேவனுக்கு முன்பாக வைப்பது முக்கியம். நீதிமொழிகள் 3:6, நம்முடைய எல்லா வழிகளிலும் நாம் அவரை ஏற்றுக்கொண்டால், அவர் நம் பாதையை வழிநடத்துவார் என்று கூறுகிறது.

உள்நோக்கங்கள் என்பது நாம் என்ன செய்கிறோம் என்பது மட்டுமல்ல நாம் செய்வதை ஏன் செய்கிறோம் என்பதைப் பற்றியது. அவை தேவனுக்கு மிகவும் முக்கியம். நாம் கவனிக்கப்பட வேண்டும், பாராட்டப்பட வேண்டும் அல்லது மற்றவர்கள் நம்மைப் பற்றி நன்றாக நினைக்க வேண்டும் என்பதற்காக நல்ல செயல்களைச் செய்யக்கூடாது. தேவனுக்குக் கீழ்ப்படிவதாலும், நாம் அவரை நேசிப்பதாலும் மற்றவர்களை நேசிப்பதாலும் நாம் என்ன செய்கிறோமோ அதை நாம் செய்ய வேண்டும். நேர்மையாக கொடுப்பது நம் வாழ்வில் அறுவடையை உருவாக்கும் என்று தேவன் நமக்குச் சொல்லியிருந்தாலும் (லூக்கா 6:38), அறுவடையை அனுபவிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக கொடுக்க

கூடாது. மக்களை ஆசீர்வதிப்பதற்கும் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காகவும் நாம் கொடுக்க வேண்டும். தூய்மையான நோக்கங்களைக் கொண்டிருப்பது எப்போதும் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களை உருவாக்குகிறது, அதே நேரத்தில் தூய்மையற்ற நோக்கங்கள் அப்படி செய்கிறதில்லை.

சில சமயங்களில் நான் ஒருவருக்கு ஏதாவது கொடுத்து, அவர்கள் எனக்கு நன்றி சொல்லாவிட்டால், நான் கோபமடைகிறேன். அப்படியானால், நான் நன்றி செலுத்துவதற்காகவும் நன்றாக எண்ணப்படவும் இதைச் செய்தேனா அல்லது வேறு யாருக்காவது ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்று செய்தேனா என்று தேவன் என்னைச் சோதித்திருக்கலாம் என்பதை நினைவில் கொள்வேன்.

மிரட்டலை தேவனுடனான நெருக்கத்திற்காக விற்றுவிடு

சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்டவேண்டும்; சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு.

நீதிமொழிகள் 18:24

நாம் எல்லாருடனும் நட்பாக இருக்க முயற்சித்தால், நாம் அழிக்கப்படுவோம், ஆனால் நாம் இயேசுவை நமது சிறந்த நண்பராகத் தேர்ந்தெடுத்தால், அவருக்கு விருப்பமில்லாததை நாம் செய்தாலும் அவர் ஒருபோதும் நம்மை ஏமாற்றவோ, நம்மை விட்டு விலகவோ அல்லது கைவிடவோ மாட்டார் என்று இந்த வசனம் தெளிவாகக் கூறுகிறது. அவர் நம்மைத் திருத்துவார், ஆனால் அவர் நம்மை நிராகரிக்க மாட்டார்.

இந்த அத்தியாயத்திற்கு முன் கொடுக்கப்பட்டிருப்பது லியோனார்ட் ரேவன்ஹில்லின் மேற்கோள் ஆகும், மேலும் உங்கள் கவனத்தை மீண்டும் அதில் வைக்க விரும்புகிறேன்: “ தேவனுடன் நெருக்கமாக இருக்கும் ஒருவன் மனிதர்களால் ஒருபோதும் பயப்படுத்தப்பட மாட்டான்.” ஏன்? ஏனென்றால், தேவனுடனான நெருக்கம் நம் வாழ்வில் தெளிவைக் கொண்டுவருகிறது மற்றும் விஷயங்கள் உண்மையில் இருப்பதைப்போலவேபார்க்கஉதவுகிறது. அவருடனான நெருக்கம், நமது சொந்த இதயங்களை அறியவும், நமது செயல்கள் தூய நோக்கங்களிலிருந்து உருவாகிறதா இல்லையா என்பதைப் பகுத்தறியவும் உதவுகிறது.

> “தேவனுடன் நெருக்கமாக இருக்கும் ஒருவன் மனிதர்களால் ஒருபோதும் பயப்படுத்தப்பட மாட்டான்.” (லியோனார்ட் ராவன்ஹில்)

தேவனுடனான நெருக்கம், நாம் மக்களால் அச்சுறுத்தப்படுவதிலிருந்தும், கையாளப்படுவதிலிருந்தும், கட்டுப்படுத்தப்படுவதிலிருந்தும் நம்மைக் காக்கிறது.

தாவீது தேவனுக்குப் பிரியமானவன் என்பதை நாம் அறிவோம் (சங். 60:5; 108:6). அவன் தேடியது ஒன்று இருந்தது, அது தேவனின் பிரசன்னத்தில் வாழ்ந்து, வாழ்நாள் முழுவதும் அவரது அழகைக் காண வேண்டும் என்பதே.(சங். 27:4). இந்த வேதம் என் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது, ஏனென்றால் நான் பல விஷயங்களைத் தேடுவதை உணர்ந்தேன், அவற்றில் எதுவும் தேவனின் பிரசன்னத்தில் வாழ வேண்டுமென்பது இல்லை. இயற்கையாகவே, நான் அதைச் செய்ய விரும்பினேன், ஆனால் நான் அதைக் கேட்கவோ அல்லது தேடவோ இல்லை, எனவே அது எனக்கு மிகவும் முக்கியமானதாக இருந்திருக்காது.

நான் ஊழியத்தில் தேவனை சேவித்துக் கொண்டிருந்தேன், அந்த நேரத்தில், அவ்வாறு செய்துக்கொண்டிருந்ததற்காக என்னைப் பற்றி நான் மிகவும் பெருமைப்பட்டேன் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒரு நாள் தேவன், அவருக்கு சேவை செய்வதில் நான் பெருமைப்பட்டாலும், நான் அவருடன் எந்த நேரத்தையும் செலவிடவில்லை என்பதை எனக்கு நினைவூட்டினார். அது தான் அவருக்கு முக்கியமானது. அவர் நம் வாழ்வில் முதன்மையானவராக இல்லாவிட்டால், தேவனுக்காக நாம் என்ன செய்தாலும் அது ஒன்றுமேயில்லை.

முதலில் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடும்படி இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்தார், பிறகு நமக்குத் தேவையான மற்ற அனைத்தும் நமக்கு சேர்க்கப்படும் (மத். 6:33). உங்கள் வாழ்க்கையில் தேவன் முதன்மையானவராக இருக்கிறாரா? நீங்கள் அவரிடம் கேட்கும் பொருட்களைப் பெறுவதை விட அவர் உங்களுக்கு முக்கியமா? உங்கள் வாழ்க்கையில் தேவன் இருப்பதற்காக நீங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும் என்றால், நீங்கள் அதை செய்வீர்களா? நான் செய்வேனா? அத்தகையதொரு தேர்வை நாம் எதிர்கொள்ளும் வரை நமக்கே தெரியாது என்று நினைக்கிறேன், ஆனால் இயேசு இல்லாமல் நான் தொலைந்து போவேன், பரிதாபமாக இருப்பேன் என்பதை அறிந்து சரியான தேர்வை எடுக்கும் அளவுக்கு நான் அவருக்கு நெருக்கமாக இருக்கிறேன் என்று நம்புகிறேன், பிரார்த்தனை செய்கிறேன்.

நாம் எவ்வளவு காலம் தேவனை சேவிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் கற்றுக்கொள்கிறோம், ஆவிக்குரிய ரீதியில் வளர்கிறோம். நீங்கள் படிக்கும் சில விஷயங்கள் உங்களுக்கு அச்சுறுத்தலாகத் தோன்றினால்

அல்லது நீங்கள் ஒருபோதும் அந்த அளவு தரத்தை கொண்டிருக்க முடியாது என்று நீங்கள் நினைத்தால், பிசாசு உங்களிடம் பொய் சொல்கிறான். ஒவ்வொரு நாளும் நீங்கள் இயேசுவுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் போது நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக கற்றுக்கொள்கிறீர்கள், மேலும் உங்கள் வாழ்க்கையில் அவருடைய பிரசன்னத்திற்கு அதிகதிகமாக அடிமையாகிவிடுவீர்கள். பல வருடங்கள் நான் ஆலயத்திற்கு சென்றேன் ஆனால் உணவருந்தும் முன்பும், இரவு உறங்கச் செல்வதற்கு முன்பும் ஒரு சிறிய பிரார்த்தனையைச் சொல்வதைத் தவிர, ஆராதனைகளுக்கு இடையில் கர்த்தரைப் பற்றி யோசிக்கவே இல்லை. நான் இப்படி எப்படிச் சமாளித்தேன் என்று என்னால் இப்போது நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை, நான் தேவாலயத்திற்குச் செல்லும் கிறிஸ்தவளாக இருந்தபோதிலும், என் வாழ்க்கை வீழ்ச்சியடைந்ததில் ஆச்சரியமில்லை. நான் ஒருமுறை கேள்விப்பட்டேன், “நாம் உண்மையில் பிரிந்து செல்வதற்கு முன்பு நாம் பிரிந்து வந்து தேவனுடன் நேரத்தை செலவிட வேண்டும்.”

தேவனுடன் நேரத்தை செலவிடுவது என்பது வெறுமனே அவருடன் பேசுவது, உங்கள் வாழ்க்கையில் அவர் செய்த நன்மைக்காக அவருக்கு நன்றி தெரிவிப்பது, உங்களுக்கு சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றி ஜெபிப்பது, அவருடைய வார்த்தையைப் படிக்கும்போது கேள்விகளைக் கேட்பது, உங்கள் கவலைகளைப் பகிர்ந்துகொள்வது மற்றும் நீங்கள் செய்ய விரும்பும் எதையும் செய்வது. உங்களால் பார்க்க முடியாத ஒருவரிடம் நீங்கள் பேசுவதால் அதைச் செய்வது கடினம் என்று நீங்கள் உணரலாம், ஆனால் தேவன் உங்களைப் பார்க்கிறார் மற்றும் நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் அவர் அழைக்கப்படுவதை விரும்புகிறார். நீங்கள் தேவனை உங்கள் கண்களால் பார்க்க முடியாது, ஆனால் உங்கள் வாழ்க்கையிலும் உங்களைச் சுற்றியுள்ள மக்களின் வாழ்க்கையிலும் அவர் செயல்படுவதை நீங்கள் காணலாம். அது நடக்கும் ஒவ்வொரு முறையும், உங்கள் இதயத்தை அவரிடம் இன்னும் அதிகமாக திறக்க உதவுகிறது.

வாரா வாரம் அல்லது வாரத்திற்கு பல முறை ஆலயத்திற்கு செல்வது சாதாரணமானதாக ஆகலாம் (ஏதோ வழக்கத்தின் படிசெய்யும் ஒன்று), ஆனால் தேவாலயத்திற்கு வருகை தருவதுடன் உங்கள் அன்றாட வாழ்வில் தேவனுடனான நெருக்கமான உறவு அவருடனான உறவை உற்சாகமானதாகவும் மர்மமானதாகவும் ஆக்குகிறது. நாம் தினமும் தேவனைப் பின்பற்ற ஒப்புக்கொண்டால், ஆச்சரியப்படுவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும், ஏனென்றால் நாம் செய்ய நினைக்காத ஒன்றைச் செய்யும்படி அவர் நம்மிடம் சொல்லலாம்.

ஆவியிலும் ஆவியினாலும் வாழ்வது வாழ்வதற்கு ஒரு புதிய, உற்சாகமான வழி! உங்கள் சொந்த வாழ்க்கையை வாழ முயற்சிப்பதில், உங்கள் சொந்த நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில், உங்களைச் சுற்றியுள்ளவர்களை ஆரோக்கியமற்ற வழிகளில் பிரியப்படுத்துவதில், நீங்கள் சோர்வாக இருந்தால், இது உங்களுக்கு ஒரு திருப்புமுனையாக இருக்கட்டும். தேவனுடைய ஒரு வார்த்தை உங்கள் வாழ்க்கையை மாற்றும், மேலும் இந்த புத்தகத்தின் வார்த்தைகள் மூலம் தேவன் உங்களிடம் பேசிக்கொண்டிருக்கிறாரென்றால், மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், செய்வார்கள் அல்லது சொல்வார்கள் என்ற பயத்தை விட்டுவிட்டு தேவனுடனான நெருங்கிய, நட்பை உண்மையாகப் பிடித்துக் கொள்ளும்படி வருந்திக்கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்கள் பயபக்தியை விட பயத்தால் அதிகம் அலைக்கழிக்கப்படுகிறார்கள்.

- அரிஸ்டாட்டில்

அருமை!

நான் தேவனுக்கு பயப்படும் நிலைக்கு வருவேன் என்று யாராவது என்னிடம் சொன்னால், நான் நகைத்திருப்பேன். எல்லாவற்றிற்கும் மேலாக, நான் அவரை நேசிப்பதற்காகவும் மற்றும் அவர் எனக்கு சிறந்ததை விரும்பும் ஒரு அணுகக்கூடிய தந்தை என்று நம்பும்படியாகவும் வளர்க்கப்பட்டேன்.

பின்னர், அந்த நம்பிக்கை கடுமையாக சவால் செய்யப்பட்ட ஒரு காலம் வந்தது. “தேவனுடைய சித்தம்” என்று மக்கள் சொன்ன சூழ்நிலையின் விளைவாக நான் ஒரு வேதனையான இழப்பை சந்தித்தேன். தேவன் என்னை ஏதாவது கெட்ட மனப்பான்மைக்காகவோ அல்லது பாவமான நடத்தைக்காகவோ என்னைத் தண்டிக்கிறாரா என்று ஆச்சரியப்படவும், அவர் அடுத்து என்ன செய்வார் என்று பயப்படும் சூழ்நிலையும் எனக்கு ஏற்பட்டது. ஒரு காலத்தில், ஆத்திரத்தால் நிறைந்திருக்கும் ஒருவரைப் பற்றியோ அல்லது அவர்களின் பாதுகாப்பு அல்லது நல்வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் ஒருவரைப் பற்றியோ மக்கள் பயப்படும் விதமாக நான் அவரைப் பற்றி பயந்தேன். அவர் இனியும் பாதுகாப்பாக உணரப்படவில்லை.

காலப்போக்கில், அவரது இடைவிடாத அன்பின் காரணமாக, அந்த நிலைமை உண்மையிலேயே தேவ சித்தம் என்பதை நான் பார்க்க ஆரம்பித்தேன். அவர் இழப்பை பெரிய மறுசீரமைப்பாக மாற்றினார் மற்றும் என் இருதயத்தில் குணப்படுத்தும் வலிமையாக்கும் ஆழமான வேலையைச் செய்தார். அப்போதுதான் அவரைப் பற்றிய எனது பயம், இன்று அதன் எதிர்மறையான அர்த்தங்களுடன் நாம் புரிந்துகொள்ளும் பயம் , விவிலிய எழுத்தாளர்கள் புரிந்துகொண்ட பயமாக மாறியது. அவர்கள் “கர்த்தருக்கு பயப்படுவதை” பற்றி எழுதியபோது, அவர்கள் மிகுந்த மரியாதை மற்றும் பயபக்தியின் அர்த்தத்தில் பயத்தை அர்த்தப்படுத்தினர்.

“கர்த்தருக்குப் பயப்படுதல்” என்ற சொற்றொடரின் மையத்தைக் கைப்பற்றக்கூடிய அதே மாதிரியான ஒரு இன்றைய கால சொல் ‘பிரமிப்பு’ என்பதாகும். கர்த்தர் அற்புதமானவர்-ஞானத்தில் அற்புதமானவர், அன்பில் அற்புதமானவர், மன்னிப்பதில் அற்புதமானவர், அவர் நம்மைக் குணப்படுத்தும் விதத்திலும், நம்மை விடுவிப்பதிலும், நம்முடைய நன்மைக்காக எல்லாவற்றையும் நன்றாகச் செய்வதிலும் அற்புதமானவர் (ரோமர் 8:28).

இன்று நாம் பயத்தைப் பற்றி நினைக்கும் விதத்தில் அவருக்கு

பயப்படும் போது அந்த ஆசீர்வாதங்களை அனுபவிப்பதில் இருந்து நம்மை விலக்கிக் கொள்கிறோம். பயத்தின் நிலையிலிருந்து நாம் அவருடன் தொடர்பு கொள்ளும்போது, நாம் விரக்தியடைந்து குழப்பமடைகிறோம். ஆனால் அவர் உண்மையில் யார் என்பதற்காக நாம் அவரைப் பார்க்கத் தொடங்கும் போது, கர்த்தரைப் பற்றிய அந்த வேதப் பயத்தை நாம் உணர்ந்து "தேவனே, நீர் அற்புதமானவர்!" என்று நம்மால் சொல்லாமல் இருக்க முடியாது,

- பெத்

அத்தியாயம் 17

நீங்கள் பயத்திற்காக பயத்தை வர்த்தகம் செய்யலாம்

தவறான வகையான பயத்திலிருந்து விடுதலை

> கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு.
>
> நீதிமொழிகள் 9:10

நீதிமொழிகள் 9:10 இன் படி, மிக முக்கியமான விஷயம், தேவன் மேல் பயபக்தியுடன் கூடிய பயம் தான் என்பதை நாம் அறியும் வரை நமக்கு உண்மையில் எதுவுமே தெரியாது. மற்ற அனைத்து வகையான பயங்களும் தவறான பயம், எதிர்க்கப்பட வேண்டும், மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் ஒரு சரியான பயம் இருக்கிறது, அது நாம் கற்பனை செய்வதை விட மதிப்புமிக்கது. நான் தேவன் பேரில் இருக்கும் பயபக்தியைப் பற்றி பேசுகிறேன். அது தவறான மற்றும் வேதனை தரும் அச்சங்களிலிருந்து நம்மை விடுவிக்கும். நாம் உண்மையில் ஒரு வகையான பயத்தை இன்னொரு வகையான பயத்திற்கு வர்த்தகம் செய்யலாம்.

இது சிலருக்கு குழப்பத்தை ஏற்படுத்துகிறது, ஏனென்றால் தேவன் அவர்களை எவ்வளவு நேசிக்கிறார், அவர் எவ்வளவு கருணையும் இரக்கமும் உள்ளவர் என்பதைப் பற்றி அவர்களுக்கு நிறைய கற்பிக்கப்பட்டுள்ளது. எனவே அவருக்கு பயப்பட வேண்டும் என்று அவர்களால் கற்பனை செய்ய முடியாது. அவர்கள் தவறான அச்சங்களிலிருந்து விடுபடுவதைப் பற்றிய பகுதியை அறிந்துக்கொள்கிறார்கள், ஆனால் யாராவது தேவனுக்கு பயப்படும் பயத்தைப் பற்றி குறிப்பிடும்போது போராடுகிறார்கள்.

தேவன் மேலிருக்கும் பயபக்தி மற்ற பயங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது, அதைப் பற்றி நாம் பேசும்போது, பயம் என்ற வார்த்தை சாதாரணமான பயத்தைக் குறிக்காமல் முற்றிலும் மாறுபட்ட சூழலில் பயன்படுத்தப்படுகிறது. பயபக்தியான பயம் என்பது மரியாதைக்குரிய, பயப்பட வைக்கும் பயம் ஆகும், "தேவன் சர்வ வல்லவர் என்றும் அவர் சொல்வதை அவர் அர்த்தத்தடன் சொல்கிறார் என்றும் எனக்குத் தெரியும். அவர் நல்லவர். அவர் என்னை நேசிக்கிறார், அவர் எப்போதும் என்னை கவனித்துக்கொள்வார் என்று ஒருவர் சொல்லக்கூடியதாக இருக்கும். பயபக்தி மற்றும் பிரமிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது, பயம் பற்றிய நமது பொதுவான நவீனகால புரிதல் அல்ல. "இதைச் செய்யுங்கள், நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்" என்று அவர் சொன்னால், அவரைப் பின்பற்றினால், ஆசீர்வாதங்கள் நம்மைத் தொடரும் என்பதை சந்தேகமின்றி அறியலாம். அதுபோலவே, "இதைச் செய்தால், காரியம் சரியாகப் போகாது" என்று தேவன் சொன்னால், அவர் சொல்வதைச் சரியாக அர்த்தப்படுத்துகிறார். யாருக்கும் விதிவிலக்கு அளிக்க மாட்டார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஜாய் டாசன் தனது சாதாரண காரியங்களுக்கு எப்பொழுதும் பாதிக்கப்பட்டிருப்பது என்ற புத்தகத்தில், "தேவனுக்கு பயப்படுவது என்பது மற்றவர்களின் எதிர்வினைகளைக் காட்டிலும் நமது செயல்களுக்கு தேவனின் எதிர்வினைகளால் ஈர்க்கப்படுவதைக் குறிக்கிறது."என்று எழுதுகிறார். நான் அந்த அறிக்கையை மிகவும் விரும்புகிறேன், ஏனென்றால் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை விட நம் செயல்களைப் பற்றி தேவன் என்ன நினைக்கிறார் என்பதில் நாம் அதிக அக்கறை காட்டினால், நாம் அவர்களுக்கு பயப்பட மாட்டோம். ஏனென்றால் நாம் அவருக்கு பயப்படுகிறோம்.

எந்த பாவத்திற்கும் யார் வேண்டுமானாலும் மன்னிக்கப்படலாம். ஒரு நபர் எத்தனை முறை மன்னிக்கப்படுவார் என்பதற்கு வரம்பு இல்லை. இருப்பினும், தவறு என்று நமக்குத் தெரிந்ததைத், தவறு செய்தாலும் சரியான முடிவைப் பெறுகிறோம் என்று நினைத்து தொடர்ந்து செய்துக்கொண்டிருந்தால், நாம் தேவனின் கட்டளைகளை மதிக்கவில்லை. அது ஒருபோதும் சரியாக இருக்காது.

இன்று உலகில் தேவன் மீதான பயபக்தி வெகுவாகக் காணப்படுகிறதில்லை, ஆனால் அது பல கிறிஸ்தவர்களின் இருதயங்களிலும் இல்லை. ஒவ்வொரு தேவாலயத்திலும் வருடத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை இது கற்பிக்கப்பட வேண்டும் என்று நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன், ஏனென்றால் விஷேஷமாக குறிப்பிடப்படாத எந்தவொரு விஷயத்தையும்

அது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு முக்கியமானதாக இருந்தாலும் கூட மக்கள் கவனிக்க மாட்டார்கள்.

கிட்டத்தட்ட ஐம்பது வயதுள்ள ஒரு அழகான பெண்ணை எனக்குத் தெரியும். அவள் தன் வாழ்நாள் முழுவதும் தேவாலயத்திலும், ஊழியத்திலும் இருந்திருக்கிறாள். ஆனால் நான் தேவன் பேரில் பயபக்தியைப் பற்றிக் குறிப்பிடும் போது, அது அவளைக் குழப்புகிறது. எக்காரணம் கொண்டும் நாம் தேவனுக்கு பயப்பட வேண்டும் என்று அவள் நினைக்கவில்லை. நாங்கள் தவறான வகை பயத்தைப் பற்றி பேசுகிறோம் என்றால் நான் அவளுடன் முற்றிலும் உடன்படுகிறேன். தேவனுடைய கோபம், நிராகரிப்பு அல்லது தண்டனைக்கு நாம் பயப்பட வேண்டியதில்லை. ஆனால் அவர் சொல்லும் எல்லாவற்றிலும் அவர் உண்மையுள்ளவர் என்பதையும், நாம் விரும்பும், நமக்கு ஏற்ற வேத வசனங்களை மட்டும் தேர்ந்தெடுத்து மற்றவற்றைப் புறக்கணிக்க முடியாது என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் தேவ பயம் தொடர்பாக குறைந்தது முப்பத்திரண்டு வேத வசனங்களை என்னால் விரைவில் கண்டுபிடிக்க முடியும். வேத வசனங்கள் இருந்தால், அவை முன்வைக்கும் உண்மையை நாம் புறக்கணிக்க முடியாது. அவற்றைப் புரிந்துகொண்டு நம் வாழ்வில் அவற்றைப் பயன்படுத்துகிறோமா என்று பார்க்க வேண்டும்.

ஜான் நியூட்டன் (1725-1807), பிரபலமான “அமேசிங் கிரேஸ்” பாடலை எழுதியவர், தேவ பயபக்தியை நிச்சயமாக புரிந்துகொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் அவர் பாடலில் இந்த வார்த்தைகளை எழுதினார்:

> ‘கிருபைதான் என் இருதயத்தை பயப்படக் கற்றுக்
> கொடுத்தது, என் பயம் நீங்கிய கிருபை; எவ்வளவு
> விலையுயர்ந்ததாக அந்த கிருபை தோன்றியது நான்
> முதலில் நம்பிய நேரத்திலிருந்து.

பயத்தை பயத்துக்கு விற்றான்! தேவ கிருபையைப் பற்றிய அவரது வெளிப்பாடு அவரை தவறான அச்சங்களிலிருந்து விடுவித்து, மரியாதைக்குரிய பயபக்தியை அளித்தது. ஜான் நியூட்டன் ஒரு அடிமைக் கப்பலின் எஜமானராக இருந்தார். அவர் ஒருமுறை பயங்கரமான கடுமையான புயலில் சிக்கி, கடலிலே மரிக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தார். அந்தச் சூழ்நிலை அவரை தேவனிடம் கூக்குரலிட செய்தது கிறிஸ்தவனாக மாறத் தூண்டியது. அவர் தனது தவறான வழிகளை விரைவாகவே உணர்ந்து கொண்டார். தன் தவறுகளை முற்றிலுமாக மன்னித்த தேவ கிருபையை

> தேவ கிருபையைப் பற்றிய அவரது வெளிப்பாடு ஜான் நியூட்டனை தவறான அச்சங்களிலிருந்து விடுவித்து, மரியாதைக்குரிய பய பக்தியை அளித்தது.

கண்டு வியந்தார். இறுதியில், அவர் அடிமைத்தனத்திற்கு எதிராக போராடினார் மற்றும் ஆங்கிலிகன் சபை போதகரானார். தேவனை அறிவதற்கு முன்பு, அவர் தனது சொந்த லாபத்திற்காக மற்றவர்களை அடிமைப்படுத்த பயப்படவில்லை. ஆனால் அவர் தேவனை அறிந்தவுடன், அது தவறு என்று அவருக்குத் தெரிந்தது. எல்லா கிருபையின் தேவனை அவர் துக்கப்படுத்த விரும்பாததால், அதைத் தொடர்ந்து செய்ய அவர் உண்மையில் பயந்திருப்பார்.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் முன்னிலையில் நீங்களும் நானும் எப்படி நடந்து கொள்வோம்? அவள் என் ராணியும் இல்லை, ஆனால் அவளைச் சுற்றி முட்டாள்தனமாக அல்லது தகாத முறையில் நடந்து கொள்ளாமல் இருக்க நான் மிகவும் கவனமாக இருப்பேன். நான் யாரோ ஒரு பெரியவரின் முன்னிலையில் இருப்பதை அறிந்து, பயபக்தியின் காரணமாக அதைச் செய்வேன். நாம் எப்போதும் தேவனின் பிரசன்னத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து, நாம் செய்யும் அனைத்தையும் அவர் பார்க்கிறார், அறிந்திருக்கிறார் என்பதை உணர்ந்தால், நாமும் சிறப்பாக நடந்துகொள்வோம், நாம் அப்படி செய்யாவிட்டால் அவர் நம்மை தண்டிப்பார் என்ற பயத்தினால் அல்ல நாம் அவரை மதிப்பதால் அப்படி கனப்படுத்துகிறோம்.

சில பொருத்தமற்ற நடத்தை

இன்று நாம் மிகவும் சாதாரண சமூகமாக கருதப்படும் ஒரு சமூகத்தில் வாழ்கிறோம். உடை சாதாரணமானது; துரதிர்ஷ்டவசமாக, அதிகாரப் பிரமுகர்கள் மீதான அணுகுமுறை/மனப்பான்மை பல சமயங்களில் சாதாரணமாயிருக்கிறது; மேலும் மக்கள் முன்குறிக்கப்பட்ட சந்திப்பிற்கு வருவதைப் பற்றி சாதாரணமாக இருக்கலாம். இந்த விஷயங்களைப் பற்றி சாதாரண மனப்பான்மை கொண்டவர்கள் அந்த மனப்பான்மையை அவர்கள் தேவாலயத்திற்கும் எடுத்துச் செல்லலாம். நான் சில கேள்விகளைக் கேட்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை நீங்களே பாருங்கள்.

தேவாலயத்தில் பாதிரியார் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு நண்பருக்கு குறுஞ்செய்தி அனுப்ப வேண்டுமா? மக்களுக்கு உதவும் என்று நாம் நம்பி

தயாரித்த செய்தியை பகிர்ந்துக்கொண்டிருக்கும், யாராவது நமக்கு அதைச் செய்ய வேண்டும் என்று விரும்புவோமா? தேவன் போதகர் மூலமாக பேசுகிறார் என்று நாம் நம்புவோமென்றால், அதை கவனமாகக் கேட்காமல் இருப்பது முரட்டுத்தனமாக இல்லையா?

தேவனை ஆராதிக்க அல்லது பிரசங்கத்தைக் கேட்க முயற்சிக்கும் மக்களுக்கு கவன சிதறல் ஏற்படும் வகையில் நாம் வழக்கமாக ஆராதனைக்கு தாமதமாக செல்ல வேண்டுமா? யாராவது எப்போதாவது தாமதமாக வரலாம், ஆனால் இது ஒரு வழக்கமான பழக்கமாக இருந்தால், உங்கள் இருதயத்தின் அணுகுமுறையை/மனப்பான்மையை மாற்ற வேண்டுமா என்று நீங்களே கேட்டுக்கொள்ளலாம். தேவன் மீது போதிய பயபக்தி இல்லாததற்கும் இதற்கும் ஏதாவது தொடர்பு இருக்கலாம்.

அல்லது மக்கள் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ளும்படி போதகர் அழைப்பு விடுக்கும்போது சபை கூட்டத்திலிருந்து வெளியேறுவது எப்படி? சீக்கிரம் புறப்பட வேண்டிய எவரும் பின் வரிசையில் உட்கார வேண்டும். அதனால் அவர்கள் எழுந்து போகும் போது நடந்து கொண்டிருக்கும் கூட்டத்தை தொந்தரவு செய்ய மாட்டார்கள். நான் நித்தியத்தைப் பற்றி மக்களிடம் பேசி, கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள அவர்களை அழைக்கும் போது, சில சமயங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் எழுந்து கட்டிடத்தை விட்டு வெளியேறத் தொடங்குவதை எங்கள் மாநாடுகளில் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து நான் அறிவேன். முதலாவதாக, அத்தகைய தருணத்தை சீர்குலைப்பது தேவனை அவமதிப்பதாகும். ஏனென்றால் இரட்சிப்பு என்பது ஒரு நபரின் வாழ்க்கையில் மிக முக்கியமான முடிவு. இரட்சிப்புக்கான அழைப்புக்கு பதிலளிக்கும் செயல்பாட்டில் இருக்கும் நபர்களையும்,, கவனிக்க, அல்லது ஜெபிக்க முயற்சிப்பவர்களையும் அவமதிப்பதாகும். மேலும் ஊழியம் செய்து கொண்டிருப்பவர்களையும் அவமதிக்கும் செயல் இது.

ஒரு வரிசையின் நடுவில் அமர்ந்திருக்கும் போது கொஞ்சம் தாகம் எடுத்தால், இருபது பேரை தொந்தரவு செய்து தண்ணீர் குடிக்க செல்வது தேவ பக்தியை காட்டுகிறதா? உண்மையான அவசரநிலை உள்ள எவரும் எந்த நேரத்திலும் வெளியேறலாம். ஆனால் ஒரு சிறிய அசௌகரியத்திற்காக ஆராதனையைத் தொந்தரவு செய்வது, எனது மதிப்பீட்டின்படி, அவமரியாதையானது. அன்பு அவமதிக்காது என்று வேதம் கூறுகிறது (1 கொரி. 13:4-5). மக்கள் முரட்டுத்தனமாக /அவமரியாதையாக நடந்து கொள்வதை நிறுத்தினால், இன்று உலகில் எத்தனை மாற்றம் ஏற்படும் என்று சிந்தியுங்கள். முரட்டுத்தனம் /அவமரியாதை சுயநலத்தின் கனி;

மற்றவர்களுக்கு என்ன வேண்டும் அல்லது தேவை என்பதில் எந்த அக்கறையும் இல்லாமல் நாம் எதை விரும்புகிறோம் என்பதைப் பற்றியதாக இருக்கிறது.

இன்று பலரை விட வித்தியாசமான தலைமுறையைச் சேர்ந்தவராக இருப்பதால், நான் கொஞ்சம் பழமையானவளாக இருக்கலாம் என்பதை நான் உணர்கிறேன். ஆனால் நவீனமாக இருப்பதற்கான நமது முயற்சியில், திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டிய சில விஷயங்களை நாம் விட்டு விட்டிருக்கலாம் என்று நான் நம்புகிறேன்.

நாம் தேவனுக்கு பயப்படாவிட்டால், மக்களையும் மதிக்க மாட்டோம் என்பதை நான் நம்புகிறேன். வேதமும் இதை ஆதரிக்கிறது.

> ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான்.
>
> லூக்கா 18:2

ஒரு பெண்ணின் முன்னிலையில் ஒரு ஆண் சபிக்க மாட்டான் என்ற அடிப்படை மரியாதை மற்றும் நல்ல நடத்தையை கட்டளையாக கொண்டிருந்த நாட்கள் எனக்கு நினைவிருக்கிறது. அவர் எவ்வளவு அயோக்கியனாக இருந்தாலும், பெண்கள் முன்னிலையில், குறிப்பாக அவருக்குத் தெரியாதவர்கள் முன்னிலையில் அவர் ஒரு ஜென்டில்மேனாக நடந்து கொண்டார். ஒரு மனிதனின் வார்த்தையே அவனது பிணைப்பாகவும், ஒரு சிறந்த வேலையைச் செய்வது அவனுடைய மரியாதையின் ஒரு பகுதியாகவும் அவனுக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகவும் இருந்த காலங்களில் நான் வாழ்ந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். கிறிஸ்தவர்கள் என்று கூறாத பெரும்பாலான ஆண்கள் கூட இந்தக் கொள்கைகளை கடைப்பிடித்து வாழ்ந்தனர். காவல்துறை அதிகாரிகள், நீதிபதிகள், ஆசிரியர்கள், முதலாளிகள், போதகர்கள் மற்றும் இது போன்ற பிற அதிகாரப் பதவிகளில் இருப்பவர்கள் மீது எங்களுக்கு மரியாதை இருந்தது. ஏனென்றால், தேவன் மக்களை மிகவும் நேசிக்கிறார், அவர்கள் பாவங்களுக்காக மரிக்கும் படியும், அவர்கள் பெற வேண்டிய தகுதியான தண்டனையை பெற தம் குமாரனை அனுப்பி அந்த அன்பைக் காட்டினார்.

நாம் எவரையும் தவறாக நடத்துவதற்கு நாம் பக்தியுடன் கூடிய பயத்தை கொண்டிருக்க வேண்டும், ஏனென்றால் எல்லோரும் தேவனுக்கு முக்கியம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நாம் எவரையும் தவறாக நடத்தாமல் பயபக்தியுடன் இருக்க வேண்டும். ஏனெனில் நாம் அனைவருமே தேவனுக்கு முக்கியம் என்பதை உணர வேண்டும்.

இன்று எத்தனை பேர் சிறந்தவர்களாக இருக்க முயற்சி செய்கிறார்கள்? பெரும்பாலான மக்கள் சாதாரணமாக இருப்பதில் திருப்தி அடைகிறார்களா? சமீபத்தில் ஒரு மாநாட்டில், எனது போதனைகளில் ஒன்று சிறந்தவர்களாக இருப்பதைத் தெரிந்துக் கொள்வது. போதனைக்குப் பிறகு, முப்பது வயதுகளின் நடுப்பகுதியில் இருக்கும், தேவாலயத்திலே வளர்க்கப்பட்ட ஒரு நன்கு அறியப்பட்ட வேத பாட ஆசிரியர் என்னிடம் வந்து, “என் வாழ்நாளில் இதுபோன்ற எதையும் நான் கேள்விப்பட்டதே இல்லை” என்றார். அவர் மேலும் தொடர்ந்தார், “இது என் வாழ்க்கையை மாற்றும். “எப்படி ஒரு நபர் தனது வாழ்நாள் முழுவதும் தேவாலயத்தில் இருந்தும், சிறந்தவராக இருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி ஒருபோதும் கேட்டிருக்க முடியாது? நம்முடைய தேவன் தம்முடைய எல்லா வழிகளிலும் சிறந்தவர் (மத். 5:41), ஆதலால் நாமும் எப்பொழுதும், எல்லா வழியிலும் சிறந்தவர்களாக இருக்க முயற்சிக்க வேண்டும்.

மரியாதைக்குரிய பயம் மற்றும் வல்லமை

ஆரம்ப நாட்களில், யூதேயா, கலிலேயா மற்றும் சமாரியா முழுவதிலும் உள்ள தேவாலயங்களில் சமாதானம் இருந்தது மற்றும் கட்டடப்பட்டுக்கொண்டிருந்தது. விசுவாசிகள் கர்த்தருக்குப் பயந்து, பரிசுத்த ஆவியின் ஆறுதலோடு நடந்ததால், சபை வளர்ந்து பெருகியது (அப் 9:31). இந்த வேதத்தில் மிக முக்கியமான ஒரு விஷயத்தை நான் காண்கிறேன்: அவர்கள் கர்த்தருக்குப் பயந்து நடந்தார்கள், அவர்கள் பெருகினார்கள். கர்த்தரின் பயமும் தேவாலய வளர்ச்சியும் கைகோர்த்துச் செல்வது போல் தோன்றியது. ஒருவேளை நமக்கு தேவ பயம் அதிகமாயும், சபையை எவ்வாறு வளரச் செய்வது என்பது பற்றிய குறைவான கூட்டங்களும் தேவைப்படலாம்.

கடந்த காலங்களில் பொது ஊழியங்களை கொண்டிருந்த சிலர் ஊழியத்தின் நிதியைத் தவறாகப் பயன்படுத்தியமைக்காக தண்டிக்கப்பட்டதை நாம் அறிவோம். அவர்கள் விபச்சாரம், ஆபாசத்திற்கு அடிமையாதல் மற்றும் மற்றவர்களைக் கட்டுப்படுத்தவும் தவறாக நடத்தவும் தங்கள் சக்தியைப் பயன்படுத்துவதை ஒப்புக்கொண்டனர். இவை அனைத்தும் பிரசங்க பீடத்தில் நின்று, மற்றவர்களுக்கு, தங்கள் வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும்

என்று பிரசங்கித்துக் கொண்டிருந்தபோதே செய்தனர். அந்தத் தலைவர்கள் இறைவனுக்குச் சரியான பயத்துடன் நடந்திருந்தால் இவை நடந்திருக்காது. ஒன்று முதலில் அவர்கள் பாவங்களைச் செய்திருக்கவே மாட்டார்கள், அல்லது அவர்கள் செய்திருந்தாலும் அவர்கள் மறுசீரமைப்பைத் தேடும் போது ஒப்புக்கொண்டு தங்கள் பதவிகளில் இருந்து விலகியிருப்பார்கள்.

நோவா பேழையைக் கட்டினார், ஏனென்றால் அவர் தனது இருதயத்தில் தேவபயத்தைக் கொண்டிருந்தார் (ஆதி. 6). ஆபிரகாம் தன் மகனை பலியிடும்படி தேவன் அவனிடம் சொன்னபோது அதைச் செலுத்தத் தயாராக இருந்தார். கர்த்தர் அவனிடம் பேசியது இதுதான்: "அப்பொழுது அவர்: பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்." (ஆதி. 22:12). இன்றும் அதே வகையான கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருந்தால், கிறிஸ்தவர்களின் வாழ்வில் நாம் அதிக கீழ்ப்படிதலைக் காண்போம். இவர்கள் ஆற்றல் மிக்க மனிதர்கள், அவர்கள் ஆச்சரியமான காரியங்களைச் செய்தார்கள், இது தெய்வீகப் பயபக்தியுடன் தெளிவாக இணைக்கப்பட்டுள்ளது என்று நான் நினைக்கிறேன்.

கிறிஸ்தவர்கள் வாழ்வதற்கு அப்போஸ்தலன் பேதுரு ஒரு எளிய சூத்திரத்தை வழங்கினார்: "எல்லாரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்." (1 பேதுரு 2:17).

நாம் வாழும் காலங்களை நான் "விரக்தியான காலங்கள்" என்று அழைப்பேன். முன்னெப்போதையும் விட, மக்களுக்கு தேவன் தேவை, ஆனால் அவரைக் கண்டுபிடிப்பதற்கா தேவாலயத்திலிருந்து விலகிச் செல்கிறார்கள். இந்த குழப்பமான சூழ்நிலைக்கு நாம் என்ன பதில் சொல்ல முடியும்? தேவனை விரும்பும் மற்றும் தேவன் தேவைப்படும் மக்கள் தங்களுக்குத் தேவையான உதவிக்காக தேவாலயத்தை (எல்லா இடங்களிலும் உள்ள கிறிஸ்தவர்களை) பார்க்க வேண்டும் அல்லவா? சில நேரங்களில் அவர்கள் செய்கிறார்கள், ஆனால் அவர்கள் பார்க்கும் வாழ்க்கை முறை அவர்கள் கேட்கும் செய்தியுடன் பொருந்தாததால் ஏமாற்றமடைகிறார்கள்.

பல அற்புதமான, அருமையான தேவாலயங்கள் தேவனை நன்றாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, அவற்றை நாம் மதிக்கிறோம், பாராட்டுகிறோம். நம்பிக்கையின் சுடரை உயிருடன் வைத்திருக்கும் எச்சம்

அவர்கள். ஆனால் கிறிஸ்துவைப் போன்ற நடத்தைக்கு வரும்போது, அது ஒருபோதும் “சில மக்கள்” அல்லது “சில தேவாலயங்கள்”, என்றில்லாமல் “எல்லா மக்களும்” மற்றும் “எல்லா தேவாலயங்களும்” ஆக இருக்க வேண்டும்.

உங்கள் வாழ்க்கையிலோ அல்லது ஊழியத்திலோ அதிக வல்லமை தேவை என நீங்கள் உணர்ந்தால், உங்களுக்கு சரியான பயபக்தியும், தேவபயமும் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இரண்டு வகையான பயம்

ஜான் நியூட்டன், கிருபை அவரை அச்சத்திலிருந்து விடுவித்ததாகவும், அதே நேரத்தில் அவருக்கு பயத்தை கற்பித்ததாகவும் பாடினார். தேவபயம் என்று குறிப்பிடப்படும் போது மக்களின் குழப்பத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது, ஏனென்றால் அவர்களில் பலர் தவறான வகையான தேவபயத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மார்ட்டின் லூதர் இரண்டு வகையான பயங்களை வேறுபடுத்தினார், அவற்றை தேவனின் “அடிமை” பயம் மற்றும் தேவனின் “அன்பான” பயம் என்று அழைத்தார். ஒரு கைதி தன்னை சித்திரவதை செய்யும் திறன் கொண்ட ஒரு சிறைக்காவலரை பார்த்து எப்படி பயப்படுவானோ அதுவே அடிமை பயம். தன்னைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய மற்றும் அடிக்கடி அப்படி செய்த ஒரு எஜமானர் மேல் ஒரு நபருக்கு ஏற்படும் பயம் இதுவாகும். அன்பான பயம் என்பது அன்பான பெற்றோர் மேல் ஒரு குழந்தை உணரும் பயம். ஒரு குழந்தை தன் முழு மனதுடன் தனது பெற்றோரை மிகவும் நேசிப்பதால் அவர்களை பிரியப்படுத்த மகிழ்விக்க விரும்புவதாகும். இந்த பயபக்தியான பயமானது, தன் பெற்றோரை பிரியப்படுத்துவதில்லை என்று தெரிந்தால், அவர்கள் விரும்பியபடி செய்யாமல் இருக்க மக்களைத் தூண்டும் அளவுக்கு வலிமையானது.

தேவன் மீதுள்ள பயபக்தியானது, தவறான அச்சங்களுக்கு நாம் அடிமையாவதிலிருந்து நம்மை விடுவிக்கும். அப்போஸ்தலன் யோவான் தேவனை நேருக்கு நேர் பார்த்தபோது, அவன் மரித்தவனைப் போன்று கீழே விழுந்தான் என்று விவரிக்கிறார். (வெளி. 1:17-18). அவர் வெளிப்படையாகவே தேவன் பேரில் மிகுந்த பயபக்தி கொண்டிருந்தார்.

> தேவன் மீதுள்ள பயபக்தியானது, தவறான அச்சங்களுக்கு நாம் அடிமையாவதிலிருந்து நம்மை விடுவிக்கும்.

தாவீது தேவனின் பரிசுத்த ஆலயத்தை நோக்கி வணங்கி நன்றி செலுத்துவதைப் பற்றி பேசினார் (சங். 138:2). நாம் தேவனின் மகத்தான அன்பை அறிய விரும்புகிறோம், ஆனால் தேவனின் மாபெரும் வல்லமையையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

"பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம்.

> ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே."
>
> எபிரெயர் 10:30-31

தேவனுடைய கைகளில் விழுவது ஏன் "பயங்கரமான விஷயம்"? தேவன் எல்லாவற்றையும் அவை இருப்பது போலவே சரியாகப் பார்க்கிறார். ஏதேனும் பாசாங்கு இருந்தால், அதனூடாக அவர் அதை பார்க்கிறார். தேவன் நாம் செய்யும் அனைத்தையும் பார்க்கிறார், நம்மைப் பற்றி அனைத்தையும் அறிந்திருக்கிறார். ஆனால் அவர் நம்மை மிகவும் நேசிக்கிறார், எதாவது சரியாக இல்லை என்றால், அவர் அதை எதிர்கொள்ளவும் சமாளிக்கவும் அன்புடன் உதவுவார். நாம் பெரும்பாலும் பாசாங்கு செய்து மக்களை ஏமாற்றலாம். ஆனால் தேவனை அல்ல. எல்லாவற்றிலும் தூய்மையைப் பெற அவர் நம்முடன் இணைந்து பணியாற்றுகிறார்.

நம் பாவத்தில் நம்மைத் தனியாக விட்டுவிடாத அளவுக்கு தேவன் நம்மை அதிகமாக நேசிக்கிறார். சில சங்கடமான இடங்களுக்கு நம்மை அழைத்துச் சென்றாலும் அவர் நமக்கு உதவுவார். நான் தனிப்பட்ட முறையில் பரிசுத்த ஆவியின் உணர்த்துதலை விரும்புகிறேன், மேலும் நான் அதை பற்றி குற்ற உணர்ச்சி அடையாமல் அதை தேவனின் அன்பின் அடையாளமாக எடுத்துக்கொள்கிறேன், நாம் ஏதாவது பாவம் செய்யும் போது, தவறான மனப்பான்மையைக் கொண்டிருக்கும் போது அல்லது ஒருவரை தவறாக நடத்தினால், தேவன் நம் மோசமான நடத்தையை நமக்கு உணர்த்துவார், அது உண்மையில் நல்லது. ஏனென்றால் நம்மில் நாம் காணாத தவறுகளை நாம் சரிசெய்ய முடியாது. நாம் தேவனை தெளிவாகக் காணவும் கேட்கவும் அவர் மீது ஆழ்ந்த பயபக்தியும் பிரமிப்பும் கொண்டிருக்க, தேவன் நம் கண்களைத் திறக்கவும், நம் காதுகளை திறக்கவும் ஜெபிப்போமாக.

செல்வம் என்பது அதிக உடைமைகளைக் கொண்டிருப்பதில் இல்லை, ஆனால் சில தேவைகளைக் கொண்டிருப்பதில் உள்ளது.

- எபிக்டெட்டஸ்

இப்படி இருந்தால் என்ன என்பதை கடந்து செல்லுதல்

எனது நாற்பதாவது பிறந்த நாளில், நானும் என் மனைவியும் எங்கள் உள் முற்றத்தில் அமர்ந்திருந்தோம், “குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதைப் பற்றி நாம் ஒரு நிரந்திரமான முடிவு எடுக்க வேண்டும்.” என்றேன். எங்களுக்கு திருமணமாகி பல வருடங்கள் ஆகிறது, அவ்வப்போது குழந்தை பெற்றுக் கொள்வதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம், ஆனால் சீரியஸாக இல்லை.

என் மனைவி வீட்டிலிருந்து வேலை செய்து எங்கள் குழந்தைகளை வளர்க்கலாம் என்பது எனது பிரகாசமான யோசனையாக இருந்தது. நான் என் வேலையை விட்டுவிட்டு வீட்டிலேயே இருக்க வேண்டும் என்பது அவளுடைய யோசனை. இது நிதி ரீதியாக அர்த்தமுள்ளதாக இருந்தாலும், நான் அதை எப்படி செய்வது? ஒரு ஆண் தன் வேலையை விட்டுவிட்டு குழந்தைகளுடன் வீட்டில் தங்கியிருந்து, தன் மனைவி குடும்பத்தை நடத்த அனுமதிப்பது எப்படி இருக்கும்? உலகில் உள்ள அறியப்படாத கோடிக்கணக்கான மக்களின் கருத்துக்களைப் பற்றி எண்ணுவதை விட்டுவிட்டு, என்னால் ஏதாவது செய்ய முடியும் என்று நான் நினைத்தால், அதை நானே தீர்மானித்து செய்யுமாறு என் மனைவி என்னிடம் கூறினாள். மக்களின் கருத்துக்களைப் பற்றிய எனது பயத்தை என்னால் கடந்து செல்ல முடியுமென்றால் என்னால் முடியும் என்று எனக்குத் தெரியும்.

பல மாதங்களுக்குப் பின். நாங்கள் எங்கள் மகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். வேலை ஸ்தலத்தில் என் ராஜினாமா கடிதத்தை கொடுத்து விட்டு, வருட இறுதியில் வேலையை விட்டுவிடத் திட்டமிட்டிருந்தேன். நான் மூன்று மாத அறிவிப்பு கொடுத்திருந்தேன், அந்த மூன்று மாதங்களில், நான் பயத்தில் முடங்கிய தருணங்கள் இருந்தன.

நான் நினைப்பேன்: ஒருவேளை செலஸ்டி தனது வேலையை இழந்தால், எங்களுக்கு வருமானம் இல்லை என்றால் என்ன செய்வது? என்னால் அதை செய்ய முடியாவிட்டால் என்ன செய்வது? குழந்தை வளர்ப்பு பற்றி எனக்கு எதுவுமே தெரியாது! குழந்தைக்கு ஏதாவது நேர்ந்தால் என்ன, எனக்கு வேறு வேலை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது? என்றால் என்ன . . . என்றால் என்ன . . . என்றால் என்ன?????

வேலையில் எனது கடைசி நாள் கடினமாக இருந்தது, நான் உணர்ந்த பயம் நம்பமுடியாததாக இருந்தது. இருப்பினும், நான் பயந்துக் கொண்டே செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக, தேவன் என்னை அழைத்ததை நிறைவேற்ற அது தான் ஒரே வழி.

ஒன்பது வருடங்கள் எங்கள் இரு குழந்தைகளுடன் வீட்டில் இருந்தேன். அது தான் எனக்குக் கிடைத்த கடினமான, சவாலான வேலை. ஆனால் அவை நிச்சயமாக என் வாழ்க்கையின் சிறந்த ஒன்பது ஆண்டுகள்!

- சக்

அத்தியாயம் 18

நீங்கள் பணத்தைப் பற்றி கவலைப்படுவதை நிறுத்தலாம்

நிதி அச்சங்களில் இருந்து விடுதலை

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். பிலிப்பியர் 4:19

கொடுப்பதிலும் பெறுவதிலும் தன்னுடன் உண்மையுள்ள பங்காளிகளாக இணைந்தவர்களுக்கு பவுல் இந்த வார்த்தைகளை எழுதினார். அவர்கள் பவுலின் போதனை ஊழியத்திலிருந்தும், அவருடைய அன்பிலிருந்தும், அவருடைய கருணையிலிருந்தும் அதிகமான ஆசீர்வாதங்கள் பெற்றனர், மேலும் அவர் அவர்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் செய்துகொண்டிருப்பதைத் தொடர்ந்து செய்வதற்கு அவர் அவர்களிடமிருந்து நிதியைப் பெற்றிருந்தார்.

மற்றவர்களுக்குக் கொடுப்பதன் நன்மைகளையும் கடமைகளையும் நமக்குக் கற்பிக்கும் பல வசனங்கள் வேதத்தில் உள்ளன. நாம் முறையாகவும் சரியான உள்நோக்கங்களுடனும் அவ்வாறு செய்தால், தேவன் எப்போதும் நம் தேவைகள் அனைத்தையும் சந்திப்பார். பவுல், “நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?” (1 கொரி. 9:11).

தாராளமாய் கொடுக்கிறவர்களாக நாம் எதிர்பார்க்கக்கூடிய ஆசீர்வாதங்களைப் போதிக்கும் பல வேத வசனங்களை என்னால் மேற்கோள் காட்ட முடியும், ஆனால் அவை எல்லாவற்றையும் கூறுவதாக நான் நம்பும் ஒரு பத்தியில் கவனம் செலுத்தத் தேர்ந்தெடுத்துள்ளேன்:

இதை நினைவில் வையுங்கள்: சிக்கனமாக விதைக்கிறவன் சிக்கனமாக அறுப்பான், தாராளமாக விதைக்கிறவன் தாராளமாக அறுப்பான். நீங்கள் ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டும் என்று உங்கள் இருதயத்தில் தீர்மானித்ததைக் கொடுக்க வேண்டும், தயக்கத்துடன் அல்லது நிர்பந்தத்தின் பேரில் அல்ல, ஏனென்றால் தேவன் மகிழ்ச்சியுடன் கொடுப்பவரை நேசிக்கிறார். மேலும், தேவன் உங்களை ஏராளமாக ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கிறார். இதனால் எல்லாவற்றிலும் எல்லா நேரங்களிலும், உங்களுக்குத் தேவையான அனைத்தையும் பெற்று, ஒவ்வொரு நற்கிரியையிலும் நீங்கள் பெருகுவீர்கள். எழுதப்பட்டிருக்கின்றதின்படி:

வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்.

விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்.

தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்.

2 கொரிந்தியர் 9:6-15

இந்த பத்தியை புரிந்துகொள்வது எளிது, கீழ்ப்படிந்தால், அது உறுதியளிக்கும் விளைவை உருவாக்கும். நாம் பண பயத்துடன் வாழ வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் தேவனுடைய வார்த்தை உண்மை என்பதை நாம் காண்போம். பணத்தைப் பற்றி உங்களுக்குப் பயம் இருந்தால், நீங்கள் கொடுக்கத் தொடங்க வேண்டும்-அதை பயந்துக் கொண்டே செய்ய வேண்டும்- தேவன் தம்முடைய வார்த்தைக்கு உண்மையுள்ளவர் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். எப்பொழுதும் உங்களை கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற அழுத்தத்தை உணராமல், அவர் உங்களை கவனித்துக்கொள்வதை நீங்கள் பார்த்து மகிழ்வீர்கள்.

மற்றவர்களுக்கு கொடுப்பதுடன், நம்மிடம் உள்ள நிதியில் ஞானத்தையும் பயன்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் நீங்கள் மற்றவர்களுக்கு

உதவி செய்யாததாலும் அல்லது ஞானத்தைப் பயன்படுத்தாததாலும் ஒருவேளை நீங்கள் நிதிச் சிக்கல்களில் இருக்கலாம், ஆனால் அதை எளிதில் சரிசெய்யலாம். ஒவ்வொரு முறையும் நீங்கள் சரியானதைச் செய்யும் போது, கடந்த காலத்தில் செய்த தவறான செயல்களின் சில விளைவுகளை நீங்கள் மாற்றுவீர்கள். தேவன் நம் எல்லா தவறுகளையும் பாவங்களையும் உடனடியாகவும் முழுமையாகவும் மன்னிக்கிறார், ஆனால் சில நேரங்களில் நாம் கடந்த காலத்தில் எடுத்த மோசமான முடிவுகளின் விளைவுகளை மேற்கொள்ள சிறிது காலம் எடுக்கும்.

> ஒவ்வொரு முறையும் நீங்கள் சரியானதைச் செய்யும் போது, கடந்த காலத்தில் செய்த தவறான செயல்களின் சில விளைவுகளை நீங்கள் மாற்றுவீர்கள்.

இது உண்மையில் நல்லது, ஏனென்றால் தவறான நடத்தையின் விளைவுகளிலிருந்து மிக எளிதாக விடுவிக்கப்பட்ட எவரும் அதே தவறுகளை மீண்டும் மீண்டும் செய்வதை எளிதாகக் காணலாம். தேவன் ஞானமுள்ளவர், அவர் எப்போதும் நமக்கு சரியானதைச் செய்கிறார், ஆனால் அவர் அதை சரியான நேரத்தில் செய்கிறார். அவர் மிகவும் மெதுவாக இருப்பதாக நாம் நினைக்கலாம். ஆனால் நம் வாழ்வில் அவருடைய நேரம் உண்மையில் சரியானது. நாம் ஏன் காத்திருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம், ஆனால் ஒரு காரணம் இருக்கிறது. மேலும் நாம் அவரை நேசித்து கீழ்ப்படிவதால், நம் நன்மைக்காகவே எல்லாவற்றையும் ஒருங்கினைய தேவன் செய்வார் (ரோமர் 8:28).

பிரார்த்தனை மற்றும் தேவ நம்பிக்கை

உங்களுக்கு நிதிப் பற்றாக்குறை அல்லது சில அழுத்தமான நிதித் தேவைகள் இருக்கும்போது மட்டும் அல்லாமல், உங்கள் நிதியைப் பற்றி முறையாக ஜெபிக்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன். நீங்கள் வைத்திருக்கும் எந்த முதலீடுகளையும் ஆசீர்வதிக்கவும், உங்கள் பணத்தைப் பாதுகாக்கவும், உங்களுக்கு நல்ல ஒப்பந்தங்களை வழங்கவும், நீங்கள் கைவைக்கும் அனைத்தையும் ஆசீர்வதிக்கவும் தேவனிடம் கேளுங்கள். வாழ்க்கையில் உங்களுக்குத் தேவையான எதற்கும் எல்லா நேரங்களிலும் தேவனை நம்புங்கள், பற்றாக்குறைக்கு பயப்படுவதற்கான சோதனையை எதிர்க்கவும்.

பணத்தைப் பற்றி ஜெபிப்பது தவறல்ல, உங்களைப் பொருளாதார ரீதியாக ஆசீர்வதிக்க தேவனிடம் கேட்பதும் தவறல்ல. குறைந்தபட்ச விற்பனை

ஒதுக்கீட்டை பூர்த்தி செய்யாததால், வேலையை இழக்க நேரிடும் என்ற பயத்தில் இருந்த ஒரு பெண்ணிடம் பேசினேன். அவள் ஒரு டிபார்ட்மென்ட் ஸ்டோரில் பணிபுரிந்தாள், எனவே அவளிடம் வாடிக்கையாளர்களை அனுப்பவும், அவர்கள் அவளுக்கு ஆதரவளிக்கவும் தேவனிடம் பிரார்த்தனை செய்யும்படி நான் பரிந்துரைத்தேன். அவள் முப்பது வருடங்களுக்கும் மேலாக ஒரு கிறிஸ்தவளாக இருந்தாள், எனவே ஜெபிப்பது அவளுக்கு ஒரு புதிய யோசனை அல்ல, ஆனால் அவள் என்னிடம், “பணத்திற்காக ஜெபிப்பது சரியா?” என்று கேட்டாள். நான் அவளிடம் சரியே என்று சொன்னேன். அவள் அதை செய்திருப்பாள் என்றும், இன்னும் அவள் வேலையில் இருக்கிறாள், அங்கே சிறந்த விற்பனையாளராக இருக்கிறாள் என்று நம்புகிறேன். தேவன் தன் வருமானத்தைப் பற்றி கவலைப்படவில்லை என்று அவள் நினைத்ததால் அவள் சில ஆசீர்வாதங்களை இழந்து கொண்டிருந்தாள் என்று நான் நம்புகிறேன். ஆனால் அவர் நமக்கு கவலை அளிக்கும் அனைத்தையும் பற்றி கவலைப்படுகிறார். மேலும் நாம் ஜெபிக்க பயப்படக்கூடாது, வாழ்க்கையின் எந்தப் பகுதியிலும் நமக்கு உதவுமாறு அவரிடம் கேட்க வேண்டும்.

இயேசு சீஷர்களிடம் ஜெபிக்கும்படி கூறினார்: “எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.” (மத். 6:11). அவர்கள் தங்களுக்கு வேண்டியவற்றிக்காக ஜெபிக்க வேண்டும். செல்வம், பேராசை, மனநிறைவு, சேமிப்பு, உக்கிராணத்துவம் மற்றும் கொடுப்பது போன்றவற்றைப் பற்றி பற்றி வேதம் நிறைய கூறுகிறது. நாம் முதலில் தேவனைத் தேடினால், நாம் விரும்பும் நமக்கு தேவையான மற்றனைத்தையும் அவர் சேர்ப்பார் (மத். 6:33) என்பதை நினைவில் கொள்வதைப் பற்றியும் பேசுகிறது.

> கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.
>
> சங்கீதம் 37:4

வேதத்தில் ஜெபத்தைப் பற்றிய ஐந்நூறு வசனங்களும், விசுவாசத்தைப் பற்றி ஐநூறுக்கும் குறைவான வசனங்களும் உள்ளன. ஆனால் நிதி சம்பந்தமாக இரண்டாயிரத்திற்கும் அதிகமானவை இருக்கின்றன. பணத்தைப் பற்றி தேவன் நமக்கு நிறைய அறிவுறுத்துகிறார். ஏனென்றால் மக்கள் தங்கள் பணத்தை கையாளும் விதம் அவர்களைப் பற்றி நிறைய கூறுகிறது

உதாரணமாக, சிறிய விஷயங்களில் நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், பலவற்றின் மீது நமக்கு அதிகாரம் அளிக்கப்படும் என்று இயேசு

கூறினார் (லூக்கா 16:10). மக்கள் தங்கள் வாழ்க்கையில் சிறிய விஷயங்களை எவ்வாறு கையாளுகிறார்கள் என்பதை நாம் கவனித்தால், அவர்கள் பலவற்றை எவ்வாறு கையாள்வார்கள் என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். சிலர் தங்களிடம் நிறைய பணம் இருந்தால், தேவனுடைய வேலைக்கு ஊழியத்திற்கு அதிகம் கொடுப்பார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால், நம்மிடம் இருப்பதில் அது எவ்வளவு குறைவாக இருந்தாலும், ஒரு பகுதியைக் கொடுக்காவிட்டால், , அதிகமாக இருந்தாலும் கொடுக்க மாட்டோம் என்பதே உண்மை.

தேவனுடைய வார்த்தை, நமக்கு வேண்டியவற்றைப் பற்றி கவலைப்படமல் தேவனை நம்புங்கள் என்று கூறுகிறது. அவர் உனக்குத் தேவையானதைத் தந்து, நீ கை வைப்பதையெல்லாம் ஆசீர்வதித்து, உனக்கு வெற்றியும், செழிப்பும் தருவார் (சங். 1:3; 118:25).

நிதியைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று நம்மை ஊக்குவிக்கும் வேத பகுதிகளில் இது எனக்கு மிகவும் பிடித்த ஒன்று:

> நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.
>
> எபிரெயர் 13:5

பணத்தைப் பற்றிய எனது பயம்

நான் வளரும்போது சொந்தமாக வேலை செய்து சம்பாதிக்க வேண்டியிருந்தது. என் பெற்றோர் எனக்கு உணவளித்தனர், உடுத்தினார்கள், தங்கவைத்தார்கள், அவ்வளவு தான். மற்ற எதையும் நானாகத் தான் செய்யது கொள்ள வேண்டும். ஒரு வயது முதிர்ந்தவளாக இருந்தாலும், எனக்குத் தேவை ஏற்பட்டால் எனக்குப் பண உதவி செய்பவர்கள் யாரும் இருப்பதாக நான் உணர்ந்ததில்லை. நான், போதுமானதாக இல்லை மற்றும் என் வேலையை இழந்தால் எனக்கு என்ன நடக்கும் என்று நான் கவலைப்பட்டேன். நான் எப்பொழுதும் அவசர தேவைகளுக்காக கொஞ்சம் பணத்தை சேமித்து வைக்க முயற்சித்தேன். வாழ்வதற்கு இது ஒரு புத்திசாலித்தனமான வழி என்றாலும், நான் அதைப் பற்றி மிகவும் தீவிரமானவனாக இருந்தேன். மேலும் எனது சேமிப்பில் நிறைய பயம் இருந்தது. நான் ஒதுக்கியதில் எதையாவது செலவழிக்க வேண்டியிருந்தால் நான் பயப்படுவேன்.

நான் எப்பொழுதும் எல்லாவற்றையும் செய்வதற்கு மிகவும் சிக்கனமான வழியைத் தேடினேன், மேலும் எனக்காக அல்லது ஒரு முழு தேவையில்லாத எதற்கும் பணத்தைச் செலவிடத் தயங்கினேன். மறுபுறம், என் கணவருக்கு பணத்தைப் பற்றி எந்த பயமும் இல்லை. அவர் மிகவும் ஏழ்மையானவராக வளர்ந்தார், ஆனால் விசுவாசத்தால் நிறைந்த ஒரு தாய் இருந்தார். கர்த்தர் அவர்களுக்குத் திரும்பத் திரும்ப வழங்குவதை டேவ் கண்டார். எனவே, அவர் நமக்கு வழங்க மாட்டார் என்ற பயம் அவருக்கு இல்லை.

டேவ் ஒருமுறை என்னிடம், எனது நம்பிக்கை எங்களின் சிறிய சேமிப்பில் இருப்பதாகவும், நான் அதைத் தாண்டி வரும் வரை, தேவன் நம்மை ஆசீர்வதிக்க மாட்டார் என்றும் கூறினார். அவர் சொன்னது சரிதான். நான் என் வங்கிக் கணக்கில் நம்பிக்கை வைத்தேன், தேவன் மீது அல்ல. எங்களிடம் பணம் இருந்தபோதிலும், டேவ் நியாயமான தேவைக்காகவும் சில சமயங்களில் அவர் வெறுமனே விரும்பியவற்றிற்காகவும் செலவிட பயப்படவில்லை. நிதி தொடர்பான அவரது சுதந்திரத்தைப் பார்த்து நான் பொறாமைப்பட்டேன், ஆனால் நான் உண்மையிலேயே “பயந்துக் கொண்டே அதைச் செய்ய” தொடங்கும் வரை, நான் அடிமைத்தனத்தில் இருந்தேன். நான் என்ன சொல்கிறேன் என்றால், பணத்தைச் செலவழிக்கவும், அதைச் சேமிக்கவும் நான் கற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் எங்கள் வருமானத்தில் தசமபாகத்தை கொடுக்க வேண்டுமென்று நம்பினோம், நாங்கள் திருமணம் செய்த நாளிலிருந்து அதைச் செய்தோம், ஆனாலும் நாங்கள் இன்னும் நிதி ரீதியாக சிரமப்பட்டோம், பணத்தைப் பற்றிய எனது பயத்தை எதிர்கொள்ளும் வரை போதுமானதாக இருக்கவில்லை.

நீங்கள் பணத்தை செலவழிக்க பயப்படவில்லை என்பதை நிரூபிப்பதற்காக நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டும் என்று நான் நிச்சயமாக பரிந்துரைக்கவில்லை, ஆனால் நாம் அதைப் பயன்படுத்தவும் அனுபவிக்கவும் மறுத்தால் தேவன் நமக்கு எதையும் கொடுப்பதில் அர்த்தமில்லை என்று நான் பரிந்துரைக்கிறேன்.

டேவ் நல்ல நிதிக்கு ஒரு சூத்திரத்தைக் கொண்டுள்ளார். கொஞ்சம் சேமிக்கவும், கொஞ்சம் செலவழிக்கவும், கொஞ்சம் உங்கள் எல்லைக்குள் கொடுங்கள் என்றும் அவர் எப்போதும் கூறுகிறார் எ அப்போது தேவன் உங்கள் எல்லைகளை அதிகரிப்பார். நான் அவருடன் உடன்படுகிறேன், அந்த உக்தியை உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றுவதற்கு நீங்கள் ஜெபிக்குமாறு பரிந்துரைக்கிறேன்.

திருமணமாகி இரண்டு குழந்தைகளுடன் இருக்கும் ஒரு இளைஞனை

எனக்குத் தெரியும், பணத்திற்காக நான் எப்படி நடந்துகொண்டேனோ அதைப் போலவே அவனும் நடந்துகொள்கிறான். அவரது தாயார் தனது குடிகார முன்னாள் கணவரிடமிருந்து எந்த உதவியும் பெறாத ஒற்றைத் தாய். நிதி நெருக்கடியில் இருப்பது அந்த இளைஞனுக்கும் அவனுடைய தாயாருக்கும் வழக்கமாக இருந்தது. அவரது அம்மா மிகவும் அன்பான மனிதரை மறுமணம் செய்து கொண்டார், ஆனால் எனது நண்பரோ தனது குழந்தைப் பருவத்தில் அவர் அனுபவித்த நிதி பற்றாக்குறையை ஒருபோதும் சரியாக சமாளிக்கவில்லை. எனது போதனையை கேட்டதிதிலிருந்து, அவர் கொஞ்சம் மாற்றியுள்ளார், ஆனால் அவர் இன்னும் பணத்தை செலவழிப்பதில் சிரமப்படுவதை ஒப்புக்கொள்கிறார். அவர் அதை செலவழிப்பதை விட சேமிப்பார், அதனால் அவர் தன்னிடம் உள்ளதை மிகக் குறைவாகவே அனுபவிக்கிறார், அது நமக்கான தேவனுடைய சித்தம் அல்ல.

கர்த்தர் என் மேய்ப்பர், நான் தாழ்ச்சியடையேன்!

இருபத்தி மூன்றாம் சங்கீதம் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். சிலர் அதை மனப்பாடம் செய்து, “ஆண்டவர் என் மேய்ப்பர்; நான் குறைவு பட மாட்டேன் என்று சொல்லுவார்கள்.” (சங். 23:1) தேவை என்ற சொல் பற்றாக்குறைக்கு ஒத்ததாகும். பற்றாக்குறையின் பயம் (உங்களுக்குத் தேவையானது இல்லை என்ற பயம்) மக்கள் சமாளிக்கும் மிகப்பெரிய அல்லது அடிக்கடி ஏற்படும் பயங்களில் ஒன்றாகும். பாதுகாப்பிற்கான உள்ளார்ந்த தேவை எங்களிடம் உள்ளது, மேலும் நாம் விரும்பும் நபர்களைப் போலவே நாமும் கவனித்துக் கொள்ளப்படுவோம் என்பதை உறுதிப்படுத்த அதிக நேரம் செலவிடுகிறோம்.

தேவனின் பிள்ளைகளாகிய நாம், அவர் நம்மைக் கவனித்துக்கொள்வார் என்று நம்பும் பெரிய பாக்கியம் நமக்கு இருக்கிறது. நாம் கவலைப்படத் தேவையில்லை என்று அவர் நம்மிடம் மீண்டும் மீண்டும் கூறுகிறார், ஆனால் கவலைப்படாமல் இருப்பது பெரும்பாலும் சவாலானது என்பதை நான் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து உணர்கிறேன். நாம் வேலை செய்யத் தேவையில்லை என்று தேவன் சொல்லவில்லை; நாம் கவலைப்படத் தேவையில்லை என்று சொல்கிறார்.

பற்றாக்குறையின் பயத்திலிருந்து விடுபட நாம் பயத்துடன் செய்ய வேண்டிய விஷயங்கள் உள்ளன. நீங்கள் பயப்பட வேண்டியிருந்தாலும், கொடுங்கள்; நீங்கள் பயப்பட வேண்டியிருந்தாலும், நீங்கள் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுவதைப் போலவே செலவிடுங்கள்; உங்கள் கவலைகளை எல்லாம் பிரார்த்தனைகளாக மாற்றுங்கள். காரி டென் பூம்

> உங்களிடம் ஏற்கனவே உள்ளதைப் பற்றி நீங்கள் குறை கூறும் போது தேவன் ஏன் உங்களுக்கு இன்னும் அதிகமாக கொடுக்க வேண்டும்?

கூறினார், “கவலை நாளை குறித்த அதன் துக்கத்தை காலி செய்யாது. அது இன்றைய நாளின் வலிமையைக் காலி செய்கிறது.”

நம்மிடம் குறைவாக இருப்பது பணம் மட்டும் அல்ல. நமக்கு ஞானம், வலிமை, தயவு, படைப்பாற்றல் மற்றும் நூற்றுக்கணக்கான விஷயங்கள் தேவை. சில சமயங்களில் நம்மிடம் அந்த வளங்கள் இல்லை என்று உணரலாம், பணம் மட்டுமல்ல, நமக்குத் தேவையான அனைத்தையும் தேவன் வழங்குவார் என்று நம்பலாம். தேவன் உங்களுக்கு இன்னும் அதிகமாகக் கொடுப்பதற்காகக் காத்திருக்கும்போது உங்களிடம் உள்ளதற்கு நன்றியுடன் இருக்குமாறு நான் உங்களைக் கடுமையாக வலியுறுத்துகிறேன். எங்களுடைய நிதி எவ்வளவு இறுக்கமாக இருக்கிறது என்று ஜெபங்களில் நான் குறைகூறிய ஒரு சமயம் எனக்கு நினைவிருக்கிறது, “உங்களிடம் ஏற்கனவே உள்ளதைப் பற்றி நீங்கள் புகார் செய்யும்போது நான் ஏன் இன்னும் அதிகமாக கொடுக்க வேண்டும்?” என்று என் இதயத்தில் வெறுமனே பேசினார்,

உங்களுக்கு வேண்டியதை அல்லது தேவைப்படுவதை தேவனிடம் கேட்க பயப்படாதீர்கள், ஆனால் உங்களிடம் உள்ளதற்கு நன்றி சொல்ல மறக்காதீர்கள். நம்மில் பெரும்பாலோர் நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதைப் பற்றி அடிக்கடி சிந்திக்க வேண்டும், ஏனென்றால் நம்மிடம் இருப்பதைக் காணாமல் நம்மிடம் இல்லாதவற்றில் கவனம் செலுத்தத் தொடங்குவது மிகவும் எளிது.

தாராளமான தேவன்

பெர்லி கெட் பை (அதாவது தேவைகள் சந்திக்கப்படாமல்) தெருவில் நாம் வாழ்வது தேவனின் விருப்பம் என்று நான் நம்பவில்லை. பழைய ஏற்பாட்டில் உள்ள அவரது பெயர்களில் ஒன்று எல் ஷடாய், அதாவது “தேவைக்கும் அதிகமான தேவன்”. “குறைபாடுள்ள தேசம், சமநிலம், ஏராளமான நிலம்” என்று ஒருவர் போதிப்பதை ஒருமுறை நான் கேட்டேன், அது மிகவும் அறிவூட்டுவதாக இருந்தது என்று நினைத்தேன். நீங்கள் நீண்ட காலமாக இல்லாத அல்லது குறைவுள்ள தேசத்தில் வாழ்ந்தால், நீங்கள் அதை விட்டு நேராக ஏராளமான நிலத்திற்குச் செல்வதில்லை; நீங்கள் முதலில் சம தேசத்தைக் கடந்து செல்ல வேண்டும். தேவன் உங்கள்

தேவைகளை வழங்கும் இடம் அதுதான், ஆனால் அதில் நீங்கள் விரும்பும் அளவுக்கு அதிகமாக இல்லை. இந்த நிலம் ஒரு சோதனை நிலம், சரியான நேரத்தில் தேவன் உங்களுக்கு ஏராளமாகக் கொடுப்பதற்கு நம்பிக்கையுடன் உண்மையாக இருப்பதற்கும் கொடுப்பதற்குமான ஒரு முக்கியமான இடம்.

“சரியான நேரத்தில்” மிகவும் முக்கியமானது. அதிர்ஷ்டவசமாக, நம் வாழ்வில் அவருக்கு முதலிடம் கொடுக்கதக்கதாக, அதிகமாக அல்ல நம்மால் கையாளக்கூடிய அளவு மட்டுமே நமக்கு கொடுக்கும் அளவுக்கு தேவன் நம்மை அதிகமாக நேசிக்கிறார், நான் வசதிக்காக ஜெபிக்கும்போது, அவர் என்னை ஆசீர்வதிக்கும்படி தேவனிடம் கேட்கிறேன், ஆனால் அவரை முதலிடத்தில் வைக்கும் அளவுக்கும், என்னால் கையாளக்கூடியதை விட அதிகமாக எனக்குக் கொடுக்க வேண்டாமென்றும் கூறுகிறேன். பொருட்கள் இன்னும் பல காரியங்கள் தேவனிடமிருந்து நம்மை இழுக்கும் திறன் வாய்ந்ததாக இருக்கிறது. நாம் நடக்க விரும்பும் கடைசி காரியம் அதுவாகத் தான் இருக்க வேண்டும்.

தாராளமாக இருங்கள்

தாராளமாக இருப்பது என்பது மிகவும் அதிகமாகவும், அளவுக்கு அதிகமாகவும் இருப்பதாகும். ஒரு தாராள மனப்பான்மையுள்ள நபர் விருப்பத்துடன் பகிர்ந்து கொள்கிறார். நீங்கள் செய்ய வேண்டியதை விட அதிகமாகச் செய்வது அல்லது மற்றவர்களுக்கு வழங்குவதற்கும் ஆசீர்வதிப்பதற்கும் வேண்டிய வாய்ப்புகளை உண்மையில் கவனிக்கும் நபராக இருப்பது என்று நான் நினைக்கிறேன். நீங்கள் யாரை ஆசீர்வதிக்க முடியும் என்பதைக் காட்டும்படி தேவனிடம் கேட்குமாறு நான் பரிந்துரைக்கிறேன். இன்று காலை நான் யாரை ஊக்குவிக்க முடியும் என்று தேவனிடம் கேட்டேன், உடனே ஒரு பெண்ணின் பெயர் என் இருதயத்தில் தோன்றியது, அதனால் நான் அவளை அழைத்தேன். நாங்கள் சிறிது நேரம் பேசினோம், நான் அவளை அழைக்க நேரம் எடுத்தது அவளுக்கு மிகவும் ஊக்கமளிப்பதாக அவள் சொன்னாள். இப்போதுதான் அவளிடமிருந்து எனக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது, அதில் “நீ தான் சிறந்தவள். உங்கள் தொலைபேசி அழைப்பு இன்று எனக்கு உலகத்தை போன்று பெரியது” என்று. எனக்கு அதற்கு கொஞ்சம் நேரம் தேவைப்பட்டது, ஆனால் அது அவளுக்கு ஒரு பெரிய விஷயமாக இருந்தது.

தன்னுடைய உலகத்தின் மையத்தில் தன்னை வைத்திருப்பவனே இவ்வுலகில் மிகவும் துயரமானவன்.

அனைத்து பெருந்தன்மையும் பணத்துடன் தொடர்புடையது அல்ல.

கேட்பது, அணுகுவது அல்லது நடைமுறை வழியில் ஒருவருக்கு உதவுவதன் மூலம் அதை வெளிப்படுத்தலாம். நாம் எவ்வளவு தாராளமாக இருக்கிறோமோ, அவ்வளவு சுயநலமற்றவர்களாக இருப்போம், மேலும் இயேசு பூமிக்கு வந்ததற்கு ஒரு காரணம், நாம் இனி நமக்கும், நமக்காகவும் வாழக் கூடாது என்பதற்காகத்தான். (2 கொரி. 5:15).

தன்னுடைய உலகத்தின் மையத்தில் தன்னை வைத்திருப்பவனே இவ்வுலகில் மிகவும் துயரமானவன்.

அப்படிப்பட்ட மக்கள் தங்களின் தனிப்பட்ட வசதிகள், தேவைகள் மற்றும் ஆசைகளை மட்டுமே நினைக்கிறார்கள். அவர்கள் விரும்புவதைப் பெறுவதற்காக அவர்கள் பெரும்பாலும் மற்றவர்களை தவறாக நடத்துகிறார்கள், மேலும் அந்த வகையான நடத்தை தேவனுக்குப் பிடிக்காது. மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் நாம் நல்ல விதையை விதைக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். பின்னர் நாம் விதைத்த நல்ல விதையிலிருந்து நம் வாழ்வில் ஒரு அறுவடையை அவர் கொண்டுவருவார். உங்களை எப்படி கவனித்துக்கொள்வது என்று கவலைப்படுவதை நிறுத்துங்கள், தேவன் அதை செய்யட்டும். உங்களது பங்கைச் செய்யுங்கள், தேவன் மட்டுமே செய்யக்கூடியதை அவர் செய்வார் என்று நம்புங்கள்.

கடனில் இருந்து விலகி இருங்கள்

நிதி அழுத்தத்தைத் தவிர்ப்பதற்கான சிறந்த வழிகளில் ஒன்று கடனில் இருந்து விலகி இருப்பது. அல்லது, நீங்கள் ஏற்கனவே கடனில் இருந்தால், அதிலிருந்து மீள்வதற்கான வேலையை இப்போதே தொடங்குங்கள். கடனில் இருப்பது என்பது உங்கள் சம்பள காசோலையை நீங்கள் பெறுவதற்கு முன்பே செலவழித்துவிட்டீர்கள் என்பதாகும். நாளைய செழிப்பை இன்றே செலவழித்தால், நாளை வரும்போது, உங்களுக்குக் குறை இருக்கும். நாம் பொறுமையாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் பொருட்களை வாங்குவதற்கு பணத்தை சேமிக்கும் வரை காத்திருக்க வேண்டும்.

வீடு அல்லது வாகனம் போன்ற சில வாங்குதல்கள் உள்ளன, அதற்காக நீங்கள் கடன் வாங்கி பல வருடங்கள் பணம் செலுத்த வேண்டியிருக்கும், ஆனால் ஒவ்வொரு மாதமும் சிறிதளவு சேமித்தால் ஒரு ஆட்டோமொபைலையும் பணம் கொடுத்து வாங்கலாம். அடுத்து நீங்கள் என்ன வாங்க வேண்டுமோ அதற்காக ஒவ்வொரு மாதமும்

கொஞ்சம் செமியுங்கள். நீங்கள் அடமானத் தொகையை கட்டிக் கொண்டிருப்பீர்களென்றால், ஒவ்வொரு மாதமும் கடனின் அசலுக்குச் சிறிது கூடுதலாகச் செலுத்துங்கள், ஏனெனில் அது நீண்ட கால வட்டியில் நிறைய பணத்தை மிச்சப்படுத்தும்.

அன்பைத் தவிர வேறு எதற்கும் கடன்பட்டிருக்க வேண்டாம் என்று வேதாகமம் நம்மை ஊக்குவிக்கிறது (ரோமர் 13:8). "ஐசுவரியவான் தரித்திரனை ஆளுகிறான்; கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை." (நீதி. 22:7) என்றும் கூறுகிறது.

நீங்கள் கடனில் இருந்து வெளியேற முடியாது அல்லது உங்களுக்கு மிகவும் தாமதமாகிவிட்டது என்று பிசாசு உங்களை நம்ப வைக்க வேண்டாம். இப்படியாகத் தான் நீங்கள் நினைக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். நீங்கள் முயற்சி செய்வதற்கு முன்பே நீங்கள் கைவிட்டுவிட வேண்டும் என்று அவன் விரும்புகிறான். உங்களால் முடிந்ததை செய்தால், தேவன் உங்களுக்கு உதவுவார். ஆனால் நீங்கள் தொடர்ந்து பணத்தை வீணாக்கும்போது அல்லது பொருட்களை வாங்கும்போது அவர் உங்களுக்காக எல்லாவற்றையும் செய்ய மாட்டார்.

நீங்கள் வாங்க காத்திருக்க வேண்டும். கடனில் சிக்குவதற்கு உங்களுக்கு நீண்ட நேரம் பிடித்திருந்தால், ஒரே இரவில் அதிலிருந்து வெளியேற எதிர்பார்க்க வேண்டாம். நீங்கள் ஒருவேளை, கூடுதல் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும், இப்போது நீங்கள் உண்மையிலேயே வாங்க விரும்பும் பொருட்களை வாங்க நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருக்கும், ஆனால் இறுதியில் நீங்கள் ஜாக்கிரதையாய் இருந்தது பலனளிக்கும். நீங்கள் கடனில் இருந்து விடுபடுவீர்கள், உங்கள் வாழ்க்கையில் பற்றாக்குறையைப் பற்றி கவலைப்படாமல் இருப்பீர்கள். கடன் அழுத்தத்தையும் பதட்டத்தையும் உருவாக்குகிறது, மேலும் இவை இரண்டும் உங்களுக்கு வேண்டாம் அல்லது தேவையில்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன், எனவே இன்றே உங்கள் கடனைக் குறைக்கத் தொடங்குங்கள். நீங்கள் ஒரு நேரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மட்டுமே செய்ய முடியும் என்றாலும், நீங்கள் அதைக் கடைப்பிடித்தால், கைவிடாமல் இருந்தால், நீங்கள் பொருளாதார ரீதியாக சுதந்திரமாக இருப்பீர்கள்.

உங்கள் தேர்வுகள் உங்கள் நம்பிக்கையை பிரதிபலிக்கட்டும், உங்கள் பயத்தை அல்ல.

- நெல்சன் மண்டேலா

“பயந்துக் கொண்டே செய்யுங்கள்” என்பதை நீங்களே செய்ய வேண்டி இருக்கும் வரை நன்றாக தான் இருக்கும்

நான் முற்றிலும் நேசித்த ஒரு ஊழியத்தில் பதினான்கு வருடங்கள் பணியாற்றிய பிறகு, தேவன் என்னை ஒரு புதிய திசையில் வழிநடத்த ஆரம்பித்ததை உணர்ந்தேன். நான் என் வேலையை நேசித்தேன் மற்றும் நான் செய்துகொண்டிருந்த வேலையில் திருப்தி அடைந்தேன் என்று வலியுறுத்தி சொல்ல முடியாது.

காலம் கடந்து செல்லச் செல்ல, ஆரம்பத்திலிருந்த சிறிய உணர்வு முழுமையடைந்தது, நான் தேவனை பின்பற்ற வேண்டும் என்று எனக்குத் தெரிந்தது. வார்த்தைகளில் சொல்வது கடினம், ஆனால் தேவனை உள்ளுக்குள் பின்பற்ற வேண்டும் என்று நான் முடிவு செய்த அதே நாளில், வெளியில் என்னைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் பயம் என்னை முடக்கத் தொடங்கியது.

ஆனால் அவர் மேல் முழுமையாக சார்ந்திருப்பதை விட, நான் தொடர்ந்து பயத்தை சார்ந்திருக்க தொடங்கினேன். நான் அதைப் பற்றி பெருமை கொள்ளவில்லை என்றாலும், எனது முடிவு தேவனுடையதாக இல்லாதற்கான பல்வேறு காரணங்களைத் தேடும் பாதையில் இறங்கினேன். பின்வருபவற்றை நான் அவருக்கு நினைவூட்டினேன்: “நீர் என்னை இங்கு கொண்டு வந்தீர்!” “நான் ஊழியத்திற்காக உழைக்கிறேன் வேலை செய்கிறேன்!” “எனது ஆதரவு அமைப்பு இங்கே உள்ளது!”

என்னைப் பொறுத்தவரை, பயம் எப்போதும் கேள்விகளின் வடிவத்தில் தோன்றும், அதாவது, “நான் இதை உருவாக்கினால் என்ன செய்வது?” “நான் ஒரு பெரிய தவறு செய்தால் என்ன செய்வது?” “நான் என் குடும்பத்தை வேரோடு பிடுங்கி வேறு இடத்திற்கு செல்ல வேண்டுமென்று என்று என் மனைவி மற்றும் குழந்தைகளிடம் எப்படிச் சொல்வது?”

நான் எப்படி கேள்விகளை அமைதிப்படுத்தி என் பயத்தை மேற்கொண்டேன்? சரி, நான் பணிபுரிந்த நபர் ஜாய்ஸ் மேயராக. ஒவ்வொரு முறையும் நான் ஒரு மாநாட்டில் பணிபுரியும் போது, அவர் தனது போதனையின் போது, “உங்களுக்கு வசதியாக இருந்து குறைவானதை பெற்றுக்கொள்வதை விட, அவருடைய பரிபூரண

சித்தத்தில் உங்களை வைத்திருக்கும் சங்கடமான ஒன்றைச் செய்வதையே தேவன் விரும்புவார்."என்றார். சரி என்று, நான் நினைத்தேன். அது என் கவனத்தை ஈர்த்தது.

நாங்கள் மற்றொரு மாநாட்டை நடத்துவோம், அவர் கற்பிக்கத் தொடங்குவார், "கடினமான முடிவுகளை எடுப்பது கடினம், ஆனால் நீங்கள் தேவனிடம் நிறைய கேட்கிறீர்கள் என்றால், நீங்கள் வளரவும் கடினமான விஷயங்களைச் செய்யவும் தயாராக இருக்க வேண்டும். உங்களுக்கு உறுதியாக தெரியவில்லை என்றால், கண்டுபிடிக்க நீங்கள் உங்கள் இடத்திலிருந்து வெளியேற வேண்டும். நீங்கள் பயந்து கொண்டு செய்ய வேண்டும் என்றால், பயந்துக் கொண்டே செய்யுங்கள். உங்கள் உணர்வுகள் மாறுகின்றன, ஆனால் தேவனின் வாக்குறுதி உங்களை எப்போதும் ஆதரிக்கும்.

"ஆம், தேவனே, நான் உம்மைக் கேட்கிறேன்,"என்று நான் இறுதியாக சொன்னேன். இருப்பினும், இது எனது அச்சத்தைப் போக்க உதவியது என்றாலும், அது அவற்றை முழுமையாக நீக்கவில்லை. அதற்காக, நான் அவருடைய வார்த்தையில் இருக்க வேண்டும். மேலும் நம்பி செயலாற்ற வேண்டும். பதினான்கு வருடங்களாக "பயந்துக் கொண்டே செய்" என்ற செய்தியை நான் கேட்டிருந்தாலும், அதை நான் செய்ய வேண்டியது வேறு கதை. அது "ஓ, ஆமாம், ஜாய்ஸ்! என்பதாக இல்லை மக்கள் பயந்துக் கொண்டு செய்வதைக் கற்றுக்கொள்ள வேண்டும்! ஆனால் அதற்கு பதிலாக "பயந்து கொண்டு அதை எப்படி செய்வது என்பதை நான் கற்றுக்கொள்ள வேண்டும்." பின்னோக்கிப் பார்த்தால், இத்தனை வருடங்கள் சிறந்த போதனையைக் கேட்டிருந்தும், நான் செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரிந்த விஷயத்தை செய்யாமலிருக்க ஒரு வழியைக் கண்டுபிடித்திருந்தால், அது எனக்கு எத்தனை இழப்பாகயிருந்திருக்கும். பயந்துக் கொண்டு அதைச் செய்வது ஒரு விருப்பம் அல்ல; அது ஒரே தேர்வாக இருந்தது. அதனால் நான் செய்தேன்!

- மேட்

அத்தியாயம் 19

நன்மையான விஷயங்கள் முன்னால் உள்ளன என்று நீங்கள் நம்பலாம்

எதிர்கால பயத்திலிருந்து விடுதலை

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே."

எரேமியா 29:11

நம் எதிர்காலத்தில் நமக்காக என்னவெல்லாம் காத்திருக்கிறது என்பதை நாம் அனைவருமே அறிந்துக்கொள்ள விரும்புகிறோம். நமது தொழில் என்னவாக இருக்கும் என்பதைப் பற்றி நமக்கு ஒரு உணர்வு இருக்கலாம், ஆனால் எதிர்காலத்தைப் பொறுத்தவரை, தேவன் பல விவரங்களை விட்டுவிட்டு, அவருடைய திட்டம் நன்மைக்கானது, தீமைக்கானது அல்ல என்று மட்டும் நமக்குச் சொல்கிறார். நம்பிக்கை நிரம்பிய எதிர்காலத்தை அவர் நமக்காக வைத்திருக்கிறார்.

பழமையான மற்றும் வலுவான பயம் தெரியாத காரியங்களைப் பற்றின பயம்.

எதிர்காலத்தைப் பற்றிய பயம் என்பது மக்களுக்கு அடிக்கடி ஏற்படும் பயங்களில் ஒன்றாகும். இது தெரியாத காரியங்களைப் பற்றிய பயத்தை அடிப்படையாகக் கொண்டது. நாம் நிச்சயமாகவே காரியங்கள் நடைபெறும்

முன்பே நடக்கும் அனைத்தையும் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். பழமையான மற்றும் வலுவான பயம், தெரியாத காரியங்களைப் பற்றிய பயம். தேவையற்ற மாற்றங்களை நாம் விரும்புவதில்லை. நம் வாழ்க்கைக்கு எல்லா விவரங்களையும் முன்கூட்டியே அங்கீகரிக்கும் வாய்ப்பைக் கொண்ட ஒரு நல்ல திட்டத்தை நாம் விரும்புகிறோம். ஆனால் அதை நாம் ஒருபோதும் பெற்றுக்கொள்ள மாட்டோம். இதுவரை யாரும் பெற்றுக் கொள்ளாத மற்றும் யாரும் பெற முடியாத ஒன்றை விரும்புவது நேரத்தையும் உணர்ச்சியையும் வீணடிப்பதாகும். “உங்கள் எதிர்காலம் நன்றாக இருக்கும். என்னை நம்பு!” என்று தேவன் வெறுமனே கூறுகிறார்,

தேவனை நம்புவது வேதத்தின் முதன்மைக் கருப்பொருள்களில் ஒன்றாகும். நம்பிக்கை, விசுவாசம், என்ற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் காணப்படுகின்றன. தேவனிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் வழிகள் இவைகள். மேலும் அவைகள் மிகவும் கடினமான சூழ்நிலைகளில் கூட அசைக்கப்படாத தேவனுடன் உறுதியான உறவை வளர்க்க உதவுகின்றன. அவை கவலையை நீக்குகின்றன, நிச்சயமாக, எதிர்காலத்தைப் பற்றிய கவலையும் இதில் அடங்கும். எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை அனுபவிக்க நம்பிக்கை நம்மை அனுமதிக்கிறது. உண்மையில், தேவனை நம்புவதுதான் வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிக்கவும் அனுமதிக்கிறது. அது இல்லாமல் நம் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்காது.

இப்போதிருந்து இன்னும் ஒரு வருடத்தில், அதை விடுங்கள், அடுத்த ஐந்து நிமிடங்களில் என்ன நடக்கும் என்பது கூட நமக்குத் தெரியாது. ஒவ்வொரு நாளாக நாம் தேவனை நம்பும்படி அவர் நம்மை ஊக்குவிக்கிறார். தேவனை நம்புவது பற்றி பேசுவது எளிது, ஆனால் அவ்வாறு செய்வது பெரும்பாலும் கடினமாக இருக்கிறது.

சிலருக்கு சிறந்த பெற்றோர்கள் இருந்தனர், அவர்கள் எப்போதும் அவர்களைப் பாதுகாத்து அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். ஆனால் நம்மில் பலருக்கு குழந்தை பருவத்தில் நம்பக்கூடிய அந்த அடித்தளம் இருக்கவில்லை. நம் வாழ்வின் பெரும்பகுதியில் நம்மை நாமே கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. சிறந்த பெற்றோரைப் பெற்றவர்கள் நாளடைவில் தங்களைக் கவனித்துக் கொள்ளக் கற்றுக் கொள்ள வேண்டும், மேலும் நாம் சார்ந்திருக்கும் ஒன்றை விட்டுவிடுவது அவ்வளவு எளிதல்ல. தேவன் மீது நம் பாரத்தை செலுத்தக் கற்றுக்கொள்வது தான், நாம் செய்யக் கூடிய மிகவும் கடினமான காரியங்களில் ஒன்றாகும், ஆனால் அது அவர் நமக்காக உத்தேசித்துள்ள நல்ல வாழ்க்கைக்கான வாசல். நம் கவனத்தை செலுத்தும் திறன் இல்லாமல், நாம் எப்போதும் ஏதாவது ஒன்றைப் பற்றி

கவலைப்படுகிறோம், மேலும் காரியங்கள் நமக்கு எப்படியெல்லாம் இருக்கும் என்று நாம் கவலைப்படுகிறோம்.

தேவனுடன் ஒரு உறவில் இணைந்த பிறகு, நாம் அவரை நம்பவும், எல்லாவற்றுக்கும் அவரைச் சார்ந்து இருக்கவும் அவர் விரும்புகிறார் என்பதை அறிய ஆரம்பிக்கிறோம். இது தேவன் நமக்காக எல்லாவற்றையும் செய்யும் போது நாம் எதுவும் செய்யாமல் சும்மா இருப்பது அல்ல. ஆனால் நாம் நம்மை அல்லது வேறு யாரையும் நம்புவதை விட அவரை அதிகமாக நம்புகிறோம் என்று அர்த்தம். பாதுகாப்புக்காக, ஏற்பாட்டுக்காக, பலத்திற்காக மற்றும் ஞானத்திற்காக-நிச்சயமாக எதிர்காலத்திற்காக நம் இறைவனை நம்பும் பாக்கியம் நமக்கு இருக்கிறது. நீங்கள் இளைப்பாறலாம், ஏனென்றால் உங்கள் எதிர்காலம் எதுவாக இருந்தாலும், தேவன் அதைப் பற்றி அனைத்தையும் அறிந்திருக்கிறார், மேலும் அவர் உங்களுக்கு முன் சென்று உங்கள் ஒவ்வொரு அடியையும் திட்டமிடுவார்.

> கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.
>
> உபாகமம் 31:8

நீங்கள் உங்கள் குழந்தைகளை மலைகளில் நடைபயணத்திற்கு அழைத்துச் செல்லும்போது, பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய மிகுந்த எச்சரிக்கை தேவைப்படும் பிரதேசத்தில் நீங்கள் இருந்தால், பாதை பாதுகாப்பானதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள உங்கள் பிள்ளைகளுக்கு முன்னால் செல்வீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகள், அவர் நமக்கும் அப்படியே செய்கிறார்.

தெரியாத காரியங்களைப் பற்றிய பயம்

“நான் உங்களுடன் ஏதாவது பேச வேண்டும், அதனால் நான் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன் அல்லது அடுத்த வாரம் தொலைபேசி சந்திப்பை அமைக்க விரும்புகிறேன்” என்று யாராவது சொன்னால் நீங்கள் எப்படி நடந்துகொள்வீர்கள்? ஒரு நபர் நல்ல விஷயத்தைப் பற்றி பேச விரும்புவார் என்று எதிர்பார்த்து, உற்சாகத்துடன் உரையாடலை எதிர்நோக்குகிறீர்களா? அல்லது அவர்கள் உங்கள் மீது வருத்தமாக இருப்பதாக நீங்கள் கவலைப்படுவீர்களா?

வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்கு உங்களைச் சந்திக்க விரும்புவதாக உங்கள் முதலாளி திங்கள்கிழமை உங்களுக்கு ஒரு செய்தியை அனுப்பினால் என்ன செய்வீர்கள்? உங்கள் எண்ணங்கள் நம்பிக்கையால் அல்லது பயத்தால் நிரப்பப்படுமா? உங்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள் என்று பயப்படுவீர்களா? அல்லது ஒருவேளை நான் பதவி உயர்வு பெறப் போகிறேன் அல்லது ஊதிய உயர்வு பெறப் போகிறேன் என்று நீங்கள் நினைப்பீர்களா!

நாம் எதிர்மறையாக இருப்பதை நிராகரித்து நேர்மறையாக இருக்கத் தேர்ந்தெடுக்காத வரை, மனித இயல்பு பொதுவாக நம்மை எதிர்மறையை நோக்கித் தள்ளுகிறது. இதைப் பாருங்கள்: நீங்கள் எளிதில் காய்ச்சலால் பிடிக்கப்படலாம், ஆனால் நீங்கள் நல்ல ஆரோக்கியத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சாத்தான் எப்போதும் எதிர்மறை எண்ணங்களை நம் மீது வீசுகிறான், நாம் கவனமாக இல்லாவிட்டால் அவற்றைப் பிடித்துக் கொள்ளலாம், ஆனால் நேர்மறையான எண்ணங்களையும் நாம் தேர்ந்தெடுக்கலாம்.

> நாம் எதிர்மறையை நிராகரித்து நேர்மறையாக இருக்கத் தேர்ந்தெடுக்காத வரை மனித இயல்பு பொதுவாக நம்மை எதிர்மறையை நோக்கித் தள்ளுகிறது.

வெள்ளிக்கிழமை பிற்பகல் சந்திப்பின் விஷயத்தில், முதலாளி உண்மையில் என்ன சொல்வார் என்பதைக் கண்டறிய காத்திருக்கும் போது நீங்கள் தேர்ந்தெடுக்கும் எண்ணங்கள் உங்களுக்கு எந்த வகையான வாரம் இருக்கும் என்பதை தீர்மானிக்கும். சில குறிப்பிட்ட குணாதிசயங்கள் உள்ளவர்களுக்கு மற்றவர்களை விட இது எளிதானது. டேவ் பலரை விட பொறுமையாகவும் விஷயங்களைப் பற்றி எளிமையாகவும் இருக்கிறார் மேலும் அவர் எதை பற்றியும் கவலைப்படுவதில்லை. ஒருவர் தன்னிடம் எதைப் பற்றி பேச விரும்புகிறார் என்பதை அறிய ஒரு வாரம் காத்திருப்பது அவரைத் தொந்தரவு செய்யாது. பேசும் நேரம் வரும் வரை அதைப் பற்றி யோசிக்கவே மாட்டார். நானோ மாறாக, பரிசுத்த ஆவியின் உதவி மட்டும் இல்லையென்றால், அந்த நபர் என்ன சொல்லக்கூடும் என்று என் மனதில் யோசித்து, தர்கித்துக் கொண்டு பரிதாபமாக இருப்பேன்.

இயேசுவை அறிந்து கொள்வதற்கு முன், வியப்பு மற்றும் பகுத்தறிவு எனது ஒரே விருப்பமாக இருந்தது, ஆனால் அவர் என் வாழ்க்கையில் வந்து, அவர் மீது நம்பிக்கை என்ற மற்றொரு விருப்பத்தை வழங்கியபோது,

நான் அதை செய்ய கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். நான் இன்னும் கற்றுக்கொண்டிருக்கிறேன், ஆனால் நான் வெகுதூரம் வந்துவிட்டேன், மக்கள் தங்கள் எதிர்காலம் என்ன என்பதை அறிய மிகவும் தீவிரமாக விரும்புகிறார்கள், அதனால் அவர்கள் என்ன நடக்கும் என்று கணிக்க கூடிய உளவியலாளர்கள் என்று அழைக்கப்படுகிறாவர்களிடம் சென்று நிறைய பணம் செலவழிக்கிறார்கள். IBISWorld.com இன் படி, இந்த சேவைகளை வழங்கும் சுமார் தொண்ணூற்று நான்காயிரம் வணிகங்கள் உள்ளன, அவை ஆண்டுக்கு சுமார் இரண்டாயிரம் கோடிக்கும் அதிகமான நிதியை திரட்டுகின்றன.

மக்கள் தங்கள் எதிர்காலத்தைச் சொல்வதற்காக எனக்கு அத்தகைய பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்! இது அனைவருக்கும் பொதுவான ஒரே செய்தி: தேவனை நம்புங்கள், உங்கள் எதிர்காலம் நன்றாக இருக்கும். அது சில சமயங்களில் சவாலாக இருக்கலாம், ஆனால் தேவனுடன் வாழ்வதே இன்னும் சிறந்த வழி. நாம் தேவனுடன் இலவசமாகப் பேச இயலும்போது எதிர்காலத்தைக் கணிக்க முடியும் என்று கூறும் ஒருவருடன் பேசுவதற்கு மக்கள் இவ்வளவு பணம் செலவழிக்கத் தயாராக இருப்பது வருத்தமாக இருக்கிறது.

தேவன் எந்தவொரு ஊடகங்கள் அல்லது மந்திரவாதிகள் மற்றும் எந்த வகையான அதிர்ஷ்டம் சொல்லும் காரியங்களையோ, சொல்லுபவர்களையோ தேடக் கூடாது என்று சொல்லுகிறார். எதிர்காலத்தைப் பற்றி அறிய இந்த வழிகளில் நாம் திரும்பும்போது அவர் உண்மையில் புண்படுத்தப்படுகிறார், ஏனென்றால் அவரைத் தவிர வேறு எவருக்கும் எதிர்காலம் தெரியாது.

> அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்படவேண்டாம்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.
>
> லேவியராகமம் 19:31

> தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளின்

> நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார். உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய். நீ துரத்திவிடப்போகிற இந்த ஜாதிகள் நாள்பார்க்கிறவர்களுக்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் செவிகொடுக்கிறார்கள்; நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவுகொடார்.
>
> உபாகமம் 18:10-14

பல கிறிஸ்தவர்கள், தேவன் அதைத் தடைசெய்துள்ளார் என்பதை உணராமல், ஜோசியம் சொல்பவர்கள் அல்லது உளவியலாளர்களின் சேவைகளை நாடுகிறார்கள். ஒருமுறை நான் ஒரு பெண்ணுடன் பணிபுரிந்தேன், அவள் முடி வெட்டுவதற்கு ஒரு மாதத்தின் எந்த நேரம் சாதகமாக இருக்கும் என்று நட்சத்திரங்களைக் கலந்தாலோசிக்காமல் அவள் முடி வெட்டுவதற்கு கூட செல்ல மாட்டாள். ஜோதிட விளக்கப்படங்கள் மற்றும் ராசி அறிகுறிகளைப் பற்றி அவள் அடிக்கடி என்னுடன் பேசத் தொடங்கினாள், அது என் பகுத்தறிவுக்கு புதிராக இருந்தது. அந்த தருணத்தில், நான் ஒரு கிறிஸ்தவளாக இருந்தேன், ஆனால் நான் தேவனுடன் முழுமையாக அர்ப்பணிப்புடன் இல்லாததால், ஏதோ ஒன்று குறைவதாக உணர்ந்தேன். ஜோதிடம் போன்று என் வாழ்க்கையில் விஷத்தை உண்டாக்கும் ஏதாவது ஒன்றைக் கொண்டு அந்தப் பசியைப் போக்க முயற்சிக்க ஒரு சந்தர்ப்பத்திற்காக பிசாசு காத்திருந்தது. அதிர்ஷ்டவசமாக, அவள் என்னை நல்லதல்லாத ஒன்றுக்குள் இழுக்க அவளை பயன்படுத்த ஒரு வாய்ப்பு கிடைக்கும் முன், தேவன் என் வாழ்க்கையை தொட்டு அவருடன் ஒரு ஆழமான உறவுக்குள் என்னை கொண்டு வந்தார்.

இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களில் அடையாளங்கள் இருக்கும் என்று வேதம் கூறுகிறது (லூக்கா 21:25). நட்சத்திரங்கள் அழகாக இருக்கின்றன, தேவனின் படைப்பில் அவைகளுக்கு நிச்சயமாக ஒரு செயல்பாடு உண்டு. ஆனால் எதிர்காலத்தைப் பற்றிய ஆலோசனை அல்லது அறிவுக்காக நாம் அவற்றைப் பார்க்கக்கூடாது. நீங்கள் எந்த ராசியின் கீழ் பிறந்தீர்கள் என்று ஜோதிடத்தில் உள்ளவர்கள் உங்களிடம் கேட்கலாம், அந்தக் கேள்விக்கு எனது பதில் “சிலுவை”. நீங்கள் தேவனிடமிருந்து உங்கள் ஆலோசனையைப் பெறுகிறீர்கள் என்றும் அவர்களாலும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் ஒருவரிடம் சொல்ல இது ஒரு நல்ல தருணம்.

ஆம், எதிர்காலம் என்னவாக இருக்கும் என்பதைக் கண்டுபிடிக்க மக்கள் மிகவும் முயற்சி செய்வார்கள், ஆனால் தேவன் அதை நம்மிடமிருந்து மறைப்பது நல்லது. ஏனென்றால் நம் வாழ்நாள் முழுவதும் நடக்கப் போகும் அனைத்தையும் நாம் அறிந்திருந்தால், வாழ்க்கை சலிப்பாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். தேவன் ஒரு நல்ல மர்மத்தை விரும்புகிறார், நம்மில் பெரும்பாலோர் விரும்புவதாகவும் தெரிகிறது. நாம் அப்படி ஒன்றைத் தேட வேண்டியதில்லை, ஏனென்றால் நம் எதிர்காலம், எல்லாவற்றிலும் மிகப்பெரிய மர்மம். இது தினமும் வெளிப்படுகிறது மற்றும் பல ஆச்சரியங்களை வைத்திருக்கிறது. ஆம், ஏமாற்றமளிக்கும் வேதனையான சூழ்நிலைகள் இருக்கும், ஆனால் நாம் தேவனை நம்பினால், அவர் அவற்றை எடுத்து எல்லா நல்ல விஷயங்களுடனும் கலந்து, நம் வாழ்வில் ஒரு பெரிய, ஒருங்கிணைந்த ஆசீர்வாதத்திற்காக செயல்பட செய்வார்.

நான் என் தந்தையால் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டாலும், என் தாயால் கைவிடப்பட்டாலும், தேவன் என் காயப்பட்ட ஆத்துமாவை குணப்படுத்தினார், இப்போது என் கடந்த காலத்தை காயப்பட்டிருக்கும் மற்றவர்களுக்கு உதவ என்னை அனுமதிக்கிறார். என் முதல் கணவர் துரோகி, பொய்யர் மற்றும் திருடன், ஆனால் அவருக்குப் பிறகு டேவ் வந்தார், அவர் ஐம்பத்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக என் அற்புதமான கணவராக இருக்கிறார். நீங்கள் இப்போது காயப்பட்டுக் கொண்டிருந்தால் அல்லது அநீதிக்கு ஆளாகியிருந்தால், உங்கள் வேதனையைத் தொடர்ந்து தேவன் ஏதாவது நல்லதைக் கொண்டுவருவார் என்று எதிர்பார்க்கலாம்.

எதிர்காலத்தை அறியும் அழுத்தமான எண்ணங்களுக்குப் பின்னால் பயம் இருப்பதாக நான் நினைக்கிறேன். எல்லாவற்றையும் விட, நம்மில் பெரும்பாலோர் அதைப் பற்றி ஆர்வமாக உள்ளோம். ஏனென்றால் நாம் காயப்படுவதையோ அல்லது மகிழ்ச்சியற்றவர்களாய் இருப்பதையோ தவிர்க்க விரும்புகிறோம்.

நம் வலி கூக்குரலிடுகிறது, "இது எல்லாம் ரொம்ப அதிகம்! வாழ்க்கை தாங்க முடியாத அளவுக்கு பரிதாபமாக இருக்கிறது!" ஆனால் தேவன் இன்னும் சத்தமாக கூவுகிறார், "நான் இங்கே இருக்கிறேன், உங்கள் வாழ்க்கைக்கான நல்ல திட்டம் என்னிடம் உள்ளது, அதனால் விட்டுவிடாதீர்கள்!"

எங்கோ நம் துன்பங்களுக்கு மத்தியில் ஏதோ நல்லது நடக்கப் போகிறது என்று நம்பத் தொடங்க வேண்டும் என்பதை அனுபவத்தில் நான் அறிவேன். நாம் அவ்வாறு செய்யும்போது, தேவன் தமது அற்புதமான வல்லமையுடன் நுழைவதற்கான கதவைத் திறக்கிறார்.

தெரியாதிருப்பதில் வசதியாக இருங்கள்

என்ன நடக்கப் போகிறது, எப்போது நடக்கப் போகிறது என்று தெரியாமல் எப்படி சுகமாக இருக்க வேண்டும் என்று எனக்கு தேவன் நீண்ட காலம் கற்றுக் கொடுத்தார். அப்போஸ்தலன் பவுல் கூறினார்:

> இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்.
>
> 1 கொரிந்தியர் 2:2

தேவன் இதுவரை சொல்லாத விஷயங்களைத் தெரிந்துகொள்ள விரும்புவதில் பவுலுக்கு ஒருவேளை சிக்கல் இருந்ததா? பவுல் மிகவும் புத்திசாலி நன்கு கற்றவராக இருந்தார், எனவே அவர் ஒரு சிந்தனையாளராக இருந்திருக்கலாம் என்று யூகிக்க அதிக நேரம் எடுக்காது. நம்மில் சிந்தனையாளர்களாக இருப்பவர்கள், தேவனே பார்த்துக் கொள்ளக் கூடிய அல்லது நாம் பார்த்துக் கொள்ள அவர் நம்மை வழி நடத்தும் காரியங்களை நம்பாமல் அந்த விஷயங்களைப் பற்றி சிந்திக்க அதிக நேரத்தை மிக சுலபமாகவே செலவிடுகிறோம்.

நான் எழுதுவதைப் பற்றி எதுவும் தெரியாத ஒரு பெண்ணுடன் மதிய உணவு சாப்பிட்ட பிறகு நான் இந்தப் புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன். என்ன வகையான விஷயங்கள் அவளுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று அவளிடம் கேட்டேன். அவள் உடனே, “தெரியாததைப் பற்றிய பயம்” என்றாள். நான் தற்போது பயம் பற்றிய புத்தகம் எழுதி வருகிறேன் என்றும் எதிர்கால பயம் குறித்த அத்தியாயத்தின் நடுவில் இருப்பதாகவும் அவளிடம் சொன்னேன். வேலையிலிருந்து ஓய்வு பெறுவது பற்றிய எண்ணங்கள் மற்றும் நிதி சார்ந்த கவலைகள் அவளை கவலையடையச் செய்வதாக அவள் கூறினாள். அவள் தனியாளாக இருக்கிறாள், அவளுடைய குடும்பத்தில் இரண்டு உறுப்பினர்களுக்கு நிதி உதவி செய்ய வேண்டியிருந்து. முதுமை காரணமாக ஒருவருக்கும், சில மனச் சவால்களால் மற்றொருவருக்கும் உதவுகிறார். அவள் வேலை பருவகால வேலையாக இருப்பதால், அவளுடைய வருமானம் ஏற்ற தாழ்வுகளைக் கொண்டிருக்கும், மேலும் அவள் எவ்வளவு சம்பாதிக்கப் போகிறாள் என்று அவளுக்கு ஒருபோதும் உறுதியாகத்

> எதிர்காலத்தை அறிந்தவரை அறிந்திருக்கும்வரை நாம் எதிர்காலத்தைப் பற்றி அறிய வேண்டிய அவசியமில்லை.

தெரியவில்லை. அவளுக்கு தேவனைத் தவிர சார்ந்துக் கொள்ள வேறு யாரும் இல்லை, தான் அமைதியாக இருக்க இந்த சூழ்நிலைகளைப் பற்றி தந்தையிடம் (தேவன்) தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறினாள்.

அவள், அமைதியாகும் வரை பிதாவிடம் பேசிக்கொண்டே இருப்பது எனக்குப் பிடித்திருக்கிறது என்றாள். அதிர்ஷ்டவசமாக, நாம் அனைவரும் அவருடன் பேச வேண்டும். அவரே நமக்கு ஆறுதல் அளிப்பவர் மற்றும் மற்றவர்களை விட சிறந்த ஆலோசனைகளை வழங்குகிறார். எதிர்காலத்தை அறிந்தவரை அறிந்திருக்கும்வரை நாம் எதிர்காலத்தைப் பற்றி அறிய வேண்டிய அவசியமில்லை.

மக்கள் தங்கள் குறிப்பிட்ட வாழ்க்கை சூழ்நிலைகளின் அடிப்படையில் வெவ்வேறு அச்சங்களை அனுபவிக்கிறார்கள். திருமணமான ஒருவர் அனுபவிக்கும் பயத்தை ஒரு தனி நபர் அனுபவிப்பதில்லை. பெற்றோர்கள் உணரும் பயத்தை குழந்தைகள் இல்லாத ஒருவர் உணருகிறதில்லை. நம்முடைய தனிப்பட்ட சூழ்நிலை எப்படி இருந்தாலும், தேவனை நம்புவதற்கும், பயப்படுவதற்கும் நம் அனைவருக்கும் ஒரே வாய்ப்பு உள்ளது. எப்போதாவது நம் முழங்கால்கள் அசைந்தாலும், வயிற்றில் சில வண்ணத்துப்பூச்சிகள் பறந்தாலும் நாம் முன்னேறிச் செல்ல வேண்டும்.

நான் ஒரு காலத்தில் வேலை ஸ்தலத்தில், தேவாலயத்தில், அக்கம்பக்கத்தில், என் குழந்தைகளின் பள்ளி மற்றும் பிற இடங்களில், ஒவ்வொருவரின் காரியங்களைப் பற்றியும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் என்ன நடக்கிறது என்பதையும் அறிய விரும்பினேன். ஆனால் இப்போதோ நான் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யவும், நான் என்ன தெரிந்து கொள்ள வேண்டுமோ அதை மட்டுமே அறிய விரும்புகிறேன். அதற்கு மேல் உள்ளதெல்லாம் என் மனதை பாரமாக்கி என் ஆத்துமாவை எரிச்சலூட்டுகின்றன. நான் எதிர்காலத்தை ஆவலாய் எதிர்நோக்குகிறேன், ஆனால் நான் அதைப் பற்றி நினைக்கும் போது, அது ஒரு முழுமையான மர்மம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். நாம் எல்லாவற்றையும் கண்டுபிடித்துவிட்டோம் என்று நினைத்தாலும், அது அப்படியாக இல்லை. தேவன் ஆச்சரியங்களால் நிறைந்தவர். என் வாழ்வின் வெவ்வேறு நேரங்களில், நான் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண்ணாக, ஒரு குழந்தையுடன் விவாகரத்து பெற்றவளாக, பணிப்பெண்ணாக, கடன் மேலாளராக, அலுவலக எழுத்தாளராக, வீட்டிலிருந்து குழந்தையைப் பார்த்துக்கொள்ளும் அம்மாவாக, மற்றும் நான்கு குழந்தைகளுடன் ஒரு திருமணமான பெண்ணாக இருந்தேன். ஆனால் இப்போது நான்

தேவனுடைய ஊழியத்தை செய்கிறேன். தேவனுடைய வார்த்தையைக் கற்பித்து நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறேன். நான் ஒரு பணியாளராக இருந்தபோது, நான் இப்போது என்ன செய்துக் கொண்டிருக்கிறேனோ அதை செய்வேன் என்று என் எதிர்காலத்தைப் பற்றி நான் கற்பனை கூட செய்திருக்க மாட்டேன், என் கற்பனையில் கூட அது இல்லை! என்னை நம்புங்கள், நீங்கள் தேவனுடன் இணைந்திருந்து அவரை வழிநடத்த அனுமதித்தால் உங்கள் எதிர்காலம் நீங்கள் கற்பனை செய்வதை விட சிறப்பாக இருக்கும்.

நிச்சயமாக, பயம் அதன் அசிங்கமான தலையை அடிக்கடி உயர்த்தும், ஆனால் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டியது எல்லாம் தேவன் உங்களுடன் இருக்கிறார், நீங்கள் பயப்பட வேண்டியிருந்தாலும், உங்களால் அதை செய்ய முடியும்,

ஆனால் இப்போது கண்ணுக்குத் தெரியாத அவரைப் பார்த்ததால், மனிதன் எனக்கு என்ன செய்ய முடியும் என்று நான் பயப்படவில்லை.

- அன்னே ஹட்சின்சன்

முன்வந்து செய்ய பயப்பட வேண்டாம்

எனது பதினேழு வருட கார்ப்பரேட் வேலையில், பொதுவாகவே எனக்கு பயம் இருந்தது, ஏனெனில் சில வருடங்களுக்கு ஒருமுறை பணிநீக்கங்கள் நிகழ்ந்தன. நான் பல முறை வெளியேற நினைத்தேன், ஆனால் நான் மாற்றத்தை செய்ய மிகவும் பயந்தேன்.

வருடங்கள் செல்லச் செல்ல நான் அமைதியற்றவனாக மாறினேன். நான் செய்துகொண்டிருந்த வேலையில் நான் ஆர்வமில்லாமலும், நிறைவை உணராமலும் இருந்தேன். என் வேலை இனியும் எனக்கு "பொருத்தமில்லை", மேலும் என்னை நச்சரிக்கும் ஒரு கேள்வி என் இருதயத்தில் வளர்ந்தது: தேவனே, என் வாழ்க்கையில் நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?

நிறுவனத்தை விட்டு வெளியேறும்படி அவர் எனக்கு தெளிவான அறிவுறுத்தலைக் கொடுத்தார், கதவை அகலமாகத் திறந்தார். நான் அதை கடந்து செல்ல முடிவு செய்ய வேண்டியிருந்தது. நான் பயந்தேனா? நீங்கள் பந்தயம் கட்டுங்கள்! தெரியாத ஒரு பள்ளத்திற்குள் செல்ல நான் பயந்தேன்: நான் என்ன வகையான வேலையைத் தேடுவது? எனக்கு விரைவில் வேலை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது? கட்ட வேண்டிய கட்டணங்களைப் பற்றி என்ன?

எல்லாவற்றிற்கும் மேலாக, எனது புதிய வாய்ப்பு எப்போது வரும் அல்லது அது என்னவாக இருக்கும் என்று தேவன் ஒருபோதும் சொல்லவில்லை; "என்னை நம்பு" என்று அவர் மட்டும் கூறினார்.

அந்த பயம் நிறைந்த காத்திருப்பு நேரத்தில், ஜாய்ஸ் மேயரின் தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் கண்டுபிடித்து தினமும் அதைப் பார்த்தேன். "பயந்துக் கொண்டே அதைச் செய்ய வேண்டும்" என்று அவர் பலமுறை சொன்னபோது, நான் ஒரு புதிய மனநிலையுடன் பெலத்தைப் பெற்றதாக உணர்ந்தேன். தேவன் என்னை மாற்றிக் கொண்டிருந்தார், என் ஆளுமையிலிருந்து பயம் கத்தரிக்கப்பட்டது.

மூன்று வருடங்கள் மற்றும் பத்து மாதங்களுக்குப் பிறகு (நான் எண்ணிக் கொண்டிருந்தேன்), தேவன் என்னை காத்திருப்பு அறையிலிருந்து எனது புதிய வாய்ப்பிற்கு அழைத்துச் சென்றார் - ஆறு மாநிலங்கள் மற்றும் என் சொந்த ஊரிலிருந்து பதினொரு மணிநேரம் தொலைவில் வேலை கிடைத்தது. முன்பு, அதை விட வீட்டிற்கு மிக

அருகிலிருந்த வேலை நேர்காணல் தளங்களுக்கு பயணிக்க நான் பயந்தேன். இந்த நேரத்தில், நான் இயற்கைக்கு அப்பாற்பட்ட பயமற்ற நிலையிலிருந்தேன்.

என் வாழ்க்கையில் தேவனை நான் எவ்வளவு பெரியதாக இருக்கும் படி நான் அனுமதிக்கிறேனோ, அது இல்லாமல் மறையும் வரை அவ்வளவு சிறியதாக என் பயம் இருந்தது,. அதற்கு மாறாக, நான் எனது காரில் புறப்பட்ட நாளில், இந்த புதிய சாகசத்தைப் பற்றிய புதுமை, நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பினால் நிறைந்தவளாக உற்சாகமாயிருந்தேன்.

நான் அதை செய்து கொண்டிருந்தேன், இனியும் பயப்படவில்லை!

- ரெபேக்கா

அத்தியாயம் 20

ஒவ்வொரு சூழ்நிலையிலும் நீங்கள் தேவனை நம்பலாம்

தீமைகள் நடக்கும் என்ற பயத்திலிருந்து விடுதலை

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.
சங்கீதம் 50:15

பிரச்சனை என்ற வார்த்தை பல்வேறு விரும்பத்தகாத சூழ்நிலைகளை உள்ளடக்கியது. நாம் சிரமம், வசதியின்மை, கவலை, பதட்டம், துன்பம், கவலை, அமைதியின்மை, சங்கடம், எரிச்சல் அல்லது விரக்தியை அனுபவிக்கிறோம் என்று அர்த்தம். இது எச்சரிக்கை, துன்பம் அல்லது துன்புறுத்துதலை ஏற்படுத்தும் ஒன்றையும் குறிக்கிறது. இவை அனைத்தும் நாம் விரும்பாத மற்றும் தவிர்க்க முயற்சிக்கும் விஷயங்கள், ஆனால் நாம் ஒருபோதும் அப்படி செய்ய மாட்டோம், குறைந்தபட்சம் முழுவதுமாக இல்லை.

உலகில் நமக்கு பிரச்சனைகள் இருக்கும் என்று இயேசு சொன்னார், மேலும் அவர் உலகத்தை ஜெயித்ததால் நாம் உற்சாகமாக இருக்க வேண்டும் என்பதே அவருடைய அறிவுரை (யோவான் 16:33). மேலும் அவர், உலகம் கொடுக்கிற பிரகாரம் அல்ல தனது சொந்த விசேஷமான சமாதானத்தையே அவரது சமாதானத்தை நமக்கு விட்டுச் செல்கிறார் என்றும் அவர் கூறினார், மேலும், “உங்கள் இருதயங்கள் கலங்க வேண்டாம்” (யோவான் 14:27) என்றார். உலகில், மக்கள் எல்லாவற்றையும் அவர்கள் விரும்பும் வழியில் பெற்றுக்கொண்டாலோ அல்லது அவர்களின் எல்லா சூழ்நிலைகளும் நன்மையாக இருந்தாலோ, அவர்கள் சமாதானமாக இருப்பதாக நம்புகிறார்கள்.

ஆனால் தேவ சமாதானம் முற்றிலும் வேறுபட்டது. நாம் விரும்பும் வழியில் எதுவும் நடக்காதபோதும், பிரச்சனைகள், சோதனைகள் மற்றும் இன்னல்களை சந்திக்கும் போதும் அது நமக்குக் கிடைக்கிறது.

"கடைசி நாட்களில் பிரச்சனைகள் அதிகரிக்கும் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார். இன்று நாம் அனுபவிக்கும் பல சூழ்நிலைகளை அவர் மிகவும் குறிப்பாக குறிப்பிட்டார், "எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,

சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்,

துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்." (2 தீமோ. 3:2-4). இன்று நாம் இவை அனைத்தையும் கடந்த ஆண்டுகளை விட அதிக அளவில் அனுபவிக்கிறோம், மேலும் நாம் வாழும் காலத்தைக் குறித்து பலர் பயப்படுகிறார்கள். இந்த காலங்களில் மக்களின் இருதயங்கள் பயத்தினால் சோர்ந்துவிடும் என்றும் வேதம் கூறுகிறது (லூக்கா 21:26).

இயேசு முன் கூட்டியே பிரச்சனைகளை எச்சரிக்கும் போது, நாம் பயப்படாமல் இருப்போம் என்பதற்காக சொல்லவில்லை, நாம் ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்பதற்காகவே சொன்னார் என்று நான் நம்புகிறேன். இயேசுவை நம்புகிறவர்கள் பயப்படத் தேவையில்லை, ஏனென்றால் இறுதி காலம் எவ்வளவு கடினமானதாக இருக்கும் என்ற எச்சரிக்கைகளைத் தருவதோடு, நம்மைக் கவனித்துக்கொள்வதாகவும், நம்மால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு நம்மைச் சோதிக்க அனுமதிக்க மாட்டாரென்றும் அவர் வாக்குறுதி அளித்துள்ளார் (1 கொரி. 10:13).

அவிசுவாசிகள் எப்படி பயத்தில் வாழ்வார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது, ஏனென்றால் இன்று மக்கள் வெறுமனே ஷாப்பிங் செல்லும் போதும் வெளியே இருக்கும் போதும் சுட்டுக் கொள்ளப்படுவது போன்ற செய்திகளை நாம் வழக்கமாக கேட்கிறோம். கடந்த சில ஆண்டுகளில், பள்ளிகள், கல்லூரிகள், திரையரங்குகள், கச்சேரிகள், வணிக வளாகங்கள், இரவு விடுதிகள், பல தேவாலயங்கள், அலுவலக விருந்து, இராணுவத் தளம், கடற்படைத் தளம் மற்றும் பிற சாதாரண இடங்களில் துப்பாக்கிச்

சூடு நடத்தப்பட்டது. கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலோர் அவர்கள் செய்த எதற்காகவும் குறிவைக்கப்படவில்லை. துப்பாக்கிச் சூடு நடத்தியவர் சுடத் தொடங்கியபோது அவர்கள் அந்த இடத்தில் இருந்ததன் காரணமாக அவர்கள் வெறுமனே கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர். இவை அனைத்திற்கும் மேல், நாம் பயங்கரவாத தாக்குதல்களை சந்தித்துள்ளோம். நியூயார்க் நகரத்தின் உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகனின் இரட்டை கோபுரங்கள் மீதான 9/11 தாக்குதல், இதில் 2,996 பேர் கொல்லப்பட்டனர்.

உலகம் சண்டை, சச்சரவு, வாக்குவாதம் மற்றும் வெறுப்பு ஆகியவற்றால் நிறைந்துள்ளது. உலகில் எவ்வளவு பயங்கரமான நிலைமைகள் உள்ளன என்பதைப் பற்றி என்னால் தொடர்ந்து எழுத முடியும், ஆனால் அது எவ்வளவு மோசமாக இருந்தாலும், நீங்கள் பயந்து வாழ வேண்டியதில்லை என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். நீங்கள் ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும், நம்மைச் சுற்றி நடப்பதைக் கவனிக்க வேண்டும், கதவுகளைப் பூட்ட வேண்டும், சிறு குழந்தைகளை பொது இடங்களில் கவனிக்காமல் விடக்கூடாது, பொது அறிவை பயன்படுத்த வேண்டும், ஆனால் மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். நாம் பயந்து வாழ வேண்டிய அவசியம் இல்லவே இல்லை.

நான் தீமைக்கு பயப்பட மாட்டேன்

பயம் ஒரு முட்டுச்சந்தாகும், ஆனால் விசுவாசத்திற்கு எப்போதுமே எதிர்காலம் உண்டு. பயத்திற்கு ஒரு வழியும் தெரியாது, ஆனால் தேவன் ஒரு வழியை உருவாக்குவார் என்று விசுவாசம் நம்புகிறது. சங்கீதக்காரன் தாவீது, “நான் பொல்லாப்புக்கு பயப்படேன்” (சங். 23:4). தீமைக்கான தேவனின் வரையறை, கிறிஸ்தவ பார்வையின்படி, தேவனின் தன்மை அல்லது விருப்பத்திற்கு முரணான எந்தவொரு செயலும், எண்ணமும் அல்லது மனப்பான்மையும் தீமையாகும்.

> பயம் ஒரு முட்டுச்சந்தாகும், ஆனால் விசுவாசத்திற்கு எப்போதுமே எதிர்காலம் உண்டு.

சாத்தான் தீயவன் (மத். 13:19), அவனுடைய எல்லா செயல்களும் தீயவை, ஆனால் நாம் பயப்படத் தேவையில்லை, ஏனென்றால் தேவன் நம்மை வழிநடத்துவார், கொந்தளிப்பு மற்றும் பிரச்சனைகளுக்கு மத்தியில் அமைதியான, மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ உதவுவார்.

> எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்.
>
> நீதிமொழிகள் 1:33

துன்மார்க்கரைப் பேரழிவும் தீமையும் சூழ்ந்திருந்தாலும், தேவன் தம் மக்களைப் பாதுகாத்த பல சந்தர்ப்பங்களை விவிலிய வரலாறு கூறுகிறது. சோதோம் மற்றும் கொமோராவில், லோத்தும் அவரது குடும்பத்தினரும் நகரம் அழியும் முன் அதை விட்டு வெளியேறும்படி எச்சரிக்க தேவதூதர்களை அனுப்பினார் (ஆதி. 19:12-16). தேவன் முழு உலகத்தையும் அழித்த ஒரு பெரிய வெள்ளத்தை வரவழைத்தபோது, அவர் நோவாவையும் அவருடைய குடும்பத்தையும் அவர்கள் நீதிமான்களாக இருந்ததால் காப்பாற்றினார் (ஆதி. 7:1-5). எகிப்தின் அக்கிரமத்தினிமித்தம் தேவன் பத்து வாதைகளைக் கொண்டு வந்தபோது, கோஷேன் என்ற இடத்தில் வாழ்ந்த தம்முடைய மக்களை தேவன் பாதுகாத்ததாக வேதம் கூறுகிறது (யாத்திராகமம் 8, 9).

தேவன் தம்மை நம்புகிறவர்களை இறுதிக் காலத்தின் தீமைகளிலிருந்து காப்பாற்ற மாட்டார் என்று நம்புவதற்கு எந்த காரணமும் இல்லை. இதன் பொருள் நாம் பிரச்சனைகள், சோதனைகள் மற்றும் இன்னல்களை அனுபவிக்க மாட்டோம் என்பதில்லை, ஆனால் தேவன் நம்மை பாதுகாப்பார். மாற்கு 4ல், சீஷர்கள் தங்களைச் சுற்றி ஒரு புயல் வீசும் என்று பயந்ததால் இயேசு அவர்களைத் திருத்தினார். அவர்கள் தன்னை நம்ப வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தனது ஊழியத்தின் போது ஒரு கட்டத்தில், வாய்ப்பின் ஒரு பரந்த கதவு தனக்குத் திறக்கப்பட்டதாகவும், அதனுடன் பல எதிர்ப்புக்கள் வந்ததாகவும் பவுல் கூறினார் (1 கொரி. 16:9). தேவன் நமக்குக் கொடுக்கும் வாய்ப்புகளிலிருந்து நாம் பின்வாங்க வேண்டும் என்ற நம்பிக்கையில் சாத்தான் சிக்கலைப் பயன்படுத்துகிறான். ஆனால் நாம் எப்போதும் உறுதியாக நிற்க வேண்டும், பயத்தில் பின்வாங்கக்கூடாது (எபி. 10:39).

பல்வேறு சோதனைகள் மற்றும் உபத்திரவங்களின் மத்தியிலும் நாம் பொறுமையாக இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் யாக்கோபு சொன்னார் (யாக்கோபு 1:2-3). பொறுமை என்பது சோதனையின் கீழ் மட்டுமே வளரும் ஆவியின் கனி. மனித உடலில் ஒரு சிறிய தசை கூட எதிர்ப்பு இல்லாமல் பெரிதாகவோ அல்லது வலுவாகவோ வளராது. நமது நம்பிக்கை தசை போன்றது; அதை வளர பயிற்சி செய்ய வேண்டும்.

நமது நம்பிக்கை சோதிக்கப்படுகிறது

உங்கள் வாழ்க்கையில் இந்த நேரத்தில் நீங்கள் என்ன அனுபவிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை இது ஒரு நல்ல நேரம், மிகவும் கடினமானதாகவோ அல்லது சோகமானதாகவோ இருக்கலாம். ஒருவேளை நேசிப்பவர் இறந்துவிட்டார், அல்லது உங்கள் ஓய்வு மற்றும் காப்பீட்டு பலன்களுடன் உங்கள் வேலையை இழந்திருக்கலாம். நீங்கள் நோய்வாய்ப்பட்டிருக்கலாம் அல்லது வலியில் இருக்கலாம், நீங்கள் மனச்சோர்வைக் கையாண்டு கொண்டிருக்கலாம் அல்லது வயதான பெற்றோரைப் பராமரிப்பதில் சவால்களை நீங்கள் எதிர்கொண்டிருக்கலாம், நமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாதபோது தேவனை நம்புவது எளிது, ஆனால் நாம் கஷ்டப்படும்போது அவரை நம்புவது முற்றிலும் வேறுபட்டது. இது நாம் செய்ய தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்று, ஒருவேளை ஒரு நாளைக்கு பல முறை அவ்வாறாக செய்ய வேண்டும்.

நடக்க சாத்தியமான எல்லா பயங்கரமான விஷயங்களையும் சாத்தான் நம் கற்பனையில் விரும்பத்தகாத சித்திரமாக வரைகிறான். ஆனால் அவனுடைய கவனச்சிதறல்களிலிருந்து நாம் விலகி, நம்மை விட்டு விலகமாட்டேன் என்று உறுதியளித்த இயேசுவை, நமக்கு ஆறுதல் அளிக்கும் இயேசுவை, நம் வலிமையான இயேசுவை பார்க்கலாம், (2 கொரி. 1:3-4).

நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படும் என்று தேவனுடைய வார்த்தை மீண்டும் மீண்டும் சொல்கிறது:

> பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்ஸ
>
> 1 பேதுரு 4:12

> இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது

உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

1 பேதுரு 1:6-7

அக்கினி சோதனைகள் நம் விசுவாசத்தை சோதிக்கும் என்பதை இந்த வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. அது இனிமையானதாகத் தெரியவில்லை, ஆனால் நம்பினாலும் நம்பாவிட்டாலும், அதற்கு ஒரு மேன்மை இருக்கிறது. நாம் சோதனைகளை கடந்து, தேவனை விட்டுக்கொடுக்காமல் இருந்தால், நாம் ஆவிக்குரிய ரீதியில் வளருவோம், மேலும் சோதிக்கப்பட்ட நம் விசுவாசம் முன்பு இருந்ததை விட பலமாகிறது.

உங்கள் மனதை கட்டவும்

இக்கட்டான காலங்களைச் சந்திக்க நேரிடும் என்று தெரிந்தாலும், அந்தக் கஷ்டங்கள் வரும்போது, கிறிஸ்துவின் மூலம் நாம் பலப்படுவோம் என்றும், அவருடைய உதவியால் விசுவாசத்தில் உறுதியாக நிற்போம் என்றும் நம் மனதை அமைத்துக் கொள்ள வேண்டும். தேவனுடன் எல்லா வழிகளிலும் செல்ல மன உறுதியும் மனதளவில் தயாராக இருப்பதும் நேரம் வரும்போது அதைச் செய்வதை எளிதாக்கும்.

டேவ் கோல்ஃப் விளையாட விரும்புகிறார். இனிமேலும் விளையாட முடியாத நிலைக்கு வந்துவிட்டால், எப்படிச் செயல்படுவார் என்று நான் அவரிடம் கேட்டேன், அதற்கு அவர், “நான் ஏற்கனவே அதைப் பற்றி யோசித்துவிட்டேன், எப்படியும், என் வாழ்க்கையை அனுபவிக்கலாம் என்று மனதை அமைத்துக் கொண்டேன்..” என்றார்.

அவர் இளமையாக இருந்தபோது அவருக்கு ஒற்றைத் தலைவலி இருந்தது, அது அவரை உணர வைத்த விதம் மற்றும் அது ஏற்படுத்திய வலியின் காரணமாக அவர் எப்போதும் அதற்கு பயப்படுவார். ஆனால் தலைவலியால் ஈர்க்கப்படாமல் இருக்க தேவன் அவரது இருதயத்தில் பேசினார் ஏனென்றால் அவர் தனது வாழ்க்கையை அந்த தலைவலி இருந்தாலும் அனுபவிக்க முடியும் என்பதால்,. அவர் அதைச் செயல்படுத்தினார், தலைவலி தொடங்கும் போது அவர், “நான் ஈர்க்கப்படவில்லை” என்று கூறுவார், மேலும் தலைவலி முற்றிலும் நின்றுவிட்டது.

சாத்தான் நமக்குச் செய்கிற செயல் நம்மை எதிர்மறையாக பாதிக்கவில்லை என்றால், அவன் நிறுத்திவிட்டு இன்னொரு சந்தர்ப்பத்திற்காக காத்திருப்பான்.

கஷ்ட காலங்களில், தேவனுடைய வார்த்தையை தியானித்து அறிக்கையிடுவதின் மூலம் உங்கள் மனதை புதுப்பிக்க முடியும். அடுத்த முப்பது நாட்களுக்கு, ஒவ்வொரு நாளும் சில முறை, அப்போஸ்தலன் பவுலின் வார்த்தைகளை அறிக்கையிடுங்களென்று உங்களுக்கு சவால்விடுகிறேன்:

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.

> (எனக்கு அதிகாரம் அளிக்கும் கிறிஸ்துவினால் எல்லாவற்றுக்கும் எனக்கு பலம் உண்டு [நான் எதற்கும் தயாராக இருக்கிறேன் மற்றும் எனக்குள் உள் பலத்தை உட்செலுத்துகிறவர் மூலம் எதற்கும் சமம்; கிறிஸ்துவின் நிறைவில் நான் தன்னிறைவு பெற்றவன்]).
>
> பிலிப்பியர் 4:13

இவ்வாறு செய்வது உங்கள் மனதை சரியான திசையில் அமைத்து, உங்களுக்கு வெற்றி தேவைபடும் முன்னே அதற்காக உங்களை ஆயத்தப்படுத்தும்.

நாம் கிறிஸ்துவின் மூலம் ஜெயம் கொண்டவர்களை விட அதிகமாக இருக்கிறோம் (ரோமர் 8:37), நாம் அதை உண்மையாக நம்பினால், தீமைக்கு பயப்பட தேவையில்லை. நாம் ஒரு இக்கட்டான நேரத்தைச் சந்திக்கும்போது, அது வரும்போது அது தற்காலிகமானது என்றும், நம்மை நேசிக்கிற தேவன் உண்மையில் அதை நம் வாழ்வில் நன்மையாக மாற செய்வார் என்றும் அறிவோம் (ரோமர் 8:28).

உயிருக்கு ஆபத்தான நோய் இருப்பது அவர்களின் வாழ்க்கையை நேர்மறையான வழியில் மாற்றியது என்று கூட மக்கள் கூறியுள்ளனர். ஏனெனில் அது உண்மையிலேயே முக்கியமானது என்ன என்பதை அவர்களுக்கு உணர்த்தியது. அவர்கள் குணமடைந்ததும், முன்னிருந்ததைவிட அவர்கள் சிறப்பாக மாற்றப்பட்டனர்.

> தேவனால் மட்டுமே சரிசெய்ய முடியும் அளவுக்கு நமது பிரச்சனை மிகப் பெரியதாக இருக்கும் வரை நாம் ஒரு அதிசயத்திற்கு தகுதி பெற மாட்டோம்.

தேவனைத் தவிர வேறு யாராலும் உங்களுக்கு உதவ முடியாத அளவுக்குப் பெரிய பிரச்சனை உங்களுக்கு இருந்தால், அது உங்களை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அவரைத் தேடும்படி செய்யும். தேவனால் மட்டுமே சரிசெய்யும் அளவுக்கு நமது பிரச்சனை பெரிதாக

இருக்கும் வரை நாம் ஒரு அதிசயத்திற்குத் தகுதி பெற மாட்டோம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய பரீட்சைகள் மற்றும் சோதனைகள் அனைத்தும் உயிருக்கு ஆபத்தானவை அல்ல. அவற்றுள் பல வெறுமனே எரிச்சலூட்டும் அல்லது மோசமாக்க கூடியதாகவே இருக்கின்றன, ஆனால் தேவன் அவற்றை நம் நம்பிக்கையை நீட்டிக்க அல்லது பொறுமையில் வளர உபயோகிக்கிறார். இதற்குக் காரணம், பிறரைத் துன்புறுத்துபவர்களிடம் நாம் அதிக இரக்கம் காட்டுவதற்காக. ஆனால் அது எதுவாக இருந்தாலும், நாம் நல்ல மனப்பான்மையைக் கடைப்பிடித்து, தொடர்ந்து தேவனை நம்பினால், அது நமக்கு நீண்ட பயணத்திற்கு நன்மை செய்வதை அவர் உறுதி செய்வார். நம் எதிரி தீமைக்கு என்று நினைத்ததை தேவன் நன்மைக்காக நினைக்கிறார். (ஆதி. 50:20).

வலிமிகுந்த அற்புதம்

உங்களில் பலரைப் போலவே, என் வாழ்க்கையும் வலி நிறைந்ததாக இருந்தது என்று என்னால் சொல்ல முடியும் என்று நம்புகிறேன். நான் பாலியல் துஷ்பிரயோகம், விவாகரத்து, கருச்சிதைவு, மார்பக புற்றுநோய், இரண்டு இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை, ஒரு சிறிய முதுகு அறுவை சிகிச்சை, பாதத்தில் அறுவை சிகிச்சை, நிராகரிப்பு, கைவிடப்படுதல், விமர்சனம் மற்றும் நியாயமற்ற தீர்ப்பு ஆகியவற்றைக் கையாண்டேன். நான் பயம், சந்தேகம், பதட்டம், பகுத்தறிவு, பொறாமை, பாதுகாப்பின்மை, கோபம் மற்றும் கசப்பு ஆகியவற்றை எதிர்த்துப் போராடினேன் - இது மிகவும் நீளமான பட்டியலின் ஆரம்பம். ஆமாம், அது வேதனையாக இருந்தது, ஆனால் அதே நேரத்தில் அற்புதமானது. என் வாழ்கையை மொத்தமாகப் பார்த்தால், அருமையாக இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்! அற்புதம்! அற்புதம்! நான் திரும்பிச் சென்று எல்லா வலிகளையும் அழிக்க வேண்டுமா? நான் இல்லை என்றே சொல்லுவேன், ஏனென்றால் என் வாழ்விலே இருக்கும் நல்ல காரியங்களை நான் எப்படி பாராட்டுகிறேனோ அப்படி நான் அந்த வலியை அனுபவித்திராதிருந்தால் பாராட்டியிருக்கமாட்டேன்.

என் குழந்தைப் பருவத்தில் நடந்த பாலியல் துஷ்பிரயோகம் கூட, அது எவ்வளவு கொடூரமானது மற்றும் தீயது என்றாலும், என்னை இன்று இருக்கும் நபராக மாற்ற உதவியது. அந்த பயங்கரமான அனுபவத்தை என்னுடைய நன்மைக்காகவே தேவன் வடிவமைத்தார் என்று நான் ஒரு நொடி கூட நம்பவில்லை, ஆனால் அவர் அதிலிருந்து நல்ல விஷயங்களைச் செய்திருக்கிறார்.

நமது வலி நம்மை பாதிக்கும் விதம் நமது மனப்பான்மையையே சார்ந்துள்ளது. “நீங்கள் கசப்பாகவோ அல்லது சிறப்பாகவோ இருக்கலாம்” என்ற கூற்றை நீங்கள் ஒருவேளை கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும், அது உண்மைதான். உங்கள் மனப்பான்மை உங்களுக்கு சொந்தமானது, உங்களைத் தவிர வேறு யாரும் கட்டுப்படுத்தக்கூடாத ஒன்று.

மிகச்சிறிய சோதனைகளைச் சந்தித்து, தங்களைத் தாங்களே கசப்பாகவும், சுயபரிதாபத்தால் நிரம்பவும் அனுமதித்தவர்களை நான் சந்தித்திருக்கிறேன், துயரமான விஷயங்கள் நடந்தாலும், மற்றவர்களுக்கு அன்பாகவும் உதவியாகவும் இருக்கும் மற்றவர்களையும் நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் புகார் செய்வதில்லை. உண்மையில், அவர்கள் எனக்குத் தெரிந்த மிகவும் நன்றியுள்ள நபர்களாகத் தெரிகிறது.

அவர்களுக்கு ஒரு தேர்வு இருந்தது, அவர்கள் ஒரு நல்ல தேர்வை செய்தார்கள், அது அவர்கள் வாழ்க்கையில் அதிக நன்மைகளைப் பெறவும், அவர்களின் வலியை தங்கள் லாபத்திற்காகவும் மற்றவர்களின் ஆதாயத்திற்காகவும் பயன்படுத்த அனுமதிக்கும் நல்ல தேர்வை செய்தனர். தங்களுக்குப் பின்னால் உள்ள விஷயங்களை விட்டுவிடுவதையும், முன்னால் உள்ள விஷயங்களை நோக்கி செல்வதையும் அவர்கள் பயிற்சி செய்தனர்.

ஒருவேளை நீங்கள் இப்போது இந்தப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள், உங்கள் வாழ்க்கையில் மனப்பான்மையை சரிசெய்வதற்கான அவசியத்தை உணர்ந்திருக்கலாம். அப்படியானால், அந்தச் சரிசெய்தலைத் தேர்ந்தெடுத்து, உங்களுக்கு உதவ தேவனிடம் கேளுங்கள். நாளுக்கு நாள் விடாமுயற்சியுடன் இருங்கள். முழு வெற்றியைப் பெறும் வரை விட்டுவிட மறுத்துவிடுங்கள். வாழ்க்கை உங்களிடம் ஒப்படைத்த எலுமிச்சம் பழத்தை எடுத்து, எலுமிச்ச பழரசம் செய்து அதிக சர்க்கரை சேர்த்து அருந்தி மகிழுங்கள்! தேவனின் விதிகளின்படி விளையாடக் கற்றுக்கொண்டால், பிசாசை அவனுடைய விளையாட்டின் படியே வெல்லலாம். தீமை செய்ய முயற்சிக்கும் மக்களைப் பற்றி வருத்தப்படவோ கவலைப்படவோ வேண்டாம், ஆனால் கர்த்தரை நம்பி, நன்மை செய்து கொண்டே இருங்கள் (சங். 37:1-3).

பிலிப்பியர் 1:28, பிசாசின் தந்திரங்களுக்கு நாம் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதைத் தெளிவாகக் காட்டும் அற்புதமான வேத பகுதி:

நீங்கள் மருளாதிருக்கிறது அவர்கள் கெட்டுப்போகிறதற்கும், நீங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கும் அத்தாட்சியாயிருக்கிறது; இதுவும் தேவனுடைய செயலே. இந்த வசனம் எனக்கு பெரிதும் உதவியது, நீங்கள் அதை படித்து, வார்த்தைகள் மற்றும் அவை உண்மையில் என்ன சொல்கிறது என்பதைப் பற்றி சிந்தித்துப் படித்தால், அது உங்களுக்கும் உதவும் என்று நான் நம்புகிறேன். எதிரி நம்மைத் தாக்கும் போது எப்போதும் அச்சமின்றி நிலையாய் இருப்பது வரவிருக்கும் அவனது அழிவின் தெளிவான அடையாளம் என்பதை இது நமக்குக் கற்பிக்கிறது. தேவனுக்கு, இது நமக்கு வரவிருக்கும் விடுதலைக்கான உறுதியான டோக்கன் மற்றும் சான்றாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பிசாசு உங்களை கட்டுப்படுத்த முடியுமா என்று பார்க்கிறான், உங்கள் நம்பிக்கை அவர் மீது இருப்பதை தேவன் பார்த்து உங்களை விடுவிக்கிறார்.

இது எப்போதும் நிலைக்காது

நீங்கள் இப்போது எதிர்கொள்ளும் எந்த பிரச்சனையும், அது எப்போதும் நிலைக்காது. வாழ்க்கையில் நீங்கள் கடந்து வந்த மற்ற விஷயங்களை நினைத்துப் பாருங்கள், இன்னும் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். அந்த பிரச்சனைகள் நீங்கிவிட்டன, மேலும் நீங்கள் முன்பு இருந்ததை விட புத்திசாலியாகவும் வலிமையாகவும் இருக்கலாம்.

வரவிருக்கும் சிக்கலைப் பற்றிய பயம் உண்மையில் நாம் கடந்து செல்லும் காரியங்களை விட மோசமானது. நீங்கள் பல ஆண்டுகளாக எதை குறித்தாவது பயந்துக் கொண்டிருக்கலாம், ஆனால் இரண்டு மாதங்களில் அதைச் சமாளித்து கடந்துவிடுவீர்கள். ஒரு கர்ப்பிணிப் பெண் ஒருமுறை என்னிடம், தனக்கு குழந்தை பிறக்கும் நேரம் வரும்போது, அது வலிக்குமோ என்று பயப்படுவதாக சொன்னாள். நான் அவளிடம் சொன்னேன், அவள் இனி பயப்படத் தேவையில்லை, ஏனென்றால் அது நிச்சயமாக வலிக்கும், ஆனால் அவள் அதைக் கடந்து விடுவாள், அவளுடைய அழகான குழந்தையைக் கையில் எடுத்தவுடன் வலியை மறந்துவிடுவாள். நிச்சயமாக, அவள் அதைச் செய்தாள், அதை மீண்டும் செய்தாள். தவிர்க்க முடியாதவற்றைப் பற்றி பயப்படுவதில் எந்த அர்த்தமுமில்லை. நீங்கள் ஒரு டாக்டராக வேண்டும் என்று முடிவு செய்தால், பல வருடங்கள் பள்ளிப் படிப்பையும், பல வருடங்கள் தங்கியிருந்து படிப்பதையும் நீங்கள் தவிர்க்க

முடியாது, ஆனால் அவை முடிந்தவுடன், உங்கள் வாழ்நாள் முழுவதும் மருத்துவராக இருப்பீர்கள்.

நீங்கள் உண்மையிலேயே என்னவாக இருக்க விரும்புகிறீர்களோ அல்லது நீங்கள் உண்மையில் எதைப் பெற்றிருக்க விரும்புகிறீர்களோ அதை அடைய நீங்கள் எதைச் சந்திக்க வேண்டுமோ அதைச் செய்ய தயாராக இருங்கள். நீங்கள் உடல் எடையை குறைக்க வேண்டும் என்றால், நீங்கள் அப்படி செய்யலாம், ஆனால் உங்கள் வயிறு ஒரு சாதாரண அளவிற்கு சுருங்கும் வரை நீங்கள் சிறிது காலமாவது பசியுடன் இருப்பீர்கள். ஆறுதலுக்கான நமது அடிமைத்தனம் பெரும்பாலும் நமக்குத் தேவையான சுதந்திரம் மற்றும் முன்னேற்றங்களிலிருந்து நம்மைத் தடுக்கிறது. ஒருவேளை நாம் கொஞ்சம் கடினமாக இருக்க வேண்டும், வாழ்க்கையில் எல்லாம் எளிதாக இருக்கும் என்று எதிர்பார்க்கக்கூடாது. நாம் தேவனின் வல்லமையால் அபிஷேகம் செய்யப்பட்டுள்ளோம், அப்படியென்றால் வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டியதை எல்லாம் செய்யலாம் மற்றும் எதற்கும் பயப்படாமல் நல்ல மனப்பான்மையுடன் செய்யலாம்.

ஆறுதலுக்கான நமது அடிமைத்தனம் பெரும்பாலும் நமக்குத் தேவையான சுதந்திரம் மற்றும் முன்னேற்றங்களிலிருந்து நம்மைத் தடுக்கிறது.

முதலாவதாக, நாம் பயப்பட வேண்டிய ஒரே விஷயம் பயம் மட்டுமே என்ற எனது உறுதியான நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறேன் - பெயரற்ற, நியாயமற்ற, நியாயப்படுத்த முடியாத, பயங்கர பயம், பின்வாங்குவதை முன்னேற்றமாக மாற்றுவதற்கு தேவையான முயற்சிகளை முடக்குகிறது.

- பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்

என் குடும்பத்தைக் காக்கப் போவது யார்?

ஒரு பெரிய பேரழிவிற்கு போதுமான அளவு தயாராக இல்லை என்பது எனது மிகப்பெரிய அச்சங்களில் ஒன்றாகும். அல்லது ஒருவர் என் வீட்டிற்குள் ஊடுருவி வந்தால் போதுமான அளவு தயாராக இல்லை. நான் எப்பொழுதும் திட்டமிடுபவன், அதனால் நடக்கக்கூடிய எல்லா விஷயங்களைப் பற்றியும் நான் கவலைப்படுகிறேன்.

நான் என்னை ஒரு "ஆயத்தமானவர்" என்று முத்திரை குத்தி கொள்ள மாட்டேன், ஏனென்றால் ஒரு வருடத்திற்கு உறைந்த உலர்ந்த உணவையும் எனது அடித்தளத்தில் லிட்டர் கணக்கில் தண்ணீரையும் தேக்கி வைக்கவில்லை. ஆனால் எனது தளங்கள் மூடப்பட்டிருப்பதை உறுதிப்படுத்த முயற்சிக்கிறேன்.

பல ஆண்டுகளாக, எனது பயம் எனது குடும்பத்தைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு தேவையானவற்றை வழங்க வேண்டுமென்ற அழுத்தத்தில் வேரூன்றியுள்ளது என்பதை நான் கண்டுபிடித்தேன். ஒரு ஆணாக, அவர்களின் பாதுகாப்பு என் கைகளில் உள்ளது என்ற பொறுப்பை நான் சுமக்கிறேன். அந்த எண்ணம் மிகுந்திருந்தது. இது அவர்களின் தேவைகளை சந்திக்க தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ள ஒரு நிலையான வேலையை கொண்டிருப்பதாகும். கணவர் மற்றும் அப்பாவாக எப்போதும் அவர்களின் உணர்வுபூர்வமான தேவைகளை சந்திப்பதை குறிக்கிறது. இது நம் வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பையும் வழங்குவதுமாகும்.

ஒரு கிறிஸ்தவனாக, எல்லாவற்றிலும் தேவனை எப்போதும் நம்பும்படி நான் கற்றுக்கொண்டேன், அவர் நமக்கு வழங்குபவர். நான் அவரை நம்புகிறேன். அவர் எப்போதும் நமக்கு தேவையானதை வழங்குவார் என்று நான் நம்புகிறேன், நான் உண்மையிலேயே அதை அர்த்தப்படுத்துகிறேன். ஆனால், என் எண்ணங்களும் செயல்களும் சில சமயங்களில் வேறுவிதமாக நிரூபிக்கின்றன. எனவே, ஒரு பேரழிவு சூழ்நிலை உட்பட எனது குடும்பத்தின் பாதுகாப்பு போன்ற எல்லா சூழ்நிலையிலும் எனது எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்ய தேவனை உண்மையாக நம்புவதற்கும், தர்க்கரீதியாக நான் தயாராக இருக்க தேவன் கொடுக்கும் ஞானத்திற்கும் இடையேயான சமநிலையை நான் எவ்வாறு கண்டுபிடிப்பது?

நான் கவனமாக இல்லாவிட்டால், கவலையினாலும் பயத்தினாலும் என்னை நானே பைத்தியமாக்கி, யோசிக்க இயலாமல் கூட போய்விடலாம். என் வயிறு வலிக்கத் தொடங்கும் அளவுக்கு இந்த விஷயங்களைப் பற்றி நான் கவலைப்பட்டுக்கொண்டிருக்கலாம். அந்த பயம் உடல் ரீதியாக என்னை மோசமாக உணர வைக்கும்.

ஆனால் எல்லாவற்றையும் என்னால் கட்டுப்படுத்த முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். என் மனைவி மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க 24/7 அவர்களுடன் என்னால் இருக்க முடியாது. அவர்களுக்கு நிதியுதவி வழங்க நான் எப்போதும் அருகில் இருக்க முடியாது. ஆனால் தேவனால் முடியும். அவர் ஒரு பெரிய தேவன். நான் அவருக்கு இன்னும் கொஞ்சம் கனத்தை கொடுக்க வேண்டும். அவர் என் இருதயத்தை அறிவார், நான் என்னால் முடிந்த சிறந்தததைச் செய்கிறேன் என்பதை அவர் அறிவார். எனவே போதுமான அளவு செய்யவில்லை என்று நான் பயப்படத் தேவையில்லை, ஏனென்றால் அவர் அனைத்தையும் பார்த்துக் கொள்கிறார்.

- மைக்

அத்தியாயம் 21

நீங்கள் ஓய்வெடுக்க முடியும்

போதாது என்ற பயத்திலிருந்து விடுதலை

> கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு
> இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது
> தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு
> இது கிரியைகளினால் உண்டானதல்ல;
>
> எபேசியர் 2:8-9

நாங்கள் எங்கள் அலுவலகத்தில் ஒரு கணக்கெடுப்பை நடத்தினோம், இயேசுவுடன் சிறிது நேரம் உட்கார முடியுமென்றால் மக்கள் அவரிடம் என்ன கேட்க விரும்புகிறீர்கள் என்று கேட்டோம். முதல் கேள்வி என்னவென்றால் "நான் போதுமானதைச் செய்கிறேன் என்பதை நான் எப்படி அறிவது?" இந்த ஆட்கொள்ளும் கேள்வியால் நான் அவதிப்பட்டேன் என்று எனக்குத் தெரியும், ஆனால் பலருக்கு இது இருந்தது என்பது எனக்குத் தெரியாது. என் தந்தை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததால் ஏற்பட்ட பாதுகாப்பின்மையால் "செய்கிற" அடிமைத்தனம் வந்ததாக நான் கருதினேன். பல ஆண்டுகளாக நான் என் மதிப்பையும் விசேஷத்தையும் நிரூபிக்க வேண்டும் என்று உணர்ந்தேன் என்று நினைக்கிறேன், ஆனால் தேவனுடைய வார்த்தையில் காணப்படும் சத்தியம் என்னை அதிலிருந்து விடுவித்துள்ளது, தேவனுக்கே ஸ்தோத்திரம். இருப்பினும், எனக்கு இன்னும் அவ்வப்போது எந்த நாளிலும் நான் போதுமான அளவு வேலை செய்யவில்லை என்ற வேதனை உணர்வு இருப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்

என் இடுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிறகு, என் மகள் என்னுடன் சில நாட்கள் தங்கினாள். அவளும் டேவும் என்னைக் கவனித்துக் கொள்ள

முயன்றனர், ஆனால் நான் ஏதாவது செய்ய விரும்பினேன். என் மகள் என்னிடம், “ஏன் உங்களால் அமைதியாக இருக்க முடியாதா?” என்றாள்.

நான் சோம்பேறியாக இருக்க விரும்பவில்லை என்று பதிலளித்தேன். அவள் என்னை வித்தியாசமாகப் பார்த்தாள், பின்னர் வெறித்தனமாக சிரிக்க ஆரம்பித்தாள். அவள் சொன்னாள், “யாராவது சோம்பேறியாகும் ஆபத்தில் இருந்தால், அது நீங்கள் அல்ல!” நான் எப்போதும் போதுமானதைச் செய்கிறேன் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் என்று அவளுக்குத் தெரியும் என்பதால் அவள் அப்படிச் சொன்னாள்.

நான் மிகவும் பொறுப்பானவள். நான் போதுமானதைச் செய்கிறேன் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எனது சில ஆசைகள் அதிலிருந்து வந்திருக்கலாம், ஆனால் நான் போதுமான அளவு செய்யவில்லை என்றால் தேவன் என்னில் பிரியப்பட மாட்டார் என்ற பயத்தில் அது அதிகமாக வேரூன்றியது. அந்த பயம் என் தந்தையிடமிருந்து வந்தது, அவர் வேடிக்கைகளுக்கு எந்த மதிப்பும் கொடுக்கமாட்டார், நான் வேலை செய்துக் கொண்டிருந்தால் மட்டுமே என் மேல் பிரியமாக இருப்பதாகத் தோன்றியது. சிரித்ததால் சிக்கலில் சிக்கியது எனக்கு நினைவிருக்கிறது. என் தந்தை மிகவும் மகிழ்ச்சியற்ற மனிதர், அவரைச் சுற்றி யாராவது மகிழ்ச்சியாக இருந்தால் அது அவருக்கு எரிச்சலூட்டுவதாகத் தோன்றியது.

ஒருவேளை நீங்கள் போதுமான அளவு செய்யவில்லை என்ற பயத்துடன் போராடலாம், ஆனால் உங்களுக்கு தவறான குழந்தைப் பருவம் இல்லை. உண்மையில், அது நேர்மாறாக இருந்தது. உங்கள் பெற்றோர் நல்லவர்களாக இருந்தார்கள்; நீங்கள் நேசிக்கப்பட்டீர்களென்று உங்களுக்குத் தெரியும்; நீங்கள் பள்ளியில் சிறந்து விளங்கினீர்கள் மற்றும் பிற நேர்மறையான அனுபவங்களைப் பெற்றீர்கள். எனவே நீங்கள் ஆச்சரியப்படலாம், “நான் ஏன் இப்படி இருக்கிறேன்? குற்ற உணர்ச்சியில்லாமல் ஓய்வெடுப்பது எனக்கு ஏன் கடினமாக இருக்கிறது?” நாம் எவ்வளவு கடினமாக உழைக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நமக்குச் சொத்து இருக்கிறதோ, நாம் அவ்வளவு அதிக மதிப்புமிக்கவர்கள் என்ற எண்ணத்தை நம் சமூகம் நமக்குத் தருகிறது என்று நினைக்கிறேன். இது உண்மையல்ல என்றாலும், அது உண்மை என்று நாம் ஆழ்மனதில் நம்பினால் கூட, அந்த நம்பிக்கை நம்மை எதிர்மறையாக பாதிக்கும்.

> குற்ற உணர்வு இல்லாமல் ஓய்வெடுப்பது எனக்கு ஏன் கடினமாக இருக்கிறது?

தேவன் நம்மை மீட்கிறார்

பிசாசு நம்மிடமிருந்து திருடிய அனைத்தையும் தேவன் மீட்கிறார். கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, மீட்பு என்ற வார்த்தையின் அர்த்தம், இயேசு நம்மை மீட்க சிந்தப்பட்ட தமது இரத்தத்தை விலைகிரயமாக செலுத்தி நமது சுதந்திரத்தை வாங்கினார். எனது குழந்தைப் பருவத்திலும் பிற தகாத உறவுகள் மூலமாகவும் திருடப்பட்ட பல விஷயங்களை அவர் எனக்கு திரும்ப கொடுத்துள்ளார். அவற்றில் ஒன்று நான் போதுமானதை செய்யவில்லை என்று எப்போதும் பயப்படுவதிலிருந்து சுதந்திரம்.

அந்த பயத்துடன் நீங்கள் யுத்தம் செய்து கொண்டிருந்தால், அவர் உங்களுக்கும் அதையே செய்ய விரும்புகிறார். சுதந்திரத்திற்காகவே கிறிஸ்து நம்மை விடுதலையாக்கினார் (கலா. 5:1). எந்த வகையான பயமும் அடிமைத்தனம் தான், அதிலிருந்து தேவன் நம்மை விடுவிக்க விரும்புகிறார். இது ஒரு பிரச்சனை என்று நமக்கு தெரியாத ஒன்றிலிருந்து நாம் விடுபட முடியாது. சிலருக்கு-ஒருவேளை உங்களுக்கும் கூட-உங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியில் ஒரு குறிப்பிட்ட பயம் இருந்திருக்கலாம், அதைப் பற்றி நீங்கள் உணரும் விதத்தில் நீங்கள் உணரக்கூடாது என்பதை அறியாமலே அவ்வாறு இருந்திருக்கலாம். நீங்கள் போதுமான அளவு செய்யவில்லை என்று நீங்கள் பயப்பட வேண்டியதில்லை, ஏனென்றால் நீங்கள் எவ்வளவு செய்தாலும் அது போதுமானதாக இருக்காது. அதனால்தான் இயேசு தேவையான அனைத்தையும் செய்தார், அதற்கு மேல் எந்த தியாகமும் தேவையில்லை. இயேசுவின் தியாகம் பரிபூரணமானது என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள், அதில் நாம் வேறு எதையும் சேர்க்க வேண்டியதில்லை. எந்த ஒரு “செயல்” செய்தாலும், தேவன் இப்போது உங்களை நேசிப்பதை விட இன்னும் அதிகமாக உங்களை நேசிக்க செய்ய முடியாது.

நான் ஓய்வெடுக்கும்போது அல்லது தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது, நான் ஏன் குறைந்த அளவிலான குற்ற உணர்வோடு வாழ்ந்தேன் என்பதை இந்த புரிதல் எனக்கு உணர்த்தியது. எனது எல்லா வேலைகளும் முடிவடையும் வரை நான் எதையும் அனுபவிக்கத் தகுதியானவன் என்று நான் நினைக்காததால் நான் குற்ற உணர்ச்சியுடன் இருப்பதாக தேவன் எனக்குக் காட்டினார். அந்த மாதிரியான தவறான சிந்தனையின் பிரச்சனை என்னவென்றால், நாம் எவ்வளவு செய்தாலும், இன்னும் அதிகமாக செய்ய வேண்டியது இருக்கும். நாம் ஒவ்வொரு நாளும் நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும். பின்னர் ஓய்வு மற்றும் மகிழ்ச்சியைப் பெற வேண்டும், அதனால் நாம் புத்துணர்ச்சியுடன் இருந்து மீண்டும் அடுத்த நாளை தொடங்கலாம்.

வெளிப்படையாக, இது நாம் செய்ய வேண்டிய வேலையைச் செய்வதற்கு நம்மை நாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளக் கூடாது என்றோ அல்லது சோம்பேறியாகவும் பயனற்றதாகவும் இருக்கலாம் என்றோ அர்த்தமாகாது. வேலை முக்கியம் தான், ஆனால் வேலையைப் போலவே ஓய்வும் முக்கியம்.

ஏற்கத்தக்கதாக ஆக்கப்பட்டது

இயேசு கிறிஸ்து மீது நாம் வைத்திருக்கும் விசுவாசத்தின் மூலம் நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். எனவே, அவர் நம்மை ஏற்றுக்கொள்வதற்கு நாம் குறிப்பிட்ட அளவு வேலைகளைச் செய்ய வேண்டியதில்லை அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தியாகங்களைச் செய்ய வேண்டியதில்லை. அங்கீகாரத்தைப் பெற வேலை செய்வது உலகத்தின் தரமாக இருக்கலாம், ஆனால் அது தேவனுடையது அல்ல.

நாம் இனி இவ்வாறாக கேட்க வேண்டியதில்லை: நான் நீண்ட நேரம் ஜெபித்தேனா? நான் வேதத்தை நீண்ட நேரம் படித்தேனா? நான் தொலைக்காட்சியை அதிகமாக பார்த்தேனா? நான் கொடுப்பது போதுமா? நான் மற்றவர்களிடம் அன்பாக இருந்தேனா? நம் மனங்கள் “போதுமா?” என்ற கேள்விகளால் நிறைந்திருக்கலாம், அவை ஒவ்வொன்றிற்கும் பதில் “ஆம், எனக்காக மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த இயேசுவின் மூலம் போதும்.” நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று தேவன் நம்மிடம் சொல்வதாக நம்பினால், நாம் அவரை நேசிப்பதால் அவருக்குக் கீழ்ப்படிகிறோம், அவரிடமிருந்து எதையும் சம்பாதிக்க முடியாது என்பதை நினைவில் கொண்டவர்களாக எல்லா வகையிலும் நாம் உடனடியாக அதைச் செய்ய வேண்டும்,. நாம் அதிகமாக வேலை செய்ய வேண்டும், அதிகமாக படிக்க வேண்டும் அல்லது வேறு ஏதாவது செய்ய வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தெரிவிப்பார், நாம் எப்போது வேலையை ஒதுக்கி வைத்துவிட்டு ஓய்வெடுத்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதையும் நமக்குத் தெரியப்படுத்த விரும்புகிறார்.

ஏமாற்றமாக இருக்கலாம் அல்லது ஒருவேளை கோபமாக இருக்கலாம் என்று யோசிப்பதும் ஒரு வகையான பயத்தை பிரதிபலிக்கிறது. பயத்தின் அடக்குமுறை வகைகளில் இதுவும் ஒன்றாகும், ஏனென்றால் அது குற்ற உணர்ச்சியின்றி ஓய்வெடுக்க அனுமதிக்காது. உங்களுக்கு மூன்று குழந்தைகள் இருந்தால், ஒவ்வொரு நாளும் காலையில் அவர்கள் உங்களிடம் வந்து, “நீங்கள் எங்களை ஏற்றுக்கொள்ள இன்று நாங்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டால், அவர்கள் தகுதியான

எதையும் செய்யாமலே நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள் என்று அவர்கள் நம்பவில்லை என்று அர்த்தம். நீங்கள் ஒருவேளை புண்படுவீர்கள். நம் குழந்தைகள் நமக்காக ஏதாவது செய்தால், அவர்களின் நல்ல செயல்களால் நம் அன்பை வாங்க வேண்டும் என்று அவர்கள் நினைப்பதால் அல்ல அவர்கள் உண்மையிலேயே நம்மை விரும்புவதால் அவர்கள் அவ்வாறு செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்,

நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம், ஆனால் நம்முடைய பரிபூரணத்தால் அவை பதிலளிக்கப்படவில்லை. நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும்போது, நாம் என்னவாக இருக்கிறோமோ அதையெல்லாம் தேவனுக்குக் காட்டாமல் நாம் இயேசு யாராக இருக்கிறாரோ அதை காட்டுகின்றோம். இல்லையெனில், நாம் நம் சொந்த பெயர்களில் பிரார்த்தனை செய்வோம்.

> பிதா குமாரனில் மகிமைப்படுத்தப்படவும் மேன்மைப்படுத்தப்படவும், என் பெயரில் நீங்கள் கேட்பதை நான் செய்வேன்.
>
> [ஆம்] நீங்கள் என் பெயரில் எதைக் கேட்டாலும் [நான் என்னவாக இருக்கிறேன் என்பதை] வழங்குவேன்.
>
> யோவான் 14:13-14

சோர்வடைந்தவர்களை தம்மிடம் வரும்படி இயேசு அழைக்கிறார்

நாம் இளைப்பாகவோ, பாரமாகவோ அல்லது அதிக சுமையாகவோ இருக்கும் போது, நாம் அவரிடம் வர வேண்டும், அவர் நமக்கு இளைப்பாறுதல் தருவார் என்று இயேசு கூறினார் (மத். 11:28). “என்னிடம் வாருங்கள்,நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களின் பட்டியலை நான் உங்களுக்குத் தருகிறேன்” என்று அவர் கூறவில்லை என்பதைக் கவனியுங்கள். நாம் சோர்வாக இருக்கும்போது, அவரது ஓய்விற்குள் நாம் நுழைய வேண்டும் என்று இயேசு விரும்புகிறார், இது மனரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும், உடல் ரீதியாகவும், ஆவிக்குறிய ரீதியாகவும் நம்மைப் புத்துணர்ச்சியடையச் செய்கிறது. இது ஒரு முழுமையான ஓய்வு. நமக்கு அது தேவை, அது நமக்கு இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

மத்தேயு 11:29 ல், இயேசு நம் நுகத்தை அவர் மீது ஏற்றி, அவர் எவ்வாறு காரியங்களைச் செய்கிறார் என்பதை அறியும்படி கூறினார். இயேசு

வேலையிலிருந்து ஓய்வெடுக்கவில்லை, அவர் வேலை செய்யும் போது ஓய்வெடுத்தார், நாமும் அவ்வாறு செய்ய கற்றுக்கொள்ளலாம். ஓய்வு என்ற சொல்லை அதன் அசல் புதிய ஏற்பாட்டு கிரேக்க மொழியில் படித்தால், அது முதலில் எதிலிருந்தாவது "ஓய்வெடுப்பது" என்று மொழிபெயர்க்கப்பட்டது என்பதை அறிகிறோம். உண்மையில், இது வேலையில் இருந்து ஓய்வு மட்டுமல்ல, நாம் செய்வதை எப்படி பயத்தோடும், சோர்வோடும் செய்யாமல் எப்படி விசுவாசத்தோடு செய்து பின்னர் இளைப்பாற வேண்டும் என்பதை கற்றுக் கொள்ள ஒரு அழைப்பாக இருக்கிறது.

இயேசு பரலோகத்திற்குச் சென்றபோது, நமக்கு உதவ பரிசுத்த ஆவியை பூமிக்கு அனுப்பினார். நாம் செய்யும் எல்லாவற்றிலும் நமக்கு உதவ அவர் அழைக்கப்பட விரும்புகிறார். நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்கிறோம் என்றால், பரிசுத்த ஆவியானவர் அதைச் செய்வதற்கு நமக்கு கிருபையைத் தருகிறார், அது நாம் எளிதாக அதை நிறைவேற்ற உதவுகிறது. நாம் போதுமான அளவு செய்யவில்லை என்று பயந்துகொண்டு, வெறித்தனமாக நாமே காரியங்களைச் செய்ய முயலும்போதுதான், நாம் கடினமாக உழைக்கிறோம், அதிக சுமையாக உணர்கிறோம். ஆனால் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள் என்பதை அது விவரித்தாலும், "இயேசுவிடம் வாருங்கள்," அவருடைய தனித்துவமான ஓய்வில் எப்படி நுழைவது என்பதை அறிய உங்களுக்கு அழைப்பு உள்ளது.

தேவனின் தேவைகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நமக்காக ஒருகாலும் நம்மால் செய்யவே முடியாததை நமக்காகச் செய்வதற்காக அவர் பூமிக்கு வந்து மனித கோலத்தை எடுத்தார். கைமாறாக அவர் கேட்பது என்னவென்றால், நாம் அவரை விசுவாசிக்க வேண்டும். அவர்மீது நம் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைத்து, நம்முடைய நம்பிக்கையின் சான்றாக அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். இயேசு நமக்காகச் செய்தது அவர் நம்மீது கொண்டிருக்கும் அன்பினால் செய்யப்பட்டதே தவிர, நம்முடைய செயல்களால் அல்ல என்பதை நாம் புரிந்துகொண்டு நம்பினால், நாம் மகிழ்ச்சியுடனும், சுலபமாகவும் பணிகளைச் செய்யலாம். நாம் இயேசுவை நேசிப்பதால் அவற்றைச் செய்யலாம்.

தேவனின் தேவைகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தூய இருதயத்தோடு நாம் செய்யும்

வேலை தான் தேவனுக்கு ஏற்புடைய ஒரே வேலையாகும்.நடைமுறையில், இதன் பொருள் என்ன?

1. நாம் தேவனுக்காக செய்யும் வேலை நாம் அவரை நேசிப்பதால் மட்டுமே செய்யப்பட வேண்டும்.
2. தேவனுக்காகச் செய்யப்படும் வேலை அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிந்து செய்யப்பட வேண்டும்.
3. தேவனுக்காகச் செய்யப்படும் வேலைகள் விசுவாசத்துடன் செய்யப்பட வேண்டும், அதன் வெற்றிக்காக முழுவதுமாக அவரைச் சார்ந்து இருக்க வேண்டும்.
4. தேவனுக்காகச் செய்யப்படும் வேலைகள் மக்களால் பார்க்கப்படுவதற்கும் அங்கீகரிக்கப்படுவதற்கும் அல்லது அவர்களின் கைதட்டல், பாராட்டு, போற்றுதல் அல்லது அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் செய்யப்படக்கூடாது. நோக்கத்தின் தூய்மை தேவனின் விருப்பம், அது நம்முடையதாகவும் இருக்க வேண்டும்.

நம்முடைய செயல்கள் நியாயந்தீர்க்கப்படுவதற்காக நாம் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, அவை நெருப்பைக் கடந்து செல்லும், தூய்மையானவைகளுக்கு மட்டுமே வெகுமதி கிடைக்கும் என்று வேதம் நமக்குக் கற்பிக்கிறது. மீதமுள்ளவை எரிக்கப்படும், தூய்மையாக இல்லாமலிருந்தால் நமக்குக் கிடைக்கும் வெகுமதி நமக்கு இருக்காது. நாம் இரட்சிக்கப்படுவோம் ஆனால் நாம் அனுபவித்திருக்கக்கூடிய எந்த வெகுமதியையும் இழந்து விடுவோம் (1 கொரி. 3:12-15).

நான் தேவனை நேசிக்கிறேன், நான் பரலோகத்திற்கு வரும்போது எனது வெகுமதிகளை விரும்புகிறேன். இதனாலேயே நான் எனது இருதயத்தை ஆராய்ந்து, இறைவனுக்காக நான் செய்யும் பணிக்கான எனது நோக்கங்கள் தூய்மையானவை என்பதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறேன். சில சமயங்களில் நாம் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம், நம் சொந்த இதயங்களை உண்மையாகவே அறியாமல் இருப்போம், அதனால் நான் கொண்டிருக்கும் தூய்மையற்ற நோக்கங்களை எனக்கு வெளிப்படுத்த தேவனை சார்ந்திருக்கிறேன்.

சங்கீதக்காரனாகிய தாவீது, அவனுடைய இருதயத்தை ஆராய்ந்து, அவனிடத்தில் ஏதாவது பொல்லாத வழி இருக்கிறதா என்று பார்க்கும்படி தேவனை அழைத்தான் (சங். 139:23-24). நாம் அந்த முன்மாதிரியைப்

பின்பற்றுவது புத்திசாலித்தனமாக இருக்கும், ஏனென்றால் நம் இதயங்களைப் பற்றி நம்மை விட தேவனுக்கு அதிகமாக தெரியும். நாம் ஒருபோதும் ஆக்கினைகுள்ளாக வேண்டியதில்லை (ரோ. 8:1), ஆனால் பரிசுத்த ஆவியானவருக்குப் பிரியமில்லாத நடத்தையைப் பற்றிய உணர்த்துதலை நாம் பெற வேண்டும். உணர்த்துதல் எதிர்மறையானது அல்ல; அது நேர்மறையானது. என்னைப் பொறுத்தவரை, தேவனின் அன்பைக் காட்டுவதும், என்னை சிக்கலில் இருந்து விலக்குவதும் இதுவே.

நாம் ஜெபிக்கும்போது, கொடுக்கும்போது, தேவனுடைய வார்த்தையைப் படிக்கும்போது அல்லது எந்த விதமான நற்செயல்களைச் செய்யும்போதும், தேவனின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக நாம் அவைகளை அணுகக்கூடாது. நாம் அவரை விசுவாசிப்பதால் அவருடைய அங்கீகாரத்தை ஏற்கனவே பெற்றிருக்கிறோம். நம்முடைய பாவத்தில் நாம் மரித்திருக்கும்போதே நமக்காக மரிக்க அவர் தம்முடைய குமாரனை அனுப்பியதால் (கொலோ. 2:13-14; ரோ. 5:8), அவர் நம்மை நிபந்தனையின்றி நேசிக்கிறார் என்பதும் அவருடைய அன்பு நாம் செய்யும் எந்த நல்ல வேலையையும் அடிப்படையாகக் கொண்டது இல்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது..

உங்கள் மேல் மிகவும் கடினமாக இருக்காதீர்கள்

உலகமும், பிசாசும் நம்மீது கடினமாக உள்ளது. நாமும் நம்மீது அதிகக் கடினமாயிருந்து அவர்களுக்கு உதவ வேண்டிய அவசியமில்லை. தேவன் இரக்கமுள்ளவர்! நாம் அவருடைய இரக்கத்தைப் பெறும் போது, அது நாம் நம்மீது இரக்கம் காட்ட நமக்கு உதவுகிறது. தேவனுடனான எனது நடைப்பயணத்தின் ஆரம்பத்தில் மற்றவர்களிடம் கருணை காட்ட நான் போராடியதற்குக் காரணம், தேவனின் இரக்கத்தை நான் எனக்காக பெறவில்லை என்பதால் தான் என்பதை நான் கண்டேன். “நம்மிடம் இல்லாததை நம்மால் கொடுக்க முடியாது” என்று நான் அடிக்கடி கூறுவேன். உங்கள் சொந்த பாவங்கள், தவறுகள் மற்றும் தோல்விகளுக்காக தேவனுடைய இரக்கத்தைப் பெறுங்கள், மற்றவர்களின் பலவீனங்களுக்கு இரக்கம் காட்டுவது எளிது என்பதை நீங்கள் காண்பீர்கள்.

நம் அனைவருக்கும் பலவீனங்கள் உள்ளன, இயேசு அவற்றைப் புரிந்துகொள்கிறார், ஏனென்றால் அவர் நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார். வித்தியாசம் என்னவென்றால், அவர் பாவம் செய்யவில்லை (எபி. 4:15). பலவீனம் அக்கிரமத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. மீண்டும் பிறந்த எந்த விசுவாசியும் பொல்லாதவன் அல்ல ஏனென்றால் தேவனுடைய தன்மை

அவர்களிடம் உள்ளது. அவருடைய இருதயமும் ஆவியும் அவர்களுடைய ஆவியின் உள்ளே தங்கியிருக்கின்றன, மேலும் அவர்கள் பாவத்தில் பழக்கத்தின் நிமித்தமாகவோ அல்லது தெரிந்தோ தொடர முடியாது (1 யோவான் 3:9). நாம் அனைவரும் சில நேரங்களில் பலவீனத்தைக் காட்டுகிறோம். நாம் அனைவரும் பாவம் செய்கிறோம், சில சமயங்களில் தேவனின் அடையாளத்தை இழக்கிறோம், ஆனால் அது தீயவர்களாக இருப்பதிலிருந்தும் நோக்கத்துடன் வேண்டுமென்றே, பழக்கமான பாவத்தில் வாழ்வதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

சிறப்புத் தேவைக் குழந்தைகளைப் பெற்றிருப்பவர்கள், அந்த வரம்புகள் இல்லாத குழந்தைகளிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்களோ அதை இவர்களிடமிருந்து எதிர்பார்க்க மாட்டார்கள். அதுபோலவே, தேவன் நம்மை அறிந்திருக்கிறார், நாம் அனைவரும் பிறவி பலவீனங்களைக் கொண்ட மனிதர்கள். நாம் மகிமையிலிருந்து மகிமைக்கு இயேசு கிறிஸ்துவின் சாயலாக மாற்றப்படுகிறோம் என்றாலும் (2 கொரி. 3:18), நாம் இன்னும் அதை அடையவில்லை என்பதை அவர் அறிவார். இயேசு நம் பலவீனங்களையும் சிறுமைகளையும் புரிந்துகொள்கிற ஒரு இரக்கமுள்ள பிரதான ஆசாரியராக இருக்கிறார். நாமும் நம் வாழ்வில் நாம் கையாளும் நபர்களிடம் அதே கருணை மற்றும் இரக்க மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

நான் பயத்தை “சாத்தானின் வேதனை கருவி” என்று அழைக்கிறேன். நாம் பயத்திற்கு அடிபணியும்போது, அது நாம் செய்யும் எல்லாவற்றிலிருந்தும் மகிழ்ச்சியைத் திருடுகிறது. பயம் துன்புறுத்துகிறது, ஏனெனில் அது தண்டனையை அச்சுறுத்துகிறது, ஆனால் பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்ட அப்போஸ்தலனாகிய யோவான், “அன்பில் பயம் இல்லை. பரிபூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்” என்று எழுதினார். (1 யோவான் 4:18). தேவன் மட்டுமே நம்மை முழுமையாகவும் நிபந்தனையின்றியும் நேசிக்க முடியும், அவருடைய அன்பே நம் இருதயங்களிலிருந்து பயத்தை விரட்டுகிறது. அவர் நம்மை முழுவதுமாக ஏற்றுக்கொள்கிறார் என்பதை நாம் அறிந்தால், போதாது என்ற பயம் நம் வாழ்விலிருந்து மறைந்துவிடும்.

இயேசுவின் மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையின் காரணமாக மட்டுமே தேவன் நம்மீது பிரியமாயிருக்கிறார் என்று நம்ப மறுத்தால், எல்லா வகையான பிரச்சனைகளுக்கும் நாம் கதவைத் திறந்து விடுவோம் என்று நான் நம்புகிறேன். பூமியில் இயேசுவின் மூன்று வருட ஊழியத்தின் போது இரண்டு வெவ்வேறு சமயங்களில், பரலோகத்திலிருந்து ஒரு குரல் வந்தது,

“இவர் என் நேச குமாரன், இவரில் நான் மிகவும் பிரியமாயிருக்கிறேன்” (மத். 3:17; 17:5).

இயேசு தம் பிதாவின் வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டார். அவர் அவற்றை நிராகரிக்கவில்லை. அப்படி செய்திருந்தால் பல பிரச்சனைகளை உண்டாக்கியிருக்கும். தேவன் நம்மை நேசிக்கிறார், அங்கீகரிக்கிறார் என்று நாம் நம்ப வேண்டும். நிச்சயமாகவே, நம்முடைய எல்லா நடத்தைகளிலும் அவர் பிரியப்படுகிறதில்லை, ஏனென்றால் நாம் இன்னும் ஆவிக்குரிய ரீதியில் வளர்ந்து வருகிறோம், ஆனால் அவரை நேசிக்கும் சரியானதைச் செய்ய விரும்பும் தனி நபர்களாக அவர் நம்மில் பிரியமாயிருக்கிறார்.

“தேவன் என்னில் பிரியமாயிருக்கிறார்” என்று நீங்கள் விசுவாசத்தோடு உங்கள் இருதயத்தில் அமைதியாகச் சொல்லும்படி நான் கடுமையாக பரிந்துரைக்கிறேன். நீங்கள் ஒரு படி மேலே சென்று நீங்கள் தனியாக இருக்கும்போது சத்தமாக சொல்லலாம். இது உங்களுக்கு நம்பிக்கையை அளித்து, நீங்கள் போதுமான அளவு செய்யவில்லை என்ற பயத்திலிருந்து உங்களை விடுவிக்கவும் உதவும்.

அன்பை இன்னும் ஒரு முறை நம்புவதற்கு போதுமான தைரியம் வேண்டும், எப்போதும் இன்னும் ஒரு முறை.

- மாயா ஏஞ்சலோ

கடந்த கால வலியின் காரணமாக நெருக்கம் பற்றிய பயம்

அது ஒரு புதிய நட்பிலோ அல்லது உடன்படிக்கை உறவு பிரச்சனைகளிலோ இருந்தாலும், பயம் தொடர்ந்து வெளிப்பட்டு என்னை உண்மையான தொடர்பில் இருந்து தடுக்கிறது. உறவுகள் உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் தொடங்கினாலும், என் மனம் எப்போதும் என்னை குழப்பி, என்னை கவலை, சந்தேகம் மற்றும் அவநம்பிக்கையுடன் இருக்க செய்து விடுகிறது.

என் டீன் ஏஜ் பருவத்தில், என் அப்பா தன்னை ஏமாற்றிக்கொண்டிருப்பதை என் அம்மா கண்டுபிடித்தபோது என் பெற்றோர் ஒரு கடினமான பருவத்தை கடந்து சென்றனர்.

எங்கள் சிறிய குடும்பத்தில் ஏற்பட்ட இந்த முறிவு மற்ற உறவினர்கள் மற்றும் நெருங்கிய குடும்ப நண்பர்களுடனான உறவுகளில் மாற்றங்களுக்கு வழிவகுத்தது. குடும்பத்தின் இயக்கவியல் முன்பு இருந்ததைப் போல இல்லை என்ற யதார்த்தம் உண்மையான போது, பல அசிங்கமான உண்மைகள் வெளிவரத் தொடங்கின.

ஒரு குடும்பமாக, நாங்கள் எப்படி உணர்ந்தோம் என்பதைப் பற்றி நேர்மையாகப் பேசினோம். என் அம்மா அந்த உரையாடல்களைத் தொடங்கியதே இதற்குக் காரணம். என் தந்தையோ மிகுந்த யோசனையுடன், அமைதியாக, பின்தங்கி இருப்பார்.-இன்று என்னிலும் நான் அத்தகைய பல குணநலன்களைக் காண்கின்றேன்.

நான் அடிக்கடி என் அம்மாவிடம் அந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதைக் கண்டேன், ஆனால் என் தந்தையுடன் ஒருபோதும் இல்லை மௌனம் அல்லது வேறு உரையாடல் ஒரு சிறந்த பாதையைப் போலிருந்தது. இது பல விடையளிக்கப்படாத கேள்விகளுக்கு வழிவகுத்தது, அவற்றில் சில இன்றும் பதிலளிக்கப்படாமலிருக்கிறது.

நான் வளர்ந்தவுடன், நான் என் தந்தையைப் போல இருக்க விரும்பவில்லை என்பது எனக்கு மிகவும் தெளிவாகிவிட்டது, இது உறவுகள் என்று வரும்போது எனது பயத்தின் வேராக இருந்தது. என் வாழ்க்கையில் உள்ள பல்வேறு உறவுகளுக்கு நான் உறுதியாக அர்ப்பணிப்போடு இருக்க விரும்புகிறேன், ஆனால் இந்த பயம் அதற்கு பெரும் தடையாக உள்ளது.

நான் என் அப்பா செய்த தவறுகளைத் தவிர்க்க அவருடைய பதில்களைத் தவிர வேறு எதையும் நான் விரும்பமாட்டேன், அதனால் ஏற்பட்ட வலியையும் வடுவையும் நான் காண்கிறேன். ஆனால் இந்த உணர்வுகளை என் அப்பாவிடம் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் என்னை பயமுறுத்துகிறது.

இது நான் இயேசுவிடம் ஒப்படைக்க வேண்டிய ஒன்று என்பதை நான் அறிவேன். நான் பயத்தை விட சுதந்திரத்தைத் தேர்ந்தெடுத்து, அவருடைய ஞானத்தையும் தைரியத்தையும் அவரிடம் கேட்க வேண்டும் - நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டிய உறவை தடுக்கும் இந்த பயத்தைக் கடந்து செல்ல வேண்டிய தைரியத்தை கேட்க வேண்டும்.

- ஆஷ்லே

அத்தியாயம் 22

நீங்கள் ஆரோக்கியமான உறவுகளை உருவாக்க முடியும்

தேவனையும் பிறரையும் நம்பும் பயத்திலிருந்து விடுதலை

> உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.
>
> ஏசாயா 26:3

பயந்தவர்கள் நம்ப முடியாது. அவர்கள் வேதனையில் வாழ்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் தொடர்ந்து தங்களைக் கவனித்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். அவர்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்த முயற்சி செய்கிறார்கள் மற்றவர்கள் தங்களை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க மாட்டார்கள். குறிப்பாக காயப்படுத்தப்பட்ட, துஷ்பிரயோகம் செய்யப்பட்ட, காட்டிக் கொடுக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட மக்கள் இந்த பயத்திற்கு ஆளாகிறார்கள். அவர்களின் கடந்த கால வலியின் நினைவுகள் அவர்களை ஒரு சுய-பாதுகாப்பு முறையில் வாழ வைக்கின்றன, இது அவர்களை ஒருபோதும் நம்பவும், ஓய்வெடுக்கவும், வாழ்க்கையை அனுபவிக்கவும் அனுமதிக்காது.

நாம் ஒருபோதும் புண்படுத்தப்பட மாட்டோம் அல்லது ஏமாற்றமடைய மாட்டோம் என்பதற்கு நம்மில் யாருக்கும் உத்தரவாதம் இல்லை. எவ்வாறாயினும், நாம் தேவன் மீது நம்பிக்கை வைத்தால், அவர் நீதியுடன் நியாயந்தீர்ப்பார், எப்பொழுதும் நம்மை நியாயப்படுத்துவார் என்ற வாக்குறுதி நமக்கு இருக்கிறது.

பிறருடன் நாம் அதைச் செய்வதற்கு முன், தேவனுடன் நெருக்கமான, நம்பிக்கையான உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். பல வேத வசனங்கள் தேவனை நம்பும்படி நமக்கு அறிவுறுத்துகின்றன, அது எளிதாகத் தோன்றினாலும், நாம் பல வேளைகளில் அது கடினமாக இருப்பதாக காண்கிறோம். நம்பிக்கைக்கு நம் வாழ்வில் சில விடை தெரியாத கேள்விகள் இருக்க வேண்டும் மட்டுமல்ல. தேவன் நமக்குத் தேவையானதை எப்படி அல்லது எப்போது செய்வார் என்று தெரியாமல் இருப்பதில் நாம் வசதியாக இருக்க வேண்டும் என்று கோருகிறது. நாம் அவர்மீது பாரத்தை வைத்துவிட்டு, அவர் நம்மைக் கவனித்துக்கொள்வார் என்று நம்ப வேண்டும் (1 பேதுரு 5:7).

நாம் தனிமைக்காக அல்ல, இணைப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ளோம். ஆனால், நாம் பிறரால் பயன்படுத்திக் கொள்ளப்படுவோம் என்று தொடர்ந்து பயந்தால், நாம் நெருக்கத்திலிருந்து விலகி, நமக்கும் மற்றவர்களுக்கும் இடையே வசதியான தூரத்தை விரும்பி சென்று விடுவோம். நமக்கு சில உறவுகள் இருக்கலாம், ஆனால் அவை நாம் பாதுகாப்பானதாக உணரும் தூரத்தில் வைக்கப்படுவதை உறுதிசெய்கிறோம். நாம் மக்களை உள்ளே அனுமதிக்கலாம், ஆனால் உண்மையிலேயே நெருக்கமாக இருக்காது.

> நாம் தனிமைக்காக அல்ல, இணைப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ளோம்.

தேவனுடன் நெருக்கம்

நாம் விரும்பும் மதத்தை நாம் பெற்றுக் கொள்வதற்காக அல்ல, ஆனால் அவர் மூலம் தேவனுடன் நெருங்கிய, நெருக்கமான, தனிப்பட்ட உறவைக் கொண்டிருக்கவே இயேசு மரித்தார். இயேசு மனித கோலத்தை அணிந்து பூமிக்கு வந்தபோது, அவர் பலதரப்பட்ட மக்களுடன் நெருங்கிய உறவை வளர்த்துக் கொண்டார், அவர் தன் பரலோகத் தகப்பனுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்ததால் மட்டுமே அவரால் அதைச் செய்ய முடிந்தது.

தேவன் ஏற்கனவே கிறிஸ்துவின் மூலம் நம்மிடம் நெருங்கி வந்துள்ளார், நாம் அவரிடம் நெருங்கி வர அழைக்கப்படுகிறோம்:

> தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.
>
> யாக்கோபு 4:8

நிராகரிக்கப்படுவோம் என்ற அச்சமின்றி, நம் முழு வாழ்க்கையையும் அவருக்குத் திறக்க முடியும். நம்மைப் பற்றி அறிய வேண்டிய அனைத்தையும் அவர் ஏற்கனவே அறிந்திருக்கிறார். நாம் என்ன செய்யப் போகிறோம், சொல்லப் போகிறோம், என்பது அதைச் செய்வதற்கு முன்பே அவருக்குத் தெரியும். நாம் தேவனுடன் நெருங்கி பழகுவதற்கான ஒரு வழி, எதையும் மறைக்காமல், எல்லாவற்றையும் பற்றி அவருடன் பேசுவது. எவ்வாறாயினும் தேவனிடமிருந்து இரகசியங்களை நம்மால் மறைக்க முடியாது, ஏன் அவ்வாறு செய்ய முயற்சிக்க வேண்டும்?

நீங்கள் தேவனிடம் பேசலாம், அவர் உங்களிடம் பேசுவதைக் கேட்கலாம். அவர் பல்வேறு வழிகளில் பேசுகிறார், ஆனால் நீங்கள் அவருடைய குரலை அடையாளம் காண கற்றுக்கொள்ளலாம். இயேசுவினுடையவர்கள் அவருடைய சத்தத்தை அறிவார்கள் என்று கூறினார் (யோவான் 10:3-4).

அப்போஸ்தலனாகிய பவுல், தேவனை அறிந்து கொள்வதும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிந்து கொள்வதும்தான் அவருடைய “உறுதியான நோக்கம்” என்று கூறினார் (பிலி. 3:10). அவர் தேவனைப் பற்றி மட்டும் தெரிந்து கொள்ள விரும்பவில்லை; அவர் தேவனையே அறிய விரும்பினார். தேவனைப் பற்றி நிறைய பேருக்குத் தெரியும். அவர்கள் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள், அவர் இருக்கிறார் என்று கூட நம்பலாம், ஆனால் அவர்கள் அவரைத் தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளவில்லை, அவர்களைப் பற்றிய எல்லாவற்றிற்கும் அவரை நம்புகிறதில்லை.

தேவனுடனான நெருங்கிய, நம்பிக்கையான உறவே பல வேதனை தரும் பயங்கள் மற்றும் நடத்தை முறைகளிலிருந்து நம்மை விடுவிக்கிறது. அந்த வகையான உறவின் சூழலில், எல்லாவற்றையும் நாமே கவனித்துக் கொள்ள முயற்சிப்பதில் இருந்து ஓய்வு பெற்று தேவன் நாம் வாழ வேண்டுமென்று விரும்பும் வாழ்க்கையை அனுபவிக்க ஆரம்பிக்கலாம்.

நம்மை எப்படிக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று தேவனை தவிர வேறு யாருக்கும் தெரியாது, அவ்வாறு செய்ய அவர் அழைக்கப்பட விரும்புகிறார். இயேசு எப்பொழுதும் தம்முடைய பிதா அவரை கவனித்துக்கொள்வார் என்று நம்பினார். அவர் தவறாக நடத்தப்பட்டபோதும், பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு ஆளானபோதும், அவர் தம் பிதாவின் மீது நம்பிக்கை வைத்தார்:

அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.

1 பேதுரு 2:23

காயப்படுத்தப்படுவோமோ அல்லது சாதகமாகப் பயன்படுத்தப்படுவோமோ என்ற பயத்தில் உங்களை எப்போதும் கவனித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை இனி உணராமல் இருப்பதன் மகிழ்ச்சியையும் சுதந்திரத்தையும் கற்பனை செய்து பாருங்கள். ஒருவர் உங்களை காயப்படுத்தினால் எப்படி திரும்பப் கொடுப்பது என்று நீங்கள் நினைக்காமலிருந்தால் வாழ்க்கை எவ்வளவு எளிதாக இருக்கும்? தேவன் சரியான நேரத்தில் நீதி வழங்குவார் என்று நீங்கள் நம்புவதால், அவர்கள் உங்களை மீண்டும் காயப்படுத்தமலிருப்பதை உறுதிப்படுத்த நீங்கள் ஒருபோதும் நிர்பந்திக்கப்படவில்லை என்றால் நீங்கள் எவ்வளவு சுதந்திரமாக உணருவீர்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

ஒருமுறை என்னை ஆழமாக காயப்படுத்திய பெண்களின் குழுவை நான் நினைவுகூர்கிறேன். அவர்கள் மன்னிப்பு கேட்பதற்கு பத்து ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆனால் அவர்கள் இறுதியாக மன்னிப்புக் கேட்டனர். குழுவின் செய்தித் தொடர்பாளர் என்னிடம் கூறியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது: "நாங்கள் உங்களைப் பற்றி சொன்னதிலும் உங்களுக்குச் செய்ததிலும் நாங்கள் தவறாக இருந்ததை தேவன் எங்களுக்குக் காட்டினார், நாங்கள் வருந்துகிறோம்." தேவன் எனக்கு நீதி வழங்கினார். ஒருவேளை நான் விரும்பிய அளவு விரைவாக இல்லை, ஆனால் நான் காத்திருந்த காலத்தில், மன்னிப்பு, எதிரிகளுக்காக ஜெபித்தல், எளிதில் நேசிக்க முடியாத மக்களை நேசித்தல் போன்ற பல மதிப்புமிக்க பாடங்களை அவர் எனக்குக் கற்றுக் கொடுத்தார்.

நான் என் வாழ்க்கையில் பலமுறை தேவனின் நியாயத்தை பார்த்திருக்கிறேன், நான் அதை தொடர்ந்து பார்ப்பேன் என்று நம்புகிறேன். நீங்களும் அதை பார்த்திருக்கலாம், இல்லையென்றால், எல்லாவற்றையும் நீங்களே செய்ய முயற்சிப்பதை விட தேவனை நம்புவதற்கு நீங்கள் இன்று தொடங்கலாம்.

நாம் உண்மையிலே தேவனை நம்பலாமா?

நாம் நிச்சயமாகவே தேவனை நம்பலாம்! நாம் விரும்புவதை அவர் எப்போதும் கொடுக்காமல் இருக்கலாம், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை என்றால்,

அவர் நமக்காக சிறந்த ஒன்றை மனதில் வைத்திருப்பதால் தான். நாம் பொதுவாக அவசரப்படுகிறோம், ஆனால் தேவன் இல்லை, அவருடைய நேரம் சரியானதாக இருக்கும். அவர் விரைவாகச் செய்வதை விட நம்மிலும் நம் வாழ்விலும் தரமான வேலையைச் செய்வார்.

> பொதுவாக நாம் அவசரப்படுகிறோம், ஆனால் தேவன் அப்படி இல்லை.

தேவன் நம்மைக் கவனித்துக் கொள்வாரா இல்லையா என்று நாம் நினைக்கலாம், அதைக் கண்டுபிடிப்பதற்கான ஒரே வழி அதை முயற்சிப்பதுதான். அனுபவத்தாலும், தேவனுடைய வார்த்தையாலும் அவரை நம்பலாம் என்பதை நான் அறிவேன். ஆனால் என்னுடைய சொந்த முயற்சிகளை நிறுத்திக் கொண்டு தேவன் என்ன செய்வார் என்பதைப் பார்க்க எனக்கு சிறிது நேரம் பிடித்தது. அவர் என்னை ஒருபோதும் தோல்வியடையச் செய்யவில்லை என்று நான் சந்தேகத்திற்கு இடமின்றி சொல்ல முடியும். மேலும் நான் கற்பனை செய்ய முடியாததை விட மிகச் சிறந்த ஒன்றைச் செய்து என்னை அவர் அடிக்கடி ஆச்சரியப்படுத்தினார்.

கடந்த இரண்டு நாட்களாக நான் ஒரு சூழ்நிலையைப் பற்றி, அது எந்த நன்மையும் செய்யாது என்று தெரிந்தும் கவலைப்படுகிறேன், அவர் பார்த்துக்கொள்வார் என்று இரண்டு முறை என் இருதயத்தில் தேவன் கிசுகிசுப்பதை நான் கேட்டேன். ஆனாலும் நான் இன்னும் கவலைப்படாமலிருக்கப் போராடினேன். இன்று காலை நிலவரப்படி, அந்த நிலைமை கவனிக்கப்பட்டுவிட்டது, மேலும், இது மிகவும் எளிதாக செய்யப்பட்டுவிட்டது. நான் நினைத்தது போல் பிரச்சனை பெரிதாக இல்லை, மீண்டுமாக நான் தேவனின் உண்மைத்தன்மையைக் கண்டேன்.

தேவன் உண்மையுள்ளவர், அவரால் பொய் சொல்ல முடியாது. ஆகையால், ஐயாயிரத்திற்கும் அதிகமான எண்ணிக்கையுள்ள அவருடைய வார்த்தையில் காணப்படும் வாக்குத்தத்தங்களை நாம் நம்பலாம். அவர் நீதியின் தேவன், அதாவது அவர் நம் வாழ்வில் தவறான எதையும் எப்போதும் சரிசெய்வார். நாம் அவரை நம்பினால், அவர் நமக்கு பிரதிபலனைக் கொண்டுவந்து, கடந்த காலத்தில் நாம் அனுபவித்த எந்தவொரு அநியாயத்திற்கும் பிரதி பலனளிக்கிறார்.

> கர்த்தராகிய நான் நியாயத்தை விரும்பி,
> கொள்ளைப்பொருளினால் இடப்பட்ட தகனபலியை
> வெறுக்கிறேன்; நான் அவர்கள் கிரியையை உண்மையாக்கி,

அவர்களோடே நித்திய உடன்படிக்கை பண்ணுவேன்.
ஏசாயா 61:8

நாம் தேவனுடைய வல்லமையான கரத்தின்கீழ் நம்மைத் தாழ்த்தினால், அவர் தக்க சமயத்தில் நம்மை உயர்த்துவார் என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் கற்பிக்கிறது (1 பேதுரு 5:6). நம்மைத் தாழ்த்திக்கொள்வது என்றால் தாழ்வாக இருப்பது மற்றும் கீழ்நிலையில் இருப்பது. ஆனால் நம் மாம்சம் எதற்கும் கீழ் இருக்க விரும்புவதில்லை; எல்லாவற்றிற்கும் மேலாகவும் எல்லாவற்றுக்கும் பொறுப்பாகவும் இருக்க விரும்புகிறது.

இயேசு தம்முடைய சீஷர்களிடம், அவர்களில் பெரியவர் “சிறியவரைப் போலவும், ஆட்சி செய்பவர் பணிபுரிபவரைப் போலவும் இருக்க வேண்டும்” என்று கூறினார் (லூக்கா 22:26). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உண்மையிலேயே பெரியவர்கள் தேவனுடைய வலிமையான கரத்தின் கீழ் இருப்பார்கள், தங்கள் சொந்த விருப்பப்படி நடப்பதை எதிர்ப்பார்கள். அவர்கள் தங்களை முன்னோக்கி தள்ளிக்கொள்ள மாட்டார்கள், ஆனால் தேவன் அவர்களை மேன்மைபடுத்துவதற்காக காத்திருப்பார்கள். அவர்கள் ஒருபோதும் சாதகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்த அவர்கள் முயற்சிக்க மாட்டார்கள், ஏனென்றால் தேவன் அவர்களைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் அவரை நம்புகிறார்கள்.

“நான் நம்பினால், நான் காயப்படுவேன் என்று நான் பயப்படுகிறேன்” என்ற மனப்பான்மை நமக்கு இருக்கும்போது, நாம் துன்பத்தில் வாழ்கிறோம். எப்பொழுதும் முன் நிலையில் இருக்க முயற்சிப்பதால் நாம் சோர்வடைகிறோம்- முன்னணி, மேலே, முன்னோக்கி, முதலாவதாக, பொறுப்பாக, உத்தரவுகளை வழங்கிக் கொண்டு, நம்மை விட முன்னேறக்கூடிய எவருடனும் போட்டியிட்டுக் கொண்டு, நம்மையும் நமது நிலைகளையும் எல்லோருடனும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டு, வாழும் போது சோர்வடைகிறோம். நாம் இவற்றைச் செய்யும்போது, தேவனால் மட்டுமே செய்யக்கூடிய ஒன்றை நம் சொந்த பலத்தில் செய்ய முயற்சிக்கிறோம், அதை நாம் உணர்ந்து நம்மை தாழ்த்தும் வரை தொடர்ந்து போராடுவோம்.

நடைமுறை அன்றாட வாழ்க்கை சூழ்நிலைகளில் இது எவ்வாறு செயல்படுகிறது? நான் டேவ் உடன் கோல்ஃப் விளையாடுகிறேன் என்று வைத்துக்கொள்வோம், அவர் நன்றாக விளையாடவில்லை.

அவர் தனது கோல்ஃப் விளையாட்டில் விரக்தியடைந்ததால் என்னுடன் கோபப்படுகிறார். எனது பதில் என்னவாக இருக்க வேண்டும்? நான் அவரை

வசைபாடலாம் (அடிக்கடி செய்யலாம்). நான் நினைக்கிறேன், நீங்கள் என்னை அப்படி கோபமாய் நடத்திவிட்டு அப்படியே சும்மா இருந்துவிடலாமென்று நினைக்காதீர்கள் என்று என் பழைய இயல்பு நினைக்கிறது: இதை பற்றி நான் இப்போது ஏதாவது சொல்லவில்லை அல்லது செய்யவில்லை என்றால், இதே மாதிரியான நடத்தை தொடரலாம். அவ்வாறு நடக்காது என்பதை நான் உறுதி செய்யப் போகிறேன். அல்லது, நான் டேவுக்காக ஜெபிக்கலாம், நிலைமையைச் சமாளிக்க தேவனை நம்பலாம். இந்த இரண்டு விருப்பங்களில் எது மிகவும் அமைதியானது?

சில சமயங்களில் உங்களிடம் முரட்டுத்தனமாக அல்லது இரக்கமற்ற முறையில் நடந்துகொள்ளும் ஒருவரை எதிர்கொள்வது சரியான நடவடிக்கையாகும். ஆனால் நம்மைப் புண்படுத்துபவர்களிடம் இரக்கமாய் இருக்க வேண்டிய நேரங்களும் உள்ளன, ஆனால் நாம் சிறப்பாக நடந்துக் கொள்ளாத எல்லா நேரங்களையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இதுபோன்ற சூழ்நிலைகளில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதற்கு நாம் நம்மை அனுமதித்தால், நாம் எப்போதும் சரியானதைச் செய்வோம்.

பெரும்பாலும் இயேசு ஒரு பொல்லாத குற்றம் சாட்டப்பட்டபோது, அவர் தம்மைக் குற்றம் சாட்டுபவர்களுக்குப் பதிலளிக்கவில்லை. தேவன் தம் சொந்த வழியிலும் நேரத்திலும் அவர்களுடன் நடந்துகொள்வார் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் தமது பிதாவின் அன்பில் பாதுகாப்பாக இருந்தார், தேவன் தன்னைப் பாதுகாப்பார் என்பதை அவர் அறிந்திருந்ததால், அவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

இயேசுவைப் பின்பற்றுங்கள்

கிறிஸ்துவின் சீஷர்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கும், அவர் செய்ததைப் போலவே சூழ்நிலைகளைக் கையாளுவதற்கும் தங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் இதைச் செய்தார் என்பதை நாம் பார்க்கலாம், நாமும் செய்ய வேண்டும். அவர் உதவி செய்ய சென்ற சிலர் அவரை தவறாக நடத்தினார்கள். அவன் எழுதினான்:

கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக.

நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்து நின்றவன்.

நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக.

> கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்.
>
> 2 தீமோத்தேயு 4:14-17

மக்களுக்கு உதவுவதற்காக பவுல் தியாகம் செய்தார், மிகவும் துன்பப்பட்டார், எனவே அவருடைய தேவை நேரத்தில் அவர்கள் அவருக்கு ஆதரவாக நிற்காதபோது அது அவரை எப்படி காயப்படுத்தியது என்பதை நாம் கற்பனை செய்யலாம். அந்த சூழ்நிலையில் பவுலின் பதில் அவர்களை மன்னிப்பதாக இருந்தது என்பதை தயவுசெய்து கவனிக்கவும், இதன் விளைவாக கர்த்தர் வந்து அவருக்கு ஆதரவாக நின்றார். மக்களை விட தேவன் என்னுடன் நிற்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், நீங்களும் தானே?

> தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்று பயப்படுபவர்கள், அவர்கள் தவறாக நடத்தப்படும்போது, அவர்களால் தேவனுடைய நியாயத்திற்காகக் காத்திருக்க முடியாது.

நம்முடைய சொந்த வழியில் காரியங்களைச் செய்யாமல், தேவனின் வழியில் நாம் செயல்களைச் செய்யும்போது, நம் வாழ்வில் தேவனின் சிறந்ததை நாம் எப்போதும் அனுபவித்து மகிழ்கிறோம். யாராவது நம்மைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று பயப்படுவதிலிருந்து விடுபடுவதும் இதில் அடங்கும். தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்படுவார்கள் என்று பயப்படுபவர்கள், அவர்கள் தவறாக நடத்தப்படும்போது, தேவனின் நியாயத்திற்காக அவர்களால் காத்திருக்க முடியாது. அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு, தங்களைத் தாழ்த்திக் கொண்டு அவருக்கு காத்திருப்பதற்குப் பதிலாக ஏற்கனவே ஏற்பட்ட பழைய காயங்கள் மற்றும் பயங்களில் இருந்து செயல்படத் தொடங்குகிறார்கள்.

நம்பிக்கை கொண்டவர்கள்

நாம் எந்த சூழ்நிலையிலும் தேவனை பாதுகாப்பாகவும் முழுமையாகவும்

நம்பலாம். ஆனால் மக்களை நம்பும் விஷயத்தில் நாம் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நாம் மக்களை நம்பலாம் ஆனால் சந்தேகம் நம் மனதில் நிரம்ப அனுமதிக்கக்கூடாது, ஆனால் எல்லா மக்களுக்கும் பலவீனங்கள் இருப்பதால், அவர்களை முழுமையாக நம்ப முடியாது. மக்கள் பூரணரல்லாதலால், சில சமயங்களில் நம்மை காயப்படுத்தவும் வாய்ப்புள்ளது என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். நாம் மற்றவர்களிடம் நம்பத்தகாத எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தால், நாம் ஏமாறுவோம், ஏமாற்றம் அடைவோம்.

நெருக்கம் மற்றும் நெருங்கிய உறவுகளை பராமரிக்க முடியும், ஆனால் நாம் மற்றவர்களுடன் பழகும்போது ஞானத்தையும் பயன்படுத்த வேண்டும். தேவனைத் தவிர வேறு யாரிடமும் நாம் ஒப்படைக்கக் கூடாத விஷயங்கள் உள்ளன. தனிப்பட்ட முறையில், ஒருவர் அவரை நம்பாமலிருக்க எனக்கு நல்ல காரணத்தை வழங்காத வரை நான் யாரையும் நம்பாமல் இருக்க மாட்டேன், ஆனால் நான் தேவனை நம்பும் விதமாக எந்த மனிதனையும் நான் நம்ப மாட்டேன். இயேசு தம்முடைய சீடர்களை நம்பாமலிருக்கவில்லை, ஆனால் அவர் "தன்னை அவர்களிடம் ஒப்படைக்கவில்லை", ஏனென்றால் அவர் மனித இயல்பைப் புரிந்துகொண்டு மக்கள் எப்படி இருக்க முடியும் என்பதை அறிந்திருந்தார் (யோவான் 2:24). நமது முழு நம்பிக்கையும் தேவனுக்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும், ஆனால் நாம் நிச்சயமாக மக்களுடன் நெருங்கிய, நெருக்கமான உறவுகளை வைத்திருக்க முடியும். உண்மையில், வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க குடும்பம் மற்றும் நண்பர்களுடன் இந்த வகையான தொடர்பு தேவை.

காயப்படுவோமோ அல்லது சாதகமாகப் பயன்படுத்தப்படுவோமோ என்ற பயத்தில் உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று நான் உங்களை ஊக்குவிக்கிறேன். தேவனுடன் நெருங்கிய உறவையும், மற்றவர்களுடன் நெருங்கிய உறவையும் வளர்த்துக் கொள்ளுங்கள், தேவைப்பட்டால், "பயந்துக் கொண்டே செய்யுங்கள்." ஒரு உறவு செயல்படவில்லை என்றால், மற்றவர்களும் அதே வழியில் இருப்பார்கள் என்று நினைக்க வேண்டாம். உங்களுக்காக நல்ல நண்பர்களாக இருக்க தேவன் மக்களை ஒதுக்கி வைத்துள்ளார், எனவே ஜெபித்து அவருடைய வழிகாட்டலைக் கேளுங்கள். பயம் உங்களை நம்புவதற்கு அனுமதிக்க வேண்டாம்!

பெரிய காரியத்தை அடைய நல்லதை விட்டுக்கொடுக்க அஞ்சாதே.

- ஜான் டி. ராக்பெல்லர்

ஸ்லிங்ஷாட்

நான் எட்டு அல்லது ஒன்பது வயது இளைஞனாக இருந்தபோது, எனக்கு உயரத்தின் மீது கடுமையான பயம் இருந்தது. நான் ரோலர் கோஸ்டர்களில் சவாரி செய்யும் அளவுக்கு உயரமான வயதை அடைந்து கொண்டிருந்தேன், என் அப்பா என் உடன்பிறப்புகளையும் என்னையும் புளோரிடாவிற்கு ஒரு வருடம் விடுமுறைக்காக அழைத்துச் சென்றது எனக்கு தெளிவாக நினைவிலிருக்கிறது. அவர் எங்களை காரில் ஏற்றிக்கொண்டு நகரத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே சிலிங் ஷட் என்ற ஒரு பயங்கரமான மரண கண்ணி போன்றதொரு பிரமாண்டமான எஃகினாலான அமைப்பு இருந்தது.

ஹல்கிங் அமைப்பு என் மீது உயர்ந்தது, இருவர் அமர்ந்துக் கொள்ளக் கூடிய வகையிலிருந்த ஒரு சிறிய, எஃகு-பிரேமோடு இரண்டு பெரிய தூண்கள் எலாஸ்டிக் கேபிள்களால் இணைக்கப்பட்டிருந்தது. அதை நிமிர்ந்து பார்த்தபோது மிகவும் சிறியதாக உணர்ந்தது எனக்கு நினைவிருக்கிறது. அந்த ஸ்லிங்ஷாட் மேல்நோக்கிச் சென்றபோது, பயணிகளின் பயமும் மகிழ்ச்சியும் கலந்த கூச்சல்கள் கீழே மிதந்தபோது இன்னும் சிறியவளாக உணர்ந்தேன்.

நான் அங்கிருந்து கிளம்பிவிடத் தயாராக இருந்தேன், ஆனால் என் அப்பாவின் முகத்தில் இருந்த சிரிப்பு அவருக்கு வேறு யோசனை இருப்பதை வெளிப்படுத்தியது. அடுத்த முறை யாருடையது என்று யூகிக்கவா? ஆம்.

என் பயத்தை எதிர்கொள்வதைத் தவிர்ப்பதற்காக என்னால் முடிந்த ஒவ்வொரு காரணத்தையும் சொன்னேன். வானத்திலிருந்து விழுவதை விட மோசமானது என்ன? நான் உங்களுக்குச் சொல்கிறேன்: முதலில் வானத்தை நோக்கி வீசப்படுவது தானே. இறுதியாக, என் அப்பா சொன்னார், “இது உன் விருப்பம், ஆனால் வேடிக்கையான ஒன்றைத் தவறவிட்டதற்காக நீ பின்னர் வருத்தப்படாமல் இருக்க பார்த்துக் கொள்.”

சில நிமிடங்களுக்குப் பிறகு, சவாரியின் சிறிய காக்பிட்டில் நான் கட்டப்பட்டேன். என்னுடைய விரல் மூட்டுக்கள் எல்லாம் வெண்மையாக மாறும் அளவுக்கு, நான் கைப்பிடியை மிகவும் இறுக்கமாகப் பற்றிக் கொண்டேன். அடுத்த முப்பது வினாடிகள் எல்லாவற்றையும் மங்கலாக்கியது: வானத்தை நோக்கி மேலே வீசும் அந்த பொத்தனை

அழுத்திய உடன், நான் மேலும் மேலும் மேலே செல்ல செல்ல ஒரு பயங்கரமான அழுத்தம் என்னை கீழே அழுத்தியது. நான் அன்பான வாழ்க்கையை கையில் பிடித்துக் கொண்டிருக்கையில் என் அப்பாவோ வெறித்தனமாக சிரித்துக் கொண்டிருந்தார். பின்னர் எல்லாம் முடிந்தது.

நான் தரையைத் தொட்டபோது இலகுவாக உணர்ந்தேன்- உற்சாகமாகவும் கூட. எனக்கு பெருமையாக இருந்தது. என் பயம் முற்றிலும் மறைந்துவிடவில்லை, ஆனால் நான் அதை சமாளிக்க முடிந்தது. நான் பயந்தபோது என் அப்பாவை நம்பினேன், அவர் என்னை விட்டுவிடவில்லை. இதன் விளைவாக, ஒரு மகிழ்ச்சியான நினைவு மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி எனக்கு வெகுமதியாக கிடைத்தது. மேலும் அன்றே மூன்று முறை ஸ்லிங்ஷாட்டில் சவாரி செய்தோம்.

இப்போது, கடினமான காலம் வரும்போதெல்லாம் அந்தக் கதையை நினைத்துப் பார்க்கிறேன். எனக்கு சந்தேகம் அல்லது பயம் ஏற்படும் போது, நான் விசுவாசத்தைத் தேர்ந்தெடுக்க என்னால் முடிந்தவரை முயற்சி செய்கிறேன்அஎன் பூமிக்குரிய அப்பா மீது அல்ல, ஆனால் என் பரலோகத் தகப்பன் மீது. முடிவு தெரியாத அளவுக்கு பயமும் நிச்சயமற்ற தன்மையும் காரியங்களை மங்கச் செய்யும் போது, என் கால்கள் தரையைத் தொடும்போது, அவருடைய உண்மைத் தன்மையை என்னால் திரும்பவும் பார்க்க முடியும் என்பதை நான் அறிவேன்.

- ஷிலோ

அத்தியாயம் 23

நீங்கள் நித்தியத்தின் வாக்குறுதியில் இளைப்பாறலாம்

மரண பயத்திலிருந்து விடுதலை

ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே
அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும்
விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.

எபிரெயர் 2:15

மரணம் என்ற வார்த்தை ‘வைனின்’ முழுமையான விளக்க அகராதியில் “ஆத்துமாவை (மனிதனின் ஆவிக்குரியப் பகுதி) உடலிலிருந்து (பொருள் பகுதி) பிரிப்பது, பிந்தையது செயல்படுவதை நிறுத்திவிட்டு தூசியாக மாறுவது” என வரையறுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான அகராதிகளில் மரணம் என்ற வார்த்தைக்கு நாம் அர்த்ததை தேடினால், அது இருப்பதை நிறுத்துவது என்ற பொருளைக் காணலாம், ஆனால் ‘வைனின்’ முழுமையான விளக்க அகராதியிலிருந்து நாம் பார்க்கும் போது, மரணத்தின் விவிலிய அர்த்தமாகிய நாம் இருப்பதை நிறுத்துகிறோம் என்று கூறவில்லை, ஆனால் நம் உடல்கள் செயல்படுவதை நிறுத்துகின்றன. உடல் இல்லாமல் நின்று போகிறது, ஆனால் ஆத்துமா அப்படியே இருக்கிறது. நமது ஆத்துமா நமது உள்ளான வாழ்க்கை மற்றும் அது நமது உணர்ச்சிகள், ஆசைகள், எண்ணங்கள், கற்பனைகள் மற்றும் விருப்பம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அது உண்மையான நாம் என்று சொல்லலாம்! எனவே நாம் இறக்கும் போது இருப்பதை நிறுத்துவதில்லை; நம் உடல் மட்டுமே இருப்பதை நிறுத்திக் கொள்கிறது.

நமது பூமிக்குரிய வாழ்க்கை முடிந்த பிறகு, புதிய, மகிமைப்படுத்தப்பட்ட சரீரங்கள் நமக்கு வழங்கப்படும் என்று விசுவாசிகள் தேவனின் வாக்குறுதியை பெற்றுக் கொண்டிருக்கின்றனர். என்றென்றும் அவருடன் இருக்கும்படி பரலோகம் செல்வோம்! பரலோகத்தில் இருப்பது அற்புதமாக இருக்கும்:

> “அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.
>
> வெளிப்படுத்துதல் 21:4

எலும்பும் சதையுமான உடல் இல்லாமல் பூமியில் யாரும் செயல்பட முடியாது. அதனால்தான் தேவன் தம்முடைய குமாரனை நமக்கு உதவவும், நம்முடைய இடத்தில் மரித்து, நம்முடைய பாவத்திற்கான கிரயத்தை செலுத்தி, மரண பயத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்காகவும் அனுப்பினார், அதைச் செய்வதற்கு, அவருக்கு ஒரு உடல் இருக்க வேண்டும். மனிதர்களாக நாம் அனுபவிக்கும் அனைத்தையும் அவர் அனுபவித்திருக்கிறார், ஏனென்றால் அவருக்கு ஒரு மனித சரீரம் இருந்தது, ஆனால் அவர் அந்த சரீரத்திற்குள் முழுமையாக தேவனாகவே இருந்தார். இயேசு நமக்காக மரித்தார் என்பது நம் உடல்கள் மரிக்காது என்று அர்த்தமல்ல, ஆனால் நாம் மரணத்திற்கு பயப்படத் தேவையில்லை என்று அர்த்தம், ஏனென்றால் நாம் இந்த வாழ்க்கையை விட்டு வெளியேறும் தருணத்தில் நமக்கு என்ன நடக்கும் என்று நமக்குத் தெரியும்: தேவனை முகத்திற்கு முகம் தரிசிப்போம். இயேசுவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டவர்களுக்கு, அவருடைய உண்மையான பிரசன்னத்தில் வாழ்வதன் மகிழ்ச்சியை நாம் அனுபவிக்கும் வரை புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அற்புதமாக இருக்கும்.

> நாம் இந்த வாழ்க்கையை விட்டு வெளியேறும் தருணத்தில் நமக்கு என்ன நடக்கும் என்பதை நாம் அறிவோம்: தேவனை முகமுகமாய் தரிசிப்போம்.

நாம் யாரும் நம் காலத்திற்கு முன்பே இறக்க விரும்பவில்லை, ஆனால் மரணம் நம்மை பயமுறுத்த தேவையில்லை என்பது தான் இதன் அர்த்தம். பூமியில் உள்ள நமது தற்காலிக வீட்டை விட்டு, பரலோகத்தில் உள்ள நமது நித்திய வீட்டிற்குச் செல்கிறோம். இங்குள்ள வாழ்க்கை தற்காலிகமானது என்பதை நாம் எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்; இந்த உலகம்

உண்மையில் நமது வீடு அல்ல. நாம் 100 சதவீதம் திருப்தி அடையாததற்கு இதுவும் ஒரு காரணம். முழுமையான சமாதானமும் அன்பும் நிறைந்த சூழலில் தேவனின் பிரசன்னத்தில் வாழ வேண்டும் என்ற ஏக்கம் நம்மில் உள்ளது. நித்தியம் நம் இருதயங்களில் எழுதப்பட்டுள்ளது (பிரசங்கி. 3:11). தேவனை நம்பாதவர்களுக்கும் இதே ஏக்கம் இருக்கும்; அது என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. அதனால்தான் அவர்கள் அதை பொருட்கள், பணம், வெற்றி மற்றும் பிற வளங்களால் நிரப்ப முயற்சிக்கிறார்கள். கிறிஸ்துவர்கள் கூட இதை செய்ய முனைகின்றனர். அவர்கள் உண்மையில் இயேசுவை அதிகமாக விரும்புவதைவிட மற்ற வேறு விஷயத்தை விரும்பவில்லை என்று அவர்கள் உணரும் வரை சிறிது காலமாவது செய்ய முயற்சிப்பார்கள்

நம் பூமிக்குரிய வாழ்க்கை வழங்கும் நல்ல விஷயங்களை அனுபவிக்க விரும்புவது தவறல்ல, ஆனால் அதில் எதையும் தேவனுக்கு முன்பாக நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. எல்லா நேரங்களிலும் தேவனை முதலிடத்தில் வைத்திருங்கள், நீங்கள் மரிக்கும் போது நீங்கள் சரியான இடத்தில் இருப்பீர்கள்.

விதிவிலக்கு இல்லாமல் எல்லோரும் ஒரு நாள் மரித்துவிடுவார்கள் என்பதால், உங்களால் தவிர்க்க முடியாத ஒன்றைப் பற்றி பயந்து உங்கள் வாழ்க்கையை செலவிடுவது விவேகமற்றது. அவர்கள் பரலோகத்திற்குப் போவதை அறிந்த எவரும் மரண பயத்துடன் மல்யுத்தம் செய்ய மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன், ஆனால் பலர் செய்கின்றனர்.

அப்போஸ்தலன் பவுல் மரணத்தைப் பற்றி பேசினார்

பவுல் எழுதினார், " கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலி. 1:21). தேவன் அவரை எடுத்துக் கொள்ள விரும்பும் எந்த சமயத்திலும் அவர் மரிக்கத் தயாராக இருந்தார், ஆனால் மக்களுக்கு உதவ விரும்பினார். இரண்டு தேர்வுகளுக்கு இடையே தான் "கடினமாக அழுத்தப்பட்டதாக" அவர் கூறினார் (பிலி. 1:23). அவனுடைய ஆவல், மரித்து கிறிஸ்துவுடன் இருக்க வேண்டும் என்பது ஏனென்றால் அது நன்றாக இருந்திருக்கும். ஆனால், மாம்சத்தில் நிலைத்திருப்பது தான் ஊழியம் செய்யும் மக்களுக்கு மிகவும் அவசியமானது என்பதையும் அவர் உணர்ந்தார் (பிலி. 1:23-24). பவுல் மரிப்பதற்கு அஞ்சியது போல் தெரியவில்லை.

நான் எவ்வளவு வயதாகிறேனோ அவ்வளவாக, இந்த உலகத்திலிருந்தும் அதன் அனைத்து துன்பங்களிலிருந்தும் வெளியேறி தேவனுடன் இருப்பதை

நான் எதிர்பார்க்கிறேன். ஆனால், பவுலைப் போலவே, தேவன் விரும்பும் வரை நான் பூமியில் இருந்து, அவர் எனக்கு முன் வைத்த ஓட்டத்தை முடிக்க விரும்புகிறேன். நான் என் பந்தயத்தை இங்கே முடிக்க விரும்புகிறேன், ஆனால் நான் மரணத்திற்கு பயப்படவில்லை.

மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதியபோது, ஒரு விதை நிலத்தில் விதைக்கப்பட்டாலும், அது இறந்துவிடுகிறது அல்லது விதையாக இல்லாமல் போய்விடும், பின்னர் அது உயிர்த்தெழுப்பப்படுகிறது அல்லது நிலத்திலிருந்து முழுவதுமாக வேறொன்றாக வெளியே வருகிறது என்று அவர்களுக்கு விளக்கினார். (1 கொரி. 15:36-38). உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் எனது மகிமைப்படுத்தப்பட்ட உடல் எப்படி இருக்கும் என்பதைப் பார்க்க நான் உற்சாகமாக இருக்கிறேன். அதில் எவ்வித பிரச்சனையும் இருக்காது அல்லது கலோரிகளைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று நான் நினைக்கிறேன், அது சோர்வாக இருக்காது அல்லது காய்ச்சல் வராது அல்லது இடுப்பு மாற்று அறுவை சிகிச்சையும் தேவை படாது!

நரகம் பற்றி என்ன?

நாம் நரகத்தைப் பற்றி சிந்திக்க வேண்டாம், நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசத்தால் பெற்றிருந்தால், நீங்கள் அங்கு செல்லவில்லை என்பதில் மிகவும் மகிழ்ச்சியடைவதைத் தவிர அதைப் பற்றி சிந்திக்க வேண்டியதில்லை. ஆனால் நம்பிக்கையற்றவர்கள் கவலைப்பட வேண்டும்.

நரகம் இருப்பதாக பலர் நினைக்கவில்லை, ஏனென்றால் அன்பான தேவன் அத்தகைய கொடூரமான இடத்திற்கு யாரையும் கண்டனம் செய்வார் என்று அவர்கள் நம்பவில்லை. தேவன் யாரையும் அங்கு அனுப்ப விரும்பவில்லை என்பதே உண்மை. ஆனால் மக்கள் தங்கள் வாழும் முறையினால் அங்கு செல்வதைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

ஆம், தேவன் அன்பானவர், ஆனால் அவர் நீதியுள்ளவர். பாவத்தை நிவர்த்தி செய்ய பாவத்திற்கு ஒரு பலி தேவைப்படுகிறது, அதனால் இயேசு வந்து நம் பாவங்களுக்காக தம்மையே தியாகம் செய்தார் (ஏசா. 53:5-12; எபே. 5:2; 1 யோவான் 4:10). நாம் செலுத்த வேண்டிய கடனை அவர் செலுத்தினார். அவர் நம் இடத்தைப் எடுத்துக் கொண்டு, நம் சார்பாக துன்பப்பட்டார். இவ்வுலகில் வாழும், வாழ்ந்த, வாழப் போகும் அனைவருக்காகவும் இயேசு இதைச் செய்தார், ஆனால் அவருடைய

பரிசைப் பெறுவதற்கு, நாம் அவரையும் அவர் நமக்காகச் செய்ததையும் நம்ப வேண்டும். தேவன் யாரும் அழிந்து போக விரும்பவில்லை (2 பேதுரு 3:9), ஆனால் அவரை நம்ப மறுப்பவர்கள், உண்மையில், தங்களை நரகத்திற்கு ஆளாக்கிக் கொள்கிறார்கள்.

இது ஒரு சங்கடமான விஷயம் என்று எனக்குத் தெரியும். அதைப் பற்றி எழுதுவது கூட எனக்கு சங்கடமாக இருக்கிறது, ஆனால் நரகம் இருப்பதற்கான சாத்தியக்கூறு பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். நான்கு சுவிசேஷங்களில் நரகத்தைப் பற்றி அறுபது வசனங்கள் இருப்பதாகவும், அனைத்தும் இயேசுவின் வார்த்தைகள் என்றும் ஒருமுறை படித்தேன்.

நரகத்தைப் பற்றி பேசுகையில், இயேசு சொன்னார், “அங்கே அழுகையும், பற்கடிப்பும் இருக்கும்” (லூக்கா 13:28). அதீத துன்பம் போல் தெரிகிறது. அழுகை என்றால் என்ன என்று நமக்குத் தெரியும், ஆனால் பற்கடிப்பு என்றால் என்ன? தாடையை மிகவும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு பற்களை ஒன்றாகச் சேர்த்து அரைப்பது என்று பொருள். இப்போதும் நாம் மிகுந்த வலியை அனுபவிக்கும்போதும் அதைச் செய்கிறோம். வேதத்திலுள்ள நரகத்தை பற்றிய மற்ற விளக்கங்களில் அது நெருப்பால் நிரப்பப்பட்டிருக்கும் என்று கூறப்பட்டிருக்கின்றன (மத். 25:41; மாற்கு 9:43; யூதா 7). வருந்தாத பாவிகளை நெருப்பு எரியும் ஏரியில் தள்ளுவார்கள் என்றும் கூறுகிறது (வெளி. 20:15).

இயேசுவின் உவமைகளில் ஒன்று பரலோகம் மற்றும் நரகம் இரண்டும் இருப்பதையும், நரகத்தில் இருப்பவர்கள் பரலோகத்தைப் பார்க்க முடியும் என்பதையும் தெளிவாக்குகிறது (லூக்கா 16:19-31). இந்த உவமை ஒரு செல்வந்தரைப் பற்றிச் சொல்கிறது, அவர் மிகச்சிறந்த துணியை உடுத்தி, தினமும் ஆடம்பரமாக விருந்து உண்டு கொண்டிருந்தார். அவருடைய வாசலில், சிலர் லாசரு என்ற ஏழை மனிதனை விட்டுச் சென்றனர், அவன் புண்களால் மூடப்பட்டிருந்தான், அந்த பணக்காரரின் மேஜையிலிருந்து விழுந்ததை உண்ண விரும்பினார். மேலும், நாய்கள் கூட வந்து அவரது புண்களை நக்கின. ஏழை மரித்தான், தேவதூதர்கள் அவனை ஆபிரகாமின் மடிக்கு கொண்டு சென்றனர். பணக்காரனும் மரித்து அடக்கம் செய்யப்பட்டான். பாதாளத்தில் (நரகத்தில்) மற்றும் வேதனையில், பணக்காரன் தனது கண்களை உயர்த்தி, தொலைவில் ஆபிரகாமையும் அவரது பக்கத்தில் லாசருவையும் கண்டான். மேலும் அவன், “தகப்பனாகிய ஆபிரகாமே, என்மீது கருணையும், இரக்கமும் காட்டுங்கள், லாசரு, அவனுடைய விரலின் நுனியை தண்ணீரில் நனைத்து, என் நாக்கை

குளிர்விக்கவும் அவனை அனுப்புங்கள், ஏனென்றால் நான் இந்த நெருப்பில் வேதனைப்படுகிறேன்” என்றான். (லூக்கா 16:24).

இந்த உவமையிலிருந்து நரகத்தில் இருக்கும் மனிதன் பரலோகத்தில் இருப்பவர்களைக் காண முடியும் என்பதை நாம் அறிகிறோம். நரகத்தில் இருந்து கொண்டு நாம் தவறவிட்டதைப் பார்ப்பது சித்திரவதை என்று நான் நினைக்கிறேன். பணக்காரன் பிறர் துன்புறுத்துவதைப் பற்றி கவலைப்படாமல் பூமியில் மகிழ்ந்தான், இப்போது அவன் தகுதியான தண்டனையை அனுபவிக்கிறான். ஏழை, மறுபுறம், பரலோகத்தில் தனது வெகுமதியைப் பெற்றுக் கொண்டிருந்தான்.

பரலோகம், நரகம் இரண்டும் உண்டு. நரகம் என்பது நாம் செல்ல விரும்பாத இடம், எனவே நம்மால் முடிந்த தருணத்தில் சரியான முடிவுகளை எடுப்பது முக்கியம்.

பரலோகம், நரகம் இரண்டும் இருப்பதைக் காணலாம். நரகம் என்பது நாம் செல்ல விரும்பாத இடம், எனவே நம்மால் முடிந்த தருணத்தில் சரியான முடிவுகளை எடுப்பது முக்கியம்.

உயிர்த்தெழுதல்

இயேசு நம் இடத்தில் மரித்து, நம் பாவத்திற்கான தண்டனையை ஏற்றுக்கொண்டார், ஆனால் அதிர்ஷ்டவசமாக கதை அவரது மரணத்துடன் முடிவடையவில்லை. அவர் மரித்து அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாளில், அவர் உயிர்த்தெழுப்பப்பட்டார் (லூக்கா 24). மரணம் அவரை அடக்க முடியவில்லை. நாம் இயேசுவை நம்பினால் அது நம்மையும் அடக்க முடியாது. மரணத்திற்கு அவர் மீது எந்த அதிகாரமும் இல்லை, நாம் உயிருடன் இருக்கும் போது அதற்குப் பயந்து நாம் அதற்கு கொடுக்கும் வல்லமையைத் தவிர அதற்கு நம்மீது எந்த அதிகாரமும் இல்லை.

இறந்த மு?ம்மது நபியின் போதனைகளை முகமதியர்கள் நம்புகிறார்கள். புத்தர் என்றும் அழைக்கப்படும் சித்தார்த்த கௌதமர் என்ற மனிதனின் போதனைகளை பௌத்தர்கள் நம்புகிறார்கள், அவரும் இறந்துவிட்டார். பல மதங்கள் இறந்த ஒருவரை நம்புகின்றன, ஆனால் கிறிஸ்தவர்கள் உயிருடன் இருக்கும் இயேசுவை நம்புகிறார்கள்!

விசுவாசிகளுக்கு உயிர்த்தெழுதலைப் பற்றிய எந்த ஆதாரமும் தேவையில்லை, ஏனென்றால் ஆதாரம் நம் இதயங்களில் உள்ளது. ஆனால் நம்பாதவர்களுக்கு, உயிர்த்தெழுதலின் ஆதாரம் இருப்பதை அறிவது

உதவியாக இருக்கும். கிறிஸ்துவின் சீடர்களிடமிருந்தும் கல்லறையைக் காத்த ரோமானியப் படைவீரர்களிடமிருந்தும் ஏராளமான உயிர்த்தெழுதல் குறிப்புகள் உள்ளன. காலியான கல்லறையை அவர் விட்டுச்சென்ற கல்லறை சீலைகளையும், அவரது முகத்தை மூடியிருந்த சீலை அழகாக மடித்து பக்கவாட்டில் வைத்து விட்டுச் சென்றதை அவர்கள் கண்டனர் (யோவான் 20:6-7).

முகத்தை மூடியிருந்த சீலை, நாப்கினை மடித்து வைப்பதற்கு ஏதேனும் குறிப்பிட்ட முக்கியத்துவம் உள்ளதா? அதைப் பற்றிய அழகான உண்மையை முன்வைத்த ஒரு கட்டுரையை சமீபத்தில் படித்தேன். இயேசு தனது செய்திகளை பிறர் முழுவதுமாகப் பெற்றுக் கொள்ள பல உவமைகளையும் கலாச்சார குறிப்புகளையும் பயன்படுத்தினார். அவருடைய நாட்களில், ஒரு வேலைக்காரன் தங்கள் எஜமானுக்கு உணவு தயாரித்து, எஜமானர் சாப்பிட்டு முடிக்கும் வரை மேஜையைத் தொடத் துணிய மாட்டான். எஜமான் சாப்பிட்டுவிட்டால், துடைக்கும் துணியை எடுத்து, கைகளையும் தாடியையும் துடைத்து, பின்னர் அதை சுருட்டி மேசையில் வைத்தால், அவர் முடித்துவிட்டார், எல்லாவற்றையும் சுத்தம் செய்யலாம் என்று அர்த்தம். இருப்பினும், அவர் தனது நாப்கினை மடித்து வைத்தால், எந்த வேலைக்காரனும் மேசையைத் தொடமாட்டான், ஏனென்றால் அந்த மடிந்த நாப்கின் "நான் திரும்பி வருகிறேன்!" என்று அர்த்தமாகிறது.

துடைப்பை மடித்து இயேசு நமக்குச் செய்தி அனுப்புகிறாரா? அப்படி தான் என்று நினைக்கிறேன். இயேசு செய்த எல்லாவற்றுக்கும் ஒரு நோக்கம் இருந்தது என்று நான் நினைக்கிறேன், மடிந்த துடைப்புக்கும் ஒரு நோக்கம் இருந்தது. இயேசு நமக்காக திரும்பி வருவார் என்று வாக்குறுதி அளித்தார், எனவே மரணம் இறுதி வார்த்தையாக இருக்காது என்பதை நாம் அறிகிறோம்.

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

> என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.
>
> யோவான் 14:1-3

பலர் மரண பயத்தில் தங்கள் வாழ்க்கையை கழிக்கின்றனர். வில்லியம் ராண்டோல்ஃப் ?ர்ஸ்ட் மிகவும் பணக்காரர் ஆவார், அவர் அழகான பொருட்கள் நிறைந்த ஒரு மாளிகையை கட்டி அதில் வாழ்ந்தார். யாராவது அங்கு சென்றால், அவர்களுக்கு ஒரு கடுமையான விதி இருந்தது: மரணத்தைப் பற்றி பேசவோ அல்லது குறிப்பிடவோ கூட யாருக்கும் அனுமதி இல்லை. அவர் இரவில் உறங்குவதற்கு படுக்கைக்குச் செல்லும்போது, அந்த இரவு அவர் இறந்துவிடலாம் என்று ஒவ்வொரு இரவும் துன்புறுத்தப்பட்டார். சுவாரஸ்யமாக, ஹியர்ஸ்ட்டின் மரண பயம் அவர் இறப்பதைத் தடுக்கவில்லை. அது அவரது வாழ்க்கை இன்பத்தை தான் அழித்துவிட்டது.

மறுபுறம், அப்போஸ்தலன் பவுல் போன்ற பலரின் சாட்சிகள் நம்மிடம் உள்ளன, அவர்கள் எப்போது வேண்டுமானாலும் இந்த பூமியை விட்டு வெளியேறத் தயாராக இருந்தனர். ஆரம்பகால தேவாலயத் தந்தையாகிய ஜான் கிறிசோஸ்டம், தேவாலயத்தின் சீர்திருத்தத்திற்கான வைராக்கியத்தைக் கொண்டிருந்ததால் பேரரசி யூடோக்ஸியாவை கோபத்திற்குள்ளாக்கினார். அவர் அவரை பல முறை நாடுகடத்தினார். அவர், “நான் எதற்காக பயப்பட முடியும்? அது மரணமாக இருக்குமா? ஆனால் கிறிஸ்து என் ஜீவன் என்றும், நான் மரணத்தினால் ஆதாயமடைவேன் என்றும் நீங்கள் அறிய வேண்டும் என்றார்.

> நாம் இந்த பூமியை விட்டு வெளியேறும்போது தான், நம் வாழ்க்கை ஆரம்பமாகிறது.

மரணத்திற்கு பயப்படுவதை விட பரலோகத்தை எதிர்நோக்குவோம், ஏனென்றால் நாம் இந்த பூமியை விட்டு வெளியேறும்போது, நம் வாழ்க்கை ஆரம்பமாகிறது.

நாம் மரணத்திற்கு பயப்படுகிறோமா அல்லது மரிக்க பயப்படுகிறோமா?

என் மரண நேரத்தைப் பற்றி சிந்திக்கையில், நான் மரணத்திற்கு பயப்படவில்லை என்று நேர்மையாகச் சொல்ல முடியும், ஆனால் இறப்பது மிகவும் வேதனையானது அல்ல என்று நான் நம்புகிறேன். ஒருமுறை நான் மற்றொரு நபருடன் ஒரு சிறிய விமானத்தில் இருந்தேன். திடீரென்று, விமானிகளிடமிருந்து எந்த விளக்கமும் இல்லாமல், விமானம் மிக வேகமாக கீழே இறங்கத் தொடங்கியது, ஒருவேளை அது விபத்துக்குள்ளாகும் என்று நாங்கள் நினைத்தோம். நாங்கள் கைகளைப் பிடித்துக் கொண்டு இயேசுவைச்

சந்திக்கத் தயாரானோம், ஆனால், “இது மிகவும் வலிக்குமா என்று நான் ஆச்சரியப்படுகிறேன்” என்று நான் நினைத்ததை ஒப்புக்கொள்கிறேன்.

நம் நேரம் வரும்போது, நாம் தூங்கச் சென்று பரலோகத்தில் எழுந்திருப்போம், அல்லது நீடித்த நோயின்றி தேவன் நம்மை விரைவாக அழைத்துச் செல்ல வேண்டும் என்று நம்மில் பெரும்பாலோர் பிரார்த்தனை செய்கிறோம் என்று நினைக்கிறேன். ஏன் சிறந்ததற்காக ஜெபிக்கக்கூடாது? எவ்வாறாயினும், நம் ஒவ்வொருவருக்கும் இறப்பதற்கான செயல்முறை என்னவாக இருந்தாலும், தேவன் நம்முடன் இருப்பார், சரியான நேரத்தில் நம்மை வீட்டிற்கு அழைத்துச் செல்வார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

மரணப் படுக்கையில் இருப்பவர்கள், “இப்போது எனக்காக இயேசு இருக்கிறார். நான் பேஹக வேண்டும்.”என்று சொன்ன பலருடைய கதைகளை கேட்டிருக்கிறேன் மரணம் என்பது யாராலும் தவிர்க்க முடியாத ஒன்று. அறியப்படாததைப் பற்றிய சில பயத்தை நாம் உணரலாம், ஆனால் உயிர்த்தெழுதல் மற்றும் பரலோகத்தின் நிச்சயத்தை நாம் பெற்றுள்ளோம், அது கொண்டாடப்படுவதற்கான காரணமாகும்!

இறுதி கருத்துகள்

நீங்கள் வளர்ந்து, உண்மையில் இருப்பவராக மாறுவதற்கு தைரியம் தேவை.

- ஈ. ஈ. கம்மிங்ஸ்

எல்லோரும் பயத்தை கையாளுகிறார்கள், ஆனால் அது நம் தீர்மானங்களை ஆணையிடவோ அல்லது நம் வாழ்க்கையை ஆளவோ அனுமதிக்கக் கூடாது என்பதை நாம் கற்றுக் கொள்ளலாம். யாருடைய வாழ்க்கையிலிருந்தும் பயம் முற்றிலும் மறைந்துவிடும் என்பது சந்தேகம் தான், ஆனால் நாம் அதை எதிர்க்க முடியும், எதிர்க்க வேண்டும். அப்படி செய்வதற்கு நீங்கள் பயப்பட வேண்டிய ஒன்றைச் செய்ய வேண்டும் என்றால், உங்கள் முழு தைரியத்தையும் சேகரித்து, விசுவாச அடி எடுங்கள். "நீ தோல்வியடைவாய்!" என்று பயம் என்னைப் பார்த்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தபோதும், தேவன் நான் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் என்று நான் நிச்சயமாக நம்பியதை செய்ய முதலடி எடுக்காமல் இருந்திருப்பேனேயென்றால் இன்று நான் செய்துகொண்டிருக்கும் காரியங்களை நான் நிச்சயமாகச் செய்து கொண்டிருக்கமாட்டேன். பழைய பழமொழி சொல்வது போல், "முதலில் நீங்கள் வெற்றிபெறவில்லை என்றால், மீண்டும், மீண்டும் முயற்சி செய்யுங்கள்." ஆனால் நான் சொல்கிறேன், முதலில் நீங்கள் வெற்றிபெறவில்லை என்றால், நீங்கள் சாதாரணமானவர்! வாழ்க்கையில் உங்கள் இனிமையான இடத்தைக் கண்டுபிடிக்கும் வரை முயற்சி செய்யுங்கள்.

வித்தியாசமாக இருப்போம் என்ற பயம் உங்கள் விதியைத் திருட அனுமதிக்க வேண்டாம் என்று ஊக்குவிப்பதன் மூலம் இந்த புத்தகத்தை முடிக்க விரும்புகிறேன். நீங்கள் உண்மையில் யாராக இருக்க வேண்டுமோ அப்படி இருக்க, நீங்கள் வேறு யாரையும் போல் எப்போதும் இருக்க மாட்டீர்கள், உங்களால் இருக்க முடியாது என்பதை நீங்கள் உணர வேண்டும்.

நீங்கள் தனித்துவமானவர், அதுவே உங்களை சிறப்புறச் செய்கிறது. ரால்ப் வால்டோ எமர்சன் எழுதினார், “யார் ஒரு மனிதனாக இருப்பாரோ, அவர் ஒரு இணக்கமற்றவராக இருக்க வேண்டும்.” மற்றவர்களைப் போல இருக்க நமது நேரத்தையும் சக்தியையும் செலவிடாமல் இருப்பது மிகவும் முக்கியம்.

தனிநபர்களாக இருக்க, மக்கள் சுதந்திரமாக இருக்க விரும்புகிறார்கள், ஆனாலும் அவர்கள் வித்தியாசமாக இருக்க பயப்படுகிறார்கள். ஏன்? ஏனென்றால் கடந்த காலத்தில் அவர்கள் நிராகரிக்கப்பட்டனர், ஏனென்றால் அவர்கள் என்னவாக இருக்க வேண்டும் அல்லது என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய வேறொருவரின் யோசனைக்குள் அவர்கள் பொருந்தவில்லை.

மனித இயல்பு மக்கள் நிராகரிப்பின் வலியைப் பற்றி பயப்பட வைக்கிறது, எனவே நாம் இணங்குகிறோம். பெரும்பாலான மக்கள் இணக்கத்தில் பாதுகாப்பு இருப்பதைக் காண்கிறார்கள். இயேசு, அப்போஸ்தலனாகிய பவுல் மற்றும் பெரிய காரியங்களைச் செய்த அனைவருமே இணக்கமற்றவர்கள். நாம் கிறிஸ்துவின் சாயலாக மாற்றப்பட வேண்டும், ஆனால் நாம் ஒருபோதும் உலகத்துடன் ஒத்துப்போகக்கூடாது (2 கொரி. 3:18; ரோ. 12:2).

வித்தியாசமாக இருப்போம் என்ற பயத்தை வெற்றிகரமாக எதிர்கொண்டு, நாம் உண்மையில் யாராக இருக்க வேண்டுமோ அவ்வாறாக மாறினால், நமக்கு எதிராக வரும் வேறு எந்த பயத்தையும் நம்மால் வெல்ல முடியும் என்று நான் நினைக்கிறேன்.

இந்தப் புத்தகம் உங்களுக்கு உதவியிருக்கிறது என்றும், அவ்வாறு தொடர்ந்திருக்கவும் நான் பிரார்த்திக்கிறேன். வாழ்க்கையை தைரியமாக வாழுங்கள், அனைத்தையும் அனுபவியுங்கள்!

பயத்தை எதிர்த்துப் போராட உங்களை வலுப்படுத்தும் வசனங்கள்

தேவனுடைய வார்த்தையின் வல்லமையைப் போல, பயப்படுவதற்கான சோதனையை எதிர்த்துப் போராடவும், பயந்துக் கொண்டே காரியங்களைச் செய்யவும், எதுவும் உங்களுக்கு உதவாது. இந்த வேதவசனங்களைப் படிக்கவும், தியானிக்கவும், மனப்பாடம் செய்யவும் நான் உங்களை ஊக்குவிக்கிறேன், அதனால் உங்கள் இதயத்தில் பயம் எழத் தொடங்கும் போதெல்லாம் அவற்றை உடனடியாக நினைவுபடுத்தலாம்.

அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.

1 யோவான் 4:18

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

2 தீமோத்தேயு 1:7

நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.

யோசுவா 1:9

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.

ஏசாயா 41:10

இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.

ஏசாயா 43:1

மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,

உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.

ரோமர் 8:38-39

கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?

சங்கீதம் 118:6

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

யோவான் 14:27

நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்.

சங்கீதம் 56:3

“கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.”

உபாகமம் 31:8

உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.

ஏசாயா 26:3

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

1 பேதுரு 5:7

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?

சங்கீதம் 27:1

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

சங்கீதம் 23:4

ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

மத்தேயு 6:34

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.

எரேமியா 29:11

இயேசுவுடன் உங்களுக்கு உண்மையான உறவு இருக்கிறதா?

தேவன் உங்களை நேசிக்கிறார்! அவர் உங்களை ஒரு சிறப்பான, தனித்துவமான, தன்னிகரற்ற தனிநபராக உருவாக்கினார், மேலும் அவர் உங்கள் வாழ்க்கைக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கத்தையும் திட்டத்தையும் வைத்திருக்கிறார். உங்கள் சிருஷ்டிகரான தேவனுடனான தனிப்பட்ட உறவின் மூலம் உங்கள் ஆத்துமாவை உண்மையிலேயே திருப்திப்படுத்தும் வாழ்க்கை முறையை நீங்கள் கண்டறியலாம்.

நீங்கள் யாராக இருந்தாலும், நீங்கள் என்ன செய்திருந்தாலும் அல்லது உங்கள் வாழ்க்கையில் இப்போது நீங்கள் எங்கிருந்தாலும், தேவனின் அன்பும் கிருபையும் உங்கள் பாவத்தை விட, உங்கள் தவறுகளை விடவும் பெரியது. நீங்கள் தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெற்று அவரில் புதிய வாழ்க்கையைப் பெற்றுக் கொள்ளும்படி இயேசு மனமுவந்து தம் உயிரையே கொடுத்தார். உங்கள் இரட்சகராகவும் தேவனாகவும் இருக்கும்படி நீங்கள் அவரை அழைப்பதற்காக அவர் காத்திருக்கிறார்.

உங்கள் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்படைத்து அவரைப் பின்பற்ற நீங்கள் தயாராக இருந்தால், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உங்கள் பாவங்களை மன்னித்து, நீங்கள் வாழ விரும்பும் வாழ்க்கையில் ஒரு புதிய தொடக்கத்தைத் தரும்படி அவரிடம் கேளுங்கள். இந்த ஜெபத்தை ஜெபிப்பதன் மூலம் தொடங்குங்கள். . .

கர்த்தராகிய இயேசுவே, நான் உம்மோடு தனிப்பட்ட உறவைப் பெற்றிருக்க, எனக்காக உமது ஜீவனை கொடுத்ததற்கும், என் பாவங்களை எல்லாம் மன்னித்ததற்கும் உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் செய்த தவறுகளுக்காக நான் மனப்பூர்வமாக வருந்துகிறேன், சரியாக வாழ எனக்கு நீர் தான் உதவ வேண்டும் என்று எனக்குத் தெரியும்.

“”இயேசுவை ஆண்டவர்” என்று உங்கள் வாயால்
அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து
எழுப்பினார் என்று உங்கள் இதயத்தில் விசுவாசித்தால்,
நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்” என்று உம் வார்த்தை ரோமர்

10:9 ல் கூறுகிறது,. நீர் தேவனுடைய குமாரன் என்று நான் நம்புகிறேன், உம்மை என் இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்கிறேன். நான் எப்படி இருக்கிறேனோ, அப்படியே என்னை ஏற்றுக்கொண்டு, என் இருதயத்தில் வேலை செய்து, நீங்கள் விரும்பும் நபராக என்னை உருவாக்குவீராக. இயேசுவே, நான் உமக்காக வாழ விரும்புகிறேன், இன்று உம்முடன் என் புதிய வாழ்க்கையில் நீர் எனக்கு ஒரு புதிய தொடக்கத்தைத் தருவதற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன்!

தேவன் நம்மை மிகவும் நேசிக்கிறார் என்பதை அறிவது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது! ஜெபத்திலும் வேதம் வாசிப்பதிலும் நாம் அவருடன் நேரத்தை செலவிடும்போது ஒவ்வொரு நாளும் வளரும் ஒரு ஆழமான, நெருக்கமான உறவை அவர் நம்முடன் வைத்திருக்க விரும்புகிறார். உங்கள் புதிய வாழ்க்கையை கிறிஸ்துவுக்குள் வாழ உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

ஜாய்ஸின் வாழ்வதற்கான புதிய வழி என்ற புத்தகத்தைக் வாங்க, தயவுசெய்து joycemeyer.org/salvation ஐப் பார்வையிடவும், இது உங்களுக்கு எங்களின் பரிசாகும். தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் அனைத்தையும் பின்பற்றுவதில் நீங்கள் முன்னேற உங்களுக்கு உதவ, எங்களிடம் பிற இலவச ஆதாரங்களும் ஆன்லைனில் உள்ளன.

உங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவுடனான புதிய தொடக்கத்திற்கு வாழ்த்துக்கள்! உங்களிடமிருந்து விரைவில் கேட்போம் என்று நம்புகிறோம்.

எழுத்தாளர் பற்றி

ஜாய்ஸ் மேயர் உலகின் முன்னணி நடைமுறை பைபிள் ஆசிரியர்களில் ஒருவர். நியூயார்க் டைம்ஸின் அதிகம் விற்பனையாகும் எழுத்தாளர், ஜாய்ஸின் புத்தகங்கள் கோடிக் கணக்கான மக்களுக்கு இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்பிக்கையையும் மறுசீரமைப்பையும் கண்டறிய உதவியுள்ளன. ஜாய்ஸின் நிகழ்ச்சிகள், ஜாய்ஸ் மேயருடன் அன்றாட வாழ்க்கையை அனுபவிப்பது மற்றும் அன்றாட பதில்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணையத்தில் உலகம் முழுவதும் ஒளிபரப்பப்படும். ஜாய்ஸ் மேயர் மினிஸ்ட்ரீஸ் மூலம், ஜாய்ஸ் பல்வேறு தலைப்புகளில் சர்வதேச அளவில் தேவனுடைய வார்த்தை நம் அன்றாட வாழ்வில் எவ்வாறு பொருந்துகிறது என்பதை சொல்வதில் கவனம் செலுத்துகிறார். அவருடைய நேர்மையான தகவல்தொடர்பு பாணி அவருடைய அனுபவங்களைப் பற்றி வெளிப்படையாகவும் நடைமுறையிலும் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கிறது, அதனால் மற்றவர்கள் அவர் கற்றுக்கொண்டதை தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்த முடியும்.

ஜாய்ஸ் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார், அவை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன, மேலும் 65 மில்லியனுக்கும் அதிகமான புத்தகங்கள் உலகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளன. சிறந்த விற்பனையாகும் புத்தகங்களுள் வலிமையான எண்ணங்கள்; நம்பிக்கையுடைய பெண்; நன்றாக தோன்றுங்கள், நன்றாக உணருங்கள்; உங்கள் நாளை சரியாகத் தொடங்குதல்; உங்கள் நாளை சரியாக முடிப்பது; அங்கிகார அடிமைத்தனம்; தேவனிடமிருந்து எப்படி கேட்பது; சாம்பலுக்கு பதில் சிங்காரம்; மற்றும் மனதின் போர்க்களம் போன்றவை உள்ளடங்கும்.

ஜாய்ஸ் மேயர் ஊழியங்களின் ஊழியப் பிரிவான ?ேண்ட் ஆஃப் ?ோப்க்கு, காயப்படும் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற ஜாய்ஸின் ஆர்வமே அடித்தளமாக உள்ளது. உணவுத் திட்டங்கள், மருத்துவப் பராமரிப்பு, அனாதை இல்லங்கள், பேரிடர் உதவி, மனித கடத்தல் தலையீடு மற்றும் மறுவாழ்வு போன்ற இன்னும் பல காரியங்களின் மூலம் எப்பொழுதும் கிறிஸ்துவின் அன்பையும் நற்செய்தியையும் பகிர்ந்துகொள்வது போன்ற உலகளாவிய மனிதாபிமான சேவையை நம்பிக்கையின் கரம் வழங்குகிறது.

To contact the author in the United States, Please write:
Joyce Meyer Ministries
P.O. Box 655,
Fenton, Missouri 63026
or call: (636) 349-0303
or log on to: www.joycemeyer.org
Go to tv.joycemeyer.org
to watch Joyce's messages in a variety of languages

To contact the author in India, Please write:
Joyce Meyer Ministries
C14, Vikrampuri Colony,
Karkhana, Secunderabad,
Telangana - 500 003
or log on to: www.jmmindia.org

தைரியமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதில் இருந்து உங்களைத் தடுக்கும் அச்சங்களை அடையாளம் கண்டு, எதிர்கொள்ளுங்கள் மற்றும் வெற்றி கொள்ளுங்கள்

புகழ்பெற்ற பைபிள் ஆசிரியர் மற்றும் நியூயார்க் டைம்ஸ் அதிகம் விற்பனையாகும் எழுத்தாளர் ஜாய்ஸ் மேயருடன் இணைந்து. உங்களுக்கான தேவனின் நல்ல திட்டத்தை அழிக்க பிசாசு பயன்படுத்தும் திட்டங்களின் கருவிப்பெட்டியில் அவனுக்குப் பிடித்த ஆயுதம் பயம். அவன் உங்களைத் தடுத்து நிறுத்தவும், உங்கள் உறவுகள், உங்கள் தொழில் மற்றும் உங்கள் சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கான உங்கள் திறனைத் தடுக்கவும் பயன்படுத்துகிறான்.

“பயந்துக் கொண்டு செய்” இல் ஜாய்ஸ் மேயர் பயம் எல்லா இடங்களிலும் உள்ளது மற்றும் அனைவரையும் பாதிக்கிறது என்று விளக்குகிறார். இது பலரை ஆள்கிறது, ஆனால் அது உங்களை ஆள வேண்டியதில்லை. பயத்தைப் புரிந்துகொள்வது மற்றும் உங்கள் வாழ்க்கையில் அது எவ்வாறு செயல்படுகிறது என்பதை அடையாளம் கண்டுகொள்வது, உங்களைத் தடுக்கும் அச்சங்களை எதிர்கொள்வது மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் சில பொதுவான அச்சங்களிலிருந்து நீடித்த சுதந்திரத்தை அடைய உங்கள் மனநிலையை மாற்றுவது எப்படி என்பதை அவர் உங்களுக்குக் கற்பிக்கிறார்.

நினைவில் கொள்ளுங்கள்: தைரியம் என்பது பயம் இல்லாதது அல்ல; பயத்தின் முன்னிலையில் எவ்வாறு முன்னேறுவது என்பதைக் கற்றுக்கொள்வது. தைரியமுள்ளவர்கள், அவர்கள் எப்படி உணர்ந்தாலும், என்ன சந்தேகங்கள் மனதில் நிறைந்திருந்தாலும், அவர்கள் செய்ய வேண்டும் என்று தங்கள் இருதயத்தில் நம்புவதைச் செய்கிறார்கள். உங்கள் பிரச்சினைகளுக்கான உரிமையை நீங்கள் எடுத்துக் கொண்டு, உங்கள் இருதயத்தை தேவனிடம் திறக்கும்போது, அவர் சுதந்திரமாக இருளுக்குள் ஒளியைக் கொண்டுவந்து உங்களை விடுவிப்பார்.

பயந்துக் கொண்டே செய்யுங்கள்

உங்கள் அச்சங்களைப் புரிந்துகொள்வது.

உங்கள் அச்சங்களை எதிர்கொள்ளுங்கள்.

உங்கள் மனநிலையை மாற்றிக் கொள்ளுங்கள்!

"பயத்தைத் தூண்டும் சூழ்நிலைகளில், நீங்கள் நடந்துக் கொண்ட விதத்தில் நீங்கள் ஏன் நடந்துகொண்டீர்கள் என்று தேவனிடம் கேட்டு, பின்னர் அவர் உங்கள் இருதயத்தில் பேசுவதற்காக காத்திருப்பதுதான் புத்திசாலித்தனமான செயல். பதில் உடனடியாக வரலாம், அல்லது சிறிது காலம் ஆகலாம், ஆனால் நீங்கள் உங்களைப் புரிந்துகொள்ள முற்பட்டால், நீங்கள் சத்தியத்தைக் காண்பீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32).

"பயம் உங்களைச் உந்தித் தள்ளவும், அதைச் சகித்துக்கொள்ளவும் அனுமதிக்க வேண்டாம் என்று நான் உங்களை வலியுறுத்துகிறேன். உங்கள் துயரத்திற்காக மற்றவர்களைக் குறை கூறி உங்கள் வாழ்க்கையை நீங்கள் கடந்து செல்லவும் கூடாது. உங்கள் பிரச்சனைகளுக்கான உரிமையை எடுத்துக் கொள்ளுங்கள், உங்கள் இருதயத்தை தேவனிடம் திறந்துக் கொடுங்கள், அவர் இருளுக்குள் வெளிச்சத்தை கொண்டு வர உதவுவார் (உங்களுக்கு புரியாத சூழ்நிலைகள்). பயத்தையும் அது எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் நீங்கள் புரிந்து கொண்டால், நீங்கள் அதிலிருந்து விடுபடலாம்."

"இந்தப் புத்தகத்தின் முதல் பகுதி பயத்தைப் புரிந்துகொள்ளவும், அது உங்கள் வாழ்க்கையில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறியவும் உதவும். இரண்டாம் பகுதி பயத்தை எதிர்கொள்ள உதவும். மூன்றாவது பகுதியில், மக்கள் எதிர்கொள்ளும் சில பொதுவான அச்சங்களிலிருந்து உங்களை விடுவிக்கும் மனநிலையைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்வீர்கள். நீங்கள் இந்தப் புத்தகத்தை வாசிக்கும்போதும் படிக்கும்போதும் பயத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்."

- ஜாய்ஸ் மேயர், முன்னுரையிலிருந்து.

JOYCE MEYER
MINISTRIES®
Sharing Christ – Loving People

C14, Vikrampuri Colony, Karkhana,
Secunderabad, Telangana - 500 003